
# இந்து மதம்

## விரதங்கள், விழாக்கள்



இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

L15060
294.5
பொது நூலகம்
கொக்குவில்
நல்லூர் பிரதேச சபை

# இந்துமதம்

## விரதங்கள், விழாக்கள்

இராஜேஸ்வரி ஜெகானநந்தகுரு

வடிவமைப்பு, அச்சு பதிப்பு :
காயத்திரி பப்ளிகேஷன்
த. பெ. இல. : 64,
தெஹிவளை,
இலங்கை.
011 - 4981906, 011-4909043

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்
ஆசிரியர் : திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
பதிப்புரிமை© : ஆசிரியருக்கு
முதற்பதிப்பு : ஆவணி 2009
அளவு : 21.5 cm x 14.0 cm
பக்கங்கள் : 283 + XXXII
விலை : ரூ. 350/=
கணினி அச்சமைப்பு : செல்வராசா கலைவாணி
வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு : காயத்திரி பப்ளிகேஷன்
த. பெ. இல. 64,
தெஹிவளை,
இலங்கை.
☎ 011-4981906, 011-4909043

ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ, போட்டோ பிரதி செய்தல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தால் கையளித்தலோ தடைசெய்யப்பட்டுள்ளது.

TITLE OF THE BOOK : Inthumatham- Virathangal, Vizhakkal
AUTHOR : Mrs. Rajeswari Jegananthaguru
COPYRIGHT© : To the Author
FIRST EDITION : August 2009
SIZE : 21.5 cm x 14.0 cm
PAGES : 283 + XXXII
PRICE : Rs. 350/=
PAGE TYPESETTING : Selvaraja Kalaivani
LAYOUT, PRINTING : Gayathri Publication
P. O. Box 64,
Dehiwala,
Sri Lanka.

© All rights reserved ☎ 011-4981906, 011-4909043

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior permission of copyright owner.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



என் அன்புக் கணவர்

செல்லையா

ஜெகானந்தகுரு B.Sc

அவர்களுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

– சிவஸ்ரீ வெ. சுப்பிரமணியக் குருக்கள்

*"கொண்ட விரதமும் ஞானமும் அல்லது*
*மண்டி அவருடன் வழி நடவாதே"*
- திருமந்திரம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்" என்ற கூற்றை நிலைநிறுத்துவதற்காகச் சைவர்கள் விரதங்களைக் கடைப்பிடிப்பதும், விழாக்களை எடுத்து வருவதும் காணக்கூடிய தொன்றேயாகும். இதனால் கிடைக்கப் பெறும் பெறுபேறுகளாகிய விரதபலன், ஞானம் என்பனவே உயிருடன் கூடச் செல்கின்றன. அன்றியும் உண்ட அப் பெண்டிரும் மக்களும் பின்செலார் என திருமூலர் அழுத்தம் திருத்தமாகக் கூறுவதன் மூலம் விரதம், ஞானம் என்பவற்றின் முக்கியத்துவம் அறியக் கிடக்கின்றது. இதனாலன்றோ சைவர்கள் விரதம் அனுஷ்டிப்பதைப் பெரும் பேறாகக் கருதுகின்றனர். இதன் பலாபலனைச் சைவர்களது வழிபாட்டு முறைகளாகிய சரியை, கிரியை, யோகம் மூலம் ஞானம் அடைகின்ற தன்மையைக் கொண்டு உணர்ந்து கொள்ள முடியும். ஞானத்தின் மூலம் இனித்தமுடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால், மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே என்ற கருத்தும் இங்கு சிந்திக்கத்தக்கது. மனிதப்பிறவி கிடைக்கப்பெற்றதின் நோக்கம் நிறைவேற சமய வாழ்வில் விரதம், விழாக்கள், சிவலிங்க வழிபாடு, சிவ சின்னங்கள் தரித்தல், அடியார் வழிபாடு என்பன கடைப் பிடிக்கப்பட்டு ஏகனாகி இறைபணி நிற்கின்ற நிலையை எய்தவேண்டும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற அட்டாங்க யோகநிலையும் இவற்றிற்கு உதவுவனவாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன. இந்நிலைக்கு புலனடக்கம் அவசியமானதாகும். புலனடக்கத்திற்கு விரதம் என்பது ஆதாரமாயிருப்பதே உண்மையாகும்.

விரதம் எனும்போது உணவால் காயத்தைச் சுருக்குவதும், வாக்கினால் மௌனநிலையாகுவதும், மனத்தினால் இறையைச் சிந்திப்பதுமே செய்ய வேண்டியனவாகும். இவற்றை இறுகக் கடைப்பிடிக்கும்போது வாக்குமனாதீத கோசரனான இறை சிக்கெனப் பிடிபடுவர். சைவமக்களிடையே இந்தவித ஒரு பக்தி நிலையை, அன்பு நிலையை ஏற்படுத்தத் தொண் டாற்றியவரே திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அம்மையார் என்பதை எவரும் ஏற்காதிருக்க முடியாது. இதை நிரூபிக்கும் வகையில் இன்று எமது கைகளில் அவர் தந்துள்ள "இந்துமதம்- விரதங்கள், விழாக்கள்" என்ற நூலே சாட்சி பகர்கின்றதென்பதை எவரும் இலகுவாக அவதானிக்க முடியும்.

இந்நூலை சைவஉலகிற்கு தந்து, அதன் பயனை மக்கள் பெறவேண்டும் என்ற சிறந்த மனப்பான்மை கொண்ட நன்நோக் கத்தை ஆசிர்வதித்து, வாழ்த்தி, இறையைப் பிரார்த்திப்பதன் மூலம் மென்மேலும் பற்பல சமய நூல்களை எழுதி சமயத்துறை விளங்க, வளர திருத்தொண்டு செய்யவேண்டும் என ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளைப் பிரார்த்தித்து திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அம்மையாருக்கு எமது மனமார்ந்த நல்லாசிகளை திரிகரண சுத்தியுடன் ஆசிகூறி வாழ்த்துகிறேன்.

**சிவஸ்ரீ வெ. சுப்பிரமணியக் குருக்கள்**
**அகில இலங்கை சமாதான நீதவான்**
**பிரதம குரு, ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயம்**
**A12,G3, சொய்ஸாபுர, மொறட்டுவ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளுரை

– திரு. இ. ஜெயராஜ்

## "மிகு சைவத்துறை விளங்க"

**உ**லகை உய்விப்பது நம் இந்துமதம்.

ஸ்தாபகர் இல்லாப் பெருமை இதற்குரியது.

இறைநெறியைப் பல கூறுகளாய் விரித்து ஆராய்ந்து,

மேலோர், கீழோர் எனும் பிரிவின்றி,

அனைவரும் இறையை அடையும் வழிகளை வகுத்துரைத்தது,

இம்மதத்தின் தனிச்சிறப்பு.

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நாற்பாதங்களாய்,

வழிபாட்டினை வகுத்துரைத்து,

புற, அகப்புற, அக வழிபாடுகளை இனங்காட்டி,

முடிவாக ஏற்படும் ஞான அனுபவத்தையும் அது விரித்துரைக் கின்றது.

சரியை புறவழிபாடு.

கிரியை அகப்புற வழிபாடு.

யோகம் அக வழிபாடு.

இவற்றால் எய்தப்படுவது ஞானமாம்.

இந்த ஞானம் வழிபாட்டுப் பாதையாகவும், பயனாகவும் இருப்பது.

இங்ஙனமாய் வழிபாட்டு நிலைகளைப் பிரித்துரைத்த,

நம் இந்து மதத்தின் ஆழம் விரித்துரைக்க முடியாதது.

□ □ □

சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு நிலைகளில்,

சரியையும், கிரியையும் ஆரம்ப வழிபாட்டு நெறிகள்.

யோகமும், ஞானமும் உயர் வழிபாட்டு நெறிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண மனிதரை இறைநோக்கி நகர்த்துவன,
சரியையும், கிரியையுமே.
இச்சரியை, கிரியை வழிபாட்டு முறைகளை,
நம் இந்துமதம் பல கூறுகளாய்ப் பிரித்து, விரித்துரைக்கின்றது.
இவ்வழிபாட்டு முறைகள் ஆரம்ப நிலைகளாயினும்,
இவையே சமய வழிபாட்டின் அத்திவாரங்களாம்.
உலகியல் வயப்பட்டு இறைநோக்கிய எண்ணமிலாது இருப்போரை,
இவ்வழிபாடுகளே இறைத்தேடல் நோக்கித் தயார் செய்கின்றன.
பக்திமார்க்கத்தில் முதிர்ந்தார்க்கே யோகமும், ஞானமும் கைகூடும்.
அம் முதிர்ச்சியைத் தருவன சரியையும், கிரியையுமே.
இவ்வுண்மைகள் அறியப்படின் சரியை, கிரியை வழிபாடு களின், முக்கியத்துவத்தை உணரலாம்.

□ □ □

நம் சைவசமயத்தின் வழிகாட்டிகளாய் இனங்காணப்பட்டவர்கள்,
அறுபத்துமூன்று அடியார் பெருமக்கள்,
இவ் அறுபத்துமூவருள் பெரும்பாலானோர்,
சரியை, கிரியை வழி நின்றவர்களே.
அஃதொன்றே,
சரியை, கிரியை வழிபாட்டின் முக்கியத்துவத்தை நாம் உணர,
போதிய சான்றாம்!

□ □ □

இச்சரியை, கிரியை வழிபாடுகளை,
நம் சிவாகமங்கள் வகுத்துத் தருகின்றன.
ஆலயம், விம்பம், விரதம், மந்திரம், பாவனை என,
இவ்வழிபாட்டு முறைகள் பலவாய் விரியும்.
சரியை, கிரியை வழிபாட்டு நெறிகளில் நமக்கு உரைக்கப் படுவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியைக் குறியாது குறிக்கப்படும் நெறிகளே.
புறநெறி கொண்டு அகநெறி உணர்த்தும் நோக்கமே,
இச்சரியை, கிரியை வழிபாடுகளின் அடிப்படையாம்.
எனவே சரியை, கிரியை வழிபாடுகளில்,
உரைக்கப்படும் புறநெறியைப் பின்பற்றி,
உணரப்படும் அகநெறியை அறிதல் அவசியமாம்.
அதனால் அகநெறி அறியாது பின்பற்றப்படும் புற, சமயநெறிகள்,
மூடக்கொள்கைகளாகி சமயத்தின் நோக்கம் இழப்பிக்கும்.
இன்று இவ்வகநெறி உணர்ந்தார்தம் தொகை அருகிவிட்டது.
இந்நேரத்தில்,
திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு ஆக்கியுள்ள,
சரியை, கிரியை நெறிகளை வகுத்துரைக்கும்,
'இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்' எனும் இந்நூல்
முக்கியத்துவம் பெறுகின்றது.

□ □ □

இன்றைய உலகம் பொருள் மயப்பட்டு,
விஞ்ஞானமே மெய்ஞ்ஞானம் எனக்கருதி மயங்கி நிற்கிறது.
மனவேகத்தைத் தூண்டி,
அதைத் தடைசெய்ய இயலாது தவித்து நிற்கும் மக்கள்,
அமைதி தேடி அலைந்து நிற்கின்றனர்.
சரியை, கிரியை, யோக மார்க்கங்களில்,
முறைப்படி பயணிக்கும் ஆற்றலும், நேரமும், பொறுமையும்,
இன்றைய மனிதர்களிடம் இல்லை.
இந்நிலையில்,
இத்தகைய மனிதர்களை இறைநோக்கிப் பயணிக்கச் செய்தல்,
கற்றோர்தம் கடனாகிறது.

□ □ □

அக்கடனை திருமதி ஜெகானந்தகுரு அவர்கள்,
இந்நூல் மூலம் செம்மையாய் இயற்றியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலகாலம் ஆற்றிய ஆசிரியத்துவத்தின் பயனாக,
இந்நூலை அவர் இயற்றியுள்ளார்.
அம்மையாரைத் தாயாய் நினைப்பவன் நான்.
திரு. ஜெகானந்தகுரு அவர்களின் மாணாக்கன் என்ற முறையில்,
அவ்வுறவு எனக்கு உரிமையாகிறது.
இளமையிலிருந்து என் உயர்வை,
ஊக்கியும் போற்றியும் வரும் தம்பதியர் அவர்கள்.
இந்நூலை விரதம், விழா, பிற என
முக்கூறுகளாய் வகுத்து,
ஆழச்செய்திகள் பலவற்றை,
அம்மையார் இந்நூலில் பதிவு செய்கின்றார்.
நம் சரியை, கிரியை விளக்கங்கள் விரிக்கிற் பெருகுவன.
காலத்தின் தேவைக்கேற்பத் தன் எல்லையுள் நின்று,
அம்மையார் தரும் செய்திகள் மகிழ்வு தருகின்றன.
வருங்காலச் சந்ததியினருக்கு,
நம் இந்துசமயம் விளக்கமடைய,
இந்நூல் பயன் செய்யும் என்பதில் ஐயமில்லை.
ஒரு தாயின் நூலுக்கு, மகன் முன்னுரை
எழுதுமாற்போல் எழுதியுள்ளேன்.
அவர்களின் கண்பட்டு வளர்ந்தவன் நான்.
இவன் யாரென நினையாது தம் நூலிற்கு முன்னுரை கேட்ட,
உயர்வினைப் போற்றுகின்றேன்.
இந்நூல் சிறப்படையவும்,
என்னை வாழ்விக்கும் கம்பநாட்டாள்வான்,
பாடிப்பரவும் பரம்பொருளை,
வேண்டிப் பணிகின்றேன்.
'இன்பமே எந்நாளும் துன்பமில்லை.'

"கம்பவாரிதி"

**இ. ஜெயராஜ்**

**அகில இலங்கை கம்பன் கழகம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

හින්දු ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| අධ්‍යක්ෂ<br>பணிப்பாளர்<br>Director | 2552643 | ෆැක්ස්<br>தொலைநகல்<br>Fax: | 2552825 | ඊමේල්<br>மின் அஞ்சல்<br>E-Mail | hindudin@yahoo.com |
| පොදු<br>பொது<br>General | 2552641 | | | වෙබ් අඩවිය<br>இணையதளம்<br>Website | www.hindudept.gov.lk |
| මගේ අංකය<br>எனது இல.<br>My No. | | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 23.07.2009 |


# அணிந்துரை

– திருமதி சாந்தி திருநாவுக்கரசு

உலக சமயங்களுள் மிகவும் தொன்மை மிக்க சமயங்களில் ஒன்றாக இந்து சமயம் விளங்கின்றது. இது ஆழமான கொள்கைப் பிடிப்பைக் கொண்டமைந்ததாகும். சமயம் என்பது ஒருவனைப் பக்குவப்படுத்தி நல்லொழுக்க நற்பண்பின் வழியில் வாழ வைப்பது. இந்து சமயத்தில் ஒருவன் வாழ வேண்டிய முறைகளைப் பற்றிக் கூறுபவையாக விரதங்களும் விழாக்களும் அமைந்துள்ளன. விரதங்கள் விழாக்களை அடிப்படையாகக் கொண்டு இந்து சமயமானது ஒரு வாழ்வியல் நெறியாக விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

விரதங்கள் விழாக்களும் வருடத்தின் எல்லா மாதங்களிலும் வருவன. இவற்றின் காரணமாக நாம் கடவுளைப் பற்றி அதிகமாக எண்ணிப் பார்க்க முடிகின்றது. ஒவ்வொருவரும் தம் உள்ளத்தை ஆராய்ந்து பார்ப்பதற்காக விரதங்களும் புராண இதிகாச நிகழ்வுகளை எடுத்துரைப்பனவாக விழாக்களும் அமைந்துள்ளன. இவை தீமையை அழித்து நன்மையை ஓங்கச்செய்யும் கடவுளின் பெருமையை கொண்டாடுவனவாகும். நம் தீய குணங்களை எல்லாம் உயர்ந்த உள்ளத்தால் நாம் அழிந்து இன்பமாக வாழ்வதற்கு இவை வழிசெய்கின்றன.

இந்து மதம் - விரதங்களும் விழாக்களும் என்ற தலைப்பில் இந்து மதத்தின் பெருமையை வெளிப்படுத்தும் வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலினை ஆசிரியர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு எளிமையாகவும் தெளிவாகவும் ஆக்கியுள்ளமை சிறப்பாகும். இதில் முக்கியமான இந்துமத விரதங்களையும் பற்றிய விரிவான கருத்துக்கள் கூறப்பட்டுள்ளதோடு, அவற்றை அநுட்டிக்கும் முறைகளையும் அனைவரும் விளங்கிக் கொள்ளும் வகையில் அமைத்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். இதன் மூலம் மக்கள் மத்தியில் விரதங்கள், விழாக்கள் பற்றிய அறிவும் அவற்றை அநுட்டிக்கும் நோக்கமும் உணர்ந்து கொள்ளப்படுவதுடன் அவர்கள் அதிக பலனையும் அடைவதற்கு ஏதுவாகவும் உள்ளது.

இந்நூலானது இந்துமத விரதங்கள் விழாக்கள் ஆகியவற்றுடன் இந்து மதம் சார்ந்த ஏனைய செய்திகளையும் கொண்டமைந்துள்ளமை சிறப்பாகும். இத்தகைய அரிய நூலை காலத்தின் தேவைக்கேற்ப எளிய நடையில் ஆக்கிய நூலாசிரியரின் செயல் பாராட்டிற்குரியதாகும். மேலும், அவர் இதுபோன்ற பணிகளைச் செய்ய எல்லாம் வல்ல இறைவன் என்றும் அருள்புரிய வேண்டும் எனப் பிராத்திக்கிறேன். இந்நூல் இந்து மக்களுக்கு ஒரு கையேடாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்,**
**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்**
**248 1/1, காலி வீதி, கொழும்பு - 04.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

– பேராசிரியர் ஞானாம்பிகை குலேந்திரன்

'இந்துமதம் - விரதங்கள் விழாக்கள்' என்னும் நூல் வெளி வருவதில் எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி. யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தில் எமது முன்னைநாள் நன்மாணவி திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள், காலத்தின் தேவைக்கு ஈடுகொடுத்து இந்நூலைச் செம்மையுற எழுதி யிருப்பது மன நிறைவைத் தருகிறது.

உலகின் மூத்த மதங்களில் ஒன்றாகிய இந்துமதம் வரலாற்றுக்கு எட்டியவரை ஐயாயிரம் ஆண்டுகாலமாகத் தொடர்ந்து வாழும் ஓர் உன்னத மதமாக விளங்கி வருகிறது. காலத்துக்குக் காலம் இந்துமத ஆன்மீக அனுபூதிமான்கள், இறை அன்பினால் பிறவிப் பயனாகிய இறவாத இன்பப்பெரு வாழ்வு பெற மக்களுக்கு நல்வழிகாட்டி வருகிறார்கள். இந்த இறை அன்புதான் பக்தி எனப்படுகிறது.

தாம் வணங்கும் தெய்வத்தின் பால் கொண்டுள்ள தூய அன்பு உறவினைப் பக்தி எனக் கொள்ளலாம். இத்தூய உறவை நெருக்கமாக்கி வழிப்படுத்தப் பலவழிமுறைகளை இந்துமதம் காட்டித் தருகிறது.

இறைவழிபாட்டில் உடல்சார்ந்த புறத் தொழில்களால் இறை தொண்டு செய்தலைச் சரியை வழி என்பர். மனம் சார்ந்த அகத்தொழிலால் வழிபடுதலைக் கிரியை வழி என்பர். தீய செயல்களைச் செய்யாதிருத்தல், நல்லவற்றைச் செய்தல், தியான நிலைகளில் அமருதல், மூச்சை முறைப்படுத்தல், புலன்களை அடக்குதல், மனதை ஒருமுகப்படுத்தல், இறை சிந்தனையில் இலயித்தல் மற்றும் சீவன் சிவனாக ஒன்றித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகிய எட்டு வகை வழிபடு நிலைகளை யோகவழி என்பர். அறிவால் சீவன் சிவமயமாகுதலை ஞானவழி என்பர். சைவ ஆகமங்கள் இந்நூல்வகை வழிபடு நெறிகள் பற்றி விளக்க மாகக் கூறுகின்றன.

இறைபுகழைக் காதாரக் கேட்டல், இன்னிசை பாடி இறைவனை மகிழ்வித்தல், எவ்வேளையும் இறைவனையே சிந்தித்திருத்தல், திருவடிகளைப் பூசித்தல், அரும்பொருட் களால் இறைவனை அர்ச்சித்தல், பணிவோடு வணங்குதல், இறையடியார்க்குத் தொண்டு செய்தல், இறைவனோடு தோழமை கொள்ளல், ஆத்மாவை இறைவனுக்கு அர்ப்பணித் தல் ஆகிய ஒன்பது வழிபடு முறைகளை "நவவித பக்தி" என வைணவ புராணங்கள் விளக்கிக் கூறுகின்றன.

பொறிபுலன்களை இறைவழி நெறிப்படுத்தும் பல்வகை விரதங்கள் பற்றியும் மனிதநேயப் பண்புகளை வளர்க்கும் சமய விழாக்கள் பற்றியும் தமிழர் சமய பண்பாட்டுப் பாரம்பரிய மரபுகள் கற்றுத் தருகின்றன.

அறிவுப் பொருளாதாரப் பண்புகள் மிகவேகமாகப் பரவி வரும் காலம் இது. இந்நிலையில் ஆன்மீக மரபுகளும் அவற்றின் உண்மைப் பெறுபேறுகளும் தெளிவாக அறியப் படாமல் மக்களின் தடுமாற்றப் போக்கு தென்படுகிறது. இக்கட்டான இத்தகு சூழ்நிலையில் தமிழரின் சமய பண்பாட்டுப் பாரம்பரிய மரபுகளில் ஒருசிலவற்றையேனும் தக்க வைக்கும் உயரிய நோக்கில் "இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்" என்ற நூல் எழுதப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது.

உயிரினங்களை அழியாமல் பாதுகாக்க அவற்றின் 'Gene' எனப்படும் பரம்பரை அலகுகளைச் சேகரித்து வைக்கும் 'Gene Banks' உண்டு. இதுபோலத் தமிழர் சமய, பண்பாடு களின் மரபுகள் மற்றும் அடிப்படை உண்மகளை முறையாகப் பதிவு செய்து வைத்தல் அவசியமாகிறது. இவை தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து பயன்தரும் பதிவுகள் என்பதில் யாது ஐயமும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களின் நூல் இத்தகைய தேவைக்குப் பெருமளவு ஈடுசெய்யும் ஓர் அரிய நூலாக விளங்குகிறது. பலநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து கடைப்பிடிக்கும் விரதங்கள் மற்றும் விழாக்களின் வளமிக்க மரபைக், கற்றறிந்த சமய அறிவையும் அனுபவ அறிவையும் செவ்வனே இணைத்து எளிமைமிகு தமிழில் இந்நூலை யாத்திருக்கிறார் ஆசிரியர். இந்துமத விரதங்கள் விழாக்கள் பற்றித் தெரிய வேண்டியதைத் தெரிய வைக்கும் தெளிந்த நூல் இது. பல ஐயங்களுக்குத் தகுந்த விளக்கங்களை இந்நூல் தருகிறது. ஆசிரியரின் கடின உழைப்பின் பயன் இந்நூல்.

தமிழில் நல்ல புலமையும் சமயத்தில் ஆழ்ந்த பற்றும் கொண்ட, பண்பும் பணிவும் ஒருங்கிணைந்த திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் சமூக சமய மேம்பாட்டினைக் கருத்தில் வைத்து இந்நூலை வெளியிடு வதை மனமாரப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கிறோம்.

**பேராசிரியர் ஞானாம்பிகை குலேந்திரன்**
**B.A (Hons), Dip-in-Ed., M.A, Ph.D**
**முன்னாளில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**தஞ்சாவூர் பல்கலைக்கழகம், இந்தியா.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

– பத்மா சோமகாந்தன்

சிறுவயதில் ஒன்றாகச் சேர்ந்து மழலைபேசியும் மண்ணில் 'அரிவரி' எழுதியும் ஓடிவிளையாடித் திரிந்தும், மாங்கொட்டை போட்டுக் கெந்தியடித்தும் இந்துக்கல்லூரி ஆரம்பப்பாடசாலை யில் கல்வி கற்றும், மாலைவேளைகளில் அம்மண்டபத்தில் இடம்பெறும் கூட்டங்களில் எதுவுமே புரியாதிருப்பினும் முன் வரிசையில் உட்கார்ந்து கைகளை மாத்திரம் தட்டி மகிழ்ந்தும் ராஜேசுடன் கழித்த இளமை நாட்கள் மனதில் வரலாறு பதிக்கின்றது. அந்த வயதில் ராஜேஸ் இப்படியொரு நூலை எழுதுவாரென்றோ அதற்கு நான் அணிசெய்வேனென்றோ கனவிலும் தோன்றாத நிகழ்வுகள் இன்று இடம்பெறும் போது நெஞ்ச மெல்லாம் மகிழ்வால் பூரிக்கின்றது.

இப்படியொரு முகவுரையை எழுதும்படி என்னிடம் கேட்கப் பட்ட போது எனது சகநண்பி இத்தகையதொரு நூலை ஆக்கியுள்ளாளே என்ற பெருமை, அதில் பொதிந்துள்ள விஷயங்கள் ஏற்கனவே நாம் கற்றறிந்தவையாயிருப்பினுங்கூட அவற்றைத் திரும்பப் பரீட்சைக்கு ஆயத்தமாகும், மாணவி போலப் படிக்க வைத்த, இவ்விருவிடயங்களையுமிட்டு நான் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தேன்.

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு பரம்பரை பரம்பரையாக சைவமும் தமிழும் தம் ஆத்மாவாகவே பேணப் பட்டுவந்த சைவாசார மரபின் வழி வந்தவர். அந்த அடிச்சுவடே அவரை இத்தகையதொரு அழகான நூலை வெளிக்கொணர வழிவகுத்துள்ளது.

'இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்' எனச் சகலதையும் உள்ளடக்கிய பல நூல்கள் ஏற்கனவே வெளிவந்திருப்பினும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாசிரியருடைய நூல் சற்று விளக்கமாக, விரிவாக விஷயங்களை விபரித்துப் பேசுவதால் ஏனையவற்றிலிருந்து இந்நூல் வேறுபட்டிருப்பதை அடையாளம் காணலாம்.

மதம் சம்பந்தமான கருத்துக்கள் வேதவிற்பன்னர்களு டையவை. அவற்றை நாம் அப்படியே ஒப்பிக்கவேண்டுமே தவிர எமது கற்பனைக் கெட்டியவாறோ நம் மனம் இசைந்தவாறோ தளர்த்தி, மாற்றி, வேறுபடுத்தி வர்ணிக்க முடியாது. எனவே, ஆசிரியர் தாம் கற்றவற்றை ஏனைய நூல்களிலிருந்து பெற்றவற்றை அனுபூதிமான்கள் உணர்த்திய வற்றையெலலாம் தன் வழி திரட்டி ஒழுங்குமுறையாக நிரைப்படி அழகிய இனிய தமிழில் எளிய நடையில் தந்துள்ளமை மெச்சுதற்குரியதே!

மாணவரும், இந்துசமய ஆர்வலர்களும், இந்துசமயிகளும் எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் விஷயங்கள், அதற்கான விளக்கங்கள், அவற்றைக் கடைப்பிடித்தோர் கண்ட பயன்கள், விளைவுகள் என்பவற்றையெல்லாம் புராணங்கள், சாஸ்திரங்கள் என்பவற்றில் மேற்கோள் காட்டி விளக்கி யுள்ளமை குறிப்பிடக்கூடிய விசேட அம்சமாகும். உ+ம் (i) மான் ஒரு இடத்தில் தரித்து நிற்காது தாவித் துள்ளிக் குதித்துத் திரியும் தன்மையது. இப்பண்பு கொண்ட மான் சிவனின் திருக்கரத்தில் அவரையே பார்த்த வண்ணமிருப்பது எதைக் குறிக்கிறது? என்ற வினாவிற்கு இப்படி நிலையின்றிக் குதித்துத் திரியும் மான் எமது மனதைக் குறிக்கிறது. இம்மான் அங்குமிங்கும் தலையைத் திருப்பாது சதாகாலமும் சிவனையே பார்த்த வண்ணமிருப்பது போன்றுதான் ஆத்ம சாதகனும் மனதை ஒரு நிலைப்படுத்தி ஈசன்பால் ஈடுபாடு கொண்டிருக்க வேண்டும் என்பதே இதன் விளக்க மாகும். (ii) கண்ணன் வெண்ணெய் திருடி உண்ணும் செயல். வெண்ணெய்போல தூய வெண்மையும் மாசற்ற பக்தியும் தூய சிந்தனையும் கொண்ட பக்தர்களைத் திருமால் தானே ஆட்கொள்வான் என்ற தத்துவத்தின் விளக்கம். (iii) கர்ணன் பல்வேறு தானங்களைச் செய்தும், உணவுகை அத்தானத்துள் இடம்பெறாததால் அவன் இறந்தபின் யமலோகம் சென்றபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை கிடையாதிருக்கப் பெற்றான் என்ற புராண விளக்கம். (iv) முருகப் பெருமானின் கொடியை அலங்கரிக்கும் சேவல் கொக்க-அர-கோ, கொக்கரக்கோ என்று கூவும். மாமரமாய் நின்ற சூரனை அழித்தருளிய 'கோ' ஆன முருகா என்ற பொருளை உணர்த்தும் அழகு என்பன எல்லாவற்றையும் நோக்கும்போது ஆசிரியருடைய மொழிவளம், அறிவு, சைவாசாரம், அனுபவம் யாவும் ஒன்றிணைந்த ஆளுமை இந்நூலில் பளிச்சிடுகிறது.

ராஜேஸ்! இத்துடன் பேனாவை மூடிக்கொள்ளாது இன்னும் பற்பல விஷயங்களை எழுதி மேன்மையுற வேண்டுமெனப் பிரார்த்தித்து அன்பு கனிய வாழ்த்துகிறேன்.

**– பத்மா சோமகாந்தன்**
**கல்லூரி அதிபர் (ஓய்வு நிலை)**
**பிரபல எழுத்தாளர்.**

**G 1/1, அன்டர்சன் தொடர்மாடி,**
**நரஹன்பிட்டி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

– கலாநிதி. க. நாகேஸ்வரன்

"இந்துமதம் - விரதங்கள், விழாக்கள்" எனும் அரியதொரு நூலைத் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் வெளியிடுகிறார். மூன்று பகுதிகளாக இந்நூலின் பொருளடக்கம் இயல்கிறது. முதலாவது பகுதியிலே விரதங்கள். சிவவிரதங்கள், சக்தி விரதங்கள், விநாயக விரதங்கள், குமார விரதங்கள், விஷ்ணு விரதங்கள், வைரவ விரதங்கள், சூரிய விரதங்கள், ஏனைய விரதங்கள் ஆகிய விடயங்கள் உள்ளன. மூன்றாம் பகுதியிலே இந்துக்கள் அறிந்திருக்க வேண்டியவை, குருபூசைத் தினங்கள், பஞ்ச புராணம், கிழமைக்குரிய தேவாரங்கள், விரதங்கள், விழாக்கள் - ஒரு கண்ணோட்டம் என்னும் அம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இந்துமதம் சார்ந்த - சைவசமயம் சார்ந்த சமயக் கருத்துகளை அழகு தமிழில் எழுதவேண்டும் என்ற ஆசை காரணமாகவும், சைவசமயக் கருத்துகளின் மேன்மையும் மகிமையும் தமிழில் தேனும் பாலும் கலந்ததோர் இனிய கலவையெனத் தித்திப்பதன் காரணமாகவும், சைவமக்களின் அனுட்டானங்களில் இவை இடம்பெற்றுத் திகழ வேண்டுமென்ற எண்ணங்காரணமாகவும் இந்நூல் மலர்ந்துள்ளதென்பதனை 'என்னுரை'யிலே நூலாசிரியர் கூறிவைத்துள்ளார்.

தேசிய வானலைகளில் இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களின் சமயக்கருத்துகளையும், சொற்பொழிவுகளையும், சைவநற்சிந்தனைகளையும், திருமந்திர உரைகளையும் அடியேனும் பன்முறை செவிமடுத்துள்ளேன். பல அரிய செய்திகளைத் தொகுத்தும் வகுத்தும் பக்குவமாக அவரது நிகழ்ச்சிகள் அமையும். விசேடமாகப் புராணேோதிகாசங்களிலும், திருமுறைகளிலும் அடங்கியிருக்கும் சமய தத்துவங்களை எளிமைமிகு உரைநடையிலே கேட்போர் சுவைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழும் வண்ணம் உரையாற்றும் வல்லமைமிக்கவர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். வெகுஜனத் தொடர்பு சாதனங்களில் இடம்பிடிப்பதென்பது மிக எளிமை யான விடயமன்று. வானொலியிலே சமய நிகழ்வுகளிலே இடம்பெறுவதும், பத்திரிகைகளிலே விடயதானஞ் செய்வ தென்பதும், பொதுமக்களது கவனிப்பில் புகழ் பெறுவதென் பதும் அதிமீதிறன் மிக்க ஆற்றலாளர்களாலேயே சாதிக்க முடியும்.

அத்தகு நுண்மைமிகு ஆற்றலும், ஆளுமையுங் கொண்டவர் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். தரமான ஆன்மீகப் பாதையை யாம் எமக்கென வகுத்துக் கொள்வதற்கு இந்நூலிலே இடம்பெறும் கருத்துகள் பெரிதும் துணைபுரிவனவாயுள்ளன. இறை நம்பிக்கையையும், சிந்தனைத் தெளிவையும், நட்புறவையும், கலாசார ஒற்றுமை யையும், பண்பாட்டு வளர்ச்சியையும் மேலோங்கச் செய்யுமுக மாகவே இந்நூலாக்கம் அமைகிறது. யாகம், தவம், வேள்வி, ஆலய தரிசனம், பூசை, அர்ச்சனை, தியானம், தானம், பஜனை ஆகிய வழிமுறைகள் மூலம் அருள் வழிச் செல்ல லாம் என்பதனை இந்நூல் தெளிவாகத் துலக்கியுள்ளது. மனஉறுதியும், சிந்தனைகளில் தூய்மையும் இன்றி இறை வழிபாடு செய்யலாகாது என்றும் அவ்வாறு வணங்குவோரைக் கண்டு இறைவனே வெட்கப்படுகிறான், நாணுகிறான் என்று உறுதிபடக் கூறுகிறார் நூலாசிரியர். உள்ளத்தில் சத்தியம், தூய்மை, ஒழுக்கம், நேர்மை இருப்பதுதான் விரதம் என்று அழுத்தியுரைக்கிறார். அரிய உதாரணங்களைப் புராணங் களின் மூலம் நிறுவுகிறார்.

தேவர்கள் குறித்த செய்திகளும், கடவுளர் குறித்த விவரணங்களும், விரதங்களை அமைத்து உயர்பலன் பெற்ற வசிட்டர், சோமசன்மர், தன்மவீரியர், சற்கர், சீமந்தினி, அருந்ததி, பட்டராசன், விகடன், சூரியசந்திரர்கள் பற்றியும் நூலிலே அரிய செய்திகள் உள்ளன. தத்துவக்கருததுக் களுக்கு விளக்க விரிவுரைகள் இந்நூலிலே உள்ளன. மிக எளிமையான அனைவருக்கும் புரியக் கூடிய எளிமைமிகு வசனவளம் இந்நூலாசிரியருக்குக் கைவந்துள்ளமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருமே கண்டு மகிழலாம்.

வரபலமும், மகாமேன்மையும், திடகாத்திரமும், பெருமையும் பெற்ற பலர் கடவுளரைத் தியானித்து விரதமிருந்து உய்ந்த வரலாற்றை இந்நூல் பரக்கப் பேசுகிறது. சான்றாக, ஏகாதசி விரதத்தை அரிச்சந்திரன், இந்திரசேனன், சோபனன், மகாதித், சைகானன், உலும்பகன், லலித கந்தர்வன், அம்பதீஷர் ஆகியோர் அனுட்டித்து பலவித நற்பயன் பெற்றவர்களாவர். (பக்.90) என்கிறார். இதனைப் படிப்பவர்கள் சாதாரண மக்கள். தமிழ் விரதானுட்டானங்களைக் கடைப்பிடித்தொழுகவேண்டும் என்ற உணர்வுநலனை இவ்வுத்தி முறைமையால் போதிக்கலாமென்ற செய்தி உறுதிப்படுகிறது.

சமயக்கருத்துகளை எளிமையான உதாரணங்கள் மூலம் விளக்குவது ஆற்றலுள்ளவர்களது நுட்பங்களுள் ஒன்றாகும். இந்நுட்பத்தை நூல் முழுவதுமே இழையோட விட்டுள்ளார் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள். இப்பண்பு நலன் இந்நூலின் சிறப்புமிகு வெற்றி எனலாம். மிகப்பெரிய தத்துவங்களை மிக எளிமையாக விளங்கிக் கொள்வதற்கு முடியும் வகையிலே நூலின் பல அரிய செய்திகள் விவரிக்கப் பட்டுள்ளமை பெரிதும் பாராட்டப்படத்தக்கது. இயற்கை யுண்மைகளையும், இயல்புகளையும் தெய்வங்களிற் பொருத்தித் தமது கொள்கைகளை நிறுவும் பாங்கு தட்டி யுரைக்கத்தக்கது. விரதங்களும், வழிபாடுகளும், நம்பிக்கை களும் இயற்கையை மீறலாகாது என்ற கொள்கை இந் நூலினாலே பெரிதும் வலியுறுத்தப்பட்டுள்ளமை கண்டின் புறற்பாலது. சமயப்பணியாற்றும் நிறுவனங்கள் குறித்து விளக்கப்பட்டுள்ளமை இந்நூலின் மற்றோர் சிறப்பம்சம் எனலாம். மிகச் சுருங்கிய வகையிலே கனகச்சிதமாகவும், பயனுள்ள வகையிலும் இப்பகுதி (பக்.157- 262) அமைந்துள் ளமை குறிப்பிடற்பாலது. நூலில் இடம்பெற்றுள்ள தத்துவ விளக்கங்கள் பல இன்றைய தலைமுறைக்கு இளைஞர்கட்குப் பெரும் பிரயோசன முள்ளதாக அமைந்துள்ளன. இக்காலச் சந்ததி இத்தகு நூலொன்றை ஆக்கித் தந்த திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்களுக்குப் பெரிதும் கடப்பாடுடையது என்பது சுட்டப்பட வேண்டிய விடயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலின் இறுதியிலே (பக்.273-281 வரை) மிகப்பெரிய விடயமொன்றை ஆசிரியர் மிகுந்த மனவுறுதியுடன் வெற்றி கரமாகக் கையாண்டுள்ளமையை குறிப்பிடவேண்டும். திருவாசகமெனும் மணிவாசகத்துக்கு வழிகாட்டியமையும் சிவபுராணத்தை அதன் தத்துவ விளக்கத்தை செய்யுளுக்கான உரைநடையை ஆசிரியர் விளக்கி எழுதித் தந்தமையையும் குறிப்பிடலாம். சிவபுராணப்பொருள் மிகமிக ஆழமான தத்துவ வளம் மிக்கது; அநுபூதியாளர்க்கு அகப்படாதது; சைவ சித்தாந்தத்துறை சார்ந்த மெய்யியற்றுறை சார்ந்த பேராசிரி யருக்கே வில்லங்கமானது; சூக்குமப் பொருள் நிரம்பக் கொண்ட இயற்பகுதி. எனினும் தாமுணர்ந்த நிலையில் சிவ புராணத்திற்குரிய பொருளை எழுதியுள்ளார் திருமதி ஜெகானந்தகுரு அவர்கள். ஒரு தத்துவார்த்த உண்மை இதிலுள்ளது. ''உலகியல் ஆன்மீகத்துக்குத் தேவை. ஆன்மீகத்தை உலகியலாலேதான் இலகுவான முறையிலே விளங்கிக் கொள்ளலாம்'' என்பதே இந்நூல்.

பேச்சாற்றலும், எழுத்து ஆளுமையுங் கொண்ட ஒரு சிலருள் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவர். அவரது இயற்பெயர் அம்பாள் பெயரோடு இயைவது. மிகவும் அரிய, சீரிய, பெருமைமிகு ஆன்மீகத் துறை சார்ந்து அவரது பேச்சும், எழுத்தும், உணர்வும், நூல் வெளியீடும் அமைவது எமக்கு மட்டற்ற மகிழ்வைத் தருகிறது. எம்மையும் ஒரு பொருட்டாக மதித்து முயன்று இவ்வணிந்துரையைப் பெறாமற் 'புத்தகம் வெளி யிடேன்' என்று மனவுறுதியுடன் தொழிற்பட்ட அவரது பேருள் ளத்தைப் பெரிதும் பாராட்டி வாழ்த்துகிறேன். இந் நூலாசிரியர் மேன்மேலும் அரிய வசன நூல்களை ஆன்மீக உலகுக்கு நல்கிப் புகழ் பெறவேண்டும் என்று வேண்டி எம்குலதெய்வம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் பேரருள் அவருக்குச் சுகானந்தப் பெருவாழ்வை நல்க வேண்டுமென்று பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி. க. நாகேஸ்வரன் M.A.,Ph.D**
**முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை,**
**சபரகமுவ பல்கலைக்கழகம்,**
**பெலிகுல்லோயா.**

**02.07.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுரை

– எம். சின்னத்தம்பி ஸ்ரீதயாளன

திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு இன்று நாடறிந்த ஒரு ஆன்மீகப் பேச்சாளர். கல்வித்துறையில் தடம்பதித்த ஒரு புகழ்பூத்த பெண் அதிபர். வீணை இசைக்கலைஞர்.

நிரம்பிய அறிவும், ஆளுமையும் பெற்ற ஒருவராக அவர் இன்று திகழ்வதற்குக் காரணம் ஒன்று : அவரின் அறிவுப்புலப் பாரம்பரியம்: தமிழுரையாசிரையராய் உலகேத்தும் மட்டுவில் ம. க. வேற்பிள்ளை,. புலோலி சைவப்பெரியார் திரு. சு. சிவபாத சுந்தரம்பிள்ளை, மட்டுவில் குருகவி பண்டிதர் மகாலிங்கசிவம் ஆகியோரின் வழிவந்தவர். இவர் யாழ். இந்துக்கல்லூரி தமிழ்ப் பேராசானும் "இந்து சாதனம்" பத்திராதிபருமான மட்டுவில் ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை அவர்களின் கனிஷ்ட புத்திரியுமாவர். அடுத்தது தாம் ஈட்டிய கல்வியோடு அவர் சார்ந்து பணியாற்றிய விதம்: சென்னையில் முதற்பட்டமும் இலங்கை யாழ் பல்கலைக்கழக முதுமாணிப் பட்டமும்: இந்துநாகரிகத்துறை அவர் தேர்ந்த துறை. ஆசிரியராக 1957 களில் கல்வித்துறையில் அரசாங்கப் பாடசாலைகளிலிணைந்தவர், தம் ஆளுமைத் திறத்தால் பரீட்சை மூலம் அதிபர் சேவைக்குத் தரமுயர்த்தப்பட்டு 34 ஆண்டுகள் ஆசிரிய, அதிபர் தகைமைகளோடு பணிகளாற்றியவர். திருமதி. இ. ஜெகானந்தகுரு அதன்பின்னரும் கல்விச் சேவைக்காய் யாழ் உயர் தொழினுட்பக் கல்லூரியில் இணைந்து சிறப்புறு ஆங்கில விரிவுரையாளரானார்.

ஆசிரியராய் தரம்மிக்க அதிபராய், விரிவுரையாளராய் விளங் கிய காலத்தும் தம் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாம் மொழி யாற்றலால் திருமதி இராஜஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் மிகப்பிரபலமான சமய, ஆன்மிக, இலக்கியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சாளராக கணிக்கப்பட்டவர். அழகாக எழுதும் ஆற்றல் அவரின் தனித்துவம். அம்மையாரின் பன்முக ஆற்றலின் இன்னொரு புறம் அவரின் இசைத்துறை வல்லபம். அது கொழும்பிலே பிரபலம் பெறும் வீணைக்கச்சேரிகள். கர்நாடக இசைவிழாக்கள், பொது நிகழ்வுகளிலெல்லாம் திருமதி இராஜேஸ்வரி அவரினதும் அவரது வாரிசான மகள் ராதை குமாரதாஸ் அவர்களினதும் மாணவர் சிறப்புற அளிக்கும் நிகழ்ச்சிகளிலிருக்கும்.

தமிழறிவும், சமயப்பற்றும், இசைஞானமும் கைவரப் பெற்ற வராய் பேச்சு, எழுத்து, கலை ஆகியதுறைகளில் குறிப்பிடத் தக்கவராய் மேலாக நிறைந்த இத்தகு அனுபவம்கண்ட ஒருவரை இலங்கைக் கல்வி, கலாசார அமைச்சுகளும் வானொலி தொலைக்காட்சி மையங்களும் நிறையவே பயன்படுத்தி வருவதை அறியாதார் இலர். இவரது "அன்பான கணவர்" 1980-90 களில் யாழ். இந்துக்கல்லூரியிலே கடமை யாற்றிய பிரபல்யம் வாய்ந்த தாவரவியல், விலங்கியல் ஆசான் உடுப்பிட்டி திரு. செல்லையா ஜெகானந்தகுரு அவர் களாவர்.

"அன்பான நேயர்களுக்கு எனது வணக்கங்கள்!" என்ற விசேட முகவுரையோடு நேயர்களை அந்த இனிய காலை வேளையில் துயிலுணர்த்தி பயன்பாடான அற்புதமான நற்சிந் தனைகளை நாளும் வழங்கும் திருமதி. ஜெகானந்தகுரு அந்த 5 நிமிடங்களுக் குள்ளேயே கேட்டார்ப் பிணித்து அன்பாக அடக்கமாக நிறைக்கும் சிந்தனை முத்துக்களும், "முயன்று கடைப்பிடிப்போமா நேயர்களே!" என்று முடிக்கும் பாணியும் அவருக்கே உ-ரியது.

இந்நூலாசிரியரை அவரின் அறிவு, ஆற்றல், புலமை, ஞானம், ஆளுமையுணர்த்தும் எடுப்பான தோற்றம், அர்ப் பணிப்பு நிறைந்த அதிபர் என்ற வகையில் நான் தரிசித்த காலம் அருமையானது:

நான் யாழ் பிரதேசக் கல்வித் திணைக்களத்துக் கல்வியதி காரி நிலையிலிருந்த காலம் அது. பின்பும் அம்மையாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறநெறிப் பயிற்சிகளில் கல்வி வளவாளராக கண்டிருக் கிறேன். அகில இலங்கைத் தமிழ்த் தினப் போட்டிகள், கல்விக்களங்கள், கலாசார நிகழ்வுகள், தமிழ்ச் சங்கக் கூட்டங்கள், விரிவுரைகள் என்று எத்தனை எத்தனை!

இத்தகைய பல்பரிமாணப் பண்புள்ள ஒருவரின் படைப்பு இது. தமிழர்தம் பண்பாட்டுப்பாரம்பரியங்களும் சம்பிரதாயங் களும் என எம்மவர் அடையாளங்களும் இனித் திசைமாறிச் சென்றுவிடுமோ என்ற அச்ச உணர்வோடு வாழும் எம்மவர் மத்தியில் எம்மை நாம் புரிந்து கொள்ள நீண்டு நெடிதுயிர்த்து வந்த எம்மினத்தின் சமயம் சார்ந்த, கலாசாரம் சார்ந்த விழுமியங்களை மீண்டும் மீண்டும் வற்புறுத்தவும் வல்லவர்கள், நல்லவர்கள் யாரென்று தேடுகையில் நல்லதோர் பிரசவமாக இன்று இந்நூல் எமக்குக் கிடைத்திருக்கிறது என்பேன்.

"சைவசித்தாந்தமணி" விருதுப்பெயரோடு விண்ணுயர்ந்த புகழைச் சம்பாதித்து இத்துறையில் திகழும் திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு தம் சேவையின் பரிமாணங் களில் இது அடுத்த மைல்கல். சமுதாயத்துக்கு படிப்பினை தரவல்லது. எதிர்காலத்துக்குப் பயன்தரவென்று படைக்கப் பட்டது. பல உண்மைகளையும் பகர்வது, அவரின் பணி பாராட்டுக்குரியது. பாருங்கள் புரியும்!

நன்றி.

"கலாபூஷணம், அருட்கலை அரசு"
**சின்னத்தம்பி ஸ்ரீதயாளன் M.Phill.**
**கல்வி அதிகாரி, அதிபர்,**
**உதவிப் பணிப்பாளர்,**
**இந்து சமய கலாசார அமைச்சு, கொழும்பு.**

**நம்பி நற்பணி மன்றம்**
**24, பிரேசர் மாவத்தை,**
**தெஹிவளை, ஸ்ரீலங்கா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

விபரம் தெரிந்து எழுதத் தொடங்கிய காலம் தொட்டு ஏதாவது சமயக் கருத்துக்களை அழகு தமிழில் எழுத வேண்டும் என்ற ஒரு சின்ன ஆசை என் மனதில் துளிர் விட்டிருந்தது. சமயக் கருத்துக்கள் தமிழில் தேனும் பாலும் கலந்ததோர் இனியகலவை. தேசிய வானலைகளில் எனது சமயக் கருத்துக்கள் ஒலிபரப்பப்படும் போது, எனது மகள் அடிக்கடி கூறுவது இதுதான் "அம்மா, உங்கள் கருத்துக்கள் காற்றோடு போய்விடக் கூடாது, அவற்றிற்கு எழுத்து வடிவம் கொடுங்கள்; அவை காலங்காலமாக எல்லோருக்கும் பயன்பட்டாக வேண்டும்." மகளது இந்த நிஜமான வார்த்தை களுக்கு இன்று வடிவம் கொடுத்துள்ளேன் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. இந்த முயற்சிக்கு அன்று எனது கணவரும் இன்று எனது மகனும் தருகின்ற ஊக்கங்கள் பல. இதற்கும் மேலாக சமயமும் தமிழும் எனது அருமைத் தந்தை எனக்குத் தந்த சொத்து. இவை எல்லாம் ஆண்டவன் கட்டளையோடு இணைந்து உருவானதே இன்று உங்கள் அழகிய கரங் களிலே தவழும் இந்நூல்.

எதைப்பற்றி எழுதுவது? பெரியதோர் வினா கொக்கி போட்டுக் கொண்டிருந்தது எனது மனக் கண்முன்னே. ஒவ்வொரு இந்து இல்லத்தையும் பற்றிச் சிந்தித்துப் பார்த் தேன். ஒவ்வொரு இல்லத்திலும் தினமும் ஒரு சமய நிகழ்வுக்கு முக்கியம் கொடுப்பதைக் காணலாம். ஒருவரா வது ஏதாவது ஒரு விரதத்தை அனுட்டித்துக் கொண்டிருப்பர் அல்லது ஒரு நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதில் ஈடுபட்டி ருப்பர் அல்லது எதிர்வரப் போகும் ஒரு சமயவிழா அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிகைக்கான ஆயத்தங்களுக்கு தயாராகிக் கொண் டிருப்பர். இந்த வகையில எமது வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் சமய நிகழ்வோடு பின்னிப் பிணைந்திருப்பதைக் காணலாம்.

எனவே இவற்றை ஆதாரமாக வைத்து எழுதலாம் என்ற முடிவை எடுத்தேன். எனது முடிவை நீங்களும் ஆதரிப்பீர்கள் என்பது எனது அசையாத நம்பிக்கை.

நன்றி.

– இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

**24 'C', எதிரிவீர அவனியு,**
**தெஹிவளை.**
**10.08.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இன்றைய விஞ்ஞான யுகத்தில், நாம் புத்தகங்களை எல்லாம் நூதனசாலைகளில் தேடவேண்டிய காலத்திற்குப் போய்க் கொண்டிருக்கின்றோம். இந்நிலையில் சமய சம்பந்த மான ஒரு நூல் மிகக் கனதியாக வெளிவருகின்றது என்றால் முதலில் இம்முயற்சியைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன் எமது பாடசாலை அதிபராக இருந்தவர் இந்நூலாசிரியை திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அம்மையார் அவர்கள். இவர் அக்காலத் துடிதுடிப்பில் இம்மியளவும் குறையாதவராக இந்த நூலை மிகவும் காத்திரமாகப் படைத்திருக்கின்றார்.

**"இந்து சமயம் - விழாக்கள் விரதங்கள்"** என்னும் இந் நூல் இந்து மதத்தவர்கள் ஒவ்வொருவரது வீட்டிலும் பொக் கிஷமாகப் பேண வேண்டிய கலைக்களஞ்சியமாகும். இந்து சமயத்தவர்களுக்கு மட்டுமல்ல இந்து சமயத்தைப் பற்றி அறிய விரும்புவர்களுக்கு இந்நூல் மிகவும் பயனுள்ளதாக அமையும் என்று நம்புகின்றேன்.

இருபத்தைந்து வருடங்களுக்கு பின்னர் அம்மையாரை கண்டபோது நூல் ஒன்று எழுதியுள்ளேன் வெளியிடவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். நூலைப் பார்த்த பின்னர் தான் புரிந்து கொண்டேன் ஒவ்வொரு பக்கங்களும் முத்தானவை. என்னை வழிகாட்டி நல்வழிப்படுத்திய ஆசிரியையின் இந்த நூலை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றேன்.

**வே. நவமோகன்**
**பதிப்பாசிரியர்**

**காயத்திரி பப்ளிகேஷன்**
**தெஹிவளை.**
**28.08.2009**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


## பகுதி - I

**விரதங்கள்** **பக்கம்**

1. விநாயக விரதங்கள் 13
2. சிவ விரதங்கள் 21
3. சக்தி விரதங்கள் 60
4. குமார விரதங்கள் 73
5. விஷ்ணு விரதங்கள் 84
6. வைரவ விரதங்கள் 101
7. சூரிய விரதங்கள் 103
8. ஏனைய விரதங்கள் 108
9. விரதங்கள், விழாக்கள் - ஒரு கண்ணோட்டம் 116

## பகுதி - II


**விழாக்கள், பண்டிகைகள்** 127

## பகுதி - III

1. இந்துக்களுக்குத் தேவையான சில விளக்கங்கள் 157
2. குருபூசை தினங்கள் 263
3. பஞ்ச புராணம் 267
4. கிழமைகளுக்குரிய தேவாரங்கள் 270
5. சிவபுராணம் 273




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள்

## பொது விதிகள்

**எ**மது சமயம் எமது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந் துள்ளமை கண்கூடு. வாழும்போதும் சரி மரணத்தின் பின்னும் சரி மனிதனது சந்ததியினரால் ஆற்றப் பெறும் கடமைகள் சடங்குகளாக எமக்காக வகுக்கப் பெற்றுள்ளன. இறை வழிபாடு எமது வாழ்க்கையின் அடித்தளம். வாழ்வென்னும் இசைக்கு அமைய நாதமாக அமைந்தது சமய வழிபாடு. இங்கே தான் விரதம் சடங்குகள், சம்பிரதாயங்கள், விழாக் கள், பண்டிகைகள் என நாம் காண்கிறோம். வீட்டில் நாம் நடாத்தும் பூசைகள்,விரதங்கள் ஒருவகை. ஆலயங்களில் அனுட்டிக்கப்படும் விரதங்கள் ஒருவகை - ஆலய உற்சவங்கள் மற்றொரு வகை. இவற்றை விட வருடாந்த பண்டிகைகளாக புதுவருடப் பிறப்பு, ஆடிப்பிறப்பு, தீபாவளி, திருவிளக்கீடு, தைப்பொங்கல் என பண்டிகைகள் வேறு. இவற்றை எல்லாம் நாம் புரிந்து கொண்ட அளவில் எமது தகுதிக்கேற்றளவில் கொண்டாடி வருவதால் எம் மத்தியில் இறை நம்பிக்கை பலம் பெற்று, தரமான ஆன்மீக பாதையை நாம் எமக்கென வகுக்க முடிகின்றது. விரதங்களை ஒரு காலத்தில் தவம் எனக் கொண்டனர். "தவம் செய்வார் தம் கருமம் செய்வார்" என்று கூறிப் போந்தவர் பொய்யாமொழி. இப்பண்டிகைகளால் ஆன்மீக வளர்ச்சியோடு உறவு, நட்பு, கலாசார ஒற்றுமை, பண்பாட்டு வளர்ச்சி யாவும் மேலோங்கவும் செய்தலை அவதானிக்க முடிகிறது.

மனிதப் பிறவியின் இலட்சியம் மோட்சம் ஆகும். இப்பெரும் பேற்றினை அடைய மனிதப்பிறவி எடுத்தோருக்கு ஆகமங்கள் பல வழிவகைகளை வகுத்துள்ளன. காலங்காலமாக யாகம், தவம், வேள்வி, ஆலயதரிசனம், பூசை, அர்ச்சனை, தியானம், தானம், பஜனை ஆகிய வழிமுறைகள் யாம் அருள் வழி செல்ல எமக்கு முன்னே வைக்கப்பட்ட பொன்னான சந்தர்ப் பங்களாம். இவற்றை முறைப்படி அனுட்டித்து மனிதன் வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் உயரவும் உயரலாம் இவற்றை அலட்சியம் செய்து வாழ்வில் தாழவும் செய்யலாம்.

விரதம் என்பது என்ன, எதைக் குறிக்கின்றது என்பதை ஆராயின், “மனம் பொறி வழிப் போகாது நிற்றல் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் திரிகரணங்களாலும் கடவுளை விதிப்படி மெய்யன் போடு வழிபடுதல் விரதமாகும்” என்பது சைவப் பெருமகனார் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானது கூற்றாகும். இப்படியும் விரதத்துக்கு ஒருவகை விளக்கம் உண்டு. விரதம் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து அவனை நன்மை நோக்கி இட்டுச் செல்கின்றது.

விரதம் இருப்பதென்றால் காலை உணவை தேநீரோடு நிறுத்திவிடுவது என்ற வழக்கமும் எம்மவரிடம் உள்ளது. உண்மையில் மனம் பொறி வழிபோகாமல் நாம் பார்த்துக் கொள்ளவும் வேண்டும். இது இலேசான காரியமல்ல. உடம்பைக் கட்டுப்பாட்டுடன் வைத்து விடலாம் பேசுவதையும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். ஆனால் மனத்தைக் கட்டுப்படுத்துதல் மன உறுதியில் தங்கி உள்ளது. அலை பாயும் மனதை அமைதி ஆக்குதலே ஒரு விரதம் தான். நாம் ஓரிடத்தில் அமர்ந்திருந்தும் எமது மனம் எங்கெல்லாம் மிக வேகமாகச் சென்று திரும்புகின்றது என்பதை அறிவோம். இதுவே மனோவேகம் எனப்படுகிறது.

எமது மனதை அலையவிட்டு நாம் இறையை வணங்க முடியாது, வணங்கினாலும் அது பயன்தரா. நல்ல தொன்றைச் செய்வோம் என நாம் உறுதி எடுப்பதும் விரதமே. உதாரணமாக அப்பர் சுவாமிகள் கைலைக் காட்சியைக் காண வேண்டும் என விரதம் பூண்டார். அந்த மனஉறுதி யிலே நடந்து உருண்டு தவழ்ந்து கைலையை நோக்கி நகர்கின்றார். ஆனால் அவரால் நினைத்த அளவு கைலை யைச் சென்றடைய முடியவில்லை. இருப்பினும் கைலையைக் காண வேண்டும் என விரதத்தை அவர் கைவிடவில்லை. அந்த விரதத்தின் பயனாக இறைவன் கைலைக்காட்சியை அவருக்குத் திருவையாற்றிலே காட்டியருளுகின்றான். இது அல்லவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது மன உறுதியாகிய விரதத்தின் சிறப்பு.

**நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சிலே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்**
**பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கொண்டு**
**நக்கு நிற்பர் அவர் தம்மை நாணியே.**

- அப்பர்

மன உறுதியின்றிச் சிந்தனைகளில் தூய்மையின்றி நடப்பவர்கள், பூவும் நீரும் கொண்டு தம்மை வணங்கும்போது இறைவன் வெட்கப்படுகின்றான், - நாணுகின்றான் என்பது பொருள்.

உள்ளத்தில் சத்தியம், தூய்மை, ஒழுக்கம், நேர்மை இருப்பதுவும் விரதம் தான். மெய்பேச வேண்டும் பொய் தவிர்க்க வேண்டும் என விரதம் பூண்டவன் அரிச்சந்திர மன்னன். அவன் கடைசி வரை சத்தியம் தவறேன் எனத் தான் பூண்ட விரதத்தைக் கைவிடவில்லை. அவன் வாழ்வில் எடுத்துக் கொண்ட விரதத்தால் அவன் மாத்திரமல்ல சத்தியமே சிறப்பெய்தியது. உண்மைக்கு ஒரு அரிச்சந்திரன் என்று எம்மை எல்லாம் பேச வைத்து விட்டது அவனது விரதம். இவ்வாறெல்லாம் பார்க்கும் போது ஒரு நேர உணவை ஒறுத்து இறையை வழிபடுதல் விரதங்களுள் ஒருவகை என நாம் கொள்ள வேண்டியுள்ளது.

செல்வம் வந்த காலத்திலன்றி வறுமை வந்த காலத்திலும் மகேஸ்வர பூசையைத் தளராது செய்யும் விரதம் பூண்டவர் சைவ நாயன்மார்களில் ஒருவரான இளையான்குடிமாற நாயனார். இவரது விரதத்தின் உறுதியை உலகுக்குக் காட்ட விரும்புகிறார் எம்பெருமான். இதன் காரணமாக இளையான் குடிமாற நாயனாரது செல்வம் சுருங்குகின்றது. ஆனால் மகேஸ்வர பூசையில் நாயனார் வைத்த மனம் சுருங்க வில்லை. அதுதானே அவரது விரதம்.

அவர் தனது நிலங்களை விற்றுத் தன் விரதமாகிய மகேஸ் வர பூசையைத் தொடர்கின்றார். ஒருநாள் இரவு பெருமழை பொழிகின்றது. சைவ அடியார் வேடம் தரித்து இறைவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயனார் வீட்டுக்கு வருகின்றார்.

வந்த அடியாருக்கு பணிவிடை செய்து முடித்த நாயனார் அவருக்கு அமுது படைக்க விரும்புகின்றார். ஆனால் வீட்டிலோ ஒரு பருக்கை அரிசிகூட இல்லை. "இன்று பகலில் விதைத்த நெல்லை வாரி எடுத்து வாருங்கள் அன்னம் சமைக்கலாம்" என்று கூறுகின்றாள் அவர் மனைவி. பத்தாவுக் கேற்ற பதிவிரதை அவள். இருட்டிலும் மழையிலும் வயலை நோக்கிக் கூடையோடு ஓடுகின்றார் நாயனார். நீரில் மிதந்த நெல்முளைகளை வாரிக்கொண்டு வருகின்றார்.

வீட்டில் விறகு இல்லை. கூரையில் ஒரு பக்க வரிச்சுக்களை அறுத்து விழுத்தி அடுப்பு மூட்டி நெல்லைப் பதமாக வறுத்து அரிசி ஆக்கி அன்னமும் தயாராகி விட்டது, அடியவருக்கு.

ஆவலோடு அடியவரை அழைக்க வெளியே வந்த நாயனார் முன் சோதிவடிவில் எழுந்து பரமேஸ்வரன் பார்வதி சமேதராகக் காட்சி தருகிறார். நாயனாரின் விரதத்தின் உறைப்பை இறைவன் உலகுக்குக் காட்டி அருள்கின்றார். இதுவன்றோ விரதம்!

இது மாத்திரமல்ல, நல்லோர்க்கு வறுமையைக் கொடுத்தல் அவர்கள் நலத்தின் பொருட்டே என்பதையும் நாம் இவ்வரலாற் றால் அறிந்து கொள்ள முடிகிறது.

நாம் வாழும் கலியுகத்தில் வழிபாட்டுமுறைகள் என பஜனையும் பக்தி மார்க்கமான அனுட்டானங்களும் வலியுறுத் தப்பட்டுள்ளன. மறுபக்கம் பட்டினி கிடந்து உடலை வருத்தாது நேர்த்திக்கடன் நிறைவேற்றி உடலைத் துன்புறுத்தாது மிக இயற்கையாக இலகுவாக இறைவனைப் பிரீதிப்படுத்தும் வழிகள் பற்றித் திருமூலர் தனது திருமந்திரத்தில் கூறியுள் ளதை யாம் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் அவசியம். இறைவனை அர்ச்சிக்கப் பச்சிலைகள், பசுவுக்கு ஒரு வாய் அறுகு, பசித்தோர்க்கு இயன்றளவு உணவளித்தல், இன்சொல் பேசுதல் ஆகியவையும் ஈசனை மகிழ்விக்கும் வழிபாடுகள் தான் என்பது திருமந்திரம் தந்த திருமூலர் கருத்தாகும். இத்தனை இருந்தும் இவற்றைக் கடைப்பிடிப்பதில் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனக் குறைவாயிருத்தல் கவலைக்குரிய விடயமாகும்.

**யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.**

என்ற திருமலை நாயனார் திருமொழியை இடையறாது எம் சிந்தையுட் கொண்டு, இறையை அர்ச்சித்து வணங்கியாக வேண்டும். பசுவினத்தைப் பேணிக்காத்தாக வேண்டும். அன்ன மிடல் போன்ற ஈகையை மேற்கொள்ள வேண்டும். எல்லோரி டமும் இன்சொல் பேசி நாமும் மகிழ்ந்து மற்றோரையும் மகிழ்வித்தாக வேண்டும்.

"செய்வன திருந்தச் செய்" என்ற வாக்கிற்கிணங்க விரதங்கள் அனுட்டிக்கும் போது நாம் அனுசரிக்க வேண்டியவை:- அகமும் புறமும் தூயவராகச் சிவ சின்னங் கள் அணிதல், ஆலய வழிபாடு, உபவாசம், சிவ பூசை என்பனவாம். அத்தோடு சைவசமயிகள் யாவரும் இறைபணி செய்யத் தம்மைத் தகுதிப்படுத்தும் வகையில் சமய தீட்சை பெற்றிருத்தல் அவசியமாகும். மிகக்குறைந்த பட்சம் சமய தீட்சை தன்னும் பெற்றிருத்தல் அவசியம். உரிய வயதில் சிறார்களைச் சமயதீட்சை பெற வைத்தல் பெற்றோரது தலை யாய கடமையாகும். உண்மையான சைவசமயி முறையே தீட்சை பெற்றுத் தமக்கு விதிக்கப்பெற்ற நித்திய கர்மானுஷ் டானங்களான அனுட்டானம், சந்தியாவந்தனம் ஆகியவற்றை முறையாகச் செய்து முடித்த பின்னரே, விரதங்களை ஆரம் பிக்க வேண்டும்.

விரத நாளன்று பிரார்த்தனை, நாமஜெபம், பாராயணம் செய்தல் வேண்டற்பாலது. விரதமனுட்டிப்பதால் ஆன்மீக பலமும் உடல் நலமும் பெறப்படுகின்றன. வாரம் ஒருநாள் அல்லது மாதம் ஒருமுறை விரதமனுட்டித்தல் நன்மை தரும். விரதமனுட்டிக்கும் வேளைகளில் இளநீர், பழரசம், பால் ஆகிய ஆரோக்கியமான பானங்களை அருந்துவதோடு மனத்தையும் ஆரோக்கிய நிலையில் வைத்துக் கொள்ளல் அவசியம். பழக்கப்பட்டவர்கள் அன்றைய தினம் காலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையும் பிரணாயாமத்தில் ஈடுபடுதலும் நன்று. விரத காலத்தில் இயன்றளவு தான தர்மம் செய்தலும் நன்று. இப்பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டே விரத நாட்களில் மகேஸ்வர பூசை என்றழைக்கப்படும் அன்னதானம் வழங்கும் பழக்கம் எம்மவரால் கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், விரதத்தை ஒரு நோக்கத்துடன் அனுட்டிப்பது வழமையும், முறையுமாகும். இன்ன நோக்கத்தை நிறைவேற்ற வேண்டி இவ்விரதத்தை அனுட்டிக்க உள்ளேன் எனச் சங்கற்பம் செய்து முறைப்படி அவ்வண்ணம் செய்யின் பூரண பலன் கிடைக்கப் பெறும். விரதங்கள் அனுட்டிக்கும் இடம், காலப்பகுதி என விதிமுறைகள் உண்டு. அவற்றை விரதாதிகள் தீர ஆராய்ந்து புரிந்து கொண்டு அனுட்டித்தல் சாலச் சிறந்ததாகும். அதே போன்று ஒரு விரத அனுட்டிப்பு முடிவுக் கும் விதிமுறை உண்டு. உதாரணமாக் கந்தசஷ்டி விரதத்தை எடுத்துக் கொண்டால் இவ்விரதத்தை அனுட்டிப்போர் 6 வருட முடிவில் அல்லது 12 வருட முடிவில் அதனை நிறைவு செய்து முருகப்பெருமானிடம் அர்ப்பணித் தலே உத்தியாபனமாகும். சில விரதங்கள் நிறைவு செய்யும் போது அந்தணர்களை அழைத்துப் பிராமண போசனம் செய்வித்து வஸ்திரம், தட்சிணை கொடுத்து அவர்களை மகிழ்வித்தல் விரத உத்ரியாபன முறை எனச் சாஸ்திரங்கள் பகர்ந்துள்ளன. இவற்றோடு விரத நிறைவு நாளில் சங்கம வழிபாடு என்ற வகையில் சிவனடியார்களை அழைத்துப் போசன மளித்தலும் காய்கறி, அரிசி, பருப்பு, தானம் வழங்குதலும் முறையாகும்.

மேலும், விரதமனுட்டிப்பதற்கு, எமக்குச் சில தகுதிகள் தேவை என சாஸ்திரங்கள் சொல்லி வைத்துள்ளன. விரதம் அனுட்டிப்பதற்குத் தகுதி வாய்ந்தோர், சமயதீட்சை பெற்றோர், சுத்த போசனமுடையோர், ஆசார சீலர்கள், தீட்டு, ஆசௌசம் அற்றோர் என்போராவார். விரதம் அனுட்டிக்கும் தகைமை யற்றோர் வரிசையில் நோயுற்றோர், மாதவிலக்குக்குட்பட்ட பெண்கள், குழந்தைகள், ஆசௌசமுடையோர் அடங்குவர். சில சமயங்களில் தமக்காக இன்னொருவரை விரதமனுட்டிக்க வரித்துக் கொள்ளும் முறைகளும் உண்டு, இதன் பயன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்க வைப்பவையாகும். மற்றும் ஊரிலுள்ள ஆலய உற்சவ விழா இடம்பெறும்போது அங்கேயுள்ள இல்லங்களில் மங்கல காரியங்களைத் தவிர்த்து எல்லோரது கவன ஈர்ப்பும் ஆலய உற்சவத்தையே நாடியிருத்தலும் நன்மையாகும். சனிவார விரதம் தவிர்ந்த ஏனைய விரத நாட்களில் தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராடும் வழக்கம் தவிர்க்கப்படல் வேண்டும். இவ்வெண்ணெய் முழுக்கு அபரக் கிரியைகள், பிதிர்க் காரியங்கள் ஆகியவற்றுக்கே சொல்லப்பட்டுள்ளது என்பதுவும் இதற்கு ஒரு காரணமாகும்.

## விரத வகைகள்

இந்து மதத்தின் பிரிவுகளாக ஷண்மதங்களை வகுத்து அவை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு கடவுளை இறைமை கூறிவைத்தவர் ஸ்ரீசங்கரர் ஆவார்.

ஷண்மதங்களாவன,

சைவம்

சாக்தம்

காணபத்தியம்

வைணவம்

கௌமாரம்

சௌரம் என்பனவாம்.

சைவம் சிவனையும் சாக்தம் சக்தியையும் வைணவம் விஷ்ணுவையும் காணபத்தியம் கணபதியையும் கௌமாரம் முருகனையும் சௌரம் சூரியனையும் முழுமுதல் தெய்வங்களாகக் கொண்டுள்ளன.

இந்த வகையில் விரதங்களும்,

சிவவிரதம்

சக்தி விரதம்

விநாயக விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக விரதம்

வைணவ விரதம்

சூரிய விரதம் என வகுக்கப்பட்டுள்ளன.

**சிவராத்திரி, சோமவாரவிரதம், திருவாதிரை விரதம், கேதாரகௌரி விரதம், உமாமகேஸ்வர விரதம், கல்யாண சுந்தர விரதம் ஆகியன சிவனுக்கு உரிய விரதங்களாம்.**

மாசிமாத கிருஷ்ண பட்சத்துச் சதுர்த்தசித் திதியில் இடம்பெறும் சிவராத்திரி விரதம் முறைப்படி கடைப்பிடிப்பின் உயர் பலன்களை நல்கும் என்பதில் ஐயம் சிறிதும் இல்லை. கேதார கௌரி விரதம் 21 நாட்கள் கொண்ட நீண்ட விரதமாகும். புரட்டாதி மாதத்திலே ஆரம்பித்து 21 நாட்கள் அனுட்டிக்கப்படும் இவ்விரதத்தைக் காப்புக்கட்டி அனுட்டித்தல் முறையாகும்.

பங்குனி மாத உத்தர நட்சத்திரத்தில் கலியாண சுந்தர மூர்த்தியைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதம் கல்யாண சுந்தர விரதமாகும். இவ்விரதம் மிகுந்த பலன்களை நல்கவல்லது. அடுத்து பிரதோச விரதம் ஒருமாதத்தில் சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் ஆகிய 2 திதிகளிலும் திரயோதசி திதியிலே அனுட்டிக்கப்படுவதாகும்.

திருவாதிரை விரதமும் சிவனுக்காக அனுட்டிக்கப்படும் விரதமாகும். மார்கழிமாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் இவ்விரதம் அனுட்டிக்கப்படுகிறது. மார்கழித் திருவாதிரை யன்று சிவனாருக்கு நிகழும் அபிடேகம் மிகச் சிறப்பானது. இந்த ஆருத்திரா தரிசனம் கிடைக்கப்பெறுவோர் புண்ணிய வான்கள் ஆவர்.

**சக்திக்குரிய விரதங்களை நோக்குகையில் ஆடிச் செவ்வாய், நவராத்திரி விரதம் ஆகியன மிகச் சிறப்பானவை.** நவராத்திரி விரதம் பெரும்பாலான சைவ மக்களால் புரட்டாதி மாத அமாவாசையை அடுத்து வரும் ஒன்பது நாட்களிலும் சக்தியின் மூன்று அம்சங்களான துர்க்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி, இலக்குமிதேவி, சரஸ்வதி தேவி ஆகியோரைக் குறித்து அனுட்டிக்கப் பெறுகின்றது. பராசக்தியை விதிப்படி கும்பத்தி லும் பிம்பத்திலும் எழுந்தருளச் செய்து வழிபடுதல் நவராத் திரி விழாவின் முக்கிய அம்சமாகும். இவ்விரதத்தின் பயனாக துன்ப நீக்கம், சத்துரு பய நீக்கம், வறுமை, அறியாமை நீங்கப்பெறல் ஆகிய பலன்களை அடையலாம்.

விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களுள் விநாயக சதுர்த்தி, விநாயக சஷ்டி என்பன சிறப்பானவை. ஆவணி மாதத்தில் பூர்வ பட்ச நான்காவது நாளான சதுர்த்தியில் விநாயக சதுர்த்தி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. விரும்பினால் வீட்டில் தூய்மையான இடத்தில் விநாயகப் பெருமானின் திருவுருவத்தை அமைத்து விரதமிருந்து வழிபட்டு தான தர்மம் செய்து சதுர்த்தி முடிய விநாயக வடிவங்களை ஆறு, குளம், கடல் போன்ற நீர்நிலைகளில் இட்டு விரதத்தைப் பூர்த்தி செயது கொள்ளல் வேண்டும்.

விநாயகப் பெருமானுக்கு மலர்களிலும் பார்க்க அறுகம் புல்லே உவப்பைத் தருவதாகும். இவ்விரதத்தை உமாதேவி யார் காத்ததும் நளமன்னன் ஆகியோர் அனுட்டித்துத் தமது எண்ணங்கள் நிறைவேறப் பெற்றமையும் வரலாறு.

**முருகப்பெருமானுக்குரிய விரதங்களுள் கந்த சஷ்டி விரதம் மிக்க சிறப்புடையது.** சஷ்டி நாட்களில் ஐப்பசி மாதச் சஷ்டி தனிச் சிறப்புடையது. இத்தினத்திலே தான் முருகப்பெருமான் சூரபத்மனைச் சங்காரம் செய்தார். ஐப்பசி மாத வளர்பிறையில் வரும் பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி என்னும் ஆறு திதிகளும் திருவுடைத் திதிகள் எனக் கூறப்பட்டு இந்த ஆறு நாட்களும் கந்தசஷ்டி விரதம் அனுட்டிக்கப்படுகிறது. மிகுந்த பலனை அளிக்கும் இவ்விரதத்தை சங்கற்பம் செய்து தொடர்ச்சியாக ஆறு வருடங்கள் அனுட்டித்துப் பின் உத்தியாபனம் செய்து கொள் ளுதல் முறையாகும்.

ஏகாதசி விரதம் விஷ்ணு பகவானுக்கு உகந்த விரதமாகும். ஏகாதசித் திதி ஒரு புண்ணிய காலமாகும். ஒரு வருடத்தில் 25 ஏகாதசி விரதகாலம் உண்டெனப் பத்மபுராணம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் வைகுந்த ஏகாதசியையே மக்கள் பெரும்பாலும் அனுட்டிக்கின்றனர். இதனைச் சுவர்க்கவாயில் ஏகாதசி எனவும் கூறுவர். இத்தினத்தில் துளசி இலை கொண்டு விஷ்ணு பகவானை வழிபட்டு நீரும் பருகாது உபவாசமிருந்து அனுட் டித்தல் முறையாகும்.

இவற்றை விட, வைரவப் பெருமானுக்குச் சித்திரைப் பரணியும் ஐப்பசிப் பரணியும் விரதமனுட்டிக்க உகந்த நாட் களாகும். வைரவருக்குப் பிடித்தமான நிவேதனம் வடை மாலை.

விரதம் என்று கூறிப் பட்டினியிருந்தால் மாத்திரம் போதாது. அகச் சுத்தம் புறச்சுத்தத்தோடு, தெய்வ சிந்தனையோடு, நல்லனவற்றைச் செய்து, தீயவற்றைத் தவிர்த்துப் பிற உயிர்களுக்கு இம்சை செய்யாது அர்ப்பணிப்போடு அனுட்டித் தல் விரதம் எனப்படும். நோன்பென்பது கொன்று தின்னாமை என்பதையும் மனதின் கண் கொள்ளுதல் அவசியம்.

**அன்னத்தை இகழாதே - அது விரதம்**
**அன்னத்தை எறியாதே - அது விரதம்**

**அன்னம் சமைக்கும்போது சிறிது அதிகமாகச் சமைத்து வீட்டுக்கு வந்த அதிதிக்கு விருப்புடன் அன்னம் கொடு - அதுவும் விரதம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ① விநாயக விரதங்கள்

**வி**க்கினங்களைக் களைபவன் விநாயகன். "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்" என்பது அனுபவ உண்மை. சிவனுக்கும் உமைக்கும் மூத்த பிள்ளையாகவும் கணங்களுக்குத் தலைவனாகவும் யானை முகத்தோனாகவும் காட்சி தருபவன் கணபதி. சிவனாரும் முக்கண்ணன்; கணபதியும் முக்கண்ணன். எக்காரியத்தை செய்யத் தொடங்கும் போதும் விநாயகப் பெருமானின் பெயராலேயே தொடங்குவது எம் முன்னோர் மரபு. எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளையார் சுழி இடுவதும் இதனாலே தான். விநாயகப் பெருமானின் மறுபெயர்களான லம்போதரர், ஐங்கரன், கணேசன், முன்னவன், ஓங்காரன், பிரணவ சொரூபி, நர்த்தன கணபதி முதலான நாமங்கள் யாவும் விநாயகப் பெருமானின் சிறப்புக்களை விளக்கும் முகமாக அமைந்துள்ளன. விநாயகப் பெருமானுடைய பெருவயிறு சர்வ அண்டங்களையும் தன்னுள் அடக்கியுள்ள பெருமையினையும் மோதகம் ஏந்தும் கரம் உலகத்தைத் தாங்கிக் காத்தருளும் தன்மையையும் உணர்த்தி நிற்கின்றன. விநாயகப் பெருமானின் பன்னிரண்டு அவதாரங்களாவன :- கஜானனர், விநாயகர், சிந்தாமணி, மயூரேசர், விக்கினேஸ்வரர், விக்கிர துண்டர், கணபதி, பாலச் சந்திரர், மகோற்கடர், வல்லபை கணேசர், துண்டி விநாயகர், தூமகேது என்பனவாம். விநாயகரின் திரு உருவம் ஐந்தொழிலை உணர்த்துவதாக உள்ளது. அவருடைய பாசம் ஏந்திய கரம் அழித்தலையும் தும்பிக்கை மறைத்தலையும், தந்தம் ஏந்திய கை காத்தலையும் அங்குசம் ஏந்திய கரம் மறைத்தலையும் மோதகம் ஏந்திய கை அருளலையும் உணர்த்தி நிற்கிறது.

சில ஆலயங்களில் பஞ்சமுக விநாயக வழிபாடும் இடம் பெறுதல் குறிப்பிடத்தக்கது, சுக்கிரவாரம், ஆவணிச்சதுர்த்தி, சங்கடகர சதுர்த்தி, மாத சதுர்த்தி, விநாயக சஷ்டி ஆகிய புண்ணிய காலங்கள் விநாயகப் பெருமானுக்குரிய சிறப்பு விரதங்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. விநாயக சுக்கிர வார விரதம்

இவ்விரதம் வைகாசி மாதத்துப் பூர்வபக்கம் முதல் சுக்கிரவாரம் தோறும் விநாயகப் பெருமானை நோக்கி அனுட்டிக்கப்படுகிறது, இவ்விரதத்தின் போது கும்பம் வைத்து விநாயகப் பெருமானின் திருவுருவத்தை அமைத்து (பொன்னாலேனும் வெள்ளியாலேனும் அமைத்தல் சிறந்தது.) தேங்காய், கரும்பு, இளநீர், எள்ளுப்பொரி, முக்கனி ஆகிய வற்றை நிவேதித்து விநாயகப் பெருமானைப் பிரார்த்தனை செய்ய வேண்டும். அன்றைய தினம் விநாயகர் ஆலய தரிசனம் செய்தல் உத்தமம். திருமுறை ஓதுதல், புராணம் படித்தல், கேட்டல், சிவப்பணி செய்தல், சமயச் சொற்பொழிவு களைக் கேட்டல் ஆகிய நற்கருமங்களில் பொழுதைத் தவப் பொழுதாகக் கழிக்க வேண்டும். இரவு கனிவகைகளை உண்டு காலை அந்தணர்க்குத் தானம் வழங்கிப் பாரணை செய்து விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம்.

விநாயக சுக்கிர வாரத்தை அத்திரி முனிவர் அனுட்டித்து அதன் பயனாக 16 அமுதனைய கலைகளை உடைய சந்திர னைப் புத்திரனாகப் பெற்றார். குபேரன், பிரமன் போன்ற தேவர்கள் மற்றும் முனிவர்கள் முதலானோர் இவ்விரதத்தை அனுட்டித்து விநாயகப் பெருமானின் இன்னருள் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. விரும்பின கிடைக்கும் என்பது இவ்விரதத்தின் பயன் என்று கொள்ளலாம்.

**நல்ல சொற்பொருள் நாளும் நடாத்தவும்**
**எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்**
**வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்**
**வல்லபைக்குரியானை வாழ்த்துவாம்.**

**- புராணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. விநாயக சதுர்த்தி விரதம்

**வி**நாயக சதுர்த்தி விரதம் ஆவணி மாதத்தில் இடம்பெறும். விநாயகப் பெருமானுக்குரிய விரதங்களில் இது ஒன்றாகும். இந்துக்களுக்கு விநாயக பூசை எத்துணை முக்கியத்துவம் வாய்ந்ததோ அதேபோன்று ஆவணி மாதத்தில் சுக்கில பட்சத்தில் இடம்பெறும் சதுர்த்தி தினமும் மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இதுவே ஆவணிச் சதுர்த்தி விரதமாகும். இத்தினமே விநாயகப் பெருமான் நிருத்தம் செய்த தினமாகும். ஆவணி மாதப் பூர்வ பக்கச் சதுர்த்தித் திதியில் அனுட்டிக்கப் படும் விரதம் இதுவாகும்.

விநாயகப் பெருமானது முகம் யானை முகம் போன்றது. பிரணவப் பொருள் கணபதி ஆவார். பிரணவம், ஓங்காரம் இல்லாமல் எழுத்துக்களே இல்லை. "உ" என்னும் எழுத்துப் பிள்ளையார் சுழி என்று கொள்ளப்படுகின்றது. இதன் காரண மாகவே சைவசமயத்தவர்கள் ஒரு விடயத்தை எழுத ஆரம் பிக்கும் போது பிள்ளையார் சுழி இட்டு எழுதுதல் ஒரு நியதியாக வழங்கி வருகிறது. ஒரு விக்கினமும் இன்றி எக் காரியமும் ஆக வேண்டும் என்னும் எண்ணத்துடனும் பய பக்தியுடனும் விநாயகப் பெருமானின் சிந்தனையுடனும் இடப்படும் குறி இந்தப் பிள்ளையார் குறி. இப்புனிதமான குறியின் அதி தெய்வம் விநாயகரே ஆவார்.

சிந்துரன் என்னும் கொடிய அசுரனை அழிக்கும் பொருட்டு விநாயகப் பெருமான் திரு அவதாரம் செய்தருளிய தினம் ஆவணி மாதப் பூர்வ டக்கச் சதுர்த்தி தினமாகும். இதன் பின்னணியிலுள்ள வரலாறொன்றை இங்கு நோக்குவோம்.

முன்னொரு கற்ப காலத்தில் பிரம்மதேவர் சத்திய லோகத்தில் இருக்கும் போது விட்ட கொட்டாவியிலிருந்து தோன்றியவன் பெருவலி படைத்த சிந்துரன் என்னும் புருடன். "எவராலும் உனக்குத் தீங்கு ஏற்படாது." என்று பிரம்ம தேவர் சிந்துரனுக்கு வரமளிக்கவே அவன் வரம் அளிதத பிரம்மதேவரையே தழுவிப் பிடித்தழிக்க முயன்றான். இதனால் சீற்றமடைந்த பிரமன் "நீ தீட்டிய மரத்தில் கூர் பார்க்க முயன்றாய், உன்னை அழித்தொழிக்க விநாயகப்பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவதரித்தருள்வார்'' எனச் சபித்தார். சிந்துரன் கைலையங் கிரியை அடைந்து அங்கு சிவனாரைத் தாக்க, அப்போது விநாயகப் பெருமான் பிராமண வடிவம் கொண்டு சிந்துர னைத் தாக்க அவன் பூவலம் சென்று அங்கும் பல நாசங் களைச் செய்தான். தேவர்கள் இதுபற்றி விநாயகப் பெருமானி டம் முறையிட அவர் "யாம் உமை வயிற்றிலே அவதரித்து உமக்கிடர் புரியும் சிந்துரனைச் சங்கரிப்போம்'' எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

அவ்வண்ணம் கணபதி உமையின் கருப்பையில் கருவாக வளரச் சிந்துரன் இதனை அறிந்து வாயுரூபமெடுத்து உமையின் உதரத்தில் கலந்து அக் கருவைச் சேதம் செய்து சிரசை நருமதை ஆற்றங்கரையில் வீசிச் சென்றான். சிரசு வீழ்ந்த இடம் பள்ளமாகிக் கணேச குண்டம் எனவும் சிரசிலி ருந்து பெருகிய உதிரம் ஆறாக ஓடி சோண நதி எனவும் வழங்கப்பட்டதாக வரலாறு.

பின்னர் திருக்கைலாயத்தில் யோகிகட்கு யோகியும் போகி கட்கு போகியுமான சிவனார் உமையுடன் இருக்கும் போது விநாயகப் பெருமான் தோன்றியருளினார். இவ்வதிசயத் தைக் காணத் திருமால், பிரம்மன் மற்றும் தேவர்கள் அனைவரும் திரண்டு வந்தனர். அப்போது விநாயகப் பெருமான் சிவபிரான் கொன்ற கயமுகாசுரனது தலையை வருவித்துத் தன்மேனி மேல் பொருத்தி யானை முகத்தினனானார். இது விநாயகர் பற்றிப் புராணம் கூறும் வரலாறுகளில் ஒன்று. இதனால் கணபதி கஜானனன் என்னும் பெயரையும் பெற்றார்.

இதனை எல்லாம் கேள்வியுற்ற சிந்துரன் தன் பல மெல்லாம் திரட்டி மீண்டும் விநாயகப் பெருமானோடு சமர் செய்ய வந்தான். விநா'பகப் பெருமான் அவனைத் தன் துதிக்கையினால் வாரி எடுத்துச் சாந்து போல் அரைத்து குழைத்து தன் மத்தகத்தில் பூசிக் கொண்டார். சிந்துரனின் அழிவால் தேவர்கள் இன்னல் நீங்கப் பெற்றனர்.

கொடியவனான சிந்துரனைக் கொல்லும் பொருட்டு விநாயகப் டெருமான் திருஅவதாரம் செய்த தினம் ஆவணி மாதப் பூர்வ பக்கச் சதுர்த்தி தினமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப் பெருமானிடம் சந்திர பகவான் சாபம் பெற்ற வரலாறும் ஒன்று உளது. ஒரு சந்தர்ப்பத்தில் பெரியோர் அமர்ந்திருந்த சபையில் அடக்கமின்றி நகைத்த சந்திரனை விநாயகப் பெருமான் சினந்து "உலகில் பிரகாசமின்றி மறைந்து போகக் கடவை" எனச் சாபமிட்டார், இதனால் சந்திரன் ஒளியிழந்தான். தேவர்கட்கு அமுத பானம் கிடை யாமற் போயிற்று. இக்குறையை நீக்கியருள இந்திரன் தலை மையில் தேவர் குழாம் கணபதிக் கடவுளை அணுகித் தம் குறை தீர்த்தருள வேண்டினர். கணபதியும் இந்திரனை நோக்கி "இந்திரனே, வருடத்தில் ஒரு நாள் ஆவணி மாதப் பூர்வ பக்க சதுர்த்தியில் சந்திரனை யாரும் பார்த்தல் கூடாது. அப்படிப் பார்ப்பவர்கள் துன்பமடைவர். ஏனைய நாட்களில் அவன் முன்னைய பிரகாசத்துடன் திகழ்வான்" என்று அருளிச் செய்தார்.

அப்படியிருந்தும் இந்திரன், சந்திரனிடம் சென்று விநாயகப் பெருமான் அருளிச் செய்ததைக் கூறி ஏகாட்சர மந்திரத்தைச் சந்திரனுக்கு உபதேசித்து விநாயகப் பெருமானை வழிபட்டு உய்யும்படி கூறிச்சென்றான்.

சந்திரனும் 22 ஆண்டுகள் விநாயகப் பெருமானைக் குறித்து ஏகாட்சர மந்திரத்தைச் செபித்துத் தியானம் செய்தான். கணபதியும் சந்திரன் மேல் கருணை கொண்டு அவன் முன் பிரசன்னமாகி "அங்காரக சதுர்த்தியன்று நீ உதயமாகும் போது என்னைத் துதிப்பவர் உன்னையும் துதிக்கக் கடவர். உனது கலைகளில் ஒரு கலை மாத்திரம் எனது திருமுடியில் இருக்கக் கடவது" என்று திருவாய் மலர்ந்தருளினார். இதன் காரணமாகவே பாலச்சந்திர விநாயகர் எனத் திருநாமமும் பெற்றார் கணபதி.

இவ்விரதத்தை திருமால் அனுட்டித்துக் குருட்டுப் பாம்பாகப் போகும்படி உமையம்மையிட்ட சாபத்தினின்றும் நீங்கப் பெற்றார். இந்துமதி என்னும் இளவரசி இவ்விரதத்தை 12 ஆண்டுகள் அனுட்டித்து மங்கலப் பேறு பெற்றாள். நாரத மாமுனிவரின் உபதேசப்படி இந்துமதியும் அவளது கணவன் சந்திர காந்தனும் தொடர்ந்து விநாயக சதுர்த்தி விரதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டித்து நற்பேறு பெற்றனர் என்பதும் இவ்விரதத்தின் முக்கியத்தைக் குறிக்கும் வரலாறு ஒன்றாகும்.

## 3. விநாயக சஷ்டி விரதம்

இவ்விரதத்தைப் பிள்ளையார் பெருங்கதை விரதம் என்றும் அழைப்பதுண்டு. கார்த்திகை மாதத்தில் இடம்பெறும் கிருஷ்ண பட்சப் பிரதமை முதலாக மார்கழி மாதச் சஷ்டியீறாக 21 தினங்கள் விநாயகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் இதுவாகும்.

இவ்விரதத்தை அனுட்டிக்கும் முறையை நோக்கின் இவ்விரதத்தின் போது ஆண்கள் 21 இழையோடு கூடிய காப்பை வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிய வண்ணம் முதல் 20 நாட்களும் ஒருபொழுது உணவுண்டு இறுதி நாளன்று உபவாசம் இருந்து பெருங்கதை படித்தும் கேட்டும் அன்றைய தினத்தை தவப்பொழுதாகக் கழிக்க வேண்டும். காப்புக் கட்டல் என்பது ஒரு வகைப் பாதுகாப்பைக் குறிக்கின்றது. விநாயகப் பெருமானுக்கு இளநீர், கரும்பு, மோதகம், அவல், எள்ளுருண்டை ஆகியவற்றை நிவேதித்து விசேட ஆராதனை செய்தல் வேண்டும்.

தபோதனர்கள், அந்தணர்கள் பலர் இவ்விரதத்தை அனுட்டித்து விநாயகப் பெருமானின் கருணையைப் பெற்றமை விநாயக புராணம் கூறும் வரலாறு ஆகும்.

**ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்**
**வெற்றி புனைந்த விழி மூன்றும் - பெற்றதொரு**
**தண்டைக்கால் வாரணத்தை தன் மனத்திலெப்பொழுதும்**
**கொண்டக் கால் வாராது கூற்று.**

இவ்விரதங்களை விட கணபதிக்குரிய விரதங்களாக:-

- சித்தி விநாயக விரதம்
- சங்கடஹரர சதுர்த்தி விரதம்
- தூர்வா கணபதி விரதம் ஆகியவையும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவை பற்றிக் காந்தம் முதலிய புராணங்கள் கூறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சித்தி விநாயக விரதம்

**கா**ரிய சித்தி பெறுவதற்காகவும் பழி நீங்குவதற்காகவும் இவ்விரதம் நோற்கப் பெறுகின்றது. கிருஷ்ண பகவான் பிரசனசித்தைக் கொன்று சியமந்தகமணியைத் திருடிக் கொண்டதாக ஏற்ற பழியினின்று விடுபடுவதற்காக இவ் விரதத்தை நோற்றார் என்பது புராண வரலாறு.

விநாயகப் பெருமானின் திருவுருவத்தைக் களிமண்ணால் பிரதிஷ்டை செய்து 21 வகை இலைகள், 21 வகை மலர்கள், 21 அறுகம்புல் ஆகியவற்றால் பூசித்து 21 கொழுக்கட்டை களையும் அன்று கணபதிக்கு நிவேதித்தல் முறையாகும். அன்றிரவு சந்திரனுக்குப் பூசையும் செய்து வழிபடல் வேண்டும்.

●

## 5. சங்கடஹர சதுர்த்தி விரதம்

**வி**நாயகப் பெருமானை நோக்கி பிணி, கடன், சிறை வாசம், பிரிவுத்துன்பம் இவற்றிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வேண்டி ஒருவர் நோற்கும் விரதம் இவ்விரதமாகும். பாரதத்திலே பாண்டவர் வனவாசம் இருந்தபோது கிருஷ்ண பகவான் தருமருக்கு இவ்விரதம் பற்றி உபதேசித்ததாக அறியக்கிடக்கின்றது.

இவ்விரத நாட் பூசை ஆவணி மாதக் கிருஷ்ண பட்ச சதுர்த்தித் தினத்தன்று இரவு சந்திரன் உதயமானதும் செய்யப்படல் வேண்டும். ஆவணி மாதத் தேய்பிறைக் காலச் சதுர்த்தி இவ்விரதத்துக்கு உகந்த நாள் எனச் சொல்லப் பட்டுள்ளது.

●

## 6. தூர்வா கணபதி விரதம்

**இ**வ்விரதம் வளர்பிறைச் சதுர்த்தியில் அதிலும் சிறப்பாக ஆவணி மாதச் சதுர்த்தியில் அல்லது கார்த்திகை மாதச் சதுர்த்தியில் தொடர்ந்து 3 அல்லது 5 ஆண்டுகள் முறையாக அனுட்டிக்கப்படல் வேண்டும. சந்ததிப் பேற்றை அடையவும் செல்வம் வேண்டியும் இவ்விரதத்தை நோற்றல் வழமை ஆகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. மார்கழிப் பிள்ளையார்

**மா**ர்கழி மாதத்திலே மாதம் முழுவதும் இல்லங்களிலே இடம்பெறும் மார்கழிப் பிள்ளையார் வழிபாடு சைவசமயி களிடையிலே மிகப் பிரசித்தமானது. மார்கழி மாதப் பிறப்பு ஆரம்ப நாளிலிருந்து தை பிறக்கும் வரை தினமும் இல்லத்தின் முன்றலில் சாணமிட்டு மெழுகி மாவால் அழகுக் கோலமிட்டு சாணம், மஞ்சள்மா, புற்று மண், வெண்ணெய் ஆகியவற்றுள் ஏதாவது ஒன்றினால் பிள்ளையார் பிடித்து அறுகம்புல்லால் அர்ச்சித்து வழிபடல் மரபு. தைபிறந்ததும் அப்பிள்ளையார் திருவுருங்களை ஒன்றாக வைத்துக் கணபதிக்குப் பிடித்தமான அப்பம், கடலை, மோதகம், கொழுக்கட்டை, இளநீர், முக்கனி, கரும்பு ஆகியன நிவேதித் துப் பின்னர் சிறுதேர் கட்டி அதில் விநாயக உருவங்களை வைத்துத் தேருருட்டிச் சென்று ஆற்றிலோ குளத்திலோ சமுத்திரத்திலோ அவற்றை விட்டுவிடல் பழந்தமிழர் மரபு.

இத்தகைய வழிபாடு செய்வதால் இல்லத்தைத் தீயசக்திகள் அணுகாது என்பது ஐதிகம். இவ்வழிபாட்டை மார்கழி மாதம் முழுவதும் இல்லத்தரசிகள் மிக அழகாகவும் முறையோடும் செய்து முடிப்பது கண்கூடு. இருப்பினும் இப்பழக்கம் தற்போது சிறிது சிறிதாகப் பெரும்பாலும் நகர்ப்புற இல்லங்களிலே அருகிக்கொண்டு வருவதை நாம் காண முடிகிறது. எனவே இதனை இப்படியே விட்டு விடாது இத்தகைய சமய கலாசாரங்களை வாழ்வின் அடித்தளமாக மீண்டும் மலர வைப்பது சைவசமயி ஒவ்வொருவரது கடமையுமாகும்.

**வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்**
**தப்பாமற் சார்வார் தமக்கு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ② சிவ விரதங்கள்

சிவன் என்றால் மங்களமானவன்; நலம் செய்பவன்; யோகிகளுக்கெல்லாம் உயர்ந்த யோகி; இலிங்க வடிவின னான சிவனை வழிபடும் முறையே சைவம் ஆகும். இது சிவனைக் குறித்த வழிபாடு என ஆதிசங்கரர் செம்மையாக் கினார். இவர் காலத்தில் தான் சைவம் பாரத நாடெங்கணும் பரவியது. இவரது வழிகாட்டலில் தமிழ் நாட்டில் சைவ சித்தாந்தம் என்றும் காஷ்மீரத்தில் காஷ்மீர சைவம் என்றும் கன்னட நாட்டில் வீர சைவம் இலிங்காயதம் என்றும் பல பெயர்களில் வழங்கப்படலாயிற்று. தமிழ்நாட்டில் பல சைவ சமயாச்சாரியர்கள் தோன்றிச் சைவத்தைப் பரப்பினர். கன்ன டத்தில் பசுவேசுவரர், சென்னபசவர், அக்கமாதேவி ஆகியோர் வீரசைவத்தைப் பரப்பினர். காஷ்மீர சைவத்தை அபிநவ குப்தர், சோமானந்தர், கல்லாடர், வசகுப்தர் போன்ற பெரிய மகான்கள் வளர்த்தனர்.

சிவனின் சின்னமாகிய சிவலிங்கத்தை வழிபடும் வழக்கம் மிகத் தொன்மையானது. ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியங்களில் மலை உறை கடவுள், பிறவா யாக்கைப் பெரியோன், சூலம் பிடித்த சுடர்படைக் கடவுள் எனச் சிவன் குறிப்பிடப்பட்டுள்ளார். சிவனாருக்குரிய நமசிவாய, சிவாய நம என்னும் ஐந்தெழுத்து மந்திரம் பற்றி யசுர் வேதம் கூறுகிறது. சைவ ஆகமங்கள் சைவத்தின் உண்மைகள். சைவ ஆலயங்களை அமைக்கும் முறைகள் பற்றிக் கூறியுள்ளன. சைவத்தின் மேன்மை, சைவ ஆலயங் கள், தெய்வீகத் தோத்திரங்கள், அருளாளர்கள் ஆகியவற்றால் புலனாகின்றது. சைவ ஆலயங்களில் பண்டுதொட்டு பல கலைகளும் வளர்ச்சி அடையலாயின.

பஞ்சபூதத் தலங்கள், அட்டவீரட்டானத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள், ஐவகைச் சபைகள் ஆகியவை சிவனின் பெருமையையும் அவனது அருட் பெருமையையும் சுட்டி நிற்கின்றன. சைவத்தோடு சம்பந்தப்பட்ட தோத்திரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு திருமுறைகளாகப் பரிணமிக்கின்றன. வேதாந்தத்தின் தெளிவே சைவசித்தாந்தம். சிவனாரது திவ்விய தோற்றத்திற் கும் அவரது பல்வேறு நாமங்களுக்கும் உள்ள தொடர்பை எல்லோரும் அறிந்திருத்தல் அவசியம். உதாரணமாக கங்கா நதியைச் சிவனார் சடையில் அணிந்துள்ளதால் சடைநீர்க் கங்கையான் எனப் போற்றப்படுகிறார். சடைமுடியுடைய வராதலால் ஜடாதரன் என்றழைக்கப்படுகிறார். பிறைச்சந்திர னைத் தாங்கிய சிவன் சந்திரசேகரர் எனப்படுகிறார். நாக மணிந்ததால் நாகாபரணன் என்றும், 5 திருமுகங்களை கொண்டதால் ஐம்முகன் என்றும், ஆலகால விடத்தை உண்ட தால் திருநீலகண்டன் என்றும், பல நாமங்கள் பெற்ற வன் எம்மீசன்.

கொன்றை, ஊமத்தை, வெள்ளெருக்கு ஆகியவை அவருக்குப் பிடித்தமானவை. மான், மழு, புலித்தோலாடை, உருத்திராட்சம், வெண்ணீறு, இடப வாகனம் அவரது வசீகரத் தோற்றத்தில் காணப்படுபவை. கைலை மலை ஈசனின் உறை விடம். காமனைக் கண்ணால் எரித்த காரணத்தால் காமாரி என்றழைக்கப்பெறும் சிவன் திரிபுராரி, முப்புர மெரித்தோன், நடராஜன், ஏகபாதன், அர்த்தநாரி, பிட்சாடனர் என்றும் அவரது திருவிளையாடல் காரணமாக அழைக்கப் படுகிறார்.

சிவவழிபாட்டில் கோபுரவழிபாடு, சிவலிங்கம், பலிபீடம், நந்தி, பஞ்ச புராணம் ஆகியவை பிரதான இடம் வகிக்கின்ற தோடு விரதங்கள், நேர்த்திகள், அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை, பூசை, திருஉலா, தோத்திரம் ஆகியவை சிவனாரை மகிழ்விக்கும் என்பது சிவபுராணங்கள் கூறும் உண்மைகளாம்.

**அன்பே சிவம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. தைப்பூசம்

**தை** மாதத்தில் இடம்பெறும் பூச நட்சத்திரமன்று தைப்பூச விரதம் அனுட்டிக்கப்படும். இத்தினம் ஸ்ரீ நடராஜர், அம்பிகை, முருகன் ஆகியோருக்குகந்த நன்னாளாகும்.

தைப்பூசத் திருநாளிலே, தை-த-தை என்ற தாளத்துக் கமைய எம்பெருமானாகிய ஸ்ரீ நடராஜப் பெருமான், சிவகாம சுந்தரி அம்மையோடு ஆனந்த நடமாடுவதாகப் புராண வரலாறுகள் உண்டு. இந்நடன தாண்டவத்தை வியாக்கிர பாதர், பதஞ்சலி முனிவர், பிரம்ம விஷ்ணு, தில்லை மூவாயிர வர் மற்றும் மெய்யடியார்கள் கண்டுகளித்தனர், ஆனந்தக் கடலில் மூழ்கினர். வெகு நாகரிகமாக, கனகசபை தன்னில் ஆனந்த நடனம் ஆடும் தில்லைக் கூத்தனாம் ஸ்ரீநடேசப் பெருமானை நினைத்துச் சைவசமயிகள் தைப்பூசத் திரு நாளில் விரதமிருப்பது வழமை.

“சிவனார் கனகசபையான ஞான சபையிலே உமையம்மை யுடன் ஆனந்தத் தாண்டவம் செய்த இத் தைப்பூசத் திருநாளிலே, அன்று வியாழக்கிழமையும் கூடிவரின் அச்சித்த யோக தினத்திலே ஆயிரம் தோள்களையுடைய வாணாசுரன் குடமுழா ஒலிக்க ஆயிரம் முகமுடைய பானுகம்பர் சங்கூத பஞ்ச துந்துபி முழங்க வேத ஒலியும் கந்தருவர் கீத ஒலியும் நாதமெழுப்ப ஞான சபை தன்னில் சிவபெருமான் உமை அம்மையுடன் ஆனந்த நிருத்தம் செய்தருளினார்” என நாவலர் பெருமான் தைப்பூசத் திருநாட் சிறப்புப் பற்றிக் கூறியுள்ளமை இங்கு நோக்கற் பாலது.

சோதிடம் கூறும் 27 நட்சத்திரங்களுள் பூசம் 8 ஆவது நட்சத்திரமாகும். தைப்பூச நன்னாள் பெரும்பாலும் நிறைமதி நாளான பௌர்ணமியில் இடம்பெறும். தேவர்களின் குரு வாகிய பிரகஸ்பதி தான் பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர். பிரகஸ்பதி அறிவின் தேவதை ஆதலால் தைப்பூச நன்னாளை அனுட்டித்தால் பிரகஸ்பதியின் அருளால் பூரண அறிவு கிடைக்கும் என்பது நம்பிக்கை. தைப்பூச நன்னாளில் புண்ணிய தீர்த்தமாடினால் மிகுந்த புண்ணியம் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலுள்ள திருவிடை மருதூர்த் தலம் தைப்பூச விழாவிற்குப் பிரசித்தி பெற்ற தலமாக விளங்குகிறது. அத்தலத்திலே அமைந்த சித்த தீர்த்தத்தில் தீர்த்தமாடி வில்வமரத்தை பிரதட்சணம் செய்து சுவாமி தரிசனமும் செய்தால் பாவங்கள் நீங்கும்.

அதே போன்று தமிழ்நாட்டிலே திருநெல்வேலி மாவட்டத்திலே திருநெல்வேலியில் அமைந்த தாமிரபரணியில் தைப் பூசத் தினத்தன்று தீர்த்தமாடுதல் புண்ணியம் பெறும் செயலாகும்.

தைப்பூச விரதமனுட்டிக்கும் முறையை நோக்கின், அதிகாலை துயில் எழுந்து புனித நீராடி ஆசாரத்துடன் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். காலை உணவை விடுத்து நண்பகல் புது நெல்லரிசிச்சாதம் உட்கொள்ளல் சிறப்பாகும். இரவு பலகாரம் உண்ணலாம்.

புதுநெல் எடுத்துச் சுவாமிக்குப் பிரசாதம் செய்து நிவேதித்தல் இந்நாளின் சிறப்பாகும் இந்நிகழ்வைப் புதிரெடுத்தல், புதிதுண்ணல் அல்லது புதிருண்ணல் என்று கூறுவர். அத்தோடு சிறார்களுக்குக் காதுகுத்தல், சமய தீட்சை பெறல் போன்ற சுபமங்கள காரியங்களுக்கும் இத்தினம் உகந்ததாகும்.

மேலும், மநுமகன் இரணியவர்மனுக்கும் தில்லை மூவாயிரவருக்கும் தில்லையில் அழகன் தரிசனம் கொடுத்ததும் இத்தைப்பூச நன்னாளிலேயாகும். இதே நாளில் தான் புத்தர் பிரான் ஞானோதயம் பெற்று இமயமலைச் சாரலிலே இருந்த நாட்களில் ஈழநாடு பற்றிச் சிந்தித்ததாக வரலாறு உண்டு. இத்திருநாளில் சைவசமயிகள் தரிசிக்க வேண்டியது சிதம்பரத்தில் தில்லையில் ஆடும் நடராஜ திவ்விய தரிசனம் ஆகும்.

**மைப்பூசும் ஒண்கண் மட நல்லார் மாமயிலைக்**
**கைப்பூசும் நீற்றான் கபாலீச்சரம் அமர்ந்தான்**
**நெய்ப்பூசும் ஒண்புழுக்கல் நேரிழையார் கொண்டாடும்**
**தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்.**

- ஞான சம்பந்தர் தேவாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சூல விரதம்

சிவபெருமான் சூலப்படையைத் தனது திருக்கரங்களில் தாங்கியுள்ளார். இதன் காரணமாகவே சூலபாணி என்னும் நாமத்தையும் பெற்றுள்ளார். சூலபாணியாகிய சிவனாரைக் குறித்து அனுட்டிக்கப்பெறும் இவ்விரதம் சூலவிரதம் எனப்படுகிறது. இதனைப் பாசுபத விரதம் என்றும் அழைப்பர்.

உத்தராயண காலமாகிய தைமாத அமாவாசையில் இவ்விரதத்தை ஆரம்பிக்கலாம். இப்புண்ணிய காலத்தில் விரதிகள் தூய நீராடி சிவாலய தரிசனம் செய்து சூல பாணியின் திருவுருவை மனதிலே தியானித்து வணங்கித் தோத்திரம் செய்து ஒருபொழுது உணவு உண்டு விரதத்தை நிறைவு செய்தல் முறையாகும்.

பிணி, பகை, பாவம் யாவற்றிலிருந்தும் விடுபட இவ்விர தத்தை அனுட்டித்தல் வேண்டும். திருமால் இவ்விரதத்தை முறைப்படி நோற்று காலநேமி என்னும் கொடிய அசுரனை தனது சக்கராயுதத்தால் கொன்றொழித்து அவனால் வருந்தி யோருக்கு நன்மை புரிந்ததாகவும் பெருந்தவம் புரிந்த பரசுராமன் இவ்விரதத்தைச் சீராக அனுட்டித்த காரணத்தி னாலேயே கார்த்தவீரியார்ச்சுனனை போர்க்களத்தில் அட்ட காசம் புரிந்த அவனது ஆயிரங்கரங்களையும் வெட்டி வீசி வெல்ல முடிந்தது என்றும் வரலாறு உண்டு. பிரம்மாவைச் சிலகாலம் வருத்திய கொடிய வயிற்று நோயும் இவ்விரத பலனால் நீங்கியது.

இந்த வகையில் தேவர்கள், செல்வந்தர், பிணியாளர் பாவிகள் எவராயினும் இவ்விரதம் அனுட்டிப்போர் தாம் விரும்பியவாறு பெருநலமடைவர் என்பது நிஜம். இவ் வுண்மையை உபதேச காண்டம் பின்வருமாறு கூறியுள்ளது.

**தேவராயினும் இருநிலம் சிறந்தவர் எனினும்**
**யாவராயினும் இடையறாப்பெரும் பிணியினராய்**
**பாவராயுழந்து இதுமுறை நோற்பரேல் பயின்ற**
**நோய்ஒழிந்து பின் இருங்கதிப் பெருநலன் நுகர்வா.**

இஃது சூல விரதத்தின் பெரும் பயனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. மகா சிவராத்திரி

"சிவராத்திரி" என்பதை சிவனுடைய இராத்திரி என்று கொள்ளலாம் சிவனை வழிபடுவதற்குரிய இராத்திரி என்றும் கொள்ளலாம். "சிவம்" என்ற சொல்லுக்கு மங்களம், நன்மை, இன்பம், பெருஞ்சுகம் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம்.

சிவராத்திரி

நித்திய சிவராத்திரி
பட்ச சிவராத்திரி
மாத சிவராத்திரி
யோக சிவராத்திரி
மகா சிவராத்திரி என 5 வகைப்படும்.

மாசி மாதம் கிருஷ்ண சதுர்த்தசியில் நள்ளிரவில் சிவபெருமான் இலிங்கவடிவத்தில் தோன்றினார். அன்றைய தினமே மகா சிவராத்திரியாகும். இந்நேரத்தில் சிவபூசை செய்து சிவபுண்ணியம் பெறலாம். சிவராத்திரியன்று காலைக் கடன் முடித்து நீராடிச் சிவாலயம் சென்று பஞ்சாட்சரம் அல்லது சிவநாமம் செபிக்க வேண்டும். இரவில் இலிங் கேஸ்வரருக்கு விளக்கேற்றி நல்லெண்ணெய், பால், தயிர், நெய், தேன், பஞ்சாமிர்தம், கருப்பஞ்சாறு, இளநீர், பழச்சாறு, பன்னீர் ஆகியவற்றால் அபிடேகம் செய்தல் வேண்டும்.

பூசையின் போது உரிய பண்டங்களை நிவேதனம் செய்து சிவ தோத்திரங்கள் பாடி நித்திரை விழித்துச் சிவ தியானத் திலே கழித்து மறுநாட் காலை புனித நீராடி சூரியன் உதித்து ஆறுநாழிகைக்கு முன் பாரணை செய்தல் வேண்டும். அந்த ணர், ஏழைகட்குத் தானம் செய்தலும் முறையாகும். அன் றைய பகற் பொழுதையும் தூங்காது சிவதரிசனத்திற் கழித்து மாலையிலும் சிவ வணக்கம் செய்து பால் பழம் உண்டு, விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம்.

நான்கு யாமப் பூசை முறைகளிலும் சிவராத்திரித் தினத் தன்று சிவாலய தரிசனம் செய்தல் உத்தம பலனை நல்கும். இதற்குரிய பூசை முறைகளை நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் யாமத்தில் பால், தயிர், நெய், கோசலம், கோமயம் ஆகியன கலந்த பஞ்ச கவ்வியத்தால் மூர்த்திக்கு அபிடேகம் செய்த பின், வில்வம், தாமரை மலரால் அர்ச்சிக்க வேண்டும். பொருத்தமான நிவேதனமாக பயத்தம் பருப்புக் கலந்த பொங்கலை நிவேதித்து, தூப தீபம் ஆராதனை. இருக்கு வேதம் ஓதவேண்டும்.

இரண்டாம் யாமத்தில் பஞ்சாமிர்தத்தால் மூர்த்தியை அபிடேகித்த பின் சந்தனம், தாமரை சாற்றி துளசியால் அர்ச்சித்து பாயாசம் நிவேதித்து யசுர் வேதம் ஓத வேண்டும்.

மூன்றாம் யாமத்தில் மூர்த்திக்கு தேனாபிஷேகம் செய்து அரைத்த கற்பூரம் சாதி முல்லை மலர்கள் ஆகியன சாற்றி முக்கிளை வில்வத்தால் அர்ச்சித்து எள் அன்னம் நிவேதித்து சாம வேதம் ஓதிச் சிவனாரை வழிபட வேண்டும்.

நான்காம் யாமத்தில் கருப்பஞ்சாற்றினால் மூர்த்தியை அர்ச்சித்து அரைத்த குங்குமப்பூ, நந்தியாவட்டை மலர் சாற்றி நீலோற்பல மலரால் அர்ச்சித்து சுத்த அன்னம் நிவே தித்து சுவாமியை வழிபட வேண்டும். அதர்வண வேதத்தை ஓத வேண்டும்.

இந்த வகையில் சிவ இரவு முழுவதும் சிவவழிபாட்டில் ஈடுபட்டபின் அதிகாலை புனித நீராடி தீட்சாகுருவைத் தியானித்துத் தான தருமம் செய்து பாரணை செய்தாக வேண்டும். தொடர்ந்து 24 வருடங்கள் இவ்விரதத்தை முறைப் படி நோற்றபின் கோதானம் பூதானம் சுவர்ண தானம் முதலி யன செய்து இவ்விரத அனுட்டிப்பை நிறைவு செய்வோர் சிவகதி அடைவர் என்று சொல்லப்படுகின்றது.

சிவபூசை, சிவ வழிபாடு, சிவதீட்சை செய்வதற்குச் சிவராத் திரி ஒரு உகந்த புண்ணிய காலமாகும்.

எந்த விரதம் அனுட்டித்தாலும் அவ்வப்போது பசித்திரு, விழித்திரு, தனித்திரு என்று சொல்லப்படுகின்றது. ஊனும் உறக்கமுமே இறை வழிபாட்டிற்குத் தடையாயிருப்பன.

சிவராத்திரியன்று அறிந்தோ அறியாமலோ நித்திரை விழித் திருந்தாலும் அதுவும் நற்கதி அளித்திடும் என்பதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கதையை இங்கு பார்ப்போம்.

வேடனொருவன் தன்னைத் துரத்தி வந்த புலி ஒன்றிடமிருந்து தப்புதற் பொருட்டு மரமொன்றின் மேலேறி அமர்ந்து கொண்டான். புலியும் அவனை இறங்கும் போது தாக்கி உண்ணலாம் என்று மரத்தடியில் படுத்துக் கொண்டது. பொழுதும் சாய்ந்தது. புலியும் அவ்விடத்தை விட்டகலவில்லை. இரவு வந்தது. வேடனும் மரக்கிளையிலேயே தொடர்ந்து உட்கார வேண்டிய நிலை. தனது தூக்கத்தைக் கலைக்க வேடன் அம்மரக் கிளையின் இலைகளை ஒவ்வொன்றாக பறித்து கீழே போட்டு தன்னைத் தூக்கம் தழுவாமல் காத்துக் கொண்டான். பொழுதும் விடிந்தது. புலியும் தன் இருப்பிடத்திற்குச் சென்றுவிட்டது. வேடனுக்கும் விடுதலை கிடைத்தது.

மரத்தினடியில் ஒரு சிவலிங்கம் இருந்தது. அன்று சிவராத் திரி தினமாதலாலும் அதன்மேல் அறிந்தோ அறியாமலோ வேடன் அம்மரத்தில இலையைக் கீழே போட்டதாலும அம் மரம் வில்வ மரமாக அமைந்ததாலும் அன்று இரவு முழுவதும் வேடன் கண்விழித்துச் சிவார்ச்சனை செய்ததாக அமைந்தது. இதனால் அந்த வேடனுக்குச் சிவகதி கிடைத்தது. இச்சம்பவம் நிகழ்ந்த தலம் தமிழ்நாட்டிலே திருவைகாவூர் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், சுகுமாரன் என்னும் அந்தணன் தன் குல மேன்மையை மறந்து பிறனில் விழைதல் போன்ற தீயகாமச் செயல்களில் ஈடுபட்டுப் பாவங்கள் பல புரிந்து வருகையிலே சந்தர்ப்ப வசத்தால் ஒரு சிவராத்திரி புண்ணிய தினத்திலே நாக கன்னியர் ஆற்றிய சிவ வழிபாட்டைத் தரிசிக்க நேர்ந்ததால் தன் பாவங்கள் தீரப்பெற்றுக் கால தூதர் கைகளிலிருந்தும் விடுபட்டுச் சிவகணங்களால் மீட்கப்பட்டு நற்கதி அடைந்தான் என்பதும் ஒரு புராண வரலாறு ஆகும்.

சிவராத்திரிப் புண்ணிய தினத்திலே நான்கு யாமப் பூசைகளையும் ஒரு சிவாலயத்திலே தரிசித்தல் மிகமிகப் புண்ணியமான செயல் என்பதை ஒவ்வொரு இந்துவும் மனதிற் கொள்ள வேண்டும். அத்தோடு சிவராத்திரி அன்று நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழித்திருந்தால் போதும்தானே என்று சினிமாக் கொட்டகை களிலும் தொலைக்காட்சிப் பெட்டி முன்னும் சீட்டாடுவதிலும் அப்புண்ணிய பொழுதைக் கழிக்கலாம் எனப் படுமட்டமாக, தவறாக எண்ணிச் செயற்படுபவர்கள் "குளிக்கப் போய்ச் சேறு பூசிய" நிலையையே அடைவர் என்பது நிஜம்.

சிவலிங்கத்தில் எல்லாத் தெய்வங்களும் அடங்கியுள்ளனர் என்பதால் சைவர் மாத்திரமன்றி எல்லோராலுமே சிவலிங்க வழிபாடு செய்யப்பெற்றமையும் வரலாறு. சிவன், விஷ்ணு, பிரமன் ஆகிய மும்மூர்த்திகளையும் ஒன்று சேர்த்தே இலிங்கம் விளங்குகிறது. சிவலிங்கத்தின் பீடம் ஆவுடையார் என்பதாகும். இஃது சக்தியின் ரூபம். பாணம் சிவரூபம். பீடம் கிரியா சக்தி வடிவம். இலிங்கம் ஞான சக்தி வடிவம். பீடத்தின் அடிப்பாகம் பிரம்ம ரூபம். நடுப்பாகம் விஷ்ணு ரூபம் என்னும் கருத்தைத் திருமூலர் தனது பாடலில் வலியுறுத்தியுள்ளார்.

**மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்**
**பலம்தரு ஐம்முகன் பரவிந்து நாதம்**
**நலம்தரு சக்தி சிவன் வடிவாகிப்**
**பலம்தரு லிங்கம் பரா நந்தியாமே.**

- திருமூலர்

சிவராத்திரி பற்றி மேலும் ஒரு வரலாற்றை நோக்குவோம். முன்னொரு கால் ஊழிக்காலத்தின் போது உலக முடிவு நாளில் பிரம்மன் இறந்ததாகவும் அதன் காரணமாகச் சர்வான்மாக்களும் பிரளயத்தினால் அழிந்து போக அந்த இராப்பொழுதில் உமாதேவியார் சிவனைப் பூசித்து விரதமிருந்து சிவனருள் பெற்று அவற்றை மோட்சமடைய வைத்தார் என்றும், மற்றொரு வரலாற்றின்படி உமையம்மை சிவனைப் பூசித்து எம்பெருமான் கருணையால் மீண்டும் உலகைப்படைக்க வைத்தாள் என்றும் கதை உள்ளது. இந்த இராத்திரியே சிவராத்திரி ஆகும்.

கற்பாந்திரம் என்றால் கற்ப முடிவு என்றும் அதாவது உலக முடிவு என்றும் பொருள்படும். இத்தகைய ஒரு காலத்தில் விடாது அடைமழை பெய்தது என்றும் அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமே வெள்ளத்துள் ஆழ்ந்தது என்றும் ஆழ்ந்த உலகத்தை விஷ்ணு பகவான் பன்றி வடிவம் கொண்டு தனது கொம்பினால் வெள்ளத்திற்கு வெளியே உயரத் தூக்கிக் காப்பாற்றியதாகவும் பின்னர் தனது உந்தியில் படைத்தற் கடவுளாகிய பிரம்மதேவரைத் தோற்றுவித்து அவரைச் சிருஷ்டிக்கப் பணித்துப் பாற்கடலில் பள்ளி கொண்டார் என்பதும் வரலாறு.

இதன்படி தனது சிருஷ்டித் தொழிலால் உலகத்தை மீண்டும் படைத்த பிரம்மனுக்கு யாமே பரம்பொருள் என்றதோர் மமதை உண்டாக அவர்தானே பெரியவன் என்று விஷ்ணு பகவானோடு வாதிட அதனைச் சிறிதும் ஏற்காது பகவான் மறுக்க இவர்களிருவரது அறியாமையையும் நீக்கியருளத் திருவுளங் கொண்ட சிவனார் ஒரு மாசி மாதத்து அபரபக் கத்தில் சதுர்த்தசி கூடிய அர்த்த ராத்திரியில் பெரியதோர் அக்கினிப் பிழம்பாக இவ்விருவர் முன்னிலையில் தோன்றி இச்சோதியின் அடியையும் முடியையும் காண்பவர்களே உண்மைப் பரம்பொருள் என அசரீரி மொழிந்தார். அசரீரி வாக்குக் கேட்டு வியப்படைந்த பிரம்ம விஷ்ணுக்கள் ஜோதிப் பிழம்பின் அடிமுடி தேடிப் புறப்படலாயினர். முடியைத் தேடி அன்ன வடிவமெடுத்து மேலே பறந்து செல்லலானார் பிரம்மா. பன்றி வடிவெடுத்து அடியைத் தேடி பூமியைக் குடைந்து செல்லலானார் விஷ்ணு. ஆனால் இருவரும் தாம் கொண்ட அகந்தை காரணமாக தமது முயற்சியில் தோல்வியுற்றனர்.

சோதிப் பிழம்பு மலையாக இறுகி சிவபெருமான் சிவலிங்க வடிவில் காட்சி தந்தார். பிரம்ம விஷ்ணுக்கள் அகந்தை நீங்கி சிவனாரை வழிபட்டனர். அச்சோதிப் பிழம்பு சிவலிங்க வடிவாகத் தோன்றிய இரவே சிவராத்திரிப் புண்ணிய தினமாகும் என்றும் ஒரு வரலாறு உண்டு.

மேலும், உமாதேவியார் விளையாட்டாகச் சிவனாரின் இரு நேத்திரங்களையும் தனது கரங்களால் ஒரு முறை மூடவே உலகங்கள் எல்லாம் இருளடைந்தன. அப்போது 11 உருத்திரர்களும் திருவிடைமருதூரை அடைந்து சிவபெருமானை வணங்கினர் என்றும் அக்காலமே சிவராத்திரி எனவுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லப்படுகின்றது.

சிவராத்திரி இரவு முழுதும் நித்திரை விழித்திருக்க இயலாதோர் இரவு 14 நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்த காலம், இலிங்கோற்பவ காலம் என்றழைக்கப்படும், அந்நேரம் முடியும் வரையிலாவது விழித்திருத்தல் அவசியம்.

விரத உணவு மேற்கொள்ளும் விதத்தில் மூன்று வேளையும் உபவாசம் கடைப்பிடித்தல் உத்தமம். நீர் அல்லது பால் அருந்துதல் மத்திமம். பழம் உண்பது அதமம். தோசை, இடியப்பம், இட்லி முதலிய பலகாரங்கள் உண்பது அதமாதமம்.

விரத பலன் என நோக்கின் விரும்பியது கைகூடும்.

**பிறங்கு மாசியிற் பிற்பதினாலதே**
**அறங் கொணற் சிவராத்திரி மீதில்**
**உறங்கல் இன்றி உருற்றிடில் பூசனை**
**பெறும் பெரும் பயன் பே்சல் அரிதாகுமே.**

ஐவகைச் சிவராத்திரி பற்றி நோக்கின் மாசி மாதத்தில் அனுட்டிப்பது மகாசிவராத்திரி என்றும், ஒரு வருட காலத்தில் வரும் வளர்பிறை தேய்பிறை காலங்களில் நிகழும் 24 சதுர்த்தசி திதிகளிலும் அனுட்டிக்கப்படுவது நித்திய சிவராத்திரி என்றும், ஒரு வருட காலத்தில் வரும் அபரபட்ச சதுர்த்தசி திதிகள் 14 லிலும் மாதம் ஒன்று விரதம் அனுட்டிப்பது மாத சிவராத்திரி என்றும், ஒரு வருடத்தில் திங்கட்கிழமை இரவில் அமாவாசை நிகழுமாயின் அதுவும் சிவராத்திரி நாளாக யோக சிவராத்திரி என்றும், தை மாதம் அபரபட்ச பிரதமை முதல் சதுர்த்தசி வரை ஒரு வேளை உணவுண்டு அனுட்டிப்பது பட்ச சிவராத்திரி என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளது.

இத்தகைய விரதத்தின் மகிமையைத் திருநந்தி தேவர் மூலம் அறிந்த சூரியன், முருகப் பெருமான், மன்மதன், அக்கினி, இந்திரன், சந்திரன், குபேரன் முதலானார் இவ்விரதத்தைச் சிரத்தையோடு அனுட்டித்து வேண்டியதைப் பெற்றார்கள் என்பது புராண வரலாறு ஆகும். விஷ்ணு பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விரதத்தை அனுட்டித்து இலக்குமி தேவியையும், சக்கரா யுதத்தையும். பெற்றார். பிரம்ம தேவன் இவ்விரத பலனால் சரஸ்வதி தேவியைப் பெற்றார். இவர்களை விட இராஜசேகர பாண்டிய மன்னன் இச் சிவராத்திரிப் புண்ணிய காலத்திலே வெள்ளியம்பலத்துத் தில்லைக்கூத்தனுக்கு நான்கு யாமத்திலும் விசேட அபிடேகம், பூஜைகள் ஆற்றிச் சிவ தாண்டவத்தைத் தரிசித்து பேரின்பமடைந்ததும் வரலாறு. இத்தகைய மேலும் பல கதைகளை சிவ மகாபுராணம், ஸ்கந்த மகா புராணம், பிரம்மோத்தர காண்டம் போன்றவை களும் வாதுளம் முதலிய ஆகமங்களும் உபாகமங்களும் கூறியுள்ளன.

எனவே, இவ்விரதத்தின் மகிமையை அனுட்டிக்கும் முறை, அனுட்டிப்போர் பெறும் நற்பலன்கள் நன்கு அறிந்து புரிந்து மிக்க சிரத்தையோடு முறைப்படி இவ்விரதத்தை அனுட்டித்தல் ஒவ்வொரு சைவசமயியினுடைய தலையாய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. கல்யாண சுந்தரேச விரதம்

தேவியோடு கூடிய கல்யாண சுந்தரமூர்த்தியாகச் சிவ பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதம் இக் கல்யாண சுந்தரேச விரதமாகும். சிவ விரதங்களில் ஒன்றான இவ்விரதம் பங்குனி மாத உத்திரத்தில் அனுட்டிக்கப்படுவதாகும். பார்வதி பாகராகிய சிவனாரைத் திருமணக் கோலத்திலே தரிசிப்பதால் இவ்விரதம் திருமண விரதம் என்றழைக்கப்படுகின்றது.

விரத புண்ணிய காலத்தில் அம்மை அப்பன் வடிவங் களுக்கு அபிடேகம் செய்து, ஆராதனை புரிந்து பூசை, அர்ச்சனை தூபதீபம், கிரியைகள் விதிப்படி செய்தல் முறை யாம். அந்தணத் தம்பதியினர் ஒருவர்க்கு அமுது செய்வித்த லும் சிறந்ததாகும். சூரிய அஸ்தமனத்தின் பின் இரவுணவு உண்டு விரதத்தைப் பூர்த்தி செய்யலாம்.

இவ்விரதத்தின் மகிமை சொல்லுந் தரமன்று. திருமண நல்வாழ்வு, தம்பதிகள் ஐக்கியமும் இவ்விரதத்தின் பலன்களாம். இளைஞர்களுக்கும் கன்னியர்களுக்கும் உகந்த விரதமான இதனைத் திருமகள் அனுட்டித்து விஷ்ணு பகவானின் திருமார்பில் உறையும் பாக்கியம் பெற்றார் என்றும் இந்திரன் இவ்விரதத்தை அனுட்டித்து இந்திராணியைப் பெற்றான் என்றும், பிரம்மதேவன் இவ்விரதத்தை அனுட்டித்ததன் பயனாகச் சரஸ்வதியை நாவில் அமர்த்தும் பேறு பெற்றான் என்றும் இவ்விரதத்தின் பயனால் சந்திரன் 27 அழகிய மனைவியரை அடைந்தான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. மேலும், திருமயிலாப்பூரிலே சிவநேசச் செட்டியாரின் மகளா கிய பூம்பாவையை மீண்டும் உயிர் பெற்றெழச் செய்யும் சந்தர்ப்பத்தில் ஞானசம்பந்தப் பெருமான் பாடிய பதிகத்தில் இப்பங்குனி உத்தர நாளின் சிறப்பைப் பாடியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**"பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்தரநாள்**
**ஒலிவிழாக் காணாது போதியோ பூம்பாவாய்"**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. பிரதோச விரதம்

சிவனாருக்குரிய விரதங்களுள் பிரதோச விரதம் தனித்து வமானது. முற்பிறப்பில் செய்த குற்ற நீக்கமே இவ்விரதத்தின் பயனாகும்.

பிரதோசம் என்பது இராத்திரியின் முன் என்றும் பொருள் படும். அத்தோடு ரஜனிமுகம் என்றும் வடமொழியில் பொருள் கொள்ளப்பெறும்.

இவ்விரத காலத்தை நோக்கின் இது கிருஷ்ண பட்ச, சுக்கில பட்சமாகிய இரு பட்சங்களிலும் இடம்பெறும். திர யோதசி திதியிலே சூரியன் மறைவதற்கு முன்னர் உள்ள 3¾ நாழிகையும் பின்னர் உள்ள நாழிகையும் பிரதோச காலமாகும்.

இவ்விரதத்தை முதலாக அனுட்டிக்க உள்ளோர் சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் நிகழும் சனிப் பிரதோசம் ஒன்றில் இவ்விரதத்தை அனுட்டிக்க ஆரம்பிக் கலாம்.

இவ்விரதம் 5 வகைப்படும். அவையாவன:

1. நித்திய பிரதோசம்
2. பட்ச பிரதோசம்
3. மாத பிரதோசம்
4. மகா பிரதோசம்
5. பிரளய பிரதோசம்

இவ்வகைகள் பற்றி விளக்கமாக நோக்கின் தினமும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையுள்ள காலப்பகுதி நித்திய பிரதோசம் என வழங்கப்படும். இவ்வேளையில் எம்பெருமான் ஆடிய தாண்டவம் "சந்தியா தாண்டவம்" என்றழைக்கப்படுகின்றது.

வளர்பிறைக் காலத்தில் சதுர்த்தசித் திதியில் இடம்பெறும் மாலைக்காலம், பட்ச பிரதோச காலமெனப்படும். இவ்வேளை யில் சிவவணக்கம் மிகப் பொருத்தமானதாகும். இப்பிரதோச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் எம்பெருமான் ஆடிய தாண்டவம் ''சதுரானந்த தாண்டவம்'' எனப்படுகின்றது.

அடுத்து மாதப் பிரதோசம் பற்றி நோக்குவோம். மாதந் தோறும் இடம்பெறும் தேய்பிறைக் காலத்தில் இடம்பெறும் திரயோதசித் திதியில் வரும் பிரதோசமே மாத பிரதோசம் எனப்படும். இப் புனித வேளையில் இறைவன் ஆடிய தாண்டவம் ''லதா தாண்டவம்'' எனப்படும். மகா பிரதோசம் என்பது தேய்பிறை திரயோதசி திதி சனிக்கிழமைத் தினத்தில் இடம் பெறும் பிரதோசம் ஆகும்.

உயிர்கள் எல்லாம் சிவனுடன் ஒடுங்கும் பிரளய காலத்தில் நிகழும் பிரதோச புண்ணிய காலம், பிரளய பிரதோசம் எனப்படும். இவ்வேளையில் எம்பெருமான் ஆடிய தாண்டவம் ஊர்த்துவ தாண்டவம் எனப்படும்.

இவை ஐவகை பிரதோசங்கள் ஆகும். இனி, இவ்விர தத்தை யாம் எவ்வாறு சிறப்பாக அனுட்டிக்க வேண்டும் என்பதை நோக்குவோம்.

இவ்விரத தினத்தன்று அதிகாலை துயிலெழுந்து நீராடி இல்லத்தில் இறைவணக்கம் செய்து உண்டி தவிர்த்துப் பகல் பொழுதை சிவதோத்திரங்களை ஓதித் தவப் பொழுதாக்கி மாலையில் சிவனாலயம் தரிசித்தாக வேண்டும். அங்கும் பஞ்சாட்சர ஜபம் ஓதிப் பக்தித் தோத்திரம் பாடி அவன் தாள் வணங்க வேண்டும்.

பிரதோச காலத்தில் சிவபிரானை ஆலயத்தில் எவ்வாறு வழிபடல் வேண்டும் என்பதற்கு ஒரு தனிப்பட்ட முறை ஒன்றுண்டு. அதனைச் சற்று நோக்குவோம். ''முதலில் இடப தேவரை வணங்கி பின்னர் அங்கு நின்று இடது பக்கமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்து அதன்பின் சென்ற வழியே திரும்பி வலமாக வந்து மீண்டும் இடபதேவரை வணங்கி அங்கிருந்து வலப்புறமாகச் சென்று வடதிசையை அடைந்து திரும்பி வந்து இடதுபுறமாகச் சென்று சண்டேஸ்வரரைத் தரிசித்த பின் திரும்பி வந்து மீளவும் இடப தேவரைத் தரிசித்து அவருடைய இரு கொம்புகளிடையாகப் பிரணவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திரத்தோடு "ஹர ஹர" என்றும் உச்சரித்த வண்ணம் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தல் வேண்டும்." இது இப்புண்ணிய கால வழிபாட்டு முறை என ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் சைவ வினாவிடையிற் கூறியுள்ளார்.

பிரதோச புண்ணிய வேளையிலே துயில்கொள்ளல், நீராடல், உண்ணல், எண்ணெய் தேய்த்தல் ஆகாத செயல் களாம்.

பிரதோச விரதத்தன்று சிவனாருக்கு அபிடேகம் செய்தற் பொருட்டு பால், தயிர், பழவகை, பஞ்சாமிர்தம், நெய், தேன், இளநீர், சர்க்கரை, பன்னீர், எண்ணெய், சந்தனம் மலர்கள் ஆகியன கொடுத்தல் சாலச் சிறந்ததாகும். இதனால் பெறும் பயன்கள் முறையே நோய் நீக்கம், நீண்ட ஆயுள், இனிய சாரீரம், நல்ல வயல் விளைச்சல், செல்வம், முக்தியின்பம், மக்கட்பேறு, நிம்மதி, சுகவாழ்வு, ஆற்றல், தெய்வதரிசனம், கடன், வறுமை, பிணி, அவமிருத்து, மரணபயம் ஆகியன நீங்கப் பெறலாம்.

பிரதோச காலம் முடிவுற்ற பின் விரத உணவு உட்கொள்ளலாம். இது இரவு நேரமாக அமையும். சிவபிரான் நஞ்சையுண்டு தேவர்களைக் காத்த அருட்செயல் இடம் பெற்றமை சனிக்கிழமையும் வளர்பிறையும் கூடிய ஒரு பிரதோசத் தினமாகும்.

இனிப் பிரதோச விரதத்தோடு தொடர்புடைய சில சம்பவங் களை நோக்குவோம்.

புராண வரலாற்றின்படி தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்த போது அதிலிருந்து ஆலகால விடம் தோன்றித் தேவர்களைத் துன்புறுத்தித் துரத்தவே அவர்கள் உடனடியாக கைலாய கிரியை அடைந்து சிவனைச் சரண் புகுந்து தம்மைக் காத்தருளுமாறு வேண்டியதோடு சன்னிதானத் திலிருந்த இடபதேவரின் பின் ஒளித்துக் கொண்டனர். சிவனார் இத் தேவர்கள் மேல் கருணை கூர்ந்து இடபதேவரின் இரு கொம்புகளினிடையே தோன்றி தான் அந்நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தருளி திருநீலகண்டன் ஆனார். அத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருணம் இறைவியையும் தன்னருகே அமர்த்தி இடப தேவரின் இரு கொம்புகளிடையே ஐயன் திருநடனம் செய்தருளினார்.

எம்பெருமான் நஞ்சினைத் தான் ஏற்றுத் தேவர்களைக் காப்பாற்றியது வளர்பிறையும் திரயோதசியும் சனிக்கிழமை யும் கூடிய காலமாகும். தேவரும் முனிவரும் தேவிபாகனைத் துதித்து நன்மைகள் பெற்றது இந் நேரத்தில் தான். இதன் காரணமாகத் தான் சனிக்கிழமைகளில் இடம்பெறும் பிரதோசம் மற்றைய பிரதோச நாட்களிலும் பார்க்க அதி விசேடமுடையதாகக் கருதப்படுகிறது.

மேலும், இவ்விரதத்தை அனுட்டித்து நல்லாட்சி செய்து இம்மை மறுமைப் பயன்கள் பெற்றுய்ந்தவன், உஜ்ஜயினி என்னும் நகரத்தை ஆட்சி செய்தவன் சந்திரசேனன் என்னும் மன்னன். இவன் ஆற்றிய பூசையைக் கண்ணுற்ற இடைச் சிறுவன் ஒருவன் அப்பூசையில் மிக நாட்டம் கொண்டு மண்ணாலே சிவலிங்கம் ஒன்றை அமைத்து அதனை மெய்யன்போடு பூசித்து எம்பெருமானின் இன்னருள் பெற்ற வரலாறு ஒன்றும் இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே இப்புண்ணிய விரதத்தை முறைப்படி அனுட்டித்து சிவபிரானின் இன்னருளைப் பெற்று வறுமை, பிணி, பாவம், தோசம் நீங்கி மேல்நிலை பெற்று உய்ய ஒவ்வொரு சைவசமயியும் முயற்சி எடுக்க வேண்டும்.

**ஆலந்தான் உகந்தமுது செய்தானை**
**ஆதியை அமரர் தொழுதேத்தும்**
**சீலந்தான் பெரிதும் உடையானை**
**சிந்திப்பார் அவர் சிந்தையுள்ளானை**
**ஏலவார் குழலாள் உமைநங்கை**
**என்றுமேத்தி வழிபடப் பெற்ற**
**காலகாலனை கம்பனெ ம்மானை**
**காணக்கண் அடியேன் பெற்றவாறே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. இடப விரதம்

இஃது சிவனுக்குரிய விரதமாகும் வைகாசி மாதத்தில் இடம்பெறும் வளர்பிறை அட்டமியில் இவ்விரதம் அனுட்டிக் கப்படல் வேண்டும். சிவனை இடபாரூடர் என்றும் அழைப் போம். இடபத்தை வாகனமாகக் கொண்டவர் சிவபெருமான். இடபாரூடரைக் குறித்து அனுட்டிப்பதால் இவ்விரதம் இடப விரதம் எனப்பட்டது.

இவ்விரதத்தை அனுட்டிக்கும் முறையை நோக்குவோம். சிவபெருமானையும் உமாதேவியாரையும் இடப வாகனத்தின் மீது ஆரோகணித்திருப்பதாகப் பாவனை செய்து வணங்குவது சிவாகம விதியாகும். விரத தினத்தன்று அதிகாலை துயி லெழுந்து தூய நீராடி சிவாலய தரிசனம் செய்தல், சிவ புராணம் படித்தல், கேட்டல் முறையாகும். அன்று முழுவதும் உபவாசமிருத்தல் உத்தமம். இயலாதவர்கள் மாலையில் சிவதரிசனம் முடித்த பின் இரவு தீர்த்தம், நீர், பால், இளநீர் போன்ற நீராகாரம் உட்கொள்ளலாம். உபவாசமிருப்போர் மறுநாட் காலை சிவாலய தரிசனம் செய்த பின் தம்மாலான தான தருமம் செய்த பின் அடியார்களோடு சேர்ந்து பாரா யணம் செய்யலாம்.

இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்தால் பெரும்பேறுகள் பெறலாம்.

உதாரணமாக, விசுவமேனன் என்னும் மன்னன் வசிஷ்ட முனிவர் மூலம் இவ்விரதத்தின மேன்மையை அறிந்து தானும் இவ்விரதத்தை அனுட்டித்ததன் பயனாகக் கயிலாயத்தில் சிவபிரானோடு வசிக்கும் பேறு பெற்றான்.

விதுருதன் என்னும் மன்னன் இவ்விரதத்தை முறைப்படி அனுட்டித்ததன் பயனாகக் கிடைத்தற்கரிய காய சித்தி பெற்றுப் பரகாயப் பிரவேச சித்தியும் பெற்றான். காயம் என்பது உடம்பைக் குறிக்கும். காய சித்தி என்பது உடம்போடு முத்திப்பேறு அடைதலைக் குறிக்கும். பரகாயப் பிரவேச சித்தி என்பது ஒரு உடலை விட்டு உயிர் மற்றுமொரு உடலுக்குள் பிரவேசிக்கும் ஆற்றல் என்பதாகும். இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்பர்.

திருமால், பிரமன், அட்ட திக்குப் பாலகர்கள் மற்றும் தேவர்கள் முதலானோர் இவ்விரதத்தை அனுட்டித்ததன் பல னாகத் தெய்வீகத் தன்மை அடைந்த வாகனங்களைத் தமக்கெனப் பெற்றுக் கொண்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் இடப வாகனத்தின் தத்துவத்தை அறிந்து கொள்வோம். தரும தேவதையானவள் தான் அழியாது, என்றும் நித்தியமாக இருக்க விரும்பி இடப வடிவம் எடுத்து சிவபிரானிடம் வேண்டிக்கொண்டாள். சிவனாரும் அவ்வேண்டு தலை ஏற்று இடபத்தைத் தன் வாகனமாக ஏற்றுக்கொண்டார். தருமத்துக்கு என்றுமே அழிவில்லை. இறைவன் தருமத் தையே வாகனமாகக் கொண்டவன் என்பதையே சிவனின் இடப வாகனம் உணர்த்துகின்றது.

**நோன்பு ஒரு கேடயம் அதைக்கொண்டு ஒருவர் தன்னைக் காத்துக் கொள்ளலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆனி உத்தரம்

**உ**த்தரம் என்பது சிம்ம கன்னிராசிகளுள் உள்ள இரண்டு நட்சத்திரங்கள் கொண்ட மண்டலம் ஆகும். இ.்.து அபிடேகப் பிரியரான நடேசப் பெருமானுக்குரிய அபிடேக புண்ணிய காலமாகும்.

தமிழ்நாடு, இலங்கை உட்பட சகல சிவனாலயங்களிலும் ஆனி உத்தர நடேசரபிஷேக விழாச் சிறப்பாக இடம்பெறுவது வழமையாகும். எம்பெருமானுக்கு வருடத்தில் இடம்பெறும் ஆறு அபிடேக தினங்களில் ஆனி உத்திரம் ஒன்றாகும். ஆனி உத்தரத் தினத்தை ஆனித் திருமஞ்சனம் எனவும் அழைப்பர். சில சிவாலயங்களில் மாத்திரம் இடம்பெறும் ஆறுகாலப் பூசைகளும் ஆறு அபிடேகத் தினங்களையும் குறிக்கும் என்பர். கோயில் எனத் தனிச்சிறப்புடன் அழைக்கப்பெறும் சிதம்பரத்திலே நடராஜப் பெருமானுக்கு ஆறுகாலப் பூசைகளும் இடம்பெறுவது வழமை.

சிவன் அபிடேகப் பிரியராதலால் ஆனி உத்தர விழாவன்று முதலில் எம்பெருமானுக்கு பால், நெய், தயிர், வெண்ணெய், தேன், இளநீர், சந்தனம், விபூதி, குங்குமம், பஞ்சாமிர்தம் ஆகியவற்றால் விசேட அபிடேகம் இடம் பெறும். பின்னர் அலங்காரம் முடித்துப் பூசை நிறைவேறியதும் நடேசப் பெருமான் சிவகாம சுந்தரி சமேதராாக வீதி உலா வருவார். சிவனடியார்கள் இவ்வுத்தர நாளில் ஒரு வேளை உணவைத் தன்னும் ஒழித்து விரதமிருந்து சிவதரிசனம் செய்து எம்பெருமான் இன்னருள் பெறுவர். சிதம்பரத் தலத்திலே இப்புண்ணிய தினத்திலே சிவகாம சுந்தரி சமேத சிதம்பர நடேசப் பெருமான் வீதி உலாவரும் இரதோற்சவம் இடம்பெறுவதுண்டு. அம்மை அப்பனை வணங்கி இன்னருள் பெற இவ்வுத்தர நாள் உகந்ததாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. சனிப் பிரதோசம்

பிரதோசம் என்பது முதற்பிறப்பிலே செய்த குற்றநீக்க மாகும் என்பதை நாம் ஏற்கனவே தந்துள்ளோம். மாதந் தோறும் நிகழும் சுக்கிலபட்சம் என்னும் வளர்பிறைக் காலத்திலும் கிருஷ்ண பட்சமான தேய்பிறைக்காலத்திலும் பதின்மூன்றாம் நாள் பிரதோஷ காலம் எனக் கொள்ளப்படும்.

ஏனைய பிரதோஷ நாட்களிலும் சனிப்பிரதோஷம் விசேடம் வாய்ந்தமைக்குக் காரணம் உண்டு. தேவர்கள் சாகாவரம் அளிக்கும் அமுதம் வேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்த போது அதனின்றும் தோன்றிய ஆலகால விடம் அவர்களைத் துன்புறுத்த முனையத் தேவர்கள் தம்மை ஆலகால விடத்தி லிருந்து காத்துக்கொள்ளுமாறு எம்பெருமானிடம் தஞ்சம் புகுந்தனர். ஈசனும் மனமிரங்கி ஆலகால விடத்தைத் தான் உண்டு அவர்களைக் காப்பாற்றியருளினார்.

சிவபிரான் ஆலகால விடத்தைத் தான் ஏற்றுத் தேவர் களைக் காத்தருளியது வளர்பிறையும் திரயோதசியும் சனிக் கிழமையும் கூடிய புண்ணிய காலமாகும். எனவே தான் ஏனைய பிரதோஷ தினங்களிலும் பார்க்கச் சனிப்பிரதோஷம் விசேடமானதாகக் கொள்ளப்படுகிறது.

இதன்படி சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோச நாளில் இவ் விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தல் சிறந்ததாகும். ஆலகால விடத்தைத் தான் ஏற்றுச் சிவபெருமான் தேவர்களைக் காப்பாற்றிய அருட்செயலை மூன்று நிகழ்வுகளாகச் சில நூல்கள் விளக்கம் தந்துள்ளன. அதாவது சிவனார் தான் ஆலகால விடத்தை உண்டு காப்பாற்றிய தினம் ஏகாதசி; தேவர்கள் அமுதைப் பெற்ற தினம் அடுத்த நாள் துவாதசி; அமுதம் கிடைத்த ஆனந்தத்தில் தம்மை மறந்த தேவர்கள் எம்பெருமானை வழிபட்டு நன்றிகூற மறந்து விட்டனர். பின்னர் அடுத்த நாளான திரயோதசியில் தான் தமது பிழையை உணர்ந்த தேவர்கள் சிவனாரை நன்றிகூறி வேண்டித் துதித்தனர். சிவபிரானும் மனம் மகிழ்ந்து நந்தியெம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுடைய அருள்பாலித்தது வளர்பிறையும் திரயோதசியும் சனிக்கிழமையும் கூடிய காலமாகும். எனவே தான் சனிப்பிரதோஷம் சிறப்புப் பெறுகிறது. அத்தோடு சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோஷ நாளிலேயே முதன்முதல் இவ்விரதத்தை ஆரம்பிப்போர் தேர்ந்தெடுத்து ஆரம்பிக்க வேண்டும். இதுவே சனிப்பிரதோஷத்தின் சிறப்பாகும்.

**இரண நல்குரவு இரும்பவ மிரும்பசி ரோகம்**
**அரண் உறும் பயம் கிலேசம் சங்கேதம் அவமிருத்து**
**மரண வேதனை இவையெலாம் அகற்றென வணங்கி**
**புரண நாதனைத் பிரதோடத்திற் போற்றிடத் திருமால்.**

- கடம்ப வன புராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. கேதாரீஸ்வரர் விரதம்

கேதாரீஸ்வரரைக் குறித்து உமாதேவியார் அனுட்டித்த விரதமாகும். கேதாரம் என்பது இமாலய பர்வதத்திலுள்ள சிவத்தலமாகும். நான்கு வேதங்களுக்கும் சிரமாக விளங்குவது இத்தலம் என்று இத்தலத்தின் மேன்மை கூறப்பட்டுள்ளது.

இவ்விரதம் ஐப்பசி மாதத்து கிருஷ்ண பட்சச் சதுர்த்தசித் திதியில் அனுட்டிக்கப்படுவது. 21 நாட்கள் அனுட்டிக்கப்பட வேண்டிய இவ்விரதத்தை இயலாதவர் கிருஷ்ண பட்சத்து சதுர்த்தசியன்று தன்னும் அனுட்டித்துப் பயன் பெறலாம். இவ்விரத நாட்களில் 21 இழையினாலாகிய காப்பை ஆடவர் கள் வலக்கையிலும், பெண்கள் இடக்கையிலும் கட்டிக் கொள்ளுதல் முறையாகும். முதல் 20 நாட்களும் சூரிய அஸ்தமனத்தின் பின் போசனம் செய்யலாம். இறுதி நாளாகிய சதுர்த்தசியன்று உபவாசமிருத்தல் வேண்டும். மறுநாட்காலை உதயத்தில் பாரணம் பண்ணலாம். உபவாசமிருக்க இயலாதவர்கள் கேதாரநாதருக்கு நிவேதிக்கப்பெற்ற உப்பில்லா உணவை உண்ணலாம்.

இவ்விரதத்தின் பின்னணியில் புராண வரலாற்றை நோக்கு வோம்.

முன்னொரு கால் திருக்கைலாயத்திலே எம்பெருமான் பார்வதி சமேதராக வீற்றிருந்தார். அப்போது சூரிய சந்திரர், பிரம விஷ்ணுக்கள், தும்புருநாரதர், சனகர், சனாதரர், சனந்தனர், சனற்குமரர் ஆகிய முனிவர்கள், அட்டவசுக்கள், முப்பத்து முக்கோடி தேவர்கள் யாவரும் பார்வதி பரமேஸ் வரனை பிரதட்சணம் செய்து வணங்கி நின்றனர். அப்போது பிருங்கி என்றழைக்கப்படும் முனிவர் மாத்திரம் பரமேஸ் வரனை மாத்திரம் வணங்கி பிரதட்சணம் செய்து பார்வதி தேவியை வணங்காது பிரதட்சணம் செய்யாது தவிர்த்துச் சென்றார். இதனால் சினம் கொண்ட தேவி முப்பத்து முக்கோடி தேவர்களும் பிரம்ம விஷ்ணுக்களும் முனிவர்களும் நம்மிரு வரையும் பிரதட்சணம் செய்து வணங்கிச் செல்ல பிருங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரம் எம்மை வணங்காது செல்கின்றானே இவனது செயலின் காரணம் என்ன என எம்பெருமானைக் கேட்டருளினார். இதற்கு விடையாக எம்பெருமான் தன் தேவியை நோக்கிப் பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளினார்.

தேவி! "பிருங்கி முனிவன் பாக்கியங்களை விரும்பு பவனல்லன் மோட்சத்தையே நாடுபவன். பெருந்தவமுடைய வன். காரணப்பொருள் ஒன்றையே கருத்தில் கொள்பவன். எனவே தான் என்னை வணங்கி உம்மை விடுத்தனன்" இவ்வார்த்தைகளைச் செவிமடுத்த தேவி அங்குநின்ற பிருங்கி முனிவரை நோக்கி, "பிருங்கியே! உன் உடம்பிலுள்ள இரத்தம் மாமிசம் எனது அம்சமாதலால் அவற்றை என்னி டமே கொடுத்து விடு" என்றார். உடனே பிருங்கி தனது உடலிலுள்ள இரத்த மாமிசத்தை உதறி விட்டார். இதனால் உடல் வலிமையுமிழந்தார். நிற்கவும் முடியாது தள்ளாடிய பிருங்கியை சிவனார் கருணையுடன் நோக்கி நீ ஏன் அசத்தன் ஆனாய் என வினவ பிருங்கி "தேவியை வணங்காது தேவரீரை வணங்கியமைக்குத் தேவி எனக்களித்த தண்டனை" என வாய் மொழிந்தார். பரமேஸ்வரன் பிருங்கி மேல் கருணை கொண்டு அவருக்கு ஊன்றுகோலாக ஒரு தண்டினை வழங்க அதன் உதவியுடன் தனது ஆச்சிரமம் சென்றடைந்தார் பிருங்கி முனிவர்.

தன்னை அவமதித்த பிருங்கிக்குக் கருணை காட்டிய இறைவனது செயல் பார்வதி தேவியை மனம் நோக வைத்தது. தேவி கைலையை விட்டு நீங்கி பூலோகத்தைச் சென்றடைந்தார். அங்கு ஒரு பூங்கா அமைத்து ஒரு வில்வமரத்தினடியில் அமர்ந்து தான் ஈசனின்றும் வேறாகாமல் அவரது வாம பாகத்தில் கலந்து தோன்ற வேண்டும் என எம்பெருமானை நோக்கித் தவம் செய்யலானார். இந்த யுக்தியை தேவிக்குக் கூறியருளியவர் கௌதம முனிவர்.

அவர் கூறியதாவது:- "தாயே பூமியில் அனுட்டிக்கப்படும் மிகச் சிறந்த விரதம் ஒன்றுண்டு. அதுவே கேதாரீசுவரர் விரதமாகும். இதனை அனுட்டித்து தாங்கள் எம்பெருமானை மகிழ்விக்கலாம்." தேவியும் இவ்விரதத்தை முறையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுட்டிக்கவே பரமேஸ்வரனும பார்வதி தேவியின் தவநிலை கண்டு அவள்மேல் கனிவு கொண்டு சிவ கணங்களோடு ஆங்கு காட்சி தந்தார். தேவி எம்பெருமானை நோக்கி "சுவாமி! என்னை தேவரீர் என்றும் உமது வாம பாகத்தில் இருத்தியருள வேண்டும். அத்தோடு யான் தேவரீரை நோக்கி அனுட்டித்த இவ்விரதத்தை எவர் அனுட்டித்தாலும் அவர்க்குச் சகல செல்வங்களையும் புத்திரப் பேற்றையும் ஈற்றில் தங்கள் திருவடித்தாமரைகளை அடையும் பேற்றையும் அனுக்கிரகித் தருள வேண்டும்" என வேண்டிக்கொண்டார். இறைவனும் அவ்வண்ணம் அருளியதோடு தேவியோடு அர்த்தநாரீஸ்வர ராகிக் கைலை சென்றடைந்தார்.

பின்னர் ஒருமுறை இறைவனை அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தில் வழிபடும்போது பிருங்கி வண்டு உருவெடுத்து அவர்கள் உடலைத் துளைத்துத் தேவியை விடுத்துச் சிவனாரை மாத்திரம் பிரதட்சணம் செய்தார். இதனை அவதானித்த தேவி சினம் கொள்ளாது பிருங்கிமேல் கருணை கூர்ந்து அவரை ஆசீர்தித்து அவரைத் தன் புத்திரனாக ஏற்றுக் கொண்டாள். அதே நேரம் இவ்விரதத்தை அனுட்டிக்கும் யாவர்க்கும் கருணைகூர்ந்து அருள் புரியுமாறு தன்பதியை வேண்டிக் கொண்டார்.

இவ்விரதத்தைத் தேவி அனுட்டித்த போது சித்திராங்கதன் என்னும் காந்தர்வன் தேவிக்குப் பணிவிடை செய்தவன். அவன் இவ்விரதத்தின் மகிமையை உணர்ந்து பூமியில் உள்ளோரும் இவ்விரதத்தை அனுட்டிக்கவேண்டும் என விரும்பி அர்த்தநாரீஸ்வரை வேண்டிக்கொண்டான். இதனைக் கருத்தில் கொண்டு அப்போது உஜ்ஜயினியை ஆண்டுவந்த வச்சிரதந்தன் என்னும் மன்னனுக்கு இவ்விரதம் பற்றி உபதேசித்தான். இச்செய்தி நாடெங்கும் பரவியது. இவ்விரதத்தின் மேன்மையை அறிந்த பாக்கியவதி, புண்ணியவதி என்னும் இரு கன்னியர் தாமும் இவ்விரதத்தை மிகுந்த சிரமத்தின் மத்தியில் அனுட்டித்து வந்தார்கள். இவ்விரதத்தின் பயனாக புண்ணியவதியை உஜ்ஜயினி நாட்டின் மன்னன் திருமணம் செய்தான். பாக்கியவதியை சோழ தேசத்து மன்னன் திருமணம் செய்கின்றான். இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களும் தாம் நோற்ற கேதாரீஸ்வர விரதத்தின் பயனை எண்ணி மனம் மகிழ்ந்து இன்பமாக இல்லறம் நடாத்தி வந்தனர். வளங் கொழித்துப் பாக்கியவதி ஒரு புத்திரனையும் பெற்று மகிழ்ந்தாள். இவ்வேளையில் இவள் காலம் பிழைத்தது என்று தான் கொள்ள வேண்டும். தனது வாழ்வின் வளத்தாலும் செல்வச் செருக்காலும் இத்தகைய விரதங்களை அனுட்டிப்பது ராணியாகிய ஒரு மன்னனின் தேவியாகிய எனக்கு மதிப்பைத் தரா - ஏற்றதல்ல என எண்ணி விரத அனுட்டிப்பைக் கைவிட்டு விட்டாள். சிவ அபசாரம் சீற்றங் கொண்டது. இதன் பயனாக பாக்கியவதி மன்னனைப் பிரிய நேரிட்டது. அவளும் புத்திரனும் மன்னனைப் பிரிந்து ஆரணியத்தில் வசிக்கும் நிலையும் ஏற்பட்டது. அரச போகம் துய்த்த இவ்விருவருக்கும் ஆரணிய வாழ்வு எவ்வாறிருந்தி ருக்கும்! கானகத்தே மிகவும் கஷ்டமடைந்த பாக்கியவதி தனது புத்திரன் படும் கஷ்டத்தைப் பொறுக்க முடியாமல் அவனைத் தன் சகோதரியுடன் வாழுமாறு அனுப்பி வைத்தாள். அங்கு சென்று பொருள் பெற்று வரும் படியும் கூறி வைத்தாள். பாக்கியவதியின் இன்னல்களைக் கேள்வி யுற்ற அவளது சகோதரி ஒரு குடம் பொற்காசுகளை நிரப்பி அதைத் தாயிடம் கொண்டு சென்று கொடுக்குமாறு சிறுவனை அனுப்பி வைத்தாள். கானகத்தின் நடுவே திருடன் ஒருவன் இப்பொற்குடத்தைக் கவர்ந்து சென்று விட்டான். இதனை அறிந்த பாக்கியவதி தனது கஷ்டகாலத்தை எண்ணிக் கவலைகொண்டு மறுபடியும் பொருள் பெற்று வருமாறு தன் சகோதரியிடம் அனுப்பி வைத்தாள். மீண்டும் புண்ணியவதி பொன் கொடுத்து உதவினாள். ஆனால் அந்த உதவியையும் அனுபவிக்கப் பாக்கியவதி பாக்கியம் செய்யவில்லை. வழியிலே ஒரு தேவ புருஷன் தோன்றி விரதம், தான தர்மம் செய்யாதவர்களுக்குப் பொன்னும் பொருளும் எதற்காக? என்று கூறி அப்பொருளை அபகரித்துச் சென்று விட்டான்.

பாக்கியவதியின் புத்திரன் அழுதுகொண்டே தாயிடம் நடந்த விடயத்தைக் கூறினான். அப்போது தான் பாக்கிய வதிக்குத் தான் செய்த பெரிய பிழை புரிய வந்தது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மமதை காரணமாக தான் அனுட்டித்து வந்த விரதத்தை அலட்சியம் செய்து சிவ நிந்தனைக்குட்பட்டதே இதன் காரணம் என்பதை உணர்ந்தாள். மீண்டும் இவ்விரதத்தை அனுட்டிக்க வேண்டும் என்ற எண்ணம் அவளது மனத்தில் தோன்றியது. இஃது அவளது நல்ல காலம் என்றே கூற வேண்டும். விரதத்தின் போது செய்யும் தான தர்மத்திற்கு பொன் பொருளிற்கு எங்கே போவது? என எண்ணிக் கவலை கொண்ட போதும் மன வைராக்கியத்தோடு மீண்டும் இவ் விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தாள் பாக்கியவதி. இதற்கு வேண்டிய திரவியத்தை களவு போன பொன்னைப் பன்மடங்கு பெருக்கி அவளுக்குத் தந்துதவினான் தேவ புருஷன். இராஜ குமாரனும் வளர்ந்து சதுரங்க சேனையோடு தன் தந்தையை நாட்டில் சென்று சந்தித்தான். தந்தையும் மகனைக் கண்டு மனம் மகிழ்ந்து அவனை இராஜோபசாரத்துடன் வரவேற்று மகிழ்ந்தான். விரத மகிமையால் மீண்டும் பாக்கியவதியின் வாழ்வு மலரலாயிற்று. இஃது கேதாரகௌரி விரதத்தின் மகிமை கூறும் ஒரு சம்பவமாகும்.

மேலும், திருமால் இவ்விரதத்தை அனுட்டித்து வைகுந்தப் பதவி அடைந்ததோடு தம்மை வழிபட்டுத் தஞ்சமென்ற டைந்தோருக்கு வேண்டிய பதவிகளையும் செல்வங்களையும் வழங்கியதாகவும் வரலாறு உண்டு. பிரம்மதேவர் இவ்விர தத்தை அனுட்டித்து உலகைப் படைக்கும் உயர் பதவியைப் பெற்றார். தேவதேவனான இந்திரன் இவ்விரதத்தை அனுட் டித்துப் பொன்னுலகை ஆளும் அந்தஸ்தையும் வெள்ளை யானையையும் வாகனமாகப் பெற்றுக்கொண்டான். விசுத்தன் என்ற அந்தணன் இவ்விரதத்தை அனுட்டித்து நூறு புத்திரர் களைப் பெற்றுச் சிறப்புற வாழ்ந்து பின்னர் சிவன் திருவடிய டைந்தார்.

இந்த வகையில் இவ்விரதத்தைப் பக்தி சிரத்தையோடு பின்பற்றுவோர் ஐஸ்வரியம் புத்திரப்பேறு, கணவன் மனைவி ஐக்கியம் மேலும் பல நற்பயன்களையும் பெற்றுய்வர் என்பது நிஜம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10. சோம வாரம்

கிழமைகளில் திங்கட்கிமை சோமவாரம் எனப்படும். சிவனாருக்கு மிகவும் பிடித்தமான விரதமும் இது என்று சொல்லப்படுகிறது. கார்த்திகை மாதத்தில் இடம்பெறும் முதல் சோமவாரத்தில் இவ்விரதத்தை ஆரம்பித்து அம்மாதம் முடியும் வரை இடம்பெறும் ஒவ்வொரு சோமவாரமும் இவ்விரதத்தை அனுட்டித்தல் முறையாகும்.

சோமன் என்றால் சந்திரன் என்றொரு பொருளும் உண்டு. உமையுடன் கூடிய சிவன் என்றும் பொருள் உண்டு. கார்த்திகை மாதத்துச் சுக்கில பட்ச அஷ்டமியில் சந்திரன் தோன்றினான். சந்திரனைப் பீடித்திருந்த ஷயரோகத்தை போக்கியருளும்படி சந்திரன் சிவனை ஆராதித்துத் தனது ஷயரோகம் நீங்கப் பெற்றதோடு நவக்கிரக அந்தஸ்தும் பெற்றான். இதன் காரணமாகச் சந்திரனின் பெயரால் சோமவாரம் தோன்றிற்று, இவற்றோடு சிவனின் சிரசிலே சடாமுடியிலே வீற்றிருக்கும் அந்தஸ்தையும் பெற்றுவிட்டான் சோமன் என்றழைக்கப்படும் சந்திரன். சந்திரன் தோன்றியதும் அவன் சிவனாரது சடாமுடியில் அமர்ந்ததும் கார்த்திகை மாதச் சோமவாரங்களில் தான். தான் பெற்ற இப்பேறுகளோடு இவ்விரதத்தை அனுட்டித்து சிவனாரை ஆராதிப்போர் அனை வரதும் பிரமஹத்தி முதலிய தோஷங்கள் பாவங்கள் நீங்க வேண்டும் அவர்களை ஷயரோகம் முதலிய நோய்கள் அணு கக்கூடாது, அவர்கள் முத்திப்பேற்றை அடையவேண்டும், தனது பெயரால் இவ்விரதம் சோமவார விரதம் எனப் பிரசித்த மாக வேண்டும் எனச் சந்திரன் எம்பெருமானைப் பிரார்த்தித்து வரமும் பெற்றுக் கொண்டான். இதன் காரணமாகச் சோமவார விரதம் என இவ்விரதம் சிறப்புப் பெற்றது.

இவ்விரதத்தோடு தொடர்புடைய ஒரு வரலாற்றை நோக்கு வோம்.

முன்னொரு கால் கைலயங்கிரியிலே சிவபெருமான் தேவா திதேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், கந்தருவர்கள், சித்த வித்தியாதரர், கின்னரர், கிம்புருடர் ஆகியோர் சூழ்ந்திருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்வதி தேவி அங்கு சிவனைப் பணிந்து வணங்கி அமர்ந் தார். அப்பொழுது அங்குள்ளோர் வியப்புறும் வண்ணம் எம்பெருமான் தனது சடாமுடியை அசைத் தருளினார். அப்போது அவரது சடாபாரத்திலே சந்திரன் அமர்ந்து பளிச்சிடுவதைக் கண்டு அங்குள்ளோர் யாவரும் அதிசயித்தனர். ஆனந்தம் கொண்டனர். அப்போது பார்வதி தேவி ஐயனை நோக்கி, "தேவரீர், யாவர்க்கும் அரிதாகிய தங்கள் சடாமுடியில் சந்திரன் எழுந்தருளி யிருக்கும் காரணம் என்ன?" என்று கேட்டனள். அதற்குப் பதிலாக இறைவன் "தேவியே! எனக்கு மிகவும் பிடித்தமான சோமவார விரதத்தை முறைப்படி அனுட்டித்து சந்திரன் இப்பேறு பெற்றான்" எனத் திருவாய் மலர்ந்தருளினார். இத்தனையை யும் செவியுற்ற பார்வதிதேவி மனம் மகிழ்ந்து "சுவாமி! தங்கட்குப் பிரீதியான இவ்விரதத்தை அடியாளும் அனுட்டிக்க விழைவதால் இவ்விரத முறையைக் கூறியருள வேண்டும்" எனக் கேட்டுக் கொண்டாள். சிவபிரான் தேவியின் விருப்பப்படி கூறி அருளிய சோம வார விரத முறையை நோக்குவோம்.

சோமவாரப் புனித தினத்திலே நீராடிச் சிவபூசை செய்து ஒரு அந்தண குலத்துத் தம்பதியை அழைத்து அவர்களைச் சிவனாகவும் உமையாகவும் பாவனை செய்து அவர்கட்கு விரதமுடிவில் தானம் செய்தல் வேண்டும். சூரிய அஸ்த மனத்தின் பின்னரே விரதமனுட்டிப்போர் உணவருந்துதல் வேண்டும். சிவபூசை செய்ய முடியாதவர்கள் ஆலயம் சென்று சிவபெருமானுக்குப் பஞ்சாபிஷேகம் அர்ச்சனை செய்து பிராமண போசனம் செய்வித்து அடியார்களுக்கும் அன்ன மளித்து ஒருவேளை உணவு உண்ணல் வேண்டும். அன்றிரவு நித்திரை விழித்துச் சிவசிந்தனையில் சிவநாமம் உச்சரித்துத் தோத்திரங்கள், பஞ்சாட்சர மந்திரம் ஓதி இரவுப் பொழுதைப் புனிதப் பொழுதாகக் கழித்தல் வேண்டும். இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்போர் முத்திப்பேறு அடைவர்.

இவ்விரதத்தை கார்த்திகை மாத முதற் சோமவாரத்தில், அதாவது முதலாவது திங்கட்கிழமை ஆரம்பித்து வாரந் தோறும் அனுட்டித்தல் முறையாகும். வாணாள் முழுவதும் அன்றேல் பன்னிரண்டு, மூன்று, அல்லது ஒரு வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாயினும் இவ்விரதத்தை அனுட்டித்தல் முறையாகும். இது இயலாதவர்கள் கார்த்திகை மாதத்தில் தன்னும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம்.

இது தொடர்பாகப் பல வரலாறுகள் உண்டு.

முன்னொரு காலத்திலே சோம சுந்தரப் பெருமான் பாண்டிய மன்னனான குலசேகர பாண்டியனின் கனவிலே தோன்றிக் கடம்பவனத்தை நகராக்குமாறு பணித்தருளினார். அந்நகரமே பின்னர் மதுரை நகரமாகியது. இது இடம்பெற்றது ஒரு சோமவாரத் தினத்திலேயாகும். இதனைச் சற்று விரிவாக நோக்குவோம். அப்பொழுது மணவூர் பாண்டிய மன்னனின் நகரமாக விளங்கியது. அந்நகரத்திலே வசித்த தனஞ்செயன் என்னும் வணிகன் தனது வாணிபத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பும்போது கடம்ப வனத்தை அடையச் சூரியனும் அஸ்தமித்தான். அப்போது அங்கு ஒளிமயமாகத் தோன்றிய ஒரு விமானத்தைக் கண்டான். அதன் மேல் எழுந்தருளியிருந்த சோமசுந்தரப் பெருமானைத் தேவர்கள் பூசிப்பதைத் தன் ஞான நோக்கினால் கண்ணுற்றுத் தானும் கோயிற் புறத்தே ஒரு இலிங்கம் அமைத்து அதை இஷ்டலிங்கமாகப் பூசித்தான். அதிகாலையில் அங்கு ஒருவரையும் காணாது நிகழ்ந்தவற்றைப் பாண்டிய மன்னனிடம் கூறினான். அன்றிரவு தான் சோமசுந்தரப் பெருமான் பாண்டிய மன்னனின் கனவில் தோன்றி கடம்பவனத்தை மதுரை நகரமாக்கப் பணித்தருளி னார்.

சோமவாரத்தில் செய்யக்கூடிய உத்யாபன பூசை பற்றி இங்கு நோக்குவோம்.

பதினான்கு ஆண்டுகள் சோமவாரம் தோறும் பன்னிரண்டு கலசங்களில் பிரதிமைகளுடன் சிவன், பசுபதி, நீலகண்டன், உருத்திரன், மகேஸ்வரன், சர்வன், ஈசன், பிநாகி, விருஷ பத்வஜன், சங்கதரன், மகாதேவன், சோமேஸ்வரன் ஆகிய நாமங்களைச் செபித்து சோடசோபசார பூசை செய்து இரவு முழுவதும் கண்விழித்து காலையில் ஹோமம் செய்து கலச ஜலத்தில் அபிடேகம் செய்து சந்திர பூசையுடன் நிறைவு செய்யவேண்டும். இத்தனைக்கும் பெறும் பலன் எவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைச் சந்திர பகவானே கேட்டருளினார்.

அவையாவன:- மகாபாவ நீக்கம், ரோக நீக்கம், பூரண ஆயுள் முதலியனவாம். இதன்படி இறைவன் சந்திரனது ஷயரோகத்தை நீக்கி அவனைத் தன் சடாமுடியில் தரித்துச் சந்திரசூடன், சந்திர மௌலி என்னும் நாமங்களையும் பெற்றார். இவ்வண்ணம் ஈசன் இன்னருள் பெற்ற சந்திரன் சிவனாரது உத்தமாங்கத்தில் சடாமுடியில் இடம்பெற்று அமர்ந்து சோமவார மகிமையை உலகுக்குப் பறைசாற்றி நிற்கிறான்.

இம்மகிமை பல பெற்ற இப்புண்ணிய விரதத்தை அனுட்டித்து உயர் பலன் பெற்றோர் வரிசையில் வசிஷ்டர், சோமசன்மர், தன்மவீரியர், கற்கர், சீமந்தினி, அருந்ததி, பட்டராகன், விராடன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இவர்களுள் முதலில் விராடனது வரலாற்றை நோக்குவோம். வேதங்களை நன்கு கற்றுணர்ந்த சத்தியவந்தன் என்பவனின் புத்திரன் விராடனாவான். இவன் இளமையிலேயே தீயபழக்கவழக்கங்களைப் பின்பற்றி ஈற்றில் ஒரு திருடனாகவும் மாறிவிட்டான். ஒருநாள் திருட்டின் போது இவனைக் காவலாளிகள் துரத்த இவன் தப்பி ஓடி ஒரு காட்டை அடைந்தான். அங்கே பெருமழையில் நனைந்து, பசியால் வருந்தி அலைந்து காய்கனிகளையுண்டு காட்டில் தங்கியிருந்தான். அன்றைய தினம் புண்ணியம் மிகுந்த சோமவார தினமாகும். காட்டிலே விராடன் இருட்டிலே தங்கியிருந்த தருணம் கொடிய விஷப்பாம்பு ஒன்றினால் தீண்டப் பெற்று இறந்தான்.

எமதூதர்கள் அவனுயிரைப் பாசக்கயிற்றால் கட்டி எடுத்துச் செல்கையில் சிவகணங்கள் இவர்களை வழிமறித்து இவன் பற்பல தீயவழக்கங்களை மேற்கொண்டு வாழ்ந் தானாயினும் கடைசியில் சோமவார புண்ணிய தினத்தன்று பட்டினி இருந்து நித்திரை விழித்து காய்கனி உண்டு மழை நீரால் தோயப்பெற்று விஷக்கடியால் மாண்டான். ஆதலால் இவன் மிகுந்த தவப்பயனைப் பெற்றவனாகிறான் என்றனர். அவர்களது கூற்றின்படி விராடனும் கைலையை அடைந்து அங்கு வாழ்ந்து பின்னர் சிவகதி பெற்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, சோம வார விரதத்தை அனுட்டித்து உயர்பலனை அடைந்த சீமந்தினியின் கதையை நோக்குவோம்.

சீமந்தினி சித்திரவர்மா என்னும் வேந்தனின் புத்திரியாவாள். இவள் பிறந்தபோது இவளது தலைமுடி வகிடு உச்சி எடுத்தாற் போல் அழகுறப் பிரிந்திருந்தமையால் இவளுக்குச் சீமந்தினி என்று நாமம் இட்டனர். சீமந்தம் என்றால் வகிடு என்று அர்த்தம் உண்டு. தன்பெண்ணின் எதிர்காலம் பற்றி அறிய விரும்பிய மன்னன் சோதிடர்களை அழைத்து அவளது சாதகத்தை வாசித்தறிந்த போது கிடைத்த செய்தி வேந்தனை அதிரவைத்தது. சீமந்தினி 14 வயதில் விதவை ஆவாள் என்பதே அச்செய்தி. சோதிடர்கள் பலர் இவ்வண்ணம் பலன் கூறியபோதும் ஒரு சோதிடர் மாத்திரம் சீமந்தினி தீர்க்க சுமங்கலியாக வாழ்ந்து நற்புத்திரர்களைப் பெற்றெடுப்பாள் என்று கூறினார். இச்செய்தி வேந்தன் மனதுக்குச் சற்று ஆறுதலை அளித்தது.

சீமந்தினி அழகிய பெண்ணாக வளர்ந்து 14 வயதை அடைய மன்னனின் நிம்மதியும் குலைந்தது. இருப்பினும் அவன் தனது புத்திரிக்குத் திருமணம் முடித்து வைக்க விரும்பி சுயம்வரம் அமைத்தான்.

சுயம்வரத்திற்குப் பற்பல தேவகுமாரர்களும் வந்திருந்தனர். அவர்களுள் நள-தமயந்தியின் புத்திரனான இந்திரசேனனின் புதல்வனான சித்திரவர்மனும் வந்து அங்கே அழகும் பொலிவும் ஆண்மையும் ஒருங்கமைய வீற்றிருந்தான்.

சீமந்தினி இந்த அழகிய ஆண்மகனுக்கு மாலையிட்டாள். மணமக்கள் மனமொத்து வாழும் நாட்களிலே ஒருநாள் சித்திரவர்மா சீமந்தினியை விட்டுத் தன் தோழர்களுடன் சென்று யமுனாநதியில் தோணி செலுத்தி விளையாட முற்பட்டான். திடீரென்று தோணி புரண்டு எல்லோரும் நதியில் மூழ்கினர். சிலர் இறந்தனர். சிலர் தப்பினர்.

சித்திரவர்மனுக்கு என்ன நடந்தது என்பது ஒருவருக்குமே தெரியவில்லை. இதற்கிடையில் சீமந்தினியின் ஜாதகத் திலுள்ள குறையைத் தந்தை அவளுக்கு மறைத்து வைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் சீமந்தினி ஏதோ ஒரு வகையில் அதற்குப் பிராயச் சித்தம் தேட முற்பட்டு யாக்கியவற்கிய முனிவர் முனிவரின் தர்மபத்தினியான மைத்ரேயியின் ஆலோசனைப்படி தன் தோஷம் நீங்க உபாயமான சோமவார விரதத்தை மிகுந்த சிரத்தையுடன் அனுட்டித்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. விரதபலன் தன்னை நிச்சயம் காப்பாற்றும் என்ற மனஉறுதி யுடன் சீமந்தினி சோமவார விரத பூசையில் ஈடுபட்டு வந்தாள்.

இந்நேரத்தில் யமுனை ஆற்றில் தன் கணவனுக்கு நேர்ந்த விபத்துச் செய்தி சீமந்தினியின் செவியையும் எட்டியது. சீமந்தினி மனந்தளராது தன்விரத பலனை நம்பிய வண்ணம் ஆற்றங்கரை சென்று அங்கு சிவபூசை செய்த வண்ண மிருந்தாள்.

தோணியிலிருந்து ஆற்றில் வீழ்ந்த சித்திரவர்மா இறக்க வில்லை. ஆற்றின் அடியில் பாதாளத்தின் ஒரு பகுதியான நாகலோகத்தை அடைந்தான். அங்கு நாககன்னியர் அவனை நாகராஜனிடம் அழைத்துச் சென்றனர். அங்கு சித்திரவர்மன் தன்பிறப்பு வரலாற்றை நாகராஜனுக்கு எடுத்துக் கூறினான். சிவனே தனது குலதெய்வம் என்றும் பஞ்சாட்சரமே தினமும் தான் தவறாது ஜபிக்கும் மந்திரம் என்றும் நாகராஜனுக்கு எடுத்துரைத்தான்.

இத்தனையையும் செவிமடுத்த நாகராஜன் சித்திரவர்மா வைப் பரிவுடன் நடாத்தி ஆடை ஆபரணம் அணிவித்து யமுனையில் அவன் வீழ்ந்த அதே இடத்திற்கு அனுப்பி வைத்தான். ஆற்றங்கரையை அடைந்த சித்திரவர்மா மன மகிழ்வோடு கரையால் நடந்து வரும்போது அங்கு சிவபூசை செய்து கொண்டிருக்கும் சீமந்தினியைக் கண்டான். சீமந் தினிக்குத் தன் கணவனை மீண்டும் கண்டதும் பெற்ற இன்ப அதிர்ச்சி கொஞ்சமல்ல. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண் டுமா? இளவரசன் நாடு திரும்பியதும் நாடே குதூகலித்தது. பெற்றோர் பேரானந்தமடைந்தனர்.

சீமந்தினி சோமவார விரதத்தின் பலனை எண்ணி மகிழ்ந் தாள். அவ்விரதத்தின் மகிமையை நாடெங்கும் பரப்பினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பதியர் இருவரும் விரத மகிமையை வியந்து அவ்விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தனர்.

சிவனுக்குரிய சிறப்பு மிகு இவ்விரதம் சைவமக்கள் அனுட்டித்து நல்லன பெற நல்லதோர் விரதமாகும்.

## 11. உமாமகேஸ்வர விரதம்

இவ்விரதத்தின் போது சிவனாரது உமாமகேஸ்வர மூர்த்தத்தை முறைப்படி விரதமிருந்து வழிபடுதல் மரபு. இவ்விரதம் கார்த்திகை மாத பௌர்ணமி தினத்தில் அனுட்டிக் கப்படும் விரதமாகும். இந்நாளில் உமாதேவியார் சமேதராய் விளங்கும் மகேஸ்வர மூர்த்தியை வழிபட்டு பகலிலே ஒரு பொழுது உண்டு இரவு பலகாரம் உண்டு விரதத்தை நிறைவு செய்யலாம். இது மிக எளியமுறை விரத அனுட்டிப்பாகும். சிவனாரது மூர்த்தங்களுள் உமாமகேஸ்வர மூர்த்தம் மேன்மையானது.

இவ்விரத புண்ணிய தினமாகிய கார்த்திகை மாத பௌர் ணமித் தினத்தன்று நித்திய கருமங்களை முடித்துக் கொண்டு தூயவராக ஒரு இடத்தைச் சுத்தமாக்கி அதன்கண் ஒரு பீடம் அமைத்து அதன்மேல் பொன் வெள்ளியால் செய்யப் பெற்ற சிவன் உமை திருவுருவங்களை வைத்துப் பஞ்ச கவ்வியங்களினால் அவற்றை அபிடேகம் செய்தல் வேண்டும். பின்னர் அவற்றிற்குப் புதிய வஸ்திரம் அணிவித்துத் திரு வமுது நிவேதித்துத் தீப தூபங் காட்டி வழிபடல் வேண்டும். பின்னர் சிவாலய தரிசனம் செய்தல் வேண்டும். அங்கு வழி பாடு, தோத்திரம் முடிந்தபின் இல்லம் திரும்பி ஒரு பொழுது போசனம் செய்யலாம். அமைத்த கும்பத்தையும் பிம்பத் தையும் பூசித்து வழிபட்டு அந்தணர்க்கு அப்பிம்பங் களைத் தானமாக வழங்கி அடியார்களுடன் சேர்ந்து திருவமுது செய்து விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம். வருடந் தோறும் இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்போர் இம்மை யில் சகல செல்வங்களையும் மறுமையில் முத்தியும் பெறுவர்.

இவ்விரதத்தை மெய்யன்போடு அனுட்டித்து நற்பயன் பலபெற்ற சிலர் பற்றி நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துசேனன் என்னும் மன்னன் காலப்பிழையால் தன் பகைவர்க்குத் தோற்று நாடு நகர் இழந்து காட்டையடைந்து காய்கனிகள் உண்டு தரையில் உறங்கிச் சிரமப்பட்டு வாழ்கையில் அகத்திய முனிவரை அவ்வனத்திலே காணும் பாக்கியம் பெற்றான். மன்னனின் நிலையை உணர்ந்த மாமுனிவர் அகத்தியர் அவனுக்கு நல்லது செய்ய எண்ணி உமாமகேஸ்வர விரதத்தை முறைப்படி அனுட்டிக்குமாறு பணித்தருளினார். மன்னனும் முனிவர் சொற்படி முறையாக இவ்விரதத்தை அனுட்டிக்கலானான். இதன் விளைவாக எம்பெருமான் குபேரன் மூலம் மன்னனுக்கு வேண்டிய யாவையும் நல்கியருளினார். இந்துசேன மன்னனும் பகையரசனை வென்று தனது நாட்டை மீண்டும் பெற்று நல்லாட்சி புரிந்து ஈற்றில் விண்ணுலகையடைந்தான்.

இதேபோன்று திருணபிந்து என்னும் மன்னன் கண்பார்வை இழந்து வருந்தியபோது இவ்விரதத்தை மெய்யன்போடு அனுட்டித்து மீண்டும் பார்வை பெற்றமை வரலாறு ஆகும். இதேபோன்று கிருஷ்ண பகவான் பதினாறாயிரம் தேவியரை அடைந்து ஒன்பது கோடி புத்திரரைப் பெற்று உலகையாண்டு இன்புற்றான். அதேபோன்று பிரமனும் இவ்விரதத்தை அனுட்டித்ததன் பயனாகக் காயத்ரி, சரஸ்வதி, சாவித்திரி ஆகியோரை மணந்து சிறப்படைந்தான்.

இவ்விரத அனுட்டித்தலின் பயனாகவே வசிஷ்ட மா முனிவர் தெய்வத் தன்மை பொருந்திய காமதேனுவைப் பெற்றார். சித்திரசேன மன்னன் ஊர்வசியை மனைவியாகப் பெற்றான். மிதிலை மன்னன் சீதையை புத்திரியாகப் பெற்றான். சுதன்மா என்னும் அந்தண குலத்தவன் ஒருவன் தனது குலத்துக்குரிய வேத பாராயணங்களை அலட்சியம் செய்து வாழ்நாளை வீணாக்கி அலைந்து ஈற்றில் உமாமகேசுவர மேன்மையை அறிந்து அதனை முறைப்படி நோற்று அருங்கலைகளின் வல்லவனாகச் சிறப்புற வாழ்ந்தான். எனவே இவ்விரதம் அனுட்டிப்போர் புத்திர பாக்கியம், சகல செளபாக்கியம் ஈற்றில் முத்தியின்பம் யாவும் பெறுவர் என்பதை மனதிற் கொண்டு அதன்வழி நடப்போம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12. பாவை நோன்பு

திருவெம்பாவை மார்கழித் திருவாதிரைக்கு முன் வரும் ஒன்பது தினங்களிலும் இடம்பெறும். சிவனாருக்குரிய மிகச்சிறப்பு வாய்ந்த நாட்கள் இவை. திருவாதிரையோடு சேர்த்துப் பத்து நாட்களும் சிவவணக்கத்துக்கும் திருவாசகம் ஓதுதற்கும் மிகச் சிறந்த நாட்களாம். திரு எம் பாவை என்று பிரித்துப் பார்க்கும் போது திரு என்பது ''அருள்'' என்றும் எம் என்பது ''எமது'' என்றும் பாவை என்பது ''சித் திரப் பதுமை போன்ற பெண்'' என்றும் பொருள்படும். ஏல் ஓர் எம்பாவாய் என்பது என் அன்புத் தோழியே இதனை ஏற்று ''ஓர்'' அதாவது ஆராய்வாயாக என்று பொருள் கொள்ள வேண்டும். திருவாதிரை சிவபெருமானது நட்சத்திரமாகும்.

மார்கழி மாதத்தில் மங்கையர் பாவை நோன்பை நோற்பர். இதனை மார்கழி நோன்பு என்றும் கூறுவர். மணமான பெண் கள் இத்திங்களை மங்களத் திங்களாகக் கொண்டு தூய நீராடி நல்லறம் புரிந்து தங்கள் இல்லற நன்மையை வேண்டிச் சிவனாரைத் தொழுவர். கன்னிப் பெண்களோ தமக்கு நல்ல கணவர் வாய்க்க எம்பெருமானை வேண்டி தூயநீராடி பாவை நோன்பை மேற்கொள்வர். இந்நோன்பு தமிழ்நாட்டிலே மிகத்தொன்மை பெற்றதொன்றாகும். சைவர்களல்லாது வைணவர்களும் இந்நோன்பை அனுட்டித்து வந்தனர். சைவர்கள் இந்நோன்பு நாட்களிலே மணிவாசகப் பெருமான் அருளிச்செய்த திருவெம்பாவையில் இடம்பெறும் பாடல் களைப் பாடிச் சிவனாரைப் பூசிப்பர். வைணவர்கள் திரு மாலைப் போற்றி ஆண்டாள் பாடியருளிய திருப்பாவையைப் பாடி விஷ்ணுபகவானை வேண்டி நிற்பர்.

தமிழ்நாடு மாத்திரமன்றி எமது நாட்டிலும் கேரள மாநிலத் திலும் இந்நோன்பு அனுட்டிக்கப் பெற்று வருகிறது. சுருங்கக் கூறின் சைவ, வைணவ மக்கள் உலகின் எப்பகுதியில் உள்ளனரோ அங்கெல்லாம் இந்நோன்பு நோற்கப்படுவதோடு அதிகாலையில் திருவாசகமும் திருவெம்பாவையும் பக்தி பூர்வமாக ஒலிக்கப்பெறும். திருவாதிரையோடு சேர்ந்த பத்து நாட்களும் சகல சிவாலயங்கள், மடாலயங்கள் யாவிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாகக் கொண்டாடப்பெறும். திருவாதிரைக்குச் சிறப்பான தலம் சிதம்பரமாகும்.

மார்கழிமாதம் தேவர்களுக்கு விடியற்காலம். மனிதர்க்கு ஒரு வருடம் தேவர்க்கு ஒரு நாள். எனவே மார்கழிமாத அதிகாலைப் பொழுதில் நாம் செய்யும் வழிபாடு தேவர் களுக்கு மிகவும் பிடித்ததாகவும் உகந்ததாகவும் அமைகிறது. எனவே மார்கழி நோன்பு நோற்றல், திருவாதிரை விரத அனுட்டானம் மார்கழி மாதம் முழுவதும் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை ஓதுதல், புராண படனம் ஆகியவற்றைச் சைவப்பெருமக்களாகிய யாம் தவறாது செய்தல் புண்ணிய காரியமாகும்.

தேனினுமினிய திருவாசகத்தைப் பாடித் தந்தவர் மணிவாசகப்பெருமான். திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே எம்பெருமானாகிய குருநாதரிடம் ஞான தீட்சை பெற்றபின் அடிகளார் திருவண்ணாமலைத் தலத்தை அடை கிறார். அங்கே கன்னிப்பெண்கள் ஒன்று கூடி மார்கழி மாதத் திலே தூயநீராடி ஈசன் புகழ் பாடிப் பரவி நிற்கும் பாங்கி னைக் கண்டு களித்து தன்னையும் அவர்களுள் ஒரு அடிய வராகக் கற்பனை செய்து அப்பக்தியின்பத்தைத் துய்க்கப் பாடியதே திருவாசகம்.

அழிக்கப்பெற்ற உலகத்தை மீளவும் படைக்கத்தொடங்கும் சிவசக்திகளின் செயலாக இங்கு கருப்பொருள் அமைந் துள்ளது. திருவெம்பாவையிற் குறிக்கப் பெற்ற நவசக்திகள் முறையே மனோன்மணி, சர்வபூதமனி, பலப்பிரதமனி, பலவிகரணி, கல்விகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை ஆகியனவாம்.

இத்திருவெம்பாவை நாட்களிலே சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னரே துயிலெழுந்து தூயநீராடி அம்மை யையும் அப்பனையும் வழிபடுதல் சாலச் சிறந்த காரியமாகும். இதனால் அன்பு, பண்பு, ஒழுக்கம், உயர்நிலை, ஆத்ம ஞானம் ஆகியவை நிலைபெறும்.

மார்கழி நீராடலின் தத்துவத்தை நோக்கின் ஆன்மாவானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலமாகிய இருளிலே கிடந்து உழலாது திருவருளில் படிந்து பரிபாகமடைதல் வேண்டும் என்பதாகும். கீழ்வரும் அடிகளை நோக்குவோம்

**தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினால்**
**எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த**
**பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்**
**சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்ப**
**கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்க**
**பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம் பாவாய்**

மலம்கழுவுதல் என்பது நீராடலையும் தடாகம் திருஅருட் பெருக்கையும் நீராடல் திருவருட் பெருக்கிலே ஆன்மா வீழ்ந்து திளைத்தலையும் குறித்து நிற்கின்றன.

இறைசக்தியாகிய திருவருள் கௌரி என அழைக்கப்பெற்று நுண்மணலால் கௌரி உருவம் ஆக்கப் பெற்று இந்நோன்பின் போது வழிபடப்படுகிறது. இவ்வண்ணம் இப்பத்து நாட்களும் வழிபட்டால் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவர் கிடைப்பர், நாடு மழைவளம் பெறும் என்பது நம்பிக்கை. திருவெம்பாவை என்பது சக்தியை வியந்தது என்று பொருள்பெறும். திருவெம் பாவைப் பாடல்களில் முதல் எட்டுப் பாடல்களும் மனோன் மணி முதல் வாமை ஈறாகக் கூறப்படும் நவசக்திகளும் உலகப் படைப்பின் நிமித்தம் செயற்படும் முறைமையைக் குறித்து அமைந்துள்ளன. திருவெம்பாவையின் முதல் எட்டுப் பாடல்களும் கன்னிப் பெண்கள் தம்முள் ஒருவரை ஒருவர் துயிலெழுப்புதலை உணர்த்தும் வகையில் உள்ளன. ஒன்ப தாம் பாடல் இக்கன்னிப் பெண்கள் தமக்கு வேண்டிய கணவரின் இயல்பு கூறி அத்தகையவரைத் தமக்குக் கணவராகத் தந்தருள வேண்டும் என வேண்டிக் கொள்வதாக அமைந்துள்ளது. பத்தாம் பாடல் இறைவனின் புகழுக்கு எல்லையே இல்லை என்னும் கருத்தை உணர்த்தி நிற்கிறது. பதினோராம் பாடல் பெண்களின் நீராடலையும் இறைவன் தம்மை உடனிருந்து காக்க அவர்கள் வேண்டுதலையும் உணர்த்தி நிற்கிறது. பன்னிரண்டாம் பாடல் இப்பெண்கள் நீராடும் பொய்கை பற்றியும் சுனை பற்றியும் கூறி நிற்கிறது.

பதின்மூன்றாம் பாடல் இப்பெண்கள் நீராடும் பொய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மை அப்பனாகத் தோன்றும் தன்மையைக் குறித்து நிற்கிறது. பதினான்காம் பாடல் கௌரி நோன்பிற்கமைய சோதிநிறம் கூறி ஈற்றில் சக்தியின் கருணைத்திறம் பற்றிக் கூறுகிறது. பதினைந்தாம் பாடல் எம்பெருமானின் கல்யாண குணங்களில் ஈடுபடுவோரது அனுபவத்தைக் கூறி அத்தகைய இன்ப உணர்வைத் தாமும் பெற்றின்புற அக்கன்னியர் இறையை வேண்டி நிற்பதை உணர்த்தி நிற்கிறது. பதினாறாம் பாடல் உலகமுய்ய மழைவளம் வேண்டிப் பாடுதலை உணர்த்தி நிற்கிறது. பதினேழாம் பாடல் தன்னை அடைந்த அன்பர்க்கே அன்றி மற்றும் அன்பர் அனைவர்க்கும் தானே வலியச் சென்று அருள் பாலிக்கும் ஐயனின் அருட்திறத்தை பரங்கருணையை அறிவித்து அமைகிறது. பதினெட்டாம் பாடல் சூரிய உதயத்தின் அழகிய வர்ணனையையும் பரம்பொருளின் இலக்கணங்களையும் விபரித்து அமைகிறது. பத்தொன்பதாம் பாடல் இப்பெண்கள் தத்தமது கற்பின் கடமைக்கேற்ப கொண்டுள்ள உறுதியான கொள்கைகளைக் கூறி அவற்றைத் தாம் சீராக வாழ்ந்து காட்ட மன உறுதி தர இரந்து நிற்கும் அழகை வர்ணிக்கிறது. இருபதாம் பாடல் பஞ்ச கிருத்தியத்தைத் தன் ஆடல் மூலம் புரிந்தருளும் இறையின் இயல்பைக் கூறுவதுடன் மார்கழி நீராடலின் நிறைவை உணர்த்தி நிற்கிறது. இத்தனை சிறப்பான அர்த்தங்கள் பொதிந்துள்ள இத்திருவெம்பாவைப் பாடல்களை மார்கழி மாதம் முழுவதுமே சிறப்பாகத் திருவெம்பாவைப் பத்துத் தினங்களும் ஆதிரையானையும் அம்மையையும் விரதமிருந்து வழிபடுதல் மிகச் சிறந்த புண்ணியம் பயக்கும் செயலாகும்.

**போற்றியருளுக நின்ஆதி யாம் பாதமலர்**
**போற்றியருளுக நின்அந்தமாம் செந்தளிர்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்**
**போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்**
**போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்**
**போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்**
**போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்**
**போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ③ சக்தி விரதங்கள்

சக்தி வழிபாடு மிகவும் தொன்மை வாய்ந்தது. இயற்கையையும் பூமியையும் அங்கு வளைந்து நெளிந்தோடும் ஆறுகளையும் பெண்ணாகக் கண்டு பெண்மையை மதித்து வழிபாடு செய்தவர்கள் எமது மூதாதையர்.

அன்னை சக்தி, சக்தி மிகுந்தவள். ஆதி பராசக்தி பல வடிவங்களில் தோன்றி உயிரினங்களைக் கடைத்தேற்றுபவள். சிவபெருமானின் சக்தியாக உமாதேவியாக பரமசிவனின் இடப்பாகத்தில் வீற்றிருந்து ஐயன் திருவருட்சக்தியாகப் பஞ்ச கிருத்தியங்களுக்கும் காரணியாக விளங்குபவளும் சக்தியே. காஞ்சியில் ஏகாம்பர நாதரின் இடப்பகத்தில் காமாட்சி எனும் திருநாமத்தோடு விளங்கி 32 தர்மங்களையும் ஆன்மாக்கள் இயற்றி உய்வதற்குத் துணை புரிபவளும் சக்தியே. சிதம்பரத்தில் நடராஜப் பெருமான் ஆனந்தத்தாண்டவம் செய்யும் பொழுதில் நிருத்த சாட்சியாக சிவகாமசுந்தரி எனும் திருநாமத்தோடு ஆன்மாக்களுக்கு அருள்புரிபவளும் சக்தியே. காசித்தலத்திலே ஆன்ம கோடிகள் தாம் எடுத்த தேகத்தினின்றும் விடுபடும் அந்திய காலத்திலே காசி விசுவநாதப் பெருமான் அவ்வான்மாக்கள் ஈடேறும் பொருட்டு அவற்றின் செவிகளிலே சிவமூல மந்திரத்தை ஓதுவார். அப்போது அன்னை விசாலாட்சி அம்மை என்னும் நாமத்தோடு சிரசைத் தம்மடிமேல் வைத்து அனுக்கிரகம் செய்பவளும் அன்னை சக்தியே. திருவாலவாய் என்றழைக்கப் பெறும் மதுரையம்பதியிலே சோமசுந்தரப் பெருமானின் திருமருங்கில் எழுந்தருளி எம்பெருமான் சௌந்தர பாண்டியனாக விளங்கிய காலத்தில் தடாதகைப் பிராட்டியாராகப் பாண்டி நாட்டைப் பரிபாலனம் செய்தருளியதும் அன்னை சக்தியே.

ஆன்மாக்கள் சோர்வடையும்போது சக்தி நவசக்திகளாக அதிட்டித்து நின்று அவைகளை ஊக்கம் பெறச் செய்கிறாள். திருஞானசம்பந்தருக்கு ஞானப் பாலூட்டி அவரை ஞானக் குழந்தை ஆக்கியவளும் அன்னை சக்தியே. இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை ஆக்கியவளும் அன்னை சக்தியே. இதனால் சைவத்தையும் தமிழையும் மேம்பட வைத்த நாயகியானாள் அன்னை சக்தி. அபிராமிப் பட்டரின் திவ்விய தமிழ்ப் பிரபந் தத்தைக் கேட்டின்புற்று அவருக்கு அமாவாசைத் திதியில் அருள் நிலவு காட்டிய திருக்கடவூர் அபிராமியும் அன்னை சக்தியே. செல்வங்களை ஈந்தருளும் இலக்குமியும் கலைகளை நல்கியருளும் கலைமகள் சரஸ்வதியும் வீரத்தை அருளித் துஷ்ட நிக்ரக பரிபாலனம் செய்யும் துர்க்காதேவியும் அன்னை சக்தியே. மகேஸ்வரியாக மனோன்மணியாக ராஜராஜேஷ்வரி யாக பர்வதவர்த்தனியாக தையல் நாயகியாக வாலாம்பிகை யாக விளங்கி ஆன்ம கோடிகள் உய்யும் பொருட்டு இயங்கு பவளும் அன்னை சக்தியே. காயத்திரியாகவும் சாவித்திரியாக வும் தோன்றி அண்டசராசரங்கள் தோறும் அழகின் அம்சமாகவும் பெண்பாலாரிடம் வசீகர சக்தியாக விளங்கி இப்பிரபஞ்சத்தை இயக்குபவளும் அன்னை சக்தியே.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. சித்திரைச் சுக்கிர வாரம்

தேவியைக் குறித்து வெள்ளிக்கிழமை தோறும் விரதம் அனுட்டிக்க விரும்புவோருக்குச் சித்திரைச் சுக்கிர வாரம் உகந்ததாகும். சுக்கிர வாரம் என்பது வெள்ளிக்கிழமையைக் குறிக்கும். சித்திரை மாதத்து வளர்பிறையைத் தொடர்ந்து வரும் முதல் வெள்ளிக்கிழமையில் இவ்விரதத்தை அனுட்டிக்க ஆரம்பிக்கலாம். இவ்விரதத்தின் போது தேவியைப் பூசித்துத் தியானித்துத் தோத்தரித்து ஒரு பொழுது மட்டும் உணவு உண்டு அனுட்டித்தல் முறையாகும்.

**மாதா பராசக்தி வையமெல்லாம் நீ நிறைந்தாய்!**
**ஆதாரம் உன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே!**
**ஏதாயினும் வழிநீ சொல்வாய் எமதுயிரே!**
**வேதாவின் தாயே! மிகப்பணிந்து வாழ்வோமே.**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. காரடை நோன்பு

இவ்விரதம் அன்னை காமாட்சியை நோக்கி அனுட்டிக்கும் விரதமாகும். மாசி மாதத்தில் உபநயனம் செய்வதும் நோன் புக் கயிறு கட்டிக்கொள்வதும் சகல ஐஸ்வரியங்களையும் பெற்றுத் தரும் என்று கூறப்படுகிறது. 'மாசிக்கயிறு பாசி படரும்' என்று ஒரு பழமொழி உண்டு. அதாவது விருத்தி யடையும் என்பது பொருள்.

அன்னை சக்தியாகிய பார்வதிதேவி ஒருமுறை ஏகாம்பர நாதரை நாடிக் கடும் தவம் புரிந்தாள். அதன் பயனாக பரமசிவன் பார்வதிதேவியை ஒரு கணமும் விட்டுப் பிரியாம லிருந்தார். எனவே இத்தினத்தைக் காரடை நோன்பு என்று அழைப்பதுடன் காமாட்சி நோன்பு என்றும் இத்தினம் கொண் டாடப்பட்டு வருகிறது. அன்றைய தினம் விரதமிருக்கும் பெண்கள் கலசத்தில் காமாட்சி தேவியை ஆவாகனம் செய்து நோன்புக்கயிறை அதன்மேல் வைத்து மலர்களிட்டுப் பூசித்து அந்தணர்க்கு இயன்ற தானங்களும் செய்தல் வேண்டும். அந்நோன்புக் கயிறைக் கழுத்திலே கட்டிக்கொள்ள வேண்டும். சரடு கட்டிக்கொள்ளும் வைபவத்தில் கார்அரிசியை மாவாக் கித் துவரம் பருப்புடன் அதனைக் கலந்து அடை தட்டித் தயாரித்து நிவேதித்தல் வேண்டும். இவ்விரதத்தை முறையாக அனுட்டிப்போர் சௌபாக்கியங்களையும் பெறுவர். இதனை சாவித்திரி விரதத்துடன் தொடர்புபடுத்துதல் வழமை.

மாசிமாதமும் பங்குனி மாதமும் கூடும் நேரம் இவ்விரதம் கடைப்பிடிக்கப்பட வேண்டியதென்று சொல்லப்படுகின்றது. பூசையின்போது பயறு சேர்த்து அடை தாயாரித்து ஆலிலை யில் உருகாத வெண்ணெயும் உடன் வைத்து இவ்விரத பூசையின் போது நிவேதித்தல் முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆடிப் பூரம்

ஆடிப்பூரம் உமாதேவியாருக்கு மிக உகந்த நாளாகும். அச்சுவினி முதலான 27 நட்சத்திரக் கூட்டத்தில் பூர நட்சத்திரக் கூட்டம் 11 ஆம் இடத்தை வகிக்கிறது. ஆடிப் பூர நட்சத்திர நாளன்று உமையம்மை திருஅவதாரம் செய்த நாள் என்றும், ருதுவாகிய புண்ணிய தினம் என்றும் கூறப்பட்டுள் ளது. எனவே அன்னையின் அருள் வேண்டி ஆடிப்பூர நாளிலே உணவை ஒழித்து சக்தியைத் தரிசனம் செய்து தோத்தரித்து விரதமிருப்பது சைவசமயிகளது வழக்கமாகும். சிவபிரானுக் குத் திருவாதிரையையும் விஷ்ணுபகவானுக்கு திருஓணமும் உகந்த நாட்களாக அமைந்தது போல அம்பிகைக்குப் பூரநாள் அதிலும் ஆடிப்பூரம் மிகச் சிறப்பான நாளாகும். பூரநட்சத்திரத்திலே தான் அம்பிகை அவதாரம் செய்ததாக அருணகிரிநாதர் தனது கந்தர் அந்தாதியிற் குறிப்பிட்டுள்ளார். எனவே, ஆடிப்பூர நன்னாள் அம்பிகை வழிபாட்டிற்கோர் சிறந்த நாளாகும்.

பெரும்பாலும் பெண்களே மாங்கல்யப் பேறு, குழந்தைப் பேறு வேண்டி இவ்விரதத்தை நோற்கின்றனர்.

**ஆடிப்பூர நாளே அம்பிகை அவதாரம் செய்**
**பீடுறு தினமாம் ஈதிற்பேசிய உண்டி நீத்து**
**மாடையே முதல் தான மறையவர் மாதரார்க்கு**
**நாடியே அளிப்பராயின் நற்பலன் உரைக்கொணாதே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. ஆடிச் செவ்வாய்

"ஆடிச் செவ்வாய் தேடிப்பிடி" என்று ஒரு பழமொழி எம் மவரிடையே தொன்று தொட்டு வழங்கி வருகின்றது.

ஆடிச் செவ்வாய் விரதம் சக்திக்கு மாத்திரமல்லாது, வைரவப் பெருமானுக்கும் வீரபத்திரருக்கும் முருகப்பெரு மானுக்கும் உரியதாக அமைகிறது.

சிறப்பாகப் பெண்கள் இவ்விரதத்தை அனுட்டிப்பர். செவ் வாய் மங்களகாரகன் ஆதலால் ஆடிச் செவ்வாய் தோறும் விரதமிருந்து பெண்கள் இவ்விரதத்தை திருமணம் கைகூடு வதற்காக அனுட்டிப்பது வழமை. சிறப்பாக ஆடிமாத முதற் செவ்வாயிலிருந்து தொடர்ந்து ஏழு செவ்வாய்க்கிழமை களில் அம்பிகையைப் பூசித்து விரதம் அனுட்டிப்பது முறை களாகும். வேறு நற்கருமங்கள் நிறைவேற வேண்டியும் அம்பிகையை நோக்கி இவ்விரதம் அனுட்டித்தல் வழமையாகும். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வரலட்சுமி விரதம்

சக்தியின் ஒரு அம்சமான மகாலட்சுமியை நோக்கி நோற்கும் விரதம் இது. பெரும்பாலும் சுமங்கலிகளும் கன்னிப் பெண்களும் இவ்விரதத்தை நோற்பார்கள். ஆவணி மாதப் பௌர்ணமிக்கு முன்வரும் வெள்ளிக்கிழமையில் இவ்விர தத்தை அனுட்டித்தல் முறையாகும். இத்தினத்தில் தான் மகாலட்சுமி சுபமாலை நேரத்தில் பாற்கடலில் தோன்றினாள் என்றும், மகாலட்சுமியே சாருமதி என்னும் பெண்ணின் கனவில் தோன்றி இவ்விரதத்தை அனுட்டிக்கும் முறையையும் அவ்வண் ணம் அனுட்டித்தால் பெறும் பயன்கள் என்ன என்பதையும் கூறியருளினாள் என்றும் சொல்லப்படுகிறது. பின்னர் சாருமதி இவ்விரதத்தை அனுட்டிக்கும் முறை பற்றிப் பலருக்கும் எடுத்துச் சொன்னாள் என்றும் அறியக் கிடக்கின்றது.

இவ்விரதம் அனுட்டிக்கும் முறைமையை நோக்கின் விரதமனுட்டிப்போர் இல்லத்தைச் சுத்தப்படுத்தி தாமும் தூயராகிக் கோடி உடுத்துப் பூஜையறையிலே ஒரு பீடத்தில் கோலமிட்டுக் கும்பம் வைத்துக் கலசத்தில் இலட்சுமியை ஆவாகனம் செய்து ஒன்பது முடிச்சுள்ள கயிற்றைக் கட்டிக் கொள்ள வேண்டும். அன்று காலை உபவாசமிருத்தல் முறை யாகும். பின்னர் பூசை முடித்து மதியம் பிரசாத உணவுகளை யும் இரவு பலகாரமும் உண்ணலாம். இலட்சுமி பூசைக்கு உகந்த மலர் செந்தாமரைப்பூ, வில்வம் ஆகியனவாம். உகந்த நிவேதனம் சர்க்கரைப் பொங்கல், பாயாசம் என்பனவாம்.

இவ்விரதத்தைத் திரிகரண சுத்தியோடு அனுட்டித்தால் அம்பிகையின் அருள் பாலிப்பது நிச்சயம். விரத பலனாக தீர்க்காயுள், திருமணம், மாங்கல்ய பலம், செல்வ ஐஸ்வரி யம், புத்திரப் பேறு ஆகியன கிட்டும் என்பது உறுதி.

**பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி**
**மின்னுநவ ரத்தினம் போல் மேனி யழகுடையாள்,**
**அன்னையவள் வையமெலாம் ஆதரிப்பாள், ஸ்ரீதேவி**
**தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. நவராத்திரி

சக்திக்குரிய விரதங்களில் நவராத்திரி மேன்மையான விரதமாகும். நவ என்பது ஒன்பது எனப் பொருள்படும். 9 இரவுகளை சக்திக்குரிய இரவுகள் ஆக்கி அவளை துர்க்கை யாக இலக்குமியாக சரஸ்வதியாக வழிபடும் இரவுகளே இந்த ஒன்பது இரவுகளான நவராத்திரி எனப்படும். தொடர்ந்து வரும் 10ஆம் நாள் விஜயதசமி எனப்படும். இந்த நவராத்திரி விரதம் தேவி வழிபாட்டின் தொன்மையைக் காட்டி நிற்கிறது. பாரத நாட்டிலே வடக்கே வாழும் மக்கள் இதனை தசரா என்றழைப்பர். சக்தி வழிபாடு என்ற வகையில் நவராத்திரி உலகெங்கும் உள்ள இந்துக்களால் விரதமாகவும் விழா வாகவும் கொண்டாடப் பெற்று வருதல் கண்கூடு.

சரத் காலத்தில் இடம்பெறும் நவராத்திரி சாரதா நவராத் திரி என்றும் சித்திரை மாதத்தில் இடம்பெறும் நவராத்திரி வசந்த நவராத்திரி எனவும் அழைக்கப் பெறுகின்றன.

சரத் வசந்தம் ஆகிய இரு பருவங்களும் யமதர்மனுடைய கோரப்பற்கள் என வர்ணிக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் மக்கள் நோய் வாய்ப்படல் அதிகம் என்றும் அதனால் இக்காலத்தில் மக்கள் தேவி பூஜையைத் தொடர்ந்து நடாத்தி நோய் நொடியினின்றும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் தேவிபுராணம் கூறுகிறது.

கலையழகை வெளிப்படுத்தும் பண்டிகையாகவும் நவராத்திரி விளங்குகின்றது. பொம்மைக் கொலு வைத்துப் பூசை அறையின் சூழலை அழகுபடுத்துதலிலும் அர்த்தம் ஒன்று உண்டு.

இறைவனின் சிருஷ்டிகளாக புல், பூண்டு, தாவரம், ஊர்வன, பறவைகள், விலங்குகள், மனிதன் ஆகியவற்றின் வடிவங்களை பொம்மைகளாகச் செய்து வர்ணம் தீட்டிக் கவர்ச்சிகரமாக கொலுப்படிகளில் அடுக்கி வைக்கும் வழக்கமும் நவராத்திரி பூசையில் இடம்பெறுவது வழமை. கொலுப்படிகள் அதிகமாக 9 ஆக அமையும். அவற்றின் மேற்படியில் தெய்வப்பொம்மை களும் அடுத்தபடியில் தேவர், முனிவர், ரிஷிகள் போன்றோரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொம்மைகளும் அடுக்கப்பட்ட பின் விலங்குகள், பறவைகள், ஊர்வன, தாவரம் என கீழ்ப்படிகளில் அடுக்கப் பெற்று இருக்கும்.

இக்கொலு வைத்தலின் நிகழ்வில் 2 அர்த்தங்கள் உண்டு. ஒன்று கொலுவில் வைத்துள்ள யாவும் இறைவனது சிருஷ்டியே என்பதாம். மற்றையது கொலுவின் தோற்றம் கலையழகை வெளிப்படுத்தி பக்தியையும் பரவசத்தையும் பார்ப்போர் நெஞ்சங்களில் ஏற்படுத்தும்.

புரட்டாதி மாதத்தில் இடம்பெறும் நவராத்திரி விரதம் 3 அம்சங்களாகக் கொண்டாடப் பெறும். 1-3 நாட்களும் துர்க்கா பூசையும், 4-6 நாட்களும் இலக்குமி பூசையும், 7-9 நாட்கள் கலைமகள் பூசையும் இடம்பெற்று 10 ஆவது நாள் விஜய தசமி விழாவாக இடம்பெறும்.

விஜயதசமி அன்று இளம் சிறார்க்கு ஏடு தொடக்கல், புதுக் கடைகள், ஸ்தாபனங்கள் ஆரம்பித்தல், புதுக் கணக்கு வைத்தல், கலைகள் பயில ஆரம்பித்தல் ஆகியன இடம் பெறும். ஜயம் என்பது வெற்றி என்று பொருள்படும். இந்நாளே அன்னை சக்தி மகிஷாசுரனை வதம் செய்து வெற்றி கொண்ட நாளாகும்.

முத்தேவியரையும் இந்த 9 நாட்களும் வழிபட்டு மக்களுக்கு வேண்டிய வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றைப் பெறுதல் மரபு. விஜயதசமி வெற்றித் திருநாளாகக் கலை நிகழ்ச்சி களோடு கொண்டாடப்பெறும் தினமாகும்.

நவராத்திரியில் வரும் அஷ்டமி, மகா அஷ்டமி எனப்படும். நவமி, மகாநவமி என்று அழைக்கப்படும்.

முன்னொருகால் மகிடாசுரன் என்னும் ஓர் அசுரன் தேவர் களையெல்லாம் கொடுமைப்படுத்தவே அவனது கொடுமை களைத் தாங்கமுடியாத தேவர்கள் மகா விஷ்ணுவிடம் சென்று முறையிட்டனர். அவர்களுக்கு அருள்புரிய எண்ணிய விஷ்ணு பகவான் மகிடாசுரனுக்கு மரணம் ஒரு ஆண்மகனால் மாத்தி ரம் நிகழாது என மொழிந்தார். இதனைச் செவிமடுத்த தேவர்கள் அன்னை சக்தியிடம் தஞ்சமடைந்தனர். இதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக சக்தி மகிடாசுரனைக் கொன்றொழித்துத் தேவர்களைக் காத்தருளுமாறு புறப்பட்டாள். அப்போது அவளுக்கு உதவுமாறு சிவபெருமான் சூலாயுதத்தைச் சக்திக்குத் தந்தருளினார். விஷ்ணுபகவான் சக்கராயுதத்தைத் தந்தருளினார். இதேபோன்று அக்னி பகவான் சக்தியையும், வாயு பகவான் வில்லாயுதத்தையும் தர, சக்தி போர்க்களம் சென்றடைந்தாள்.

அங்கு மகிடாசுரனைக் கண்டதும் தேவி புத்திரனைப் போல் தோற்றமளிக்கும் இவனை யான் கொல்வதா என முதலில் தயங்கிப் பின் பாசத்தை அவன் மேல் ஏவினாள். அரக்கன் அல்லவா அவன்! அவனுக்குப் பாசம் எங்கே புரியப் போகிறது! அவன் தொடர்ந்து அன்னையுடன் போரிட்டான். ஈற்றில் அன்னையின் கையால் அழிந்தொழிந்தான். மகிடாசுரனை அழித்த அன்னை மகிடாசுரமர்த்தனி என்றழைக்கப்பெற்றாள்.

பத்தாம் நாளான விஜயதசமியன்றே அன்னை இவ்வெற்றியையீட்டினாள். இதனையே ஆலயங்களில் கன்னி வாழை வெட்டும் நிகழ்வு உணர்த்தி நிற்கின்றது.

புராணக் கதைகளின்படி இராமபிரானின் மூதாதையர்களில் ஒருவரே இவ்விழாவை முதன்முதலில் ஆரம்பித்து வைத்ததாக ஒரு செய்தி உண்டு. அவர் அமாவாசை இரவு தொடங்கி பாரத மண்ணில் பாயும் ஒன்பது நதிகளிலிருந்து ஒன்பது குடம் நீரைக் கொணர்ந்து அவற்றில் தேவியின் ஒன்பது அம்சங்களை ஆவாகனம் செய்து வழிபட்டதாக வரலாறு உண்டு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கன்னிப்பெண் தேவியாகப் பூசிக்கப்பட்டாள். இந்த ஆரம்பத்தின் வளர்ச்சியே பின் நவராத்திரி பூசையாக உருவானது என்று கொள்ள இடமுண்டு.

வன்னிமரம் பாவத்தையும் சத்துருக்களையும் அழிக்க வல்லது என்றும் அம்மரத்தைத் துர்க்கையின் வடிவமாகவும் கொள்வர். விஜயதசமியன்று அரசகுடும்பத்தினர் வன்னிமரத்துக்குப் பூசையாற்றி வழிபடும் வழக்கமும் இருந்து வந்தது. பாரதத்தில் பாண்டவர்கள் அஞ்ஞாத வாசத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தங்கள் ஆயுதங்களை வன்னிமரப் பொந்தில் மறைத்து வைத்துப் பின்னர் போரின்போது வெளியே எடுத்து போர் புரிந்து வெற்றி பெற்றதாகவும் அறியக்கிடக்கிறது. இராவ ணனைச் சம்கரிக்க இராமபிரான் சக்தி பூசை மேற்கொண்ட தாக வங்க மொழியில் உள்ள இராமாயாணம் கூறுகிறது.

மேலும், கிருத யுகத்திலே சுகேதன் என்னும் மன்னன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு பக்திமான். சந்தர்ப்பவசத்தால் அவனது பகைவரால் அவன் இராச்சியம் பறிபோய் அவன் வனத்தில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வேளை அவனைச் சந்தித்த ஆங்கீரசர் என்னும் முனிவர் அவனுக்கு நவராத்திரி பூசையின் மகிமையை உபதேசித்து அவ்விரதத் தை நோற்கும்படி அவனுக்கு அறிவுரை கூறவே மன்னனும் முறைப்படி நவராத்திரி விரதத்தை நோற்று அதன் பலனாகத் தனது அரசியலை மீண்டும் பெற்றுக் கொண்டான்.

சக்தியால் உலகம் இயங்குகிறது. வாழ்கின்ற நாம் வள மாக வாழ வேண்டின் சக்தியை மெய்யன்போடு முறைப்படி வழிபட்டாக வேண்டும். சக்தியை வேண்டினால் சக்தி பெறலாம். இதற்கு உகந்த காலம் நவராத்திரி விரதகால மாகும்.

புரட்டாதி மாதத்தில் பூர்வ பக்க பிரதமை முதல் நவமி வரை ஒன்பது நாட்களின் இரவுகளே நவராத்திரி எனப்படு வதால் இந்த ஒன்பது நாட்களின் முதல் நாளே இல்லம் பெருக்கிச் சுத்தப்படுத்தி மாக்கோலமிட்டு முறைப்படி கும்பம் வைத்தாக வேண்டும். நவதானியங்களையும் ஒரு மட்பாத்தி ரத்தில் சுத்தமான மண்ணிட்டு நீர்விட்டு விதைக்க வேண்டும். தேவியைக் கும்பத்தில் எழுந்தருள வைத்து முதல் மூன்று நாட்களும் துர்க்காதேவியையும் நடு மூன்று நாட்களும் இலக்குமி தேவியையும் கடைசி மூன்று நாட்களும் கலை மகளையும் மலர்களால் அலங்கரித்து அர்ச்சித்து நிவேதித்து வழிபட வேண்டும். பூசையின் போது நிவேதிக்க வேண்டிய பண்டங்கள். பொங்கல், புளியோதரை, தயிர்சாதம், அவல், கடலை, கற்கண்டு, பழம், பாக்கு, வெற்றிலை, பயறு, பொரி, பாயாசம், வடை, அப்பம் முதலியனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாநவமி அன்று புத்தகங்கள், ஆயுதங்கள், இசைக்கருவிகள் யாவும் தேவியின் பூசையில் வைத்து பூசித்து விஜயதசமி அன்று காலை பூசையின் பின்னர் எடுத்து உபயோகிக்க வேண்டும். இவ்வண்ணம் செய்யின் எதிலும் வெற்றி நிச்சயம்.

விரதம் அனுட்டிப்போர் காலையும் மதியமும் உணவைத் தவிர்த்து இரவு முதல் எட்டு நாட்களும் பால், பழம், பலகாரம் உண்ணலாம். கடைசி நாளான மகாநவமியன்று உபவாச மிருந்து மறுநாள் விஜயதசமியன்று காலையில் பாரணம் செய்யலாம். ஒன்பதாம் நாள் மகா நவமியன்று வீடுகளில் பெரியளவில் சரஸ்வதி பூசை செய்வது வழமை. 10ஆம் நாள் விஜயதசமியன்று குழந்தைகட்கு ஏடு தொடக்கும் வைபவம் செய்தல் விசேடம். அன்று ஆலயங்களில் மானம்பூ உற்சவம் இடம்பெறும். இதனை வாழை வெட்டு, தேவி அம்பெறிதல் என அழைப்பர்.

நவராத்திரி பூசையின்போது துர்க்காதேவிக்குக் குங்குமம், செந்நிறமலர்கள் ஆகியவற்றால் பூசை செய்தல் உத்தமம். இலக்குமி தேவிக்குச் செந்தாமரை வில்வம் முதலியன உகந்தவை. சரஸ்வதி தேவிக்கு வெண்தாமரை, மகிழம் பூ ஆகியவை உகந்தவை.

நவராத்திரி வழிபாடு புறத்தோற்றத்தில் சக்தி மயமானது. உள்ளீடாக நோக்கும்போது இவ்வழிபாடு பரம்பொருளாய் அம்மையப்பராய் விளங்கும் இறைவனுக்குச் செய்யப்படும் வழிபாடு எனவும் கொள்ளலாம். இதன் காரணமாகவே இவ்விரத விழா இல்லங்கள், ஆலயங்கள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் எனச் சகல இடங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. - கொண்டாடப் பெறுதல் அவசியமுமாகும்.

**அரிவையிலிரவி சேர்ந் தைப்பசி பிறை**
**பரு பிரதமைமுதல் நவமி யீறதாய்ப்**
**புரவலர் துர்க்கையைப் பூசை செய்திடி**
**லிரு நிதிக் கிழமைகள் யாவும் எய்துமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. சாவித்திரி விரதம்

இது சக்தியின் ஒரு அம்சமான சாவித்திரி தேவியைக் குறித்து நோற்கப்படும் விரதமாகும். அசுவபதி மன்னன் என்பான் குழந்தைப் பேறில்லாத காரணத்தால் சாவித்திரி தேவியைத் துதித்து வேண்ட அன்னையின் அருளால் அவனுக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்தது. பௌர்ணமித் திதியில் ஜனனித்த இக்குழந்தைக்கு சாவித்திரி என்று நாமம் சூட்டி மகிழ்ந்தான். குழந்தை நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமுமாக வளர்ந்து பருவமெய்தியது.

சத்தியவான் அற்ப ஆயுள் உள்ளவன் என்பதை நாரத முனிவர் மூலம் அறிந்தும் சாவித்திரி அவனையே தன் மணவாளனாக வரித்துக் கொண்டாள். காலம் நகர்ந்தது. சாவித்திரி தனது கணவனின் மரணம் சமீபிக்கின்றது என்பதை உணர்ந்து சாவித்திரி தேவியை நோக்கிக் கடுமையாக விரதமனுட்டித்து அவள் அருளைப் பூரணமாகப் பெற்றுத் தனது கணவனை இயமனிடமிருந்து மீட்டாள். இழந்த தன் பதியைப் பெற்றதோடு கண்பார்வை இழந்திருந்த தனது மாமியார் மாமனாரின் கண்பார்வையையும் பெற்றுக் கொடுத்தாள். உயர்ப்பேறான புத்திர பாக்கியத்தையும் பெற்றாள்.

இந்த வகையில் இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்போர் சௌமாங்கல்யம், புத்திர பாக்கியம், செல்வம், வளமான வாழ்வு ஆகியன பெற்றுச் சிறப்புடன் வாழ்வர் என்பது உண்மை.

**தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா**
**மனம்தரும் தெய்வவடிவும் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா**
**இனம்தரும் நல்லன எல்லாம்தரும் அன்பர் என்பவர்க்கே**
**கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.**

- அபிராமி அந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ④ குமார விரதங்கள்

கந்தன், கடம்பன், கார்த்திகேயன், குகன், சண்முகன், குமரன், முத்துக்குமாரன், ஆறுமுகன் என்ற நாமங்கள் யாவும் முருகப்பெருமானையே குறிக்கின்றன. சிவமைந்தனான முருகன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிலிருந்து தோன்றியவன். சூரபதுமனும் அவன் சகாக்களும் தேவர்களுக்கு இழைத்த அநீதிகள் பல. இவற்றிலிருந்து தம்மை மீட்டெடுக்க சூரனை சங்காரம் செய்ய ஒரு சற்புத்திரனைத் தந்தருளும்படி தேவாதி தேவர் எம்பெருமானிடம் வேண்டிக் கொண்டதற்கிணங்கவே சிவனார் தனது நெற்றிக்கண்ணிலிருந்து கந்தக் கடவுளைத் தோற்றுவித்தார். சிவபிரானது நெற்றிக் கண்ணிலிந்து தோன்றிய ஆறு தீச்சுடர்களும் சரவணப்பொய்கையை அடைந்து ஆறுகுழந்தைகளாக உருவாகின. பின்னர் அவை கார்த்திகைப் பெண்களால் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கப் பெற்றன. அன்னை பார்வதி அங்கு எழுந்தருளி அக்குழந்தைகளை அணைக்க ஆறு குழந்தைகளும் ஆறுமுகங்கள் கொண்ட ஒரு திருமுருகனாகக் காட்சி தந்தன. இதுவே திருமுருகன் தோன்றிய வரலாறு.

தான் எதற்காகத் தோற்றம் பெற்றாரோ அவ்வேலையைக் கச்சிதமாகச் செய்து முடித்தார் கந்தப்பெருமான். போரிட வந்த சூரனுக்குத் தனது எழிலுருவைக் காட்டி அவனது தீயசெயல்களை உணர்த்தித் தேவர்களைச் சிறைவிடும்படி போரின் முன்னர் முருகக் கடவுள் சூரபதுமனுக்கு உணர்த்தியும் சூரன் அப்பொன்மொழிகளைச் செவிசாய்ப்பதாக இல்லை. "கெடுகுடி சொற்கேளாதல்லவா!" பாலன் என்றெண்ணியிருந்த கந்தன் பாலன் அல்லன். தேவரைக் காக்க, தீமையை அகற்ற, நல்லவற்றைப் பேணிக்காக்க வந்த சிவமைந்தன், கலியுகத்தின் கடவுள் என்பதை ஒரு கணம் உணர்ந்த சூரபதுமனை அவனது பாவ இருள் மீண்டும் சூழ்ந்து கொண்டது. போருக்கு ஆயத்தமானான் சூரன். வில்லங்கத்தை விலை கொடுத்து வாங்கினான். தனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத்திரமல்ல தன்குலத்துக்கே தீங்கு செய்ய முற்பட்டான். செய்யலானான். தனது போர்த்திறன், மந்திரம், தந்திரம் யாவையும் பயன்படுத்தியும் தோல்வியையே தழுவினான் சூரபதுமன். கந்தப்பெருமானுக்கு அன்னை பராசக்தி அளித்த வேல் அவனது உடலை இரு கூறுகளாக்கியது. ஒரு கூறு மயிலாகியது. மற்றையது சேவலாகியது. முருகப்பெருமானும் சூரபதுமன் முன்னர் ஆற்றிய தவங்களின் பயனாக அவனைச் சீரழியவிடாது சேவலும் மயிலுமாக்கி அவற்றைத் தனது வாகனமும் கொடியுமாக ஏற்றுத் தான் சேவற்கொடியோன் என்றும் மயில்வாகனன் என்றும் அழியா நாமங்களையும் பெற்றார். இச்சந்தர்ப்பத்தில் தேவாதி தேவர்அடைந்த ஆனந்தத் துக்கு எல்லையே இல்லை.

கலியுகத்திற்குரிய கடவுள் கந்தப்பெருமான் என நூல்கள் பகர்ந்துள்ளன. எளிமைக்கும் ஞானத்துக்கும் விநாயகர் என் றால் ஆற்றலுக்கோர் வடிவம் முருகன். முருகனைத் தென் னாட்'டின் தெய்வம் என்பர். “ஓம் சரவண'பவ” என்பது அவனது மந்திரம். முருகனுக்கு மட்டுமே அறுபடை வீடுகள் என்ற சிறப்பான வழிபாடுகள் உண்டு. அவையாவன :- திருப்பரங் குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்ச்சோலை என்பனவாம்.

முருகப்பெருமானது தேவியருள், தெய்வயானை, கிரியா சக்தியையும் வள்ளி, இச்சா சக்தியையும், வேல், ஞான சக்தியையும் குறிக்கின்றன. சூரசங்காரத்திலிருந்து யாம் அறியும் ஒரு உண்மை யாதெனில் இறைவனது கருணை அறக்கருணை, மறக்கருணை என இருவகைப்படும். இதன் வண்ணம் நல்லவர்களை அறக்கருணையாலும் தீய மனத் தோரை மறக்கருணையாலும் ஆட்கொள்கின்றான் இறைவன். சூரசங்காரம் முருகப்பெருமானது மறக்கருணைக்கு உதாரணமாக அமைகின்றது எனலாம்.

மேலும், எல்லாப்பிராயத்தினருக்கும் எல்லாத் தரத்தினருக் கும் அருள்பாலிக்கும் வகையில் முருகப்பெருமான் அவரவர்க்கு ஏற்ற நிலையில் ஏற்ற உருவில் காட்சி தருகின் றார். உதாரணமாக, குழந்தைகட்குப் பாலமுருகனாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தாருக்கு வள்ளி தெய்வயானை சமேதரராகவும், கலைஞர்கட்டு ஆறுமுகனாகவும், அறிவை நாடுவோர்க்கு சுவாமிநாதனாகவும் ஞானியருக்கு ஞானபண்டிதனாகவும் காட்சி தந்து அருள் புரிபவன் ஐயன் முருகன்.

எனவே, கருணைகூர் முகங்கள் ஆறும் கொண்ட கந்தப் பெருமானை நோக்கி அவனுக்குரிய விரதங்களை முறைப்படி அனுட்டித்து அவனது இன்னருள் பெறுவோம்.

**அருவமும் உருவும் ஆகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்**
**பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனிஆகக்**
**கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டு**
**ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய.**

- கந்தபுராணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. வைகாசி விசாகம்

**வி**சாக நட்சத்திரம் இருபத்தியேழு நட்சத்திரங்களில் ஒன்றாகும். வைகாசி விசாக தினத்தை சேர்தி நாள் என்றும் கூறுவர். விசாக நட்சத்திரத்திற்கும் முருகப் பெருமானுக்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு. இந் நட்சத்திர தினத்திலே தான் முருகப்பெருமான் தோன்றினார். சூரபதுமன் முதலான அசுரர்களின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் தமது குறைகளை சிவபிரானிடம் முறையிட எம்பெருமானும் அவர்களைக் காத்தருள வேண்டி தனது நெற்றிக் கண்ணினின் றும் ஆறு தீப்பொறிகளைத் தோற்றுவித்தார். அப்பொறிகள் சரவணப் பொய்கையைச் சென்றடைந்தன. சரவணப்பொய்கை யில் அந்த ஆறு பொறிகளும் ஆறு திருப்பாலகர்களாக விளங்க, விஷ்ணு பகவானின் பணிப்பின் பெயரில் கார்த்தி கைப் பெண்கள் அப்பாலகர்களைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கலாயினர். இந்த வகையில் முருகப்பெருமான் தோன் றிய புண்ணிய தினமாகையால் வைகாசி விசாகம் முக்கி யத்துவம் பெறுகின்றது. பின்னர் உமையம்மை இக் குழந்தை களை வாரியணைக்க ஆறு முகங்களும் ஒன்றாகி ஆறுமுகப் பெருமானாக உருவெடுத்தார். இந்த நிகழ்வை குமரகுருபரர் கந்தர் கலிவெண்பாவில் மிக அழகாகக் கூறப்பட்டிருப்பதைப் பார்ப்போம்.

**பூங்குயில் வெற்பில் புனைமலர் பூங்கோதையிட**
**பாங்குறையு முக்கட் பரஞ்சோதி ஆங்கொரு நாள்**
**வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி**
**ஐந்துமுகத்தோ டதோமுகமுந் தந்து**
**திருமுகங்களாறாகிச் செந்தழற் கணாறும்**
**ஒருமுகமாய்த் தீப்பொறியாய் உய்ப்ப - விரிபுவனம்**
**எங்கம் பரக்க இமையோர் கடைஞ்சுதலும்**
**பொங்கு தழற் பிழம்பைப் பொற்கரத்தா - லங்க**
**ணெடுத்தமைத்து வாயுவைக் கொண்டேகுதி**
**என்றெம்மான்**
**கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோ யடுத்ததொரு**
**பூதத்தலைவ கொடுபோதியெனத் தீக்கடவுள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப் - போதொரு சற்
றன்னவறுங் கொண்டமைதற் காற்றாள்
சரவணத்திற்
சென்னியிற் கொண்டுய்ப்பத் திருவுருவாய் - முன்ன
ரறு மீன் முலையுண்டழுது விளையாடி
நறுநீர் முடிக்கணி தந்த நாதன் குறுமுறுவங்
கன்னியொடுஞ் சென்றவர்க்குக் காதலுருக்
காட்டுதலும்
அன்னவள் கண்டுருவம் ஆறினையும் தன்னிரண்டு
கையால் எடுத்தணைத்துக் கந்தன் எனப்பேர்
புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்து செய்ய
முகத்திலணைத்து உச்சிமோந்து முலைப்பால்
அகத்துண் மகிழ் பூத்தளித்து சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரதிதல் அளித்து
உள்ளமுவப்ப வுயந்தோனே -

இவ்விசாக புண்ணிய நாளிலே ஆலயங்களில் வசந்தோற் சவமும் பிரம்மோற்சவமும் இடம்பெறும். வைணவத்தில் நம்மாழ்வார் அவதார நாளாகவும், புத்த பகவான் பிறந்த, நிர்வாணமடைந்த நன்னாளாகவும் பல சமய முக்கியத்து வத்தை இத்தினம் பெறுகின்றது. ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூரில் இத்தினத்தில் முருகப்பெருமானுக்கு சிறப்பாக விழா எடுக்கப்படுகின்றது. முருகப்பெருமானை வழிபட இத்தினம் சிறந்ததோர் தினமாகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஆடிக் கிருத்திகை

முருகப்பெருமானுக்குரிய நட்சத்திரம் கார்த்திகை - இதனைக் கிருத்திகை என்றும் அழைப்பதுண்டு. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப் பெற்றமையால் கந்தக் கடவுளைக் கார்த்திகேயன் என்றும் அழைக்கின்றோம். 27 நட்சத்திரங் களில் கார்த்திகை நட்சத்திரம் மூன்றாவதாகும். வானிலே மின்னும் நட்சத்திரங்களில் சாதாரண கண்களுக்குத் தெளி வாகத் தெரியும் நட்சத்திரங்களையும் முருகப்பெருமானைச் சரவணப்பொய்கையில் பாலூட்டி வளர்த்த பத்தினிகளே எனப் புராணக் கதைகள் கூறுகின்றன.

கந்தவேளைக் கலியுகத்துக்குரிய கடவுள் என்போம். துஷ்டரை அழித்தலும் நல்லோரைப் பாதுகாத்தலுமே கந்தப் பெருமானது இயல்பான செயல்களாகும். இதற்கு உதாரணம் சூரசங்காரமாம். சூரபதுமனை ஒழிக்கவும் தேவர்களைக் காக்கவும் தோன்றிய முருகக் குழந்தையைப் பாலூட்டிச் சீராட்டி வளர்க்குமாறு ஆறு தேவமாதரைத் தேவர்கள் பணித் தனர். இவர்கள் கார்த்திகைப் பெண்கள் என அழைக்கப் பெற்றனர். இவர்கள் பெயராலும் முருகன் கார்த்திகேயன் என்றழைக்கப் பெற்றான். இது மாத்திரமன்றிக் கார்த்திகை நாளில் தன்னை வழிபடுவோருக்குச் சகல நலன்களும் அருளுவதாக அக்கார்த்திகைப் பெண்களுக்குக் கார்த்தி கேயன் வரமும் தந்தருளினார்.

இந்த வகையில் கிழமைகளில் வெள்ளிக்கிழமையும் திதி களில் சஷ்டியும், நட்சத்திரங்களில் கிருத்திகையும், முருகப் பெருமானுக்குரிய விரத நாட்களாம். முருகனுக்குரிய கிருத்தி கைகள் யாவும் சிறந்தவையாயினும், தட்சணாயனம் தொடங் கும் ஆடிமாதத்தில் இடம்பெறும் ஆடிக்கிருத்திகையும் உத்தி ராயணம் தொடங்கும் தைமாதக் கிருத்திகையும் தனிப்பெருஞ் சிறப்புடையன. கிருத்திகை என்பது கார்த்திகை என்று பொருள்படும் என முன்பே குறிப்பிட்டுள்ளோம்.

கிருத்திகை விரதத்தின் பயன்கள் பல. அவற்றை நோக்கின் நாரத மகா முனிவர் 12 வருட காலம் இவ்விரதத்தை முறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி அனுட்டித்து ஸப்த ரிஷிகளுள் மேலான பதவியைப் பெற்றார். கோரன் என்னும் அவுணர் என்பவனால் தனது நாடு முழுவதையும் இழந்த பகீரதன் சுகர் என்னும் முனிவரின் உபதேசத்தின்படி கிருத்திகை விரதத்தை முறைப்படி அனுட்டித்து முருக வழிபாடு செய்து அதன் பயனாக இழந்த நாடு முழுவதையும் மீண்டும் பெற்று இன்புற்றமை வரலாறு. அந்தணன் ஒருவன் இவ்விரதத்தை அனுட்டித்து இம்மையில் தான்விரும்பிய சகல நலன்களையும பெற்று மறுமையில் திரிசங்கு சக்கரவர்த்தியாகப் பிறந்து பெரும் பேறெய்தினான்.

எனவே இப்பயன் மிக்க இந்த ஆடிக்கிருத்திகை விரதத்தை அனைவரும் முறையே அனுட்டித்து இம்மை மறுமை நலன்களை எய்த முற்பட வேண்டும்.

**இந்த நல்விரதந்தன்னை ஈண்டொரு மறையோன் நோற்று**
**முந்திய மனுவேயாகி முழுதுலகதனை ஆண்டான்**
**அந்தணன் ஒருவன் பின்னும் அவ்விரதத்தைப் போற்றி**
**சிந்தையில் நினைத்தாங்கெய்தி திரிசங்கு ஆகியுற்றான்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. கந்தசஷ்டி

சஷ்டி என்பது ஒரு திதி ஆகும். அமாவாசை, பூரணை ஆகிய திதிகளைத் தொடர்ந்து வரும் ஆறாம் நாள் சஷ்டி ஆகும். சஷ்டியை சட்டி என்றும் கூறலாம். ஐப்பசி மாதத்தில் இடம்பெறும் அமாவாசைக்குப் பின்வரும் பிரதமை முதல் ஆறு நாட்களும் கந்தக்கடவுளைக் குறித்து அனுட்டிக்கப் படுவது கந்தசஷ்டி விரதம் ஆகும். கந்தப் பெருமான் தேவர் களது பெரும் இன்னல்களைத் தீர்த்தருளும் பொருட்டுச் சூரபதுமனை அழித்து அருள் புரிந்த தினம் சஷ்டியாகும்.

"சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என்பது ஒரு கூற்று. இதனுள் மறைந்திருக்கும் பொருளை நோக்கின் சங்கரனாகிய சிவனின் பிள்ளையாகிய முருகன், சட்டியாகிய திதியில் மாமரமாக நின்ற சூரபதுமனைச் சங்கரித்தார் என்று பொருள்படும்.

கந்தசஷ்டியை முருகனுக்குரிய ஒரு சிறப்புவிரதமாகவும் அதன் முடிவில் இடம்பெறும் சூரன்போரை ஒரு வெற்றி விழாவாகவும் சைவப் பெருமக்கள் ஆலயங்களிலே கொண்டா டுவர். முருகப்பெருமான் சூரபதுமனைச் சங்கரித்துத் தேவர்கள் துயர் துடைத்தருளிய பெருமையைக் கொண்டாடுவதே சூர சங்காரத் திருவிழாவாகும். ஆறுநாட்கள் விரதமிருந்து சஷ்டியன்று இவ்விழாக் கொண்டாடப்படுவது வழமையாகும். ஐப்பசி மாதம் வளர்பிறை சஷ்டியைக் கடைசிநாளாகக் கொண்டு இவ்விரதம் ஆரம்பிக்கப்படுகிறது.

இவ்விரத நாட்கள் ஆறிலும் அதிகாலை துயில் எழுந்து நித்திய கடன்கள் முடித்துப் பூரண கும்பத்தில் முருகப் பெருமானை ஆவாகனம் செய்து மலரிட்டுத் தூப தீபம் காட்டி அர்ச்சித்துத் தோத்தரித்து வழிபடல் சிறந்ததாகும். விரத நாட்களில் பகல் உறக்கத்தைத் தவிர்த்தல் வேண்டும். தத்தமது உடல் ஆரோக்கியத்திற்கேற்ப விரத நாட்களில் ஒருவேளை உணவு கொள்ளலாம்; உணவைத் தவிர்த்து ஒருவேளை பாலும் பழமும் அருந்தலாம்; மூன்று மிளகும் இளநீரும் அருந்தியும் இவ்விரதத்தை அனுட்டிக்கலாம். ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினமும் உபவாசமிருக்க இயலாதவர்கள் ஒருவேளை உணவுண்டு ஆறாவது நாள் உபவாசமிருந்து அடுத்த நாள் அதிகாலை பாறணை செய்து விரதத்தைப் பூர்த்தி செய்தும் கொள்ளலாம்.

தேவர்கள் துயர் தீர்த்தற்பொருட்டு முருகக் கடவுள் சூரபதுமனோடு போர் செய்து போரின் ஆறாவது நாள் சூரனைத் தன் வேலாயுதத்தினால் பிளந்து கொன்றார். பிளவுபட்ட கூறுகள் திருவருளால் மயிலும் சேவலுமாக மாற அவற்றுள் மயிலைத் தன் வாகனமாகவும் சேவலைத் தன் கொடியாகவும் கொண்டருளினார் முருகன். எனவே சூரன் போர் இடம்பெற்ற இந்த ஆறு நாட்களும் உபவாச மிருந்து முருகன் புகழ் பாடிக் கந்தபுராணம் படித்துப் பயன் சொல்லி முறைப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் நிச்சயம் முருகன் இன்னருளைப் பெற்றுய்வர் என்பது நம்பிக்கை.

இவ்விரதத்தின் பலன் அளப்பரியது. வசிஷ்ட முனிவரின் உபதேசத்தின்படி முசுகுந்தச் சக்கரவர்த்தி இவ்விரதத்தை அனுட்டித்து நிலவுலகம் முழுவதையும் ஆள வீரவாகு தேவர்களைத் துணைவர்களாகப் பெற்றான் என்பது வரலாறு.

"ஞானந்தான் உருவாகிய நாயகன்" எனப் பாடுகின்றார் கச்சியப்பர். ஞான பண்டிதனான முருகன் ஞானமே வடிவான வன். அவன் கையிலிருப்பது ஞானவேல். ஞான சக்தியாகிய அன்னை சக்தியால் மைந்தனுக்கு உவந்தளிக்கப்பட்டது.

இறையின் கருணை இருவகைப்படும்; ஒன்று அறக்கருணை மற்றையது மறக்கருணை. இறைவன் நல்லோரை அறக் கருணையாலும் தீயோரை மறக்கருணையாலும் ஆட் கொள் கின்றான். சூரன் போர்த் திருவிழாவின்கண் ஒரு தத்து வமே அடங்கியுள்ளது. சூரபதுமன் தான் பெற்ற பெருவரத்தின் பயனாக அதி சக்தி பெற்றுத் தேவர்களுக்குத் துன்பங்கள் பல புரிந்தான். இவனுடைய பாவச் செயல்களால் மேலும் இவன் மாபாவியாகி விடக்கூடாது என எண்ணிய இறைவன் தேவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அவனை ஆட் கொள்ளத் திருவுளம் கொண்டார். முருகப்பெருமானாகத் தோன்றிப் போரில் சூரனது உடலை இருகூறாக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வண்ணம் ஒருகூறு மயிலாகவும் மறுகூறு சேவலாகவும் உருவானது. மயிலைத் தன் வாகனமாகவும் சேவலைத் தன் கொடியாகவும் தன்னோடு ஏற்றுக் கொண்டார். இஃது இறைவன் சூரனுக்குக் காட்டிய மறக்கருணையாகும்.

ஆணவம் நிறைந்த ஒரு ஆத்மாவாகச் சூரன் சித்திரிக்கப் படுகின்றான். ஆணவ முனைப்புக்கொண்ட ஒரு ஆத்மாவால் இறையைக் காணவே முடியாது. ஆணவம் ஒடுங்கிய நிலை யிலே தான் ஆத்மா இறையைக் காணுதல் சாத்தியம். ஆணவ மலம் அகலும் வரை ஆத்மா பல ஜென்மங்களை எடுத்து உழலும். இந்த ஆணவ மலத்தைப் போக்கவல்ல ஒருவன் இறைவன் மட்டுமே. இங்கு ஆணவ மலமாகிய சூரனது தூல உடம்பைக் கொன்று ஆணவ மலம் நீங்கிய அனாதித் தன்மை வாய்ந்த அவனது ஆத்மாவைத் தன்னோடு சேர்த்துக் கொள்கின்றான் ஈசன். சூரனை இறைவன் சங்கரித்தான் என்று கூறின் இது சாலப் பொருந்தும். இதுவே சூரன் போரின் தத்துவம்.

**ஆறிரு தடந்தோள் வாழ்க! ஆறுமுகம் வாழ்க வெற்பைக்**
**கூறுசெய் தனிவேல் வாழ்க! குக்குடம் வாழ்க செவ்வேள்**
**ஏறிய மஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கும் வாழ்க!**
**மாறிலா வள்ளி வாழ்க! வாழ்கசீர் அடியாரெல்லாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. வெள்ளிக்கிழமை விரதம்

முருகப்பெருமானுக்குச் சிறந்தனவாகக் கருதப்படுவன, கார்த்திகை நட்சத்திரம், சஷ்டி திதி, சுக்கிரவாரம் எனப்படும் வெள்ளிக்கிழமை முதலியனவாம். செவ்வாய்க்கும் முருகப் பெருமான் அதிபர் என்றும் கார்த்திகை மாதக் கார்த்திகை கந்தக் கடவுள் வழிபாட்டுக்கு அதிவிசேஷம் வாய்ந்தது எனவும் கருத்துகள் உள.

இவற்றை விட வெள்ளிக்கிழமை விரதம், ஏழுகிழமை நோன்புக்குள்ளே முருகப்பெருமானுக்குச் சிறந்த நோன்பாகும். 'கிழமைகளில் யான் வெள்ளிக்கிழமையாக இருப்பேன்' என பகவானும் கீதையில் கூறியுள்ளார். இவ்விரதத்தை முறைப்படி அனுட்டிப்போர் எண்ணியன எல்லாம் எண்ணியவாறு பெற்று இன்புறுவர் என்பதற்குக் கந்தபுராணப் பாடல் ஒன்றைச் சான றாகக் குறிப்பிடலாம்.

**எள்ளருஞ் சிறப்பின் மிக்க எழுவகை வாரந் தன்னுள்**
**வெள்ளி நாள் விரதந்தானே விண்ணவர் உலகம் காத்த**
**வள்ளல்தன் விரதம் ஆகும் மற்றது புரிந்த மேலோர்**
**உள்ள மேல் நினைத்த எல்லாம் ஒல்லையின் முடியும்**
**அன்றே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑤ விஷ்ணு விரதங்கள்

**வி**ஷ்ணு பக்தர்கள் வைணவர்கள் என்றழைக்கப்படுகிறார் கள். அவர்களின் ஒரே தெய்வம் திருமால் தான். பகவத் கைங்கரியமும் சரணாகதித்துவமும் தலைசிறந்து விளங்கு வது வைணவ மதத்திலே தான். பாஞ்சாத்திரமும், வைகாசன மும் வைணவ ஆகமங்களாகும். வைணவ அடியார்கள் ஆழ்வார்கள் என்றழைக்கப்படுகின்றார்கள். திருமாலின் 5 நிலைகளாக அருவநிலை, பரத்துவம், வியூகம், விபவம், அர்ச்சாவதாரம் ஆகியன கூறப்பட்டுள்ளன. ஸ்ரீ இராமானுஜர் வைணவ சமயத்திற்கு விசிஷ்டாத்வைத சித்தாந்தம் எனப் பெயரிட்டுள்ளார். வைணவம் 2 வகை மோட்சம் பற்றிக் கூறுகின்றது. அவையாவன கைவல்யம், பிரம்மானந்தம் என்பனவாம்.

விஷ்ணுபகவானின் திருக்கோல அமைப்பை நோக்கின் அவர் திருக்கைகளில் சுதர்சனம் என்னும் சக்கரத்தையும் நந்தகம் என்னும் கதையினையும், பாஞ்சஜன்யம் என்னும் சங்கினையும் தரித்துள்ளார். ஒரு கரம் அபயகஸ்தமாக அமைந்துள்ளது. மார்பில் கௌத்துவமணியினையும் நெற்றி யில் ஸ்ரீவத்ஸம் மறுவினையும் தரித்துள்ளார். இவரது சங்கு படைத்தற் தொழிலையும், சக்கரம் அழித்தல் தொழிலையும், அபயகஸ்தம் காத்தற் தொழிலையும், கௌத்துவமணி அந்த ராத்மாவையும் ஸ்ரீவத்சம் சகலதுக்கும் ஆதாரமான பிரதானம் எது என்பதையும் சுட்டிநிற்கின்றன. பொதுவாக விஷ்ணு பகவான் காத்தல் தொழிலுக்குரியவர் என்பது உணரப்பட்டது. இவரது ஆதிசேஷனில் சயனித்திருக்கும் அனந்த சயனத் திருவுருவம் தனித்துவமானது. சங்கு, சக்கரம், கதை, பதுமம் தரித்துப் பகவான் ஐந்து தலையுள்ள பாம்பின் மேல் பள்ளி கொள்வதாகவும் பாம்பு படமெடுத்துக் குடை பிடிப்பதாகவும் பகவானுடைய கால் மாட்டில் மகாலட்சுமி அமர்ந்திருப்பதா கவும் வடிவமைப்பு உண்டு. இந்த அனந்த சயனம் பகவானது யோக நித்திரை அல்லது அறிதுயில் எனப்படும். அதாவது சகலதையும் தன்னுள் அடக்கி அவற்றை நன்கு இயங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தபின் அவர் அனந்த நிலையில் துயில்வதாக ஓர் அர்த்தமுண்டு.

அவர் அரவத்தின் மேல் துயில் கொள்வதற்கும் ஓர் அர்த்த முண்டு. பாம்பு தாமத குணமாகிய கோபத்தினைக் கொண் டது. பிரளய காலத்தில் எல்லாம் அழிந்து போக எஞ்சி நிற்கும் தாமத குணம் இறைவனுக்குள் அடங்கிக் கிடக்கும் என்பதை இஃது உணர்த்தி நிற்கிறது. பாற்கடலிலே பகவான் துயில் கொள்வதற்கும் ஓர் அர்த்தமுண்டு. பால் பரிசுத்த மானது. பாற்கடல் மற்றைய கடல்கள் போல் அசையாது சலனமற்று இருப்பது, இத்தகைய சஞ்சலமற்ற சாந்தமான தூய உள்ளங்களிலே தான் பகவான் ஆனந்தமாக உறை வார் என்பது பாற்கடல் மேல் பகவான் பள்ளி கொள்வதன் விளக்கம். அத்தோடு பகவானின் இன்னருள் பாலமுது போல் பொங்கும் பூரணமானது என்பதையும் இது குறிக்கும். விஷ்ணு பகவானை முழுமுதலாகக் கொண்ட சமயம் வைணவம். பகவானுக்குரிய சிறப்பு விரதம் ஏகாதசி ஆகும்.

**பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்**
**அச்சுதா அமரர் ஏறே ஆயர்தம் கொழுந்தே என்னும்**
**இச்சுவை தரினினும் யான்போய் இந்திரலோகம் ஆளும்**
**அச்சுவை தரினும் வேண்டேன் அரங்கமா நகர் உள்ளோனே**

**ஊரிலேன் காணியில்லை உறவு மற்றொருவரில்லை**
**பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி**
**காரொளி வண்ணனே கண்ணனே கதறுகின்றேன்**
**ஆருளர் களைகண்அம்மா அரங்கமாநகர் உளானே.**

- ஆழ்வார் திருப்பாசுரம்

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஏகாதசி விரதம்

காத்தற் கடவுளாகிய விஷ்ணுபகவானை நோக்கி அனுட்டிக்கும் விரதம் ஏகாதசி விரதமாகும். ஒரு மாதத்தில் இடம்பெறும் வளர்பிறை தேய்பிறைகளின் பதினோராம் நாள் அனுட்டிக்கப் பெறுவது இவ்விரதமாகும். நித்தியம், காமிகம் என்னும் இவ்விரு வகை அனுட்டிப்பில் நித்தியம் என்பது நிலையான முக்தியை விரும்பி அனுட்டிக்கப் பெறுவதாம். காமிகம் என்பது இம்மைப் பயன்களைக் கருதி அனுட்டிக்கப் பெறுவதாகும்.

இவ்விரதத்தின் சிறப்பு யாதெனின் ஏகாதசி சிவபெருமானுக் குரிய திதியாகும். துவாதசி திருமாலுக்குரிய திதியாகும். இவ்விரு திதிகளும் இவ்விரத நாளின்போது பொருந்தி வருவதால் இவ்விரதத்தைச் சைவர்களும் வைஷ்ணவர்களும் அனுட்டிப்பர். ஒரு வருட காலத்தின்போது இரு பட்சங்களிலு மாக 24 ஏகாதசி தினங்கள் வந்தபோதும் பூர்வ பட்சத்தில் வரும் 12 திதிகளிலும் இடம்பெறும் திதிகளிலேயே இவ்விரதம் அனுட்டிக்கப்படல் வேண்டும். கார்த்திகை மாதப் பூர்வ பக்க ஏகாதசியை முதலாகக் கொண்டு இவ்விரதத்தை ஆரம்பித்தல் முறையாகும்.

ஏகாதசிப் புண்ணிய தினத்திற்கு முதல் நாளே உணவை ஒரு பொழுதாக உண்ண வேண்டும். அன்றைய தினமே பக்தி நிறை மனதோடு பொழுதைக் கழிக்க வேண்டும். மறு நாள் சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னர் துயிலெ ழுந்து நித்திய கருமங்கள் முடித்துச் சங்கற்பம் செய்த பின் பகல் முழுவதும் உபவாசமிருந்து இரவு நித்திரை விழித்து நான்கு யாமமும் விஷ்ணு நாமம் ஓதி வழிபாடு செய்தல் வேண்டும். பொழுது விடிந்ததும் தூய நீராடி இறை வணக்கம் முடித்து மெய்யடியார்கள் உறவினர்கள் ஆகியோருடன் பாரணஞ் செய்து விரதத்தை நிறைவு செய்து கொள்ள லாம். இத்தினத்தில் இயன்றவரை அன்னதானம் செய்தல் சாலச் சிறந்ததாகும். இத்தகைய மேன்மை நிறைந்த இவ்விரதத்தை அனுட்டித்துப் பெரும் பயன் அடைந்த பலரது வரலாறுகள் உள.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்பெருமானை மெய்யன்புடன் வழிபடுவோர், அர்ச்சிப்போர், சிவப்பணி செய்வோர் சிவன் திருவடி நீழலை அடைந்து இன்புற்றிருப்பர். அதே நேரம் சிவனையும் விஷ்ணுவையும் துளசியால் அர்ச்சிப்பவர்கள் நற்கதி அடைவர். துளசியோடு கலந்த நீரை அருந்துவோர் மேனிலை அடைவர் என்னும் உண்மைகளைப் புராணங்களும் இதிகாசங்களும் வெளிப் படுத்தியுள்ளன..

இவற்றையெல்லாம் செவிமடுத்த கோசல நாட்டை நீதி தவறாது ஆண்டுவந்த உருக்மாங்கதன் என்னும் மன்னன் தனது நகரத்திலே மிகப்பெிரய நந்தவனம் ஒன்றை அமைத்து அங்கு மலரும் மலர்களையெல்லாம் அந்தணர்களிடமும் மெய்யடியார்களிடமும் கொடுத்து சிவ விஷ்ணு பூசை செய்ய உதவினான். இதனால் மனநிறைவு பெற்று மன்னன் மகிழும் நேரத்திலே திடீரென அவனது நந்தவனத்திலே தினமும் யாரோ திருட்டுத்தனமாக மலர்களைக் கொய்வதால் மலர்கள் குறையத் தொடங்கிய செய்தி மன்னனுக்கு எட்டியது. திருட் டைக் கண்டுபிடிக்கும் பொருட்டு மன்னன் நந்தவனத் துக்குத் தீவிர காவல் போட்டான்.

காவல் போட்டதன் பயனாக மன்னனின் காவலர்களிடம் அகப்பட்டவன் திருடனல்ல. நந்தவனத்தில் தவம் மேற்கொண் டிருந்த ஒரு முனி சிரேஷ்டரே. மன்னனிடம் கொண்டுவரப்பட்ட முனிபுங்கவரிடம், மன்னன் மன்னிப்புக் கேட்டான். அத்தோடு தனது நந்தவனத்திலே தினமும் மலர்களைக் களவாடும் திருடர்களைப் பிடித்துத்தருமாறும் முனிசிரேஷ்டரிடம் மன்னன் வேண்டிக் கொண்டான். தனது ஞானத்தினால் நடந்ததை உணர்ந்த முனிவர் கூறினார். "மன்னா! இந்திர பூசைக்காகத் தேவலோகப் பெண்கள் தினமும் இங்கு வந்து உனது நந்தவ னத்தில் மலர் கொய்து செல்கின்றார்கள்."

விஷயத்தை அறிந்த மன்னன் தேவரீர் அவர்களைக் காண் பதற்கு ஓர் உபாயம் உரைத்தருள வேண்டும் என முனிவ ரைக் கேட்டுக் கொண்டான். அதற்கு முனிவர் "அரசே, உனது நந்தவனத்தில் கொம்மட்டிச் செடியை உண்டாக்கு; அரம்பை யர் வந்து மலர்களைக் கொய்யும்போது கொம்மடிச் செடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது பாதத்தைத் தீண்டுமானால் அவர்கள் தங்கள் தேவத்துவத்தை இழந்து தேவலோகம் மீண்டு செல்ல முடியாமல் நிற்பார்கள் அப்போது அவர்களை நீ காண முடியும்.'' என்றார். மன்னனும் முனிசிரேஷ்டர் கூறியவாறே செய்யப்பணித்தான். கொம்மடிச் செடியும் நந்தவனத்தில் வளரலாயிற்று. ஒருநாள் காவலாளர்கள் அழகிய பெண்ணொருத்தி கொம்மடடிச்செடியினருகே நிற்கக் கண்டனர்.

செய்தி மன்னனிடம் சென்றதும் மன்னன் நந்தவனத்துக்கு விரைந்தான். அசையாது விசனத்தோடு நின்ற அழகான தேவப்பெண்ணொருத்தியைக் கண்டான். அப்பெண் தேவதை தான் தன் தோழிகளோடு இந்திரபூசைக்கு மலர்கள் கொய்ய வந்ததாகவும் கொம்மட்டிச் செடியில் தன்பாதம் பட்டமையால் தான் தேவத்தன்மையிழந்து தேவலோகம் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தனக்கு உதவும்படி மன்னனைக் கேட்டுக் கொண்டாள். மன்னன் அதற்குப் பிராயச்சித்தம் என்னவென வினவ ஏகாதசி விரதமனுட்டித்த ஒருவரின் விரத பலனைத் தனக்குத் தந்து உதவினால் தான் விமோசனம் பெறமுடியும் எனவும் கூறிநின்றாள் அத்தேவப் பெண்.

மன்னன் ஏவலாளர்களை அழைத்து ஏகாதசி விரதமனுட்டிப் போரை அறிந்து வரும்படி பணித்தான். தேடலில் ஒருவருமே கிடைக்காததால் தேவப்பெண் அரசனை நோக்கி "அரசே, நீ சிறுவனாக இருந்த நாளில் உன்னை வளர்த்த செவிலித் தாயை அழைத்து வரச்சொல் அவளிடம் ஏகாதசி விரத பலன் உள்ளது'' என மொழிந்தாள். செவிலித்தாயை அழைத்துவந்தபோது அவள் தான் அவ்விரதத்தை நோற்ற தாக இல்லை என்றாள். அதற்கு அத்தேவப் பெண் கூறியது "அம்மா முன்னொரு நாள் இம்மன்னனின் தந்தை உன்னைக் கோபித்தான். அதனால் மனம் நொந்த நீ அன்று முழுவதும் உணவு உண்ணாது மறுநாட் காலையே உணவு உட்கொண் டாய். நீ பட்டினி இருந்த புண்ணிய தினம் ஏகாதசி விரத புண்ணிய தினமாகும். எனவே தெரிந்தோ தெரியாமலோ உன்னிடம் ஏகாதசி விரத பலன் உள்ளது. எனவே அப்பலனில் பாதியைத் தருவீர்களானால் எனக்கு விமோசனம் கிடைக்கும்'' என மொழிந்தாள். இவ்வுரை கேட்ட அந்த மூதாட்டி மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக மகிழ்ந்து தேவமாது விரும்பிய வண்ணம் தனது விரத பலன் முழுவதையுமே தத்தம் செய்து கொடுத்தாள். விரத பலனைப் பெற்ற தேவமகள் தான் இழந்த தேவத்துவத்தை மீண்டும் பெற்று விண்ணுலகம் அடைந்தாள்.

இவ்விரத வரலாற்றையும் அதன் பயனின் மகத்துவத்தையும் கேள்வியுற்ற உருக்மாங்கதன் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தான். தானும் இவ்விரதத்தைச் சிரத்தையோடு அனுட்டிக்கத் திட்டமிட்டதோடு தனது நாட்டு மக்கள் சகலருமே இவ்விரதத்தை அனுட்டிக்க வேண்டும் என்று கட்டளையே இட்டு விட்டான்.

இவ்வரலாற்றிலிருந்து யாம் அறிந்துகொண்ட ஒரு உண்மையாதெனில், புத்திபூர்வமாகவேனும் அபுத்தி பூர்வமாக வேனும் இவ்விரதத்தை அனுட்டிப்போர் பெறும் பயன் மிக உயர்ந்தது உறுதியானது என்பதே. பாவம் செய்தவர்கள் கூட ஏகாதசி விரதமனுட்டிப்பரேல் அவர்கள் பாவத்திலிருந்து நீங்கி உயர் பதவி அடைவர் என நூல்கள் கூறியுள்ளன. ஏகாதசி விரதம் பற்றி நோக்கும்போது வீம ஏகாதசி பற்றிக் கேள்விப் பட்டுள்ளோம் அல்லவா! பாண்டவர்களுள் ஒருவனான வீமன் இவ்விரத மேன்மையை அறிந்தும் தன்னால் உணவை விடுத்து உபவாசமிருக்க முடியாததால் இவ்விரதத்தை அனுட்டிக்க விரும்பியும் அவனால் அனுட்டிக்க முடியவில்லை. இதனை அவதானித்த துரியோதனன், கர்ணன், சகுனி முதலானோர் வீமனை இகழ்ந்தனர். இதனால் மனம் நொந்த வீமன் வியாச முனிவரிடம் சென்று மாதம் இருமுறையும் வருடத்தில் 24 முறையும் இடம்பெறும் ஏகாதசி விரதத்தைத் தானும் அனுட்டிக்க ஒரு உபாயம் கேட்டு நின்றான். வீமன்மேல் கருணை கொண்ட முனிவர் மாசிமாதத்தில் வளர்பிறையில் இடம்பெறும் ஏகாதசியை முறைப்படி அனுட்டிப்பாயாயின் வருடத்தில் 24 ஏகாதசியையும் அனுட்டித்த பயனைப் பெறுவாய் என மார்க்கம் கூறினார். முனிவர் சொற்படி வீமனும் இந்த ஏகாதசியை அனுட்டித்து உயர் பலனைப் பெற்றான். இதன் காரணமாகவே மாசிமாத வளர்பிறையில் இடம்பெறும் ஏகாதசி "வீம ஏகாதசி" என அழைக்கப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணி நீக்கம், கல்வி, வீரம், செல்வம் ஆகிய வளம் பெறுதல், இம்மை மறுமைப் பயன்களைப் பெறுதல் இவ்விரதத்தின் பயன்களாம். தர்ம சாஸ்திரங்களும் புராணங்களும் இவ்விரதத்தைப் போற்றியுள்ளன. அரிச்சந்திரன், இந்திரசேனன், சோபனன், மகாஜித், வைகானனன், உலும்பகன், லலித கந்தர்வன் ஆகியோரும் ஏகாதசி விரதம் அனுட்டித்துப் பலவித நற்பயன் பெற்றவர்களாவர். தேவர்கள் அமுதம் பெறும் பொருட்டு திருப்பாற்கடலைக் கடைய ஆரம்பித்த நன்னாள், புண்ணிய நாள், ஏகாதசியாகும். திருப்பாற்கடலிலிருந்து தோன்றிய விடம் தேவர்களை வருத்திய போது அவர்கள் வேண்ட அவ்விடத்தை தான் தனது கண்டத்தில் ஏற்று அவர்கட்குச் சிவனார் இன்னருள் புரிந்தது ஏகாதசியன்று மாலைப்பொழுதிலாகும்.

அயோத்தியை ஆண்டுவந்த அம்பரீஷர் என்னும் சக்கரவர்த்தி ஏகாதசி விரதத்தைச் சிரத்தையோடு அனுட்டித்து வந்தார். ஒருமுறை, விரதத்திற்கு அடுத்த நாளான துவாதசியன்று பாரணை செய்யத் தயாரான வேளையில் துர்வாச முனிவர் அம்பரீஷ மன்னனிடம் வந்தார். தன்னிடம் வந்த முனி சிரேஷ்டரை வரவேற்றுத் தன்னோடு பாரணை செய்யுமாறு வேண்டினான் மன்னன். முனிவர் அதற்குச் சம்மதித்து நீராட வெளியே சென்று விட்டார். பாரணை செய்ய வேண்டிய காலம் முடிவடைவதைப் பார்த்த மன்னன் மனங்கலங்க அங்கிருந்த அந்தணர் விரத விதியின் பிரகாரம் சூரிய உதயத்திற்கு முன்னர் பாரணை பண்ணியாக வேண்டுமெனக் கூறித் துளசி இலையையும் நீரையும் அருந்தி விரதத்தை நிறைவு செய்யுமாறு பணித்தனர். மன்னனும் அவ்வாறே செய்தான். திரும்பி வந்த முனிவர் மன்னன் தனக்காகக் காத்திருக்கவில்லை எனச் சினங்கொண்டு மன்னனைச் சபித்தார். மன்னன் மகாவிஷ்ணுவை வழிபட்டுத் தனது சாப நீக்கத்தை வேண்டினான். விஷ்ணு பகவான் சக்கராயுதத்தை நோக்க அடியார்களைக் காப்பாற்றும் சக்கராயுதம் முனிவரைப் பின் தொடர்ந்தது. இதிலிருந்து தப்பிக்க முனிவர் மும்மூர்த்திகளிடம் சரணடைந்தார். இதற்குப் பதிலாக மெய்யடியார்களது பக்தி நெறியில் தான் பிரதிகூலமாகச் செயலாற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாது என விஷ்ணு பகவான் மறுத்துவிட முனிவர் செய்யும் வகையறியாது மீண்டும் அம்பரீஷனிடம் சென்று தன்னை மன்னித்தருளுமாறு வேண்டினார். அம்பரீஷன் சக்கராயுதத்தைத் தொழுது வேண்டவே அது முனிவரைத் துன்புறுத்தாது விஷ்ணு பகவானிடம் மீண்டது. ஏகாதசி விரதத்தின் மகிமையை எண்ணி அம்பரீஷன் மனம் மிக மகிழ்ந்தான்.

எனவே, இவ்வுயர்ந்த விரதத்தை முறைப்படி அனுட்டித்து உயர் பலன் பெற யாம் முயற்சித்தாக வேண்டும்.

**செம்பவள வாயான் திருவேங்கடம் என்னும்**
**எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. நரசிம்ம ஜயந்தி விரதம்

நரனாகவும் சிம்மமாகவும் விஷ்ணு பகவான் அவதாரம் செய்தது பகவானது நரசிம்ம அவதாரமாகும். இஃது பகவானுடைய மெய்யன்பனான பிரகலாதனைக் காப்பாற்றவும் இரணியனைச் சம்ஹரிக்கவும் பகவான் எடுத்த அவதாரமாகும். இச்சம்பவத்தைக் கருதிப் பகவானை நோக்கி அனுட்டிக்கும் விரதம் நரசிம்ம விரதமாகும். பகவான் நரசிம்மமாகத் தோன்றிய காலம் சுக்கில சதுர்த்தசி ஆகும். இவ்விரதத்தை அனுட்டிப்போர் சுக்கில சதுர்த்தசியில் உபவாசமிருந்து மாலையில் பகவானைப் பூசித்து பானக பூசை செய்தல் விசேடமாகும். இவ்விரதத்தை மிகச் சிலரே அனுட்டிக்கின்றனர். இவ்விரதத்தின் பின்னணியிலுள்ள அடிப்படைக் கதை ஒன்றை நரசிம்மனே பிரகலாதனுக்குக் கூறியதாக ஒரு வரலாறு உண்டு.

அவந்தி தேசத்தில் பூர்வ ஜன்மத்தில் சுசர்மாவின் கனிஷ்ட புத்திரனாகப் பிறந்தவன் பிரகலாதன். அப்பிறப்பின் போது அவன் பல தீய பழக்கங்களைப் பழகி ஒரு தரமற்ற பெண்ணுடன் உறவும் வைத்தான். எப்போதும் அவர்களிருவரும் சண்டையிட்டனர். இதனால் தங்கள் இருவரிடையேயும் ஒற்றுமை வேண்டி நரசிம்ம விரதத்தை அனுட்டித்தனர். அதன் பயனாக அப்பெண்மகள் சுவர்க்கமடைந்தாள். பிரகலாதன் இராட்சத குலத்தில் பிறந்தான். ஆயினும் அவனது விரத புண்ணியம் அவன் ஒரு விஷ்ணு பக்தனாக இளமையிலேயே காணப்பட்டான். இதனால் அவன் இரணியனிடமிருந்து பகவானால் காப்பாற்றப்பட்டான்.

ஜன்ம பாவங்கள் நீங்கப்பெற இவ்விரதம் விஷ்ணு பகவானை நோக்கி அனுட்டிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

இஃது கிருஷ்ண பகவானுக்குரிய விரதமாகும். ஆவணி மாதத்தில் கிருஷ்ணர் அவதரித்தார் என்றும், அன்றிலிருந்து இவ்விரதம் கொண்டாடப்பட்டு வருகிறது. சகலருக்கும் இன்பம் தரும் கோகுல பாலகனாக ஸ்ரீ கண்ணன் அவதரித்த திருநாள் கிருஷ்ண ஜயந்தி ஆகும். இத்தினத்தை ஸ்ரீஜெயந்தி, ஜன்மாஷ்டமி, கோகுலாஷ்டமி என்றும் அழைக்கிறோம். கிருஷ்ண ஜயந்தியை அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரம் ஆகிய காலங்களில் அனுட்டிப்பது வழக்கம்.

உலகைக் காப்பதற்காகச் சிறையிலே மலர்ந்த மலர் கிருஷ்ணன். அவரை விரதமிருந்து வழிபடின் வாழ்க்கைச் சிறையிலிருந்து விடுபட எமக்கு அனுக்கிரகம் கிடைக்கும் என்பது திண்ணம். இத்தினத்திற்குரிய பத்திரம் துளசி; மலர் மல்லிகை; நிவேதனப் பொருட்கள் பால், வெண்ணெய், தயிர், அவல், சீடை, முறுக்கு, லட்டு முதலியனவாம். கிருஷ்ண ஜயந்தியை பண்டிகையாகவும் கொண்டாடுவர்; விரதமும் அனுட்டிப்பர்; எது எப்படியிருப்பினும் அன்றைய தினம் பகவானை முழுநேரமும் சிந்தையில் இருத்துகின்றோம் அல்லவா! அதுவே போதும் எமது பாவவினைகள் அகல இவ்விரதத்தைத் தம்பதியர் சேர்ந்து அனுட்டிப்பது சிறந்த நன்மையைப் பயக்கும்.

திதிக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள் கோகுலாஷ்டமி, ஜன்மாஷ்டமி என்றும், நட்சத்திரத்தை முக்கியமாகக் கருதுபவர்கள் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி என்றும் கொள்வர். இவ்விரதத்தைக் காலை முதல் விரதமிருந்து நள்ளிரவு இலக்கினத்தில் கிருஷ்ண பூசை செய்து இரவு முழுவதும் நித்திரை விழித்துப் பகவான் பாடல்களைப் பஜனை செய்தல் நற்பயனைத் தரும். இரவு முழுவதும் பகவான் நாமத்தை ஜெபித்தலே போதுமானது.

பூமியில் எப்போதெல்லாம் தர்மம் தலைசாய்ந்து அதர்மம் வேரூன்றப்படுகின்றதோ அப்போதெல்லாம் பகவான் தர்மத்தை நிலைநாட்டக் கருணை கொண்டு துஷ்ட சம்ஹார சிரேஷ்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலகராக திரு அவதாரம் செய்வார் என்பது அனுபவ உண்மை. துவாபர யுகத்தின் முடிவில் பூவுலகில் அதர்மமும் அக்கிரமும் கோரத் தாண்டவம் புரிய ஆரம்பிக்க மண்ணுலகில் மனிதர்கள் அறம் மறந்தனர். புண்ணியமிழந்து பாவக் குழியில் வீழ, அறனும் பக்தியும் பண்பும் மறையலாயிற்று.

பூமியில் பாவம் பெருக பரந்தாமன் கருணை கொண்டு தர்மத்தைப் பூவுலகில் மீண்டும் நிலை நாட்டச் சித்தங்கொண்டு ஆவணி மாத அட்டமி ரோகிணியில் நள்ளிரவில் தேவகிக்கும் வாசுதேவருக்கும் மகனாக, கண்ணனாக மணிவண்ணனாக அவதரித்தார்.

உலகத்தைக் காக்க ஒருத்தி மகனாகப் பிறந்து ஒருத்தி மகனாக வளர்ந்தவன் கண்ணன். கிருஷ்ண அவதாரத்தில் சிறப்புகள் பல உண்டு. பிறந்ததும் "சர்வமும் நானே-! சர்வம் கிருஷ்ணார்பணமஸ்து" என அருள்வாக்கு அளித்தவன் கண்ணன். நான்கு திருக்கரங்களுடன் சங்கு சக்கரதாரியாக நான்கு வேதங்கட்கும் நாயகனாகப் பிறந்தவன் கண்ணன். கருமை நிறம் கொண்டவனாயினும் மூவுலகிற்கு ஞானஒளி காட்டுபவன் கண்ணனே.

கிருஷ்ண ஜயந்தி அன்று விரதமிருப்பதோடு அன்றைய தினம் வீட்டைச் சுத்தப்படுத்திப் பால கிருஷ்ணனின் பாதங்களை அழகாக வரைந்து கண்ணனின் உருவப்படத்தை வழிபடுதல் முறையாகும். கண்ணனின் நாமத்தை ஜபிப்பதாலும் பூசிப்பதாலும் வாழ்க்கையில் ஏற்படும் சகல துன்பங்களும் மறையும் என்பதில் ஐயமில்லை. தமிழ்நாட்டிலே கிருஷ்ண ஜயந்தியை விரதமாகவும் பண்டிகையாகவும் கொண்டாடி மகிழ்வர்.

பூமியின் பாரத்தைக் குறைப்பதற்குக் கண்ணபிரான் ஆடிய நாடகமே பாரதப்போர். பாவிகளைக் கொன்று தர்மத்தை நிலைநாட்டுவதையே குறியாகக் கொண்டு கிருஷ்ணபகவான் நடாத்தியது குருஷேத்திரத்தில் இடம்பெற்ற 18 நாட்போர். பூமியில் நடக்கும் எந்தக் காரியங்கட்கும் மனிதன் பொறுப்பல்ல கடமையைச் செய்ய மாத்திரம் மனிதன் ஜன்மம் எடுக்கின்றான். பலன்கள் யாவற்றிற்கும் யானே பொறுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஸ்ரீகிருஷ்ணரது கருத்து. இந்த உண்மையை கீதாபதேசம் மூலம் அர்ச்சுனனுக்கும் உலகத்தாருக்கும் எடுத்துக் காட்டியுள்ளார் கிருஷ்ண பகவான்.

பாரதத்தில் ஒரு சம்பவம். கண்ணபிரான் தனது குறிக் கோளை வெளியே காட்டாது ஒரு சந்தர்ப்பத்தில் பாண்ட வரோடு ஒன்றாயிருக்கையில் அவர்களிடம் ஒரு புதிர் வினாவை எழுப்புகின்றார். வினா இதுதான் - "எவ்வாறு இந்தப் பாரதப் போரை நிறுத்துவது?" சகாதேவன் தவிர்ந்த மற்றைய ஒவ்வொருவரும் கண்ணனின் வினாவுக்கு விடைதேட, அறிவில் மேம்பட்ட சகாதேவன் மாத்திரம் கூறுகின்றான்; "கண்ணா! ஏன் இந்தக் கபட நாடகம்! பாரதப் போரின் குறிக்கோள் பூமியில் பாவத்தைக் குறைப்பது தானே! போரை நிறுத்தமுடியாது. அப்படி நிறுத்தியாக வேண்டு மெனின் உன்னை முதலில் கட்டிப் போட வேண்டும். "என்னை உன்னால் கட்ட முடியுமா? முடிந்தால் செய் பார்ப்போம்" இது சண்ணனது வினா. சகாதேவன் விவேகி; அறிஞன்; பக்தியால் கண்ணனைத் தன் உள்ளத்தோடு கட்டிப்போட்டுக் கொண்டான். இது சகாதேவன் கண்ணன் மேல் கொண்ட பக்தியன்பின் உயர்வு நிலை. தொண்டருள்ளத்தடக்கம் இறைவன் என்பது உண்மையாகின்றது. அண்ட மெல்லாம் பரவிய இறைவனை பிண்டத்துள் அடக்கலாம் என்பது இங்கு மகாபாரதம் காட்டிய உண்மை. இது நடந்தது துவாபர யுகத்தில். இதே நிகழ்வைக் கலியுகத்திலே ஆண்டாள் செய்து காட்டினாள். வாழ்க்கைப்படின் மாயவனுக்கே என்று உறுதி பூண்டு அதனை செயலில் காட்டியவள் ஆண்டாள் நாச்சியார்.

எனவே, யாம் முனைந்தால் இறையை எமது மெய்யன்பால் கட்டிவிடலாம். பக்தி செலுத்த மார்க்கங்கள் பல உள. அவற்றுள் ஒன்று விரதம். அதுவும் திரிகரண சுத்தியுடன் அனுட்டித்தால் மட்டுமே.

**அறம்பல நிறைந்த கீதையைப் புரிந்து படிப்பவன் என்னை ஞான வேள்வியினால் ஆராதித்தவனாகின்றான்**

- பகவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. அநந்த விரதம்

இவ்விரதம் விஷ்ணு பகவானோடு தொடர்புடைய விரதமாகும். இதனைப் பத்மநாப விரதம் என்றும் கூறுவர். விஷ்ணு நாமங்களுள் சிறந்தது, ''அச்யுதாநந்த கோவிந்த'' என்பதாம். பகவான் அநந்தன், ஆதிசேஷன் என்ற பெயருடன் பாதாள லோகத்திலிருந்து பூமியைத் தனது ஆயிரம் பணா மண்டலங்களால் தாங்கிக் கொள்கின்றார். இதன் காரணமாகவே காலச் சக்கரம் சுழல்கின்றது. இந்த வகையில் பகவான் ஒரு கல்பத்தில் பூமண்டலத்தைத் தன் தலைகளால் தாங்க ஆரம்பித்த புண்ணிய நாள் விரதமாக அனுட்டிக்கப்படுகின்றது. இப்புண்ணிய நாளில் அநந்த விரத புஜாங்கமாக முதலில் யமுனாநதிக்குப் பூசை செய்தல் மரபு. இந்த யமுனை நதிக்கும் விஷ்ணுவுக்கும் கிருஷ்ணாவதாரத்திலும் தொடர்புண்டு. யமுனை நதிக்குப் பூசை செய்த பின் தர்ப்பையினால் அநந்த உருவை அமைத்து 5 தலைகளுடன் அதனைக் கலசத்தில் வைத்து அதனருகே 14 ஆவரண தேவதைகளையும் ஆவாகனம் செய்து பின் 14 முடிச்சுள்ள பட்டுக் கயிற்றையும் பூசை செய்து பூசை நிறைவேறியதும் அக்கயிற்றை இடது கையில் கட்டிக்கொள்ள வேண்டும். தொடர்ந்து அந்தணர்க்குத் தட்சணை, தாம்பூலம், தானம் ஆகியன அளித்து ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். இவ்விரதத்தை முறையாக 14 ஆண்டுகள் அனுட்டித்தால் பகவானருளால் அநந்த சக்திகளைப் பெறலாம்.

கௌண்டின்யர் என்னும் ரிஷி பிருகுவின் வழிவந்த சீலா என்னும் பெண்ணைத் திருமணம் செய்து இல்லறம் நடாத்தி வந்தார். இவர்களை சீலாவின் இளைய தாயார் நன்கு பராமரிக்கவில்லை. எனவே இவர்கள் துயரப்பட்டு வீட்டை விட்டு வெளியேறிச் செலகையில் வழியிலே அநந்த பத்மநாபனைத் தொழுது விரதம் அனுட்டிக்கும் அடியார்கள் சிலரைச் சந்தித்தனர். அவர்கள் மூலம் அநந்த பத்ம நாப விரதத்தின் மகிமை பற்றி அறிந்தனர். சீலாவும் அவ்வடியார்களுடன் சேர்ந்து இவ்விரதத்தை அனுட்டிக்கலானாள். பக்தி சிரத்தையுடன் விரதத்துக்குரிய பட்டுக் கயிற்றையும் கட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாள். பசிக்களைப்போடு இருவரும் ஊர் வந்து சேர்ந்தனர். விரத மகிமையால் ஊர் திரும்பிய இத்தம்பதியருக்கு நல்ல காலம் பிறந்தது. கௌண்டின்யருக்கு நல்ல வருமானம் வர ஆரம்பித்தது. ஏழ்மை நீங்கி இருவரும் வளமாக வாழ ஆரம்பித்தனர்.

ஆனால் ஒருநாள் இருவருக்குமிடையே ஏற்பட்ட தகராறின் போது கௌண்டின்யர் தன்மனைவி சீலாவின் கையில் கட்டியிருந்த கயிற்றை அறுத்துத் தீயில் வீசினார். இதைக் கண்ணுற்ற சீலா ஓடிவந்து அக்கயிற்றை எடுத்துப் பாலில் நனைத்துப் பக்குவப்படுத்தினாள். கௌண்டின்யரின் இச்செயலால் அவர்களது வாழ்வில் தொடர்ந்து இன்னல்கள் ஏற்பட்டன. அவர்கள காலப்போக்கில் பரம ஏழையானார்கள். இவ் வறுமைக்கான காரணம் தன் செயலே என கௌண்டின்யர் அறிந்தார். தான் சினங்கொண்டு அறுத்தெறிந்த கயிறு சாதாரண கயிறல்ல. ஆதிசேஷஸ்வரூபம் என்பதையும் புரிந்து கொண்டார். தனது செயலுக்குப் பிராயச்சித்தமாக ஆதிசேடனைத் தேடி அவன் அருள்பெற வேண்டி ஆரணியமெல்லாம் அலைந்து திரிந்தார். செல்லும்பாதையில் இவன் பல அனுபவங்களையும் பெற்றான். ஈற்றில் ஆதிசேடனை ஒரு கிழப்பிராமண வடிவில் சந்தித்தான். தொடர்ந்து கௌண்டின்யனைச் சோதிக்க விரும்பாத ஆதிசேடன் சங்கு சக்கர கதாபாணியாகக் காட்சி தந்தார். கௌண்டின்யன் அவர் காலில் வீழ்ந்து தனது செயலை மன்னிக்குமாறு வேண்டினார். கருணையோடு இறைவன் அவரை மன்னித்து ஆசீர்வதித்தார்.

கௌண்டின்யன் தனது தேடலின்போது அறிந்த சில உண்மைகளை யாமும் அறிந்திருத்தல் நன்றே. வித்தையால் கர்வம் கொண்டு சீடனுக்குப் பாடம் கூறாத பண்டிதர் ஒருவர் அடுத்த ஜன்மத்தில் மாமரமாகப் பிறந்தார். பணக்காரனாயிருந்தும் பசித்தவனுக்கு அன்னமிடாத பெண் அடுத்த ஜன்மத்தில் பசுவாகப் பிறந்து அருகே உள்ள புற்களை மேய முடியாமல் அலைந்தாள். விளைச்சலுக்கு சற்றும் உதவாத களர் நிலத்தை தானமாகக் கொடுத்த மன்னன் அடுத்த ஜன்மத்தில் காளையாகப் பிறந்தான. சதா பிறர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் குற்றம் சுமத்தி அவர்களைத் தூஷித்துக் கொண்டிருந்த மனிதன் மறு ஜன்மத்தில காளையாகப் பிறந்தான். தர்மத்திற்குரிய சொத்தை விற்றுச் செல்வம் சேர்த்த ஒருவன் மறுஜன்மத்தில் யானையாகப் பிறந்தான்.

இவ்வுண்மைகளைப் புரிந்து கொண்ட கௌண்டின்யரும் அன்றிலிருந்து தானும் அநந்தவிரதத்தைப் பக்தி சிரத்தை யோடு அனுட்டித்துச் சகல சௌபாக்கியங்களையும் பெற்று இன்றும் தன் மனையாளுடன் நட்சத்திரமாக ஜொலிக்கின்றார் என்ற உண்மையை கிருஷ்ண பகவான் தருமருக்கு உப தேசித்து அவரையும் அநந்த விரதம் அனுட்டிக்குமாறு அறிவுரை கூறியமை வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. வைகுந்த ஏகாதசி

**வை**குந்த வாசனாம் விஷ்ணு பகவானுக்கு உகந்த நாள் வைகுந்த ஏகாதசியாகும். இம்மங்கள நாளன்று பகவானை நோக்கி உபவாசமிருந்து வைகுந்தநாதனின் பாத சிந்தனையிலும் பூசையிலும் ஈடுபடுதல் மிக நல்ல புண்ணிய காரியமாகும். வைணவர்கள் மாத்திரமன்றி இன்றைய நாட்களில் சைவசமயிகளும் இவ்விரதத்தை அனுட்டித்தல் கண் கூடு. மார்கழிமாத மகிமைகளுள் வைகுந்த ஏகாதசியும் ஒன்றாகும்.

பகவானுக்குப் பிடித்த திதி ஏகாதசி. ''ஏகாதசியை விடச் சிறந்த விரதமில்லை'' என்று பதினெண் புராணம் கூறுகின்றது. ஏகாதசியின் வரலாற்றைச் சிவபெருமான் நாரதருக்கு எடுத்துக் கூறியதாக வரலாறு உண்டு. ஏகாதசியின் பெருமை பற்றிப் பத்ம புராணம் கூறுகின்றது.

ஏகாதசி என்பது விஷ்ணுவின் திருமேனியில் விளங்கும் ஒரு சக்தி ஆவாள். இந்த விஷ்ணு சக்தி அசுர சக்திகளை யெல்லாம் வெல்ல வல்லது. ஏகாதசியன்று விஷ்ணு பகவானை மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றாலும் திடசித்தத்துடன் வழிபடுபவர்க்கு விஷ்ணு அருள் பாலித்தருள வேண்டும் என இச்சக்தி விஷ்ணு பகவானிடம் கேட்டுக் கொண்டாள். பகவானும் இதற்குச் சம்மதிக்கவே அன்றிலிருந்து எல்லோரும் ஏகாதசி விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தனர். இப்புண்ணிய தினத்தில் வைகுந்த வாசல் திறந்திருக்குமென்றும் அன்றைய தினம் விரதமிருப்போர்க்கு வைகுந்தப் பதவி கிடைக்கப்பெறும் என்பதும் நம்பிக்கை.

மார்கழி மாதத்துச் சுக்கிலபட்சத்து 11 ஆம் நாள் இவ் வைகுந்த ஏகாதசி விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. இதற்கு மோட்ச ஏகாதசி என்றும் ஒரு பெயருண்டு. இதனை முக்கோடி ஏகாதசி என்றும் கூறுவர். ஒருகால் ஸ்ரீ நாராயணன் அசுரர்களை சம்ஹரிக்க மூன்று கோடி தேவர்களுடன் பூலோகத்திற்கு எழுந்தருளினார் என்றும் இதன்காரணமாக முக்கோடி ஏகாதசி என்று பெயர் வந்தது என்று சொல்லப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மங்கள புண்ணிய நாளன்று முழுஉபவாசமிருந்து வைகுந்தநாதனின் சிந்தனையில், தியானத்தில் பொழுதைக்கழித்து பகவானின் சேவடிக்கமலங்களைச் சிந்தையில் இருத்தியாக வேண்டும். விஷ்ணு பகவானின் ஜபங்கள், கீர்த்தனங்கள், ஹரிகதை கேட்டல் ஆகியவற்றில் பொழுதைக் கழித்து இரவு நித்திரை விழித்தலும் சிறந்த புண்ணிய காரியமாகும். மறுநாட்காலை ஹரிநாமம் சொல்லித் துளசி தீர்த்தம் அருந்திய பின் பாரணை செய்து விரதத்தை நிறைவு செய்து கொள்ளலாம். ஒரு வருடத்தில் இடம்பெறும் 24 ஏகாதசிகளுள் வைகுந்த ஏகாதசி மிகவும் சிறப்பு வாய்ந்தது.

விரதம், உபவாசம், நியமம் என்று உடற் கஷ்டத்தை அனுபவித்தல் கரும்பைக் கசக்கி அதன் சாறை உண்பது போல் இன்பம் தரவல்லது. வைகுந்த ஏகாதசி விரதம், விழா, வைபவம் மிகச் சிறப்பாகத் தொன்று தொட்டு ஸ்ரீரங்கத்தில் இடம்பெற்றுப் பின்னர் அங்கிருந்து மற்றைய கோயில்களுக்கும் பரவிச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

மனித ஜன்ம நலனுக்காகவே இத்தனை விரதங்கள் நோன்புகள் அமைக்கப்பெற்றன. இவற்றை முறைப்படி மேற்கொண்டு மக்கள் உயரவும் உயரலாம். தாழவும் தாழலாம். தாழாமல் ஒருவனைக் காப்பதால் தானம் என்றும் அது அவனைத் தரித்திருக்கச் செய்வதால் தருமம் என்றும் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 வைரவ விரதங்கள்

**வை**ரவப் பெருமானை நோக்கி அனுட்டிக்கும் விரதங்கள் சித்திரைப் பரணி, ஐப்பசி பரணி, தைமாதத்தில் இடம்பெறும் செவ்வாய் ஆகியனவாகும்.

கணபதியைப் போலவே வைரவப்பெருமானும் ஆற்றோரங் களிலும் மரநீழலிலும் அமர்ந்திருந்து அருள்புரியும் தெய்வமா வார். கிராமங்கள் தோறும் வைரவ வணக்கம் பண்டு தொட்டுச் சிறப்படைந்துள்ளது. எம்நாட்டுச் சைவசமயிகள் வைரவப் பெருமானைச் சமய உணர்வினைக் காத்து நிற்கும் பெரும் தெய்வமாகக் கொண்டு வழிபட்டு வருகின்றனர். அந்நியர் வசம் அகப்பட்டு இன்னல்கள் பலவற்றை எம்மக்கள் அனு பவித்த போது வைரவப் பெருமான் அவர்கள் துயர் தீர்த்த பெருமை இன்றும் கூறப்பட்டு வருகின்றமை கண்கூடு. கிராமியத் தெய்வமாக வழிபட்டு வரும் வைரவப்பெருமா னுக்கு உகந்தவை கரகம், காவடி, கூத்து, நாடகம் போன்ற வையாம்.

வைரவப்பெருமான் காவல் தெய்வமாவார். அவருக்குரிய இவ்விரதத்தை அனுட்டிக்கும்போது அதிகாலையில் தூய நீராடி வைரவப்பெருமானைத் தரிசித்து, பூசித்து அர்ச்சித்து பகலில் ஒரு பொழுது உணவு உண்ணல் வேண்டும். மறுநாட் காலை அடியார்களுக்கு அன்னமளித்து விரதத்தை நிறைவு செய்தல் முறையாகும். வைரவப்பெருமானுக்குப் பிடித்த பூசை முறைகளில் பொங்கல், மடை, வடைமாலை சாற்றல் முக்கிய இடம்பெறுகின்றன. எனவே, அவருக்கு வடைமாலை அணிவித்தல் அவரை மகிழ்விக்கும் விடயமாகும். வடையோடு அன்னம், கறிவகைகள் ஆகியனவும் நிவேதித்தல் மரபாக அமைகின்றது.

சூரிய பகவான் இவ்விரதத்தை அனுட்டித்துப் கஞ்சுகம் என்னும் அங்கியைப் பெற்றதாக வரலாறு. இவ்விரதத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி அனுட்டிப்போர் திருக்கயிலாயத்தில் உறையும் பேற்றை அடைவர்.

**பரமனை மதித்திடாப் பங்க யாசனன்**
**ஒருதலை கிள்ளியே ஒழிந்த வானவன்**
**குருதியும் அகந்தையும் கொண்டு தண்டமும்**
**புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 சூரியனுக்குரிய விரதங்கள்

**நீ ஒளி, நீ சுடர், நீ விளக்கு, நீ காட்சி,**
**மின்னல், இரத்தினம், கனல், தீக்கொழுந்து**
**இவை எல்லாம் நினது நிகழ்ச்சி**
**கண் நினது வீடு.**
**புகழ், ஈகை, நினது லீலை.**
**அறிவு நின்குறி, அறிவின் குறி நீ!**
**நீ சுடுகின்றாய், வாழ்க! நீ காட்டுகின்றாய் வாழ்க!**
**உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்,**
**வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய் -**
**நீர் தருகின்றாய், காற்றை வீசுகின்றாய் வாழ்க!**

- சுப்பிரமணிய பாரதியார்

சூரியபகவான் நாம் தினமும் காணும் கண்கண்ட தெய்வம் ஆகின்றான். ஒளி இல்லாமல் வாழ்வில்லை. அவனே எமக்கு ஒளியையும் வளத்தையும் வாழ்வையும் தருபவன்; சூரிய பகவானுக்கு உரிய நாள் ஞாயிற்றுக்கிழமை ஆகும். சூரியனுக்கு ஞாயிறு என்று ஒரு நாமமும் உண்டு. தினகரன், கதிரவன், பகலவன், வெய்யோன், பரிதி எல்லாமே அவன் தான். அவன் இல்லாமல் அவனியில் எந்த ஒரு வளர்ச்சியும் இல்லை என்பதை யாம் அறிவோம்.

ஒரு காலத்தில் சூரியனை முழுமுதலாகக் கொண்ட சமயம் ஒன்று இருந்தது. அது சௌரம் என்றழைக்கப்பட்டது. சூரியன் பற்றிய மந்திரங்கள் வேதத்தில் உள. வெற்றி வடிவினனான நீ, ஒளியைத் தருபவன், உலகங்களை ஒளிரச் செய்பவன் நீ என்று யசுர் வேதம் கூறியுள்ளது. இருதய நோயைத் தீர்த்து வைக்க சூரிய வழிபாடு உகந்தது என அதர்வவேதம் கூறுகின்றது. மந்திரங்களுக்கெல்லாம் தாய் எனக் கொள்ளப்படும் காயத்ரிக்குத் தெய்வம் ''ஸவிதா'' ஆகிய சூரியனே. சூரியனுக்குரிய துதியாக ''ஆதித்திய ஹிருதயம்'' என்னும் ஒரு பகுதி வான்மீகி இராமாயணத்தில் உண்டு.

இராமர் பிறந்த இரகுவம்சம் சூரிய பகவானை முழுமுதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையது. காசிப முனிவர்க்கும் அதிதிக்கும் உதித்தவன் சூரியன் என்பது பாரதம் கூறுவது. சூரியன் மேரு மலையை வலம் வந்து சகல கோள்களுக்கும் தன் ஒளியை வழங்குகின்றான். சிவபிரான் சூரிய மண்டலத்தின் நடுவே ஒளிர்கின்றார் என்று சிவாகமங்கள் கூறுகின்றன.

**ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்**
**காவிரி நாடன் திகிரி போல் பொற்கோட்டு**
**மேரு வலம் திரிதலான். - சிலப்பதிகாரம்**

சூரியனை வழிபடும் முறைகளாக, நேரில் செய்யும் வழிபாடு, சூரியனைப் பாத்திரத்தில் ஆவாகனம் செய்து வழிபடல், நிலத்தில் அவன் உருவை வரைந்து வழிபடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். சூரிய பகவானுக்குத் தனிக் கோயில் மிக அரிது. தமிழ் நாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்தில் அமைந்த சூரியனார் கோயில் பற்றி இளங்கோ அடிகள் ''பகல் வாயில் உச்சி கிழான் கோட்டம்'' எனக் குறிப்பிடுகின்றார். ஒரிஸா மானிலத்தில் ''கோனார்க்'' என்னுமிடத்தில் சூரியனார் கோவில் ஒன்று உள்ளது.

செந்நிற மலர்களையும் செந்நிற ஆடையையும் விரும்பும் சூரியன் செந்நிறக் குடையை உடையவன். ஒளிவீசும் தேரில் ஏறி உலா வருபவன். எமது நாட்டு ஆலயங்களிலே நவக்கிரகங்களில் நடுநாயகமாக விளங்குபவன். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசுவாமி தீட்சிதர் சூரிய பகவான் மீது ''சூரிய மூர்த்தே நமஸ்துதே'' என்று ஆரம்பிக்கும் அழகிய கீர்த்தனையைப் பாடியுள்ளார். சங்கீத வல்லுனர்கள் இக்கீர்த்தனையைத் தினமும் பாடிச் சூரியனாரைப் பாடித்துதிப்பதை வழக்கத்தில் கொண்டு வரல் வேண்டும்.

**சூரிய பகவானைத் தினமும் செந்நிற மலர் தூவி வணங்க வேண்டும். அவ்வாறு வழிபடின் அதிக சக்தி வாய்ந்த கண்ணொளியைப் பெறலாம். அதனால் தான் "கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரமா" என்ற கூற்று எழுந்தது. இத்தகைய மேன்மைகள் பல நிரம்பிய சூரிய பகவானைப் பொங்கல் தினத்தில் மாத்திரம் வழிபடுவதோடு நிறுத்திவிடாது தினமும் அதிகாலையில் சூரிய நமஸ்காரம் செய்து ஆவணி ஞாயிறு விரதத்தையும் நாம் அனுட்டித்தல் வேண்டும்.** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. ஆவணி ஞாயிறு

**வே**தங்களும் இதிகாசங்களும் சூரிய வணக்கத்தின் பெருமையையும் நற்பலன்களையும் புகழ்ந்துள்ளன. இராமபிரான் "ஆதித்திய இருதயம்" என்னும் சூரிய பகவானது துதிப்பாடல்களைப் பாடித் துதித்த பின்னரே இராவணவதத்தில் வெற்றி கண்டமை வரலாறு. அக்கினிக்கும் கதிரவனுக்கும் நெருக்கமுண்டு. ஆதவன் தேவர்கண் என்கின்றது வேதம். நிகரற்ற காயத்ரி மந்திரம் சூரிய வழிபாட்டையே குறிக்கின்றது. சூரிய நமஸ்காரம் "யோகா" வின் முக்கிய பகுதியாவதோடு உடல், மன மேம்பாட்டிற்கும் பயனளிக்கின்றது. சோதிட சாஸ்திரத்தில் நவக்கிரக நாகயனாக விளங்கும் சூரிய பகவான் சிம்மராசிக்கு உரியவன். ஆரோக்கிய வாழ்க்கை, வளம் ஆகியவற்றை அள்ளி வழங்குபவன். காலை, மதியம், மாலை மூவேளைகளிலும் சூரிய வணக்கம் செய்யலாம். ஒளிமயமான பகலவன் எம் வாழ்க்கைக்கு ஒளி நல்காமலா இருப்பான்!

சூரிய பகவானை நோக்கி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விரதமிருத்தலே முறையாகும். எம்மால் இயலாதவிடத்து ஆவணி மாதத்தில் இடம்பெறும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விரதம் அனுட்டித்தல் வேண்டும். இஃது இயலாதோர் ஆவணி மாதக் கடைசி ஞாயிறு தினம் சூரியனை நோக்கி விரதமனுட்டித்தல் சாலச் சிறந்ததாகும்.

மாதம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமைகளில் விரதமனுட்டித்துக் கடைசி ஞாயிறன்று சூரியனுக்குப் பொங்கல் பொங்கிப் படைத்து விசேட வழிபாடு செய்தல் வேண்டும். சூரிய பகவானுக்குப் பிடித்த சிவப்பு மலராலே பகவானை அர்ச்சித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ரத சப்தமி விரதம்

இவ்விரதம் தைமாத சுக்கில பட்ச சப்தமி அன்று சூரியனை நோக்கி அனுட்டிக்கப்படுகின்றது. இவ்விரதத்தைச் சூரிய சந்திர விரதம் என்று அழைப்பர். இவ்விரதம் பற்றி எமது நாட்டில் அதிகம் பேசப்படுவதில்லை. தைப்பொங்க லையே சூரிய பகவானுக்காக எமது நாட்டில் விமரிசையாகக் கொண்டாடுவது வழக்கம்.

பாரதத்திலே தமிழ் ரத சப்தமி என்னும் பெயரில் இவ்விர தத்தை அனுட்டிப்பர். ரத சப்தமி அன்றுதான் ஒரேயொரு சக்கரமுடைய 7 குதிரைகள் பூட்டிய ஒரு ரதத்தை மகா விஷ்ணு சூரியனுக்குக் கொடுத்தருளினார். காசியப்ப முனிவ ருக்கும் விந்தை என்னும் பெண்ணுக்கும் பிறந்த அருணன் என்பவனே இந்த ரதத்துக்கு சாரதியாக ஏற்படுத்தப்பட்டான். இந்த ரதம் பொன்மயமானது. இதிலே ஏறிச் சூரியபகவான் நாள் தோறும் வானில் பவனி வருகிறான்.

சூரிய சஞ்சாரத்தின் பயனாகவே பூமியில் இரவு, பகல் உண்டாகின்றது. சூரிய பகவான் பொழுது உதயமாகும்போது "இருக்கு வேதத்தின் சொரூபமாகவும், மதிய வேளையில் யசுர் வேதத்தின் சொரூபமாகவும், மாலை வேளையில் அதா வது சூரிய அஸ்தமன வேளையில் சாமவேதத்தின் சொரூப மாகவும்" காட்சியளிப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ரத சப்தமி விரத தினத்தன்று சூரிய ஒளிபடக்கூடிய இடத்தைத் தேர்ந்தெடுத்துச் செம்மண்ணினால் அந்த இடத்தை அழகாக மெழுகி அதிலே முதலிலே ரதமொன்றின் படம் வரைந்து அதன் கண் சூரிய சந்திரரின் உருவங்களை வரைதல் வேண்டும். பின்னர் அவற்றிற்கு மஞ்சள், குங்குமம் இட்டு, சிகப்பு உள்ளிட்ட பல வர்ண மலர்களால் அலங்கரித்து சூரிய நாராயண பூசை செய்ய வேண்டும். கணபதி பூசை யுடன் ஆரம்பித்து சோடசோபசார பூசைகளையும் செய்தாக வேண்டும். பூசையின் போது சூரிய வெயில் படுவது சிறப்பு வாய்ந்ததாகும். நிவேதனமாக சர்க்கரைப் பொங்கல், உழுந்து வடை ஆகியன படைத்தல் வேண்டும். வீட்டு வாசலிலும் சூரிய ஒளி படும் இடத்தில் ரதம் ஒன்று வரைந்து அரிசி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருப்பு, வெல்லம் வைத்து வணங்க வேண்டும். இதனால் சூரியபகவானுக்கு விசேட சாந்தி ஏற்பட்டு உலகம் நன்மை பெறும்.

சூரியனின் ரதம் மேற்கு நோக்கிப் பேரொளியோடு திரும்பும் நாள் ரத சப்தமி ஆகும். அந்நாளில் மேற்படி கூறியவாறு சிறப்பாக வழிபட்டால் நற்பலன்கள் நிரம்பப் பெறலாம்.

ஒரு சமயம் சூரிய பகவானுடைய கிரணங்களின் ஒளி திடீரெனக் குறைந்தனவாம். இதனை அவதானித்த தேவர்கள் இது பற்றி பிரம்மதேவரிடம் முறையிட்டனர். அனைவரது ஆலோசனையின் பின்னர் விசுவ கன்மாவின் சாணை பிடிக்கும் இயந்திரத்தில் சூரியனைக் கடைந்தால் முன்போல் அழகான காந்தி பெறலாமென்று சொன்னதில் சூரியனாரும் அதற்குச் சம்மதித்து அதன்படி முன்னிலும் அதிகம் பிரகாசம் பெற்றதாக வரலாறு. இவ்வண்ணம் மீண்டும் அதிக ஒளி பெற்ற தினம் தான் ரத சப்தமி என்ற புண்ணிய தினமாகும்.

இப் புண்ணிய தினத்திலே சூரிய பகவானுடைய பல நாமங்களையும் பொருள் உணர்ந்து ஜபித்து வழிபட்டால் சௌபாக்கிய வாழ்வும் சூரியலோகத்தை அடையும் பேறும் கிடைக்கும் என்று நம்பப்படுகின்றது.

**வாழி பகல் செய்வோன் வாழி ஒளி உருவன்**
**வாழி ஓர் ஆழித்தேர் மன்னுசுடர் - வாழிய**
**ஞாலம் விழி சிறப்ப நல்லோர் புகல் உரைப்ப**
**காலம் விளக்கும் கதிர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ⑧ ஏனைய விரதங்கள்

## 1. வீரபத்திர விரதம்

**வீ**ரபத்திர விரதம் வீரபத்திரரைக் குறித்து தைமாத முதற் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து அனுட்டிக்கப்படும விரதம். வீரபத்திர வடிவத்தைத் தாபித்து அதற்கு அபிடேகம், ஆராதனை அர்ச்சனை செய்து அன்றைய தினம் முழுவதும் உபவாசம் இருந்து மறுநாள் கலசத்திலே ஸ்தாபித்த வீரபத்திர திருஉருவை அந்தணர்க்குத் தானம் கொடுத்து அதன் பின்னர் பாரணை பண்ணி விரதத்தை நிறைவு செய்யல் வேண்டும்.

இந்திரன், தக்கன், அந்தணர் பலர் இவ்விரதத்தை அனுட்டித்து நற்பேறு பெற்றமை வரலாறு. இவ்விரதத்தை அனுட்டித்த இந்திரன் கற்பக நாட்டு அரசுரிமையைப் பெற்றான். பிரம்மதேவன் இவ்விரதத்தை அனுட்டித்துச் சிவபிரான் தக்கனோடு போர் புரிந்தபோது ஐயனின் தேர்ச்சாரதியாகும் பேற்றைப் பெற்றான். வேதியர் பலர் இவ்விரதத்தை அனுட்டித்து மெய்ஞ்ஞானி நிலை எய்தினர். இவ்விரதம் அனுட்டிப்போர் எம்பெருமான் திருவடி நீழலையடைந்தின்புறுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. சித்திரா பூரணை

பொதுவாக பூரணை, அமாவாசை விரதங்கள் பிதிர் விரதங்களாகும். இவ்விரண்டினுள் பூரணை விரதம் தாயாருக்காக அனுட்டிக்கப்படும் விரதமாகும். பூரணை களுள்ளும் சித்திரை, ஐப்பசி பூரணை சிறந்தவையாகும். சித்திரை மாதம் தேவர்களுக்கு 15 நாழிகை முதல் 20 நாழிகை வரையுள்ள பகற் பொழுதாகும். இது தேவர்களுக்கு மதிய வேளை. மதிய வேளையும் பிதிர்க் காலமும் ஒன்றாதலால் இச்சித்திரைப் பூரணை விசேடம் பெறுகின்றது.

தமது தாயை நினைத்து மாதந்தோறும் இடம்பெறும் பூரணை விரதத்தை அனுட்டிக்க இயலாதோர் சித்திரைப் பூரணையைத் தன்னும் அனுட்டித்தல் வேண்டும். இப்பூரணை விரதத்தை அனுட்டிப்பின் மற்றைய பூரணை விரதங்களை யெல்லாம் அனுட்டித்த பலனைப் பெறலாம் என்றும் நம்பப்படு கின்றது. இவ்விரதத்தை முதன் முதலாக அனுட்டிப்பவர்கள் 5 அல்லது 9 கலசங்களை வைத்து அவற்றில் சித்திரகுப்தன் மற்றும் எட்டுத் திக்குப் பாலகரையும் ஆவாகனம் பண்ணி வழிபட்ட பின் அந்தணர், ஏழைகளுக்குத் தானம் வழங்கி பிராமண போசனமும் செய்வித்தல் வேண்டும்.

அன்றைய தினத்திலேயே சகல பலன்களையும் தரவல்ல இந்திர விழாவைக் கொண்டாடுதல் வழக்கம் எனத் தேவி புராணம் கூறுகின்றது. மருக்கொழுந்தினால் இந்திர பூசை செய்தல் சாலச் சிறந்ததாகும். இத்தினத்தன்று பொங்கலிட்டுத் தெய்வ வழிபாடு செய்தல், ஏழைகளுக்குக் கஞ்சி ஊற்றுதல் ஆகியன இடம்பெறும். இக்கஞ்சியைச் சித்திரைக் கஞ்சி என்பர்.

சித்திர குப்த பூசை விரதமனுட்டிப்போர் அன்று முழுவதும் உப்பில்லா உணவுண்டு விரதமிருத்தல் வழமையாகும். அத்தோடு பொன், வெள்ளி ஆகிய பதுமையில் சித்திரகுப்தனை இருத்தி நியம வழிபாடு செய்து அன்னம், வெல்லம் கலந்த எள், பால், நெய், பாயாசம் ஆகியவற்றை நிவேதனமும் செய்தல் வேண்டும். சித்திரைப் பௌர்ணமித் தினம் மிகப் புண்ணியம் வாய்ந்த தினமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. ஆடி அமாவாசை

அமாவாசை பிதிர் வழிபாட்டுக்குரிய புண்ணிய தினமாகும். திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்குமிடையேயுள்ள தூரத்தைக் குறிப்பதாகும். சூரியனும் சந்திரனும் ஒன்று சேர்ந்து சஞ்சரிக்கும் நாள் அமாவாசை ஆகும். பூமியிலுள்ள மக்களைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு அமாவாசைத் தினமுமே தென்புலத்தார் வழிபாட்டிற்கு மிக உகந்த நாள் ஆகும். சூரிய மண்டலத்திற்கு அப்பாலுள்ள தென் மண்டலத்தில் பிதிர்கள் உறையும் பிதிர் உலகம் உள்ளது. பிதிர்களையே தென்புலத்தார் என்போம். எமது முன்னோர் எள்ளும் தண்ணீரும் இறைத்துப் பிண்டம் போட்டுத் தென்புலத்தார் வழிபாடு செய்து வந்துள்ளனர். அதனை நாம் இப்போதும் பின்பற்றுகிறோம். பின்பற்றுதல் அவசியமானதுங் கூட.

திதிகள் பூர்வபக்க திதிகள், அபர பக்கத் திதிகள் என இரு வகைப்படும். அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் பௌர்ணமி வரையுள்ள 15 திதிகளும் பூர்வ பக்கம் எனப்படும். பிரதமை முதல் அமாவாசை வரையுள்ள திதிகள் அபர பக்கம் எனப்படும். பூர்வ பக்கம், அபர பக்கம் என்பவற்றை முறையே சுக்கில பட்சம், கிருஷ்ண பட்சம் எனவும், வளர்பிறை, தேய்பிறை எனவும் சொல்லப்படுகிறது.

பிரீதி செய்து வழிபடுவது தான் சிராார்த்தம் எனப்படும். உயிர்களை நற்கதி அடையச் செய்ய சிராார்த்தம் இன்றியமையாததாகும். ஆடி அமாவாசையன்று புண்ணிய க்ஷேத்திரங்களில், கடலில் தீர்த்தமாடல் எமது பாவத்தைக் கழுவுவதோடு பிதிர்களை நினைந்து செய்யும் வழிபாடு பிதிர்கள் நற்கதி பெற உதவுகின்றது. சூரியன் தெற்கு நோக்கி சஞ்சாரம் செய்ய ஆரம்பிக்கும் காலம் ஆடி மாதம் ஆதலால் ஆடி அமாவாசையில் பிதிர்த் தர்ப்பணம் செய்தல் மிக உகந்ததும் நற்பலன்களை அளிக்கவல்லதுமாகும். அமாவாசைத் தினத்தன்று மாதரொடு உடலின்பம் துய்த்தல் மிகப் பாவச் செயலாகக் கருதப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயம் ஆகிய இடங்களில் அமாவாசையன்று தீர்த்தமாடி வழிபாடு செய்தல் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது. பிதிர்க் கடன்கள் செய்தல் பிதிர்களை பிரீதிப்படுத்துவதோடு கடனைச் செய்வோர்க்கும் நற்பேறுகளையும் அளிக்கின்றது. தேவர்களைப் பிரீதி செய்வதற்கு யாகங்கள், ஹோமங்கள், வேள்விகள் ஆகிய முறைகள் உள்ளன. சிரார்த்தம், தர்ப்பணம், பிண்ட தானம் என்பனவே பிதிர்களைப் பிரீதி செய்யும் முறைகளாம்.

இக்கடமைகள் எல்லாம் பெரும்பாலும் ஒரு குடும்பத்தில் புத்திரர்களாலேயே செய்யப்படுகின்றது. மனிதன் தெரிந்தும் தவறுகள் செய்கின்றான்; தெரியாமலும் தவறுகள் செய்கின்றான்; புத்தி பூர்வமாகச் செய்யப்படும் பாவங்களை ஒருவன் அனுபவித்தே தீர வேண்டும். அபுத்தி பூர்வமாகச் செய்யப்படும் குற்றங்கள் அவன் இறந்தபின் செய்யப்படும் தகனக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீகரணம், மாசியம், சிரார்த்தம் ஆகியன மூலம் அகற்றப்படுகின்றன. இவற்றுக்குப் பிராயச்சித்தமுண்டு. இதனால் தான் பிள்ளைகள் அமாவாசை, பௌர்ணமி காலங்களில் அனுட்டிக்கும் விரதங்கள் அவர் களது பெற்றோர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் அபுத்தி பூர்வமாகச் செய்த பாவ வினைகளைப் போக்க உதவுகின்றன. இதனால் அந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறுகின்றன. இதுவே மகன் தந்தைக்காற்றும் உதவி எனக் கொள்ள இடமுண்டு.

''புத்'' என்பது கொடிய நரகத்தின் பெயராகும். அக்கொடிய நரகத்தில் வீழாது தனது பெற்றோரைக் காப்பவனே புத்திரன் ஆகின்றான். இந்த வகையில் இவற்றின் உள்ளார்த்தத்தை அறிந்து தென்புலத்தார் வழிபாட்டு முறைகளை ஓம்புதல் இரு சாராருக்கும் நன்மையளிக்கும் என்பதில் ஐயமில்லை.

**தந்தை சொல் மிக்க மந்திரமில்லை** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. சாதுர் மாஸ்ய விரதம்

இவ்விரதம் சந்நியாசிகளால் அனுட்டிக்கப்படும் விரத மாகும். இஃது ஆனி, ஆடி, ஆவணி புரட்டாதி மாதங்களில் அனுட்டிக்கப்படுகின்றது. ஏற்கனவே சந்நியாசிகள் சுத்த போசனத்துடன் அறுசுவைகளையும் ஒறுத்து காய் கனிகள், போன்ற எளிய உணவு வகைகளை உண்பவர்கள், இவ் விரதத்தை அனுட்டிக்கும்போது விரதிகள் ஆனி மாதத்தில் காய்கனிகளைத் தவிர்க்க வேண்டும், ஆடி மாதத்தில் தயிர் உண்பதைத் தவிர்க்கவேண்டும், அடுத்தடுத்த மாதங்கள் பூராவும் பாலையும் பருப்பு வகைகளையும் தவிர்க்க வேண் டும். இவ்விரதம் ஆரம்பிக்கும் தினம் ஆனிமாதக் கடைசி நாள் ஆகும்.

சாதுக்கள் எனவும் அழைக்கப்பெறும் சந்நியாசிகள் பொதுவாக ஓரிடத்தில் வாழ்வதென்றில்லை. இதற்குக் காரண மும் உண்டு. அவர்கள் ஒரே இடத்தில் வாழின் அவர்கட்கு அந்தச் சூழலில் ஒரு பற்று ஏற்படும். இப்பற்றைத் தவிர்ப்பதற் காகவே இவர்கள் நாடோடியாக வாழ்வது வழமை. ஆனால் சாதுர் மாஸ்ய விரத காலத்தில் மாத்திரம் இவர்கள் ஓரிடத்தில் தங்குவர். அதற்கும் உதாரணங்கள் உண்டு. ஒன்று இக்காலம் மாரி காலமாதலால் புதிது புதிதாக சிறிய ஜந்துக்கள் தோன் றும் காலம். எனவே இவர்கள் அடிக்கடி வெளியே புறப்பட்டால் அவற்றை தாம் உழக்கி அவை அழிய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். எனவே இதைத் தவிர்ப்பதற்காக அவர்கள் ஓரிடத்தில் வாழவும் செய்தனர்.

மற்றைய காரணம், இவ்வாறு இவர்கள் ஓரிடத்தில் உறையும் போது இவ்விரத காலத்தில் அவர்கள் நல்லுப தேசங்களையும், சமய உரைகளையும் தமது சிஷ்யர்க்கும் மற்றும் சுற்றாடலில் உள்ளோர்க்கும் தொடர்ந்து உபதேசிக் கவோ ஆற்றவோ முடிந்தது. எனவே இக்காரணங்களைக் கொண்டு சாதுர் மாஸ்ய காலத்தில் மாத்திரம் சந்நியாசிகள் ஓரிடத்தில் அமர்ந்து விரதமனுட்டித்தல் மரபாக இருந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. நாக பஞ்சமி

இது சர்ப்பபூசை சம்பந்தப்பட்டதாகும். சிறப்பாக நித்திய சந்தியாவந்தனத்தில சர்ப்ப தேவதையை பிரார்த்தித்தால் சந்ததி விருத்தி பெறும் வாய்ப்பு நிச்சயம் என்பது நம்பிக்கை. புத்திர சந்தானம் பெற நாகப் பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும். இதனால் குழந்தைப் பேறு அற்றவர்கள் நாகப் பிரதிஷ்டை செய்து குழந்தைப் பேறு பெற்று அக்குழந்தைக்கு நாகராஜன், நாகலட்சுமி, நாகசாமி எனப் பெயரிடுதல் கண்கூடு. பகவான் அனந்தன் என்னும் பெயர் கொண்ட நாகமாக இருந்து பூமியைக் காத்து வருகின்றார். அவருக்கு உதவியாக வாசுகி, கார்க்கோடகன், தட்சகன் முதலிய சர்ப்பங்களும் பாதாள உலகத்தில் சஞ்சரிக் கின்றனர்.

காசியப்பருக்கும் கர்த்ரு என்பவருக்கும் குழந்தையாகப் பிறந்தவன் தாய் சொல் கேளாமல் வாழ்ந்ததால் தாயின் சாபத்தைப் பெற்றான். தீயில் வீழ்ந்து இறக்கும்படி தாயால் சபிக்கப்பட்டது. இதனால் பல சர்ப்பங்கள் தீயில் மாண்டன. பின்னர் அஸ்தீகர் என்பவரின் யாகத்தால் அச்சாபம் அகன் றது. இது சம்பவித்தது பஞ்சமித் திதியில் ஆகும். இதுவே நாக பஞ்சமி ஆகும். இந்நாளில் நாகபூசை செய்து நாகங் களைப் பூசித்துப் பாம்புப் புற்றுக்குப் பாலும் வார்த்தால் புத்திர பாக்கியம் போன்ற உயர் பலன்களைப் பெறலாம். சிந்து வெளி நாகரிக காலத்திலிருந்து நாக வழிபாடு இருந்து வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. குழந்தைப்பேறு அற்றவர்கள் அவசியம் நாகவழிபாடு செய்து நற்பலன் பெற முயற்சிக்க வேண்டும். மனத்தூய்மையோடு முயன்றால் முடியாதது எதுவுமேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஸ்ரீ ராம நவமி

**ப**டைத்தற் தொழிலைப் புரிபவர் பிரம்மன்.காத்தற் தொழிலைப் புரிபவர் விஷ்ணு பகவான். அழித்தற் தொழிலைப் புரிபவர் உருத்திரன் ஆவர். இவர்களுள் விஷ்ணு பகவானுடைய தசாவதாரங்களில் இராம அவதாரம் ஒன்றாகும்.

தர்மத்தைத் தானே மானிடப்பிறவியெடுத்துப் பூமியிலே அனுட்டித்துக் காட்டுவதே ஸ்ரீவைகுந்த நாதன் தசரதச் சக்கரவர்த்திக்குப் புத்திரனாக ஸ்ரீராமனாகத் தோன்றிய இராம அவாதாரம். அன்றைய தினம் ஸ்ரீ ராம நவமியை அனுட்டிப்பவர்கள் நாள் முழுவதும் உபவாசமிருந்து தம் சக்திக்கு ஏற்றபடி ஸ்வர்ணம், வெள்ளி, தாமரம் ஆகியவற்றில் ஒனறால் ஸ்ரீ ராமனது விக்கிரகத்தைச் செய்து தானம் செய்து மறுநாள் காலை பாரணம் செய்தல் வழமை.

பிரதமை முதல் நவமி வரையில் 8 நாட்கள் ஸ்ரீராமாயண பாராயணம் செய்து முடித்துப் பின்னர் ஸ்ரீராம பூசை செய்தல் கர்ப்போற்சவம் எனப்படும். நவமி முதல் இப்பாராயணத்தை ஆரம்பித்துச் செய்வது ஜன்மோத்திரம் எனப்படும். இப்புனித நாளில் இராமாயண பாராயணம், பஜனை, இராமபூசை, உபவாசம், ஆடல் பாடல் செய்தல் மிகப் பயன்தரும் காரியங்களாம்.இவற்றோடு மிகச்சிறந்த தாரக மந்திரமான ராம நாம ஜபம், நவமியில் அவதார சர்க்க பாராயணம் செய்தல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. சித்திர குப்தனார் பூசையும் சித்திரைக் கஞ்சியும்

சித்திர குப்தனாருக்குக் காஞ்சிமா நகரில் ஒரு தனியான ஆலயம் உண்டு. சித்திரா பௌர்ணமியில் இவருக்கு விசேட மாக பூசையும் உற்சவ உலாவும் நிகழ்வது வழமை. சித்திர குப்தனாரின் மகிமையை உணர்ந்து அவரது பெயரை வைச்வ தேவபலியிலும் சேர்த்துள்ளனர். அத்தோடு இவரது சிறப்பு விழா அன்று இவரது சரித்திரம் தமிழில் பாடல்களாகப் பெண்களால் பாடப்பெற்று அன்று முழுவதும் நித்திரை விழிப்பும் இடம்பெற்று வருகின்றது.

சித்திரகுப்தரை எமதர்மராஜனின் கணக்குப்பிள்ளை என்று இவரின் பிறப்பு வரலாறு கூறுகின்றது. ஒருமுறை பிரம்ம தேவரின் உடலிலிருந்து ஒரு புருஷன் தோன்றினான். உடலுக்குக் காயம் என்றொரு பெயரும் உண்டு. ஆதலால் இவரைக் காயஸ்தன் என்றும் அழைத்தனர். இவரை உயிர் களின் புண்ணிய பாவங்களைங் குறித்து யமனிடம் தரும்படி பணித்து அவரை எமதர்மராஜனின் சபையிலேயே இருக்கும் படி பணிக்கப்பட்டது. சித்திரகுப்த பூசையின் போது எமதர்ம ராஜனுக்கும் சேர்த்துப் பூசை செய்வது மரபாயிற்று. இவரது சந்ததியில் தோன்றியவர் தான் காயஸ்தர் என்னும் கணக்கப் பிள்ளை வகுப்பினராவர்.

இவரது புண்ணிய தினத்தில் அன்னதானமாக ஆலயங் களில் சித்திரைக்கஞ்சி வார்க்கப்படுவது வழமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரதங்கள் விழாக்கள் ஒரு கண்ணோட்டம்

**தை மாதம்**

1. தைப்பொங்கல்
   உழவர் திருநாள் - சூரிய வணக்கத்திற்கும் உகந்த நன்னாள்
2. தைப்பூசம்
3. ரதசப்தமி விரதம்
4. தை அமாவாசை
   பட்டர் பிரானுக்கு அன்னை அபிராமி நிலாக் காட்டி அருளிய தினம்.
5. வீரபத்திர விரதம்
6. சாவித்திரி விரதம்
7. சூல விரதம்
8. தைச்செவ்வாய்

**மாசி மாதம்**

1. மகா சிவராத்திரி
2. மாசி மகம்
3. நடேசரபிஷேகம்
4. காரடையா நோன்பு

**பங்குனி மாதம்**

1. பங்குனி உத்தரம்
2. கல்யாண சுந்தரேச விரதம்
3. ஸ்ரீராம நவமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சித்திரை மாதம்**

1. சித்திரை வருடப்பிறப்பு
2. சித்திரைப் பரணி
3. சித்திரைச் சித்திரை
4. சித்ரா பௌர்ணமி
5. சித்திரகுப்த விரதம்
6. நடேசரபிஷேகம்
7. உமா சுக்கிர வார விரதம்
   சித்திரை மாத வளர்பிறை, வெள்ளிக்கிழமை நாளில் தேவியை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்.

**வைகாசி மாதம்**

1. வைகாசி விசாகம்
2. விநாயக சுக்கிரவார விரதம்
3. அர்த்த நாரீஸ்வர விரதம்
4. நரசிம்ம ஜயந்தி விரதம்
5. இடப விரதம்

**ஆனி மாதம்**

1. ஆனி உத்தரம்
2. சாதுர்மாஸ்ய விரதம்
3. குருபூர்ணிமா விரதம்

**ஆடி மாதம்**

1. ஆடிப்பிறப்பு
2. ஆடி அமாவாசை
3. ஆடிப்பூரம்
4. நாக சதுர்த்தி விரதம்
5. ஆடிச்செவ்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆவணி மாதம்**

1. விநாயக சதுர்த்தி விரதம்
2. ஆவணி மூலம் - அனும ஜயந்தி தினம்
3. நடேசரபிஷேகம்
4. ஆவணி அவிட்டம்
   அந்தணப் பெருமக்கள் பூணூல் மாற்றிக் கொள்ளும் தினம்.
5. ஆவணி ஓணம்
   வைணவர்கள் விஷ்ணு பகவானை நோக்கி விரதம் அனுட்டிக்கும் புண்ணிய தினம் ஆகும்.
6. ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி
7. மகாபரணி
8. சுவர்ண கௌரி விரதம்
   ஆவணி மாத வளர்பிறை திருதியை தினத்தில் சுவர்ண கௌரி அம்பிகையை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்
9. கருட பஞ்சமி
   ஆவணி மாத வளர்பிறை பஞ்சமித் திதியில் கருடானை நோக்கி அனுட்டிக்கப்படும் விரதம்
10. ஆவணி ஞாயிறு
11. வரலட்சுமி விரதம்

**புரட்டாதி மாதம்**

1. நவராத்திரி விரதம்
2. நடேசரபிஷேகம
3. கேதாரகௌரி விரதம்
4. ரிஷிபஞ்சமி விரதம்
5. அநந்த பத்மநாப விரதம்

புரட்டாதி மாத வளர்பிறைத் திதியில்
ஸ்ரீமன் நாராயணனைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐப்பசி மாதம்**

1. தீபாவளி
2. கந்தசஷ்டி
3. ஐப்பசிப் பரணி
4. ஐப்பசி வெள்ளி - சுக்கிர வாரம்
5. ஐப்பசி உத்தரம்
   இம்மாத உத்தர நட்சத்திரத்தில் தேவியைக் குறித்து அனுட்டிக்கப்படும் விரதம்.
6. கந்த சுக்கிர வார விரதம்
   இஃது ஐப்பசி மாதத்தில் முதல் வரும் வெள்ளிக்கிழமையில் ஆரம்பித்து கடைசி வெள்ளிக்கிழமை வரை சுப்பிரமணியக்கடவுளைக் குறித்து அனுட்டிக்கப்பெறும் விரதம்.

**கார்த்திகை மாதம்**

1. திருவிளக்கீடு
   பூரணையன்று சர்வாலய தீபம் - சகல இல்லங்களிலும் இடம் பெறும்.
   குமராலய தீபம்
   முருகனது ஆலயங்களில் கார்த்திகை நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும்.
2. திருக்கார்த்திகை விரதம்
3. விநாயக சஷ்டி விரதாரம்பம்
   பிள்ளையார் பெருங்கதை இக்கார்த்திகை மாதத்தில் வரக்கூடிய அபரபட்சப் பிரதமையில் ஆரம்பித்து தொடர்ந்து 21 நாட்கள் இடம்பெறும். மார்கழி மாத பூர்வபட்ச சஷ்டியில் நிறைவு பெறும்.
   இஃது திதியின் அடிப்படையில் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்கழி மாதம்**

1. திருவெம்பாவை பூஜாரம்பம்
2. சுவர்க்க வாயில் ஏகாதசி
3. நடேசரபிஷேகம் - ஆருத்ரா தரிசனம்

# மாதந்தோறும் இடம்பெறுபவை

## பௌர்ணமி

தாயை இழந்தவர்கள் மாதந்தோறும் இடம்பெறும் பௌர்ணமி தினத்தில் விரதம் அனுட்டிப்பது சிறப்பாகும். இயலாதவர்கள் சித்திரா பௌர்ணமியன்று தன்னும் தாயை நினைத்து விரதம் அனுட்டித்தல் வேண்டும். இதில் ஆண் பிள்ளைகளுக்கு கூடிய பங்கு உண்டு.

**தாயிற் சிறந்த தோர் கோயிலுமில்லை**

## அமாவாசை

மாதந்தோறும் இடம்பெறும் அமாவாசைத் திதியில் தந்தையை இழந்தோர் தந்தையை நினைத்து விரத மனுட்டித்தல் மரபு. இயலாதவர்கள் வருடத்தில் ஒருமுறை இடம்பெறும் ஆடி அமாவாசையன்று தன்னும் தந்தையை நினைந்து விரத மனுட்டித்தல் வேண்டும். "புத்" என்னும் நரகத்திலிருந்து இறந்த பெற்றோரைக் காப்பாற்றும் கடமைப்பாடுடையவன் புத்திரன் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இதனால் ஆண்கள் இவ்விரதத்தை சிரத்தையோடு அனுட்டித்தல் அவசியமாகும்.

சூரியன் தந்தைக்கு அதிகாரகன். எனவே பிதுர்காரகன் எனப்படுவான். சந்திரன் தாய்க்கு அதிகாரகன் எனவே மாதுகாரகன் எனப்படுவான். சூரிய சந்திரர்கள் ஒரே இடத்தில் சேர்ந்திருக்கும் நாள் அமாவாசி (அமாவாசை) எனப்படும். "அமா" என்றால் ஓரிடத்தில் சேர்ந்திருத்தல், "வாசி" என்றால் வாசம் செய்தல், எனவே அமாவாசி எனப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடிமாதத்தில் சூரியன் தெற்கு நோக்கிப் பயணிக்கின்றான். அந்நேரத்தில் தென்திசையில் உறையும் பிதுர்களான தென்புலத்தார் வெப்பத்தால் தகிப்பர். அவ்வெப்பத்தைத் தணிக்க சந்திரன் முயற்சிப்பான். இருப்பினும் அவர்களது தாகத்தைத் தணிப்பதற்கு பூவுலகில் உள்ளோர் அன்றைய தினத்தில் எள்ளும் தண்ணீரும் இறைத்து பிதுர்க்கடன் செய்தல் அவசியமும் சாலச்சிறந்த காரியமுமாகும். இதுவே ஆடி அமாவாசையில் பிதுர்க்கடன் செய்வதன் முக்கியத்து வமுமாகும்.

## சதுர்த்தி

சதுர்த்தி திதி மாதத்தில் இருமுறை இடம்பெறும். சதுர்த்தி விநாயக வழிபாட்டுக்குச் சிறந்த திதியாகும். பூர்வபக்கம், அபரபக்கம் ஆகிய இரு வகைகளில் அபரபக்கச் சதுர்த்தியே சங்கடகர சதுர்த்தி எனப்படும். சதுர்த்தித் திதியில் ஆவணிச் சதுர்த்தி சிறந்ததாகும். மாதா மாதம் சதுர்த்தி விரதமனுட் டிப்போர் வளர்பிறைச் சதுர்த்தியில் விரதமனுட்டிப்பதும் வழமையாகும்.

## ஏகாதசி

ஏகாதசி ஒரு திதி ஆகும். வருடத்தில் பூர்வபக்கம் அபர பக்கம் என இரு பட்சங்களிலுமாக 24 ஏகாதசிகள் இடம் பெறுகின்றன. இவற்றில் வளர்பிறைக் காலத்திலே இடம்பெறும் ஏகாதசி விரதத்தை இல்லற நிலையில் உள்ளோரும், தேய்பிறையில் இடம்பெறும் ஏகாதசி விரதத்தை சந்நியாசரும் அனுட்டித்தல் முறையாகும். பன்னிரு மாதங்களில் ஆடி தொடக்கம் கார்த்திகை ஈறாக உள்ள ஏகாதசி நாட்களே சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. ஏகாதசித்திதி சிவனுக் கும், துவாதசித் திதி விஷ்ணு பகவானுக்கும் உரியன வாயிருப்பினும் இவ்விரு திதிகளும் சேர்ந்து வருவதே ஏகாதசி விரதமாக அனுட்டிக்கப்படுகின்றது என்பது இங்கு குறிப்பிட வேண்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஷ்டி

சஷ்டி என்பது ஒரு திதி ஆகும். இதில் வளர்பிறைச் சஷ்டியே சிறப்பாகக் கொள்ளப்பட்டு வருகின்றது. இத்திதியில் விநாயகப்பெருமானுக்கும் முருகப்பெருமானுக்கும் விரதம் அனுட்டிக்கப்படுகின்றது. ஐப்பசி மாத வளர்பிறைச் சஷ்டித் திதியே முருகப்பெருமானுக்குரிய சிறப்புமிகு விரதமான கந்தசஷ்டி விரதமாக அனுட்டிக்கப்பெற்று வருகின்றது.

## பிரதோஷம்

சிவவழிபாட்டிற்குகந்த பிரதோஷ காலம் மாதத்தில் இருதடவை இடம்பெறும். அவையாவன: வளர்பிறைக் காலப் பிரதோஷம், தேய்பிறைக் காலப் பிரதோஷம் என்பனவாம். பிரதோஷ காலம் இரவின் முன்வரும் காலமாகும்.

## மாதவிரதம்

ஒவ்வொரு மாதப்பிறப்பன்றும் சூரிய உதயத்தில் சங்கிராந்தி தீர்த்தோற்சவம் ஆலயங்களில் இடம்பெறுவது மரபு. இஃது மாதத் தீர்த்தோற்சவம் எனப்படும். இத்தினத்தில் விரதமனுட்டிக்கும் வழக்கம் சைவப்பெருமக்களிடையே பரவலாக உண்டு. விஷேடமாக, ஆடிப்பிறப்பன்று ஆடிக்கூழ் காய்ச்சி நிவேதித்துக் கொண்டாடி மகிழ்வர் சைவப்பெரு மக்கள். ஆடி மாதம் தேவர்களுக்கு இராப்பொழுது ஆரம்பிக்கும் காலமாகும். மார்கழி மதம் இவர்கட்கு உதய கால மாகும்.

## நவக்கிரக வார விரதம்

வாரத்தில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சூரியன், ராகு, கேது ஆகிய கிரகங்களை வழிபாடு செய்து விரதமனுட்டித்தல் உகந்ததாகும்.

அதேபோன்று, திங்கட்கிழமை சந்திர பகவானையும், செவ்வாய்க்கிழமை செவ்வாய் பகவானையும், புதன்கிழமை புதன் பகவானையும் வியாழக்கிழமை தட்சணாமூர்த்தி, குரு பகவானையும், வெள்ளிக்கிழமை சுக்கிர பகவானையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வெள்ளி) சனிக்கிழமை சனி பகவானையும் குறித்து விரத மிருத்தல் நவக்கிரக வார விரதமாகும். இவ்வழிபாடு சகல தோஷங்களையும் போக்கி நற்பயன்களையும் அளிக்க வல்லது.

## நடேசரபிஷேகம்

ஒரு வருடத்தில் ஆடல் வல்லோனாகிய நடேசப்பெருமானுக்கு 6 அபிடேகங்கள் சிறப்பாக இடம்பெறுகின்றன. அவற்றின் கால விளக்கங்களை நோக்குவோம்.

1. சித்திரை மாதம் - திருவோண நட்சத்திரத்தன்று
2. ஆனிமாதம் - உத்தர நட்சத்திரத்தன்று
3. ஆவணி மாதம் - பூர்வபக்கச் சதுர்த்தசியன்று
4. புரட்டாதி மாதம் - பூர்வபக்கச் சதுர்த்தசியன்று
5. மார்கழி மாதம் - திருவாதிரை நட்சத்திரத்தன்று (ஆருத்ரா தரிசனம்)
6. மாசி மாதம - பூர்வபக்கச் சதுர்த்தசித் திதியன்று

பட்சம் என்பது,

பூர்வ பக்கம் :- வளர்பிறைக் காலம் என்றும் சுக்கில பட்சம் எனவும் அழைக்கப்படும்.

அபர பக்கம் :- தேய்பிறைக் காலம் என்றும் கிருஷ்ண பட்சம் என்றும் அழைக்கப்படும்


உத்தராயணம் :- ஒருவருடத்தில் தைமாதம் முதல் ஆனி மாதம் வரை தேவர்கட்குப் பகற்காலமாகும். இஃதுவே உத்தராயண காலம் எனப்படும்.

தட்சணாயணம் :- ஒருவருடத்தில் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை தேவர்கட்கு இராக்காலமாகும். இஃது தட்சணாயன காலம் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழாக்கள் - பண்டிகைகள்

## 1. தைப்பொங்கல்

ஒரு வருடத்தில் இடம்பெறும் பன்னிரண்டு மாதங்களில் தைமாதம் தமிழ் மக்களுக்கு வழிகாட்டும் மாதமாக அமைகின்றது. தைமாதத்தைத் தைமகள் என்று அழைக்கும் இந்துக்கள் அவளைக் குதூகலத்துடன் வரவேற்று மன நிறைவுடனும் புத்துணர்ச்சியுடனும் தொன்று தொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.

தைத் திருநாள், தைப்பொங்கல், நன்னாள், உழவர்களின் பெருநாள். உழவப் பெருமக்கள் காலமெல்லாம் தமக்குத் தமது தொழிலிலே உறுதுணையாக நின்ற சூரிய பகவா னுக்குப் புது நெல்லரிசி கொண்டு கரும்பும் கனியும், தேனும் பாலும் சர்க்கரையும் கலந்து பொங்கிப் படைத்து நன்றி கூறும் நன்னாள். இது ஒரு பொன்னாள். தை பிறந்து விட்டால் எல்லோர் மனதிலும் ஒரே குதூகலம்! நல்லன நடக்கும் என்ற நம்பிக்கை. தைமகள் தமது வாழ்வைப் பூத்துக் குலுங்க வைக்கப் போகின்றாள் என்ற மகிழ்வுடன் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. தைப்பொங்கலைத் தொடர்ந்து பட்டிப் பொங்கல், கன்னிப் பொங்கல், தைப்பூசம் என விழாக்கள் தொடாகின்றன.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பூரண நம்பிக்கை யோடு இப்பொங்கல் திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. பொங்கல் திருநாளின் நாயகனே சூரிய பகவான் தான். நெற்பயிர் விளைய வேண்டி மழையையும் வெய்யிலையும் தந்து இப்பொங்கல் திருநாளுக்கு முதற்காரணமாக விளங்கு வதால் சூரிய பகவான் பொங்கல் திருநாளின் விழா நாயகன் ஆகின்றான்.

மகர ராசியில் சூரியன் பிரவேசிக்கும் காலம் மகரசங் கிராந்தி எனப்படும். இதுவே உத்தராயண புண்ணிய காலம் எனப்படும். இப்பொழுதிலே சூரியன் நேர் கிழக்கே தோன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கே செல்வான். தைமாதம் தொடக்கம் ஆனிமாதம் முடியும் வரை உத்தராயண காலம் என்றும் ஆடிமாதம் முதல் மார்கழி வரை தட்சிணாயனம் என்றும் அழைக்கப்படும்.

சித்திரை வருடப்பிறப்பைப்போல் தை மாதப்பிறப்பும் மிகவும் விசேடம் வாய்ந்தது. இக்காலத்தில் சங்கராந்தி பூசை செய்யப்படும். சங்கிராந்தி ஒரு புருஷனாக உருவகிக்கப் படுகின்றது. தான தர்மங்கள் செய்ய உகந்த இந்நாளில் சூரிய பூசை செய்தல் மிகச் சிறந்ததாகும். தேவர்களின் தலைவனான இந்திரன் தான் செய்ததோர் குற்றத்திற்காகப் பகவானை அன்று பூசிப்பதாக வேண்டியதால் அன்றைய தினம் சூரியனை நாராயணனாகக் கருதி இந்திரனையும் உபேந்திரனையும் சேர்த்துச் சங்கிராந்தி பூசை செய்யப் படுகின்றது. அச்சமயம் இப்பூசையில் புதிதாக விளைகின்ற மஞ்சள், இஞ்சி, கரும்பு ஆகியவற்றை நிவேதிக்கும் வகையில் தான் பொங்கற் பந்தலிலே கரும்பு நாட்டி, பொங்கல் பானைக்கு இஞ்சியிலையும் மஞ்சள் இலையும் கட்டப் படுகின்றது.

தைப்பொங்கல் அன்று தமிழ் மக்கள் துயில் எழுந்து தூய நீராடி முற்றத்தைக் கூட்டி மெழுகிக் கோலமிட்டுச் சிறு பந்தல் மாவிலை தோரணம் கட்டிக் கரும்பு நாட்டித் தீபமேற்றிப் புதிய அடுப்பில் புதுப்பானை வைத்து அதன் கழுத்துப்பாகத்தில் இஞ்சியிலை மஞ்சள் இலை கட்டி பிள்ளையார் பூசை பண்ணிப் பொங்கல் விழாவை ஆரம்பிப் பர். பொங்கல் பானையில் நீரும் பாலும் நிரப்பி அடுப்பேற்றி பால் பொங்கி வரும்போது வீட்டின் தலைவன் முதலில் புது அரிசியைப் பானைக்குள் இடுவான். தொடர்ந்து வீட்டுத் தலைவியும் பிள்ளைகளும் மிகுதி அரிசியைப் பானையுள் இடுவர். சிறுவர் சிறுமியர் பட்டாசு கொளுத்தி மகிழ்வர். பொங்கல் பொங்கியதும் "பொங்கலோ பொங்கல்" என ஆனந்தக் கோஷமிடுவர். பொங்கலைச் சூரிய பகவானுக்கும், இறைவனுக்கும், தேவர்களுக்கும் படைத்த பின் தாம் குடும்பத்தோடும் சுற்றத்தாரோடும் உண்டு மகிழ்வர்.

பொங்கலுக்கு மறுநாள் பட்டிப்பொங்கல் இடம்பெறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய தினம் பட்டிகளை நீராட்டிப் பொட்டிட்டு மாலை சாற்றி பொங்கிப் படைத்து அவற்றிற்கும் பொங்கலை ஊட்டி அன்று முழுவதும் எருதுகளுக்கு வேலை தராது காலாற விடுவர். கிராமங்களில் மாலை நேரத்தில் ஜல்லிக்கட்டு விழா இடம்பெறும். இதில் அடங்காத காளைகளை விரட்டி ஓட்டித் தங்கள் வீரத்தை வெளிக்காட்டுவர். இதனை மஞ்சு விரட்டு என்றும் அழைப்பர். இப்போட்டியில் வெல்லும் இளைஞனுக்குப் பெற்றார் தம் பெண்ணை மணம் முடித்துக் கொடுத்த வரலாறுகளும் தமிழ் நாட்டில் உண்டு.

இப்பட்டிப்பொங்கல், மாட்டுப் பொங்கல் என்றும் பெயர் பெறுகிறது. பசுவின் உடலிலே தேவர்கள் வாசம் செய்வதாலும் இனிய பாலைத் தருவதாலும், பசுக்களுக்கும் அன்றாடம் வயலிலே உறுதுணையாக நின்று உழுது உதவும் எருதுகளுக்காகவும் இப்பட்டிப் பொங்கல் காலங்காலமாக இடம்பெற்று வருதல் கண்கூடு. பெற்ற தாயைப் போல் பசுக்களைத் தமிழ் மக்கள் தெய்வமாகவே கருதி அவற்றை பேணி வழிபட்டனர். வேத காலத்தின்போது பசுக்கொலை மகா பாதகமான செயலாகக் கருதப்பட்டது. பசுக்கொலை உபபாதகம் என்று தர்ம சாஸ்திரங்கள் கூறியுள்ளன. பசுக் கொலை ஒரு கருணையற்ற செயல் எனக் குறிப்பிடப்பட் டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆன்மீகப் பொங்கல்

**உ**டம்பு ஒரு சிறு குடிசை. அதனுள் ஆன்மா வாழ்கின்றது. இதே குடிசையில் வாழும் ஐவராகிய ஐம்புலன்கள் இந்த ஆன்மாவை அடக்கி ஆள முயல்கின்றன. இவர்களை வென்று தினமும் மதுரப் பொங்கல் பொங்கப்படுகின்றது. அன்றாடம் நாம் பொங்கும் ஆன்மீகப் பொங்கல் இதுதான். எமது அகம், அதாவது மனந்தான் - அடுப்பு. அடுப்புக்கு வைக்கும் மூன்று கற்கள் - அன்பு, பொறுமை, அவா அறுத்தல் - எரியும் விறகு, பொங்கும் பானை – உயிர், கருப்பஞ்சாறு - திருவருள் ஆக அமைகின்றது. இதனால் பெறப்படுவது மதுரப் பொங்கல் ஆகும். இதனைச் சிதம்பர சுவாமிகள். "தினமும் சிவானந்த. மதுரச்சோறு பொங்கி" என அருள் நோக்கிற் பாடியுள்ளார்.

●

## காணும் பொங்கல்

**பா**ரத நாட்டிலே தமிழ் மாநிலத்தில் காணும் பொங்கல் பற்றியும் பேச்சுண்டு. அதன் விளக்கம் யாதெனில் உழவப் பெருமக்கள் தாம் தமது உழவின் பயனை அனுபவித்துப் பொங்கி மகிழ்ந்தது போல தம்மைச் சூழ்ந்தோரும் அனுபவித்து வாழ்கின்றார்களா? என கண்டு விசாரித்தல் எனப் பொருள்படும். இவர்கள் அன்று தமது இல்லத்திலிருந்து புறப்பட்டுத் தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்ற பேதம் பாராது உதவ வேண்டியவர்க்கு உதவி மற்றோரை "உங்கள் வீட்டில் பால் பொங்கிற்றா?" எனப் பண்போடு விசாரித்து மகிழ்வர். அத் தோடு தமது உற்றார் உறவினரை இல்லத்திற்கு அழைத்து உணவிட்டுக் கௌரவித்து அனுப்புவர். தம்மை நாடி வந்தோர்க்கு இயன்றளவு தான தர்மம் செய்வர்.

●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கன்னிப் பொங்கல்

**கா**ணும் பொங்கலைக் கன்னிப்பொங்கல் என்றும் அழைப்பர். கன்னி என்று ஆற்றையும் அழைப்பதுண்டு. கன்னிப் பொங்கலன்று சிற்றிளம் பெண்கள் கூட்டமாகச் சென்று ஒன்று கூடிக் கும்மியடித்து விளையாடி மனம் மகிழ்ந்து கூட்டாஞ் சோறு ஆக்கி ஆற்றுக்கும் படைத்து தாமும் உண்டு மகிழ்ந்து மாலையில் இல்லம் திரும்புவர். இதனைப் பூம் பொங்கல் என்றும் நூல்கள் விவரித்துள்ளன.

ஆற்றைக் கன்னி அம்மனாக வழிபடும் மரபும் உண்டு. கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, துங்கபத்ரி, சரயு ஆகிய ஒன்பது ஆறுகளும் நவ கன்னியர் என்று வழங்கப்படும்.

## போகிப் பண்டிகை

**தை** மாதப்பிறப்பின் முதல் நாள் இப்போகிப் பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றது. முக்கியமாக இந்தியாவின் தமிழ்மக்கள் இதனைத் தவறாது கொண்டாடுவர். "போகி" என்பது இந்திரனைக் குறிக்கின்றது. இந்திரன் மேகங்களுக் குத் தலைவன். அவனே மழையைத் தருபவன். எனவே மழையைத் தந்து விளைச்சலுக்கு உதவும் இந்திரனுக்கு நன்றிக்கடனாக இப்பண்டிகை கொண்டாடப்பட்டு வருகின்றது. உழவர்களும் ஆயர்களும் ஆண்டு தோறும் இதனைக் கொண்டாடி மகிழ்வர். காலப்போக்கில் ஆயர்கள் இவ்விழா வைக் கண்ணனுக்கு எடுத்தார்கள். இதனால் இந்திரன் சீற்றங்கொண்டு தொடர்ந்து மழையை வர்ஷித்தான். அப்போது கண்ணன் கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்து ஆயர்களைக் காப்பாற்றினான்.

தைப்பொங்கலின் நாயகனான சூரியனை இந்துக்கள் மாத்திரமன்றி சீனர், ஜப்பானியர், பாரசீகர் ஆகியோரும் தத்த மக்குரிய வழிபாட்டு முறைகளைக் கைக்கொண்டு வழிபட்டு வருகின்றனர். சிவபெருமானின் நெற்றிக்கண்ணாகச் சூரிய பகவான் கருதப்படுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சூரிய பகவானை அதிகாலையில் மனமுருகத் தியானித்து "சிவ சூரியாய நம" எனச் செபித்துச் செந்தாமரை, செண்பகம் ஆகிய மலர்கள் கொண்டு இருமுறை பிரதட்சணம் செய்து "வைகர்த்தனாய நம" முதலான 12 நமஸ்காரங் களைச் செய்து வழிபடுதல் முறையாகும்.

பொங்கல் நாளிலே பெரியோர்களைத் தரிசித்து அவர்களது ஆசிகளைப் பெறுதலும் முக்கியமாகும். பானையில் பொங் கும்போது எமது உள்ளமும் குதூகலத்தால் பொங்குகின்றது. பாரில் வளம் பொங்குகின்றது; நில மகள் பூரிப்படைகின்றாள்; இல்லங்களில் மங்கலம் தங்குகின்றது; பூமித் தாய், சூரிய பகவான், பசுக்கள், எருதுகள், நீர் ஆகியவற்றின் உறுதுணை யோடு நாம் நல்வாழ்வு, வளமான வாழ்வினை வாழ முடி கின்றது. தைப்பொங்கல் விழாவும் இவர்களுக்கு நன்றிக் கடன் செலுத்தும் விழாவாகும்.

உழவன் உழாது வாழாவிருந்தால் மக்கள் உணவைத் துறக்கவேண்டிய நிலை ஏற்படும் இதனை வள்ளுவனார் பின்வருமாறு கூறியுள்ளார்.

**உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்**
**விட்டேம் என்பார்க்கு நிலை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. காமன் பண்டிகை

அசுரர்களால் ஏற்பட்ட இன்னல்களைத் தாங்க முடியாத தேவர்கள் எப்படியாவது சிவனாரைக் கொண்டு ஒரு வீரபுத்திரனைத் தோற்றுவித்து இவ்வசுர இனத்தை அழித்தேயாக வேண்டும், தேவர்களைத் துயர்க்கடலிலிருந்து மீட்டாக வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இந்நிலையில் சிவனார் தபசில் அமர்ந்திருந்ததால் அவரது தபசைக் குலைத்து அவரைப் பார்வதிதேவியோடு கூட வைத்து ஒரு நற்புத்திரனை வீரமைந்தனைத் தோற்றுவிக்கவேண்டும் என்று முடிவு செய்தார்கள்.

முதலில் சிவனாரது தபசைக் கலைத்தாக வேண்டும். அப்போது தான் அவரை இல்லறத்துள் கொண்டு வரலாம். இதற்கு என்ன செய்வது என்று யோசித்தனர். சிவனாரது தபசைக் கலைப்பது இலேசான காரியமல்ல. அப்படி ஒன்று நடந்தால் அதன் விளைவு பெரும் பாதகமாய் அமையும் என்ற உண்மையும் பிரம்ம விஷ்ணுக்களுக்குத் தெரியும். இருப்பினும் இதனைச் செய்தே ஆகவேண்டிய நிலை அவர்கட்கு ஏற்படவே இந்தப் பின்னல் வலைக்குள் அகப்பட்டவன் உயிர்களுக்குக் காமத்தை உண்டு பண்ணும் தெய்வமான காமன் ஆவன். மன்மதன், வேனிலான், காமவேள், அழகன் என்பதெல்லாம் இவனின் மறுநாமங்கள். இவனது மனைவி அழகின் தேவியாகிய இரதிதேவியாவாள். வசந்த காலத்தில் தலைவன் தலைவியர் காதல் வசப்படுவது இயற்கையாக அமைவதற்கு மன்மதனே காரணமாக அமைந்தான் என்று கூறப்படுகின்றது.

மன்மதனின் போருக்குரிய படைகள் பெண்களாவர்; வாகனம் தென்றல்; கொடி மீன்கொடி; குதிரை கிளி; காளாஞ்சி மல்லிகை; வாள் தாழைமடல்; வில் மா, முல்லை, நீலம், தாமரை, அசோகம் என்னும் ஐந்து மலர்களாம். பாசறை மாலைப்பொழுது; அவனது பஞ்ச மலர்களில் தாமரை காம எண்ணங்களையும் மாம்பூ பசலையையும் அசோகு உணவை வெறுத்தலையும் முல்லை படுக்கையிற் கிடத்தலையும் நீல மலர் மரணத்தையும் ஏற்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்மதன் அழைக்கப்பட்டான். அவனது மலர்க்கணையை ஏவிச் சிவபிரானது தபசைக் கலைக்கும்படி பிரம்ம விஷ்ணுக் கள் பணித்தனர். முதலில் அச்செயலைக் கடுமையாக மறுத்தான். ஆனால் பிரம்ம விஷ்ணுக்கள் அவனை விட்ட பாடில்லை. தான் சிவபிரானது தபசைக் கலைத்தால் தனக்கு என்ன விளையும் என்பது வேனிலானுக்கு நன்கு விளங்கியது. இருப்பினும் பிரம்ம விஷ்ணுக்களின் சீற்றத்துள் அகப்பட்டுச் சிதைவதிலும் பார்க்க ஈசனின் சீற்றம் மேலானது எனச் சிந்தித்துத் தேவர்கள் பணித்ததை ஏற்றுக்கொண்டான். மதனது மலர்க்கணைகள் எம்பெருமானை நோக்கிப் பறக்கின்றன. ஈசனது தபசு கலைந்தது. ஈசனது சீற்றம் காரணமாக மதன் சாம்பராக எரிக்கப்பட்டான்.

பின் மதனது தேவியாகிய ரதி வேண்டத் தனது திருமண நாளிலே அவனை உயிருடன் எழுப்பித் தருவதாக சிவனார் ஒப்புக் கொண்டதுடன் அவனது அழகிய வடிவம் ரதி தேவிக்கு மாத்திரம் தென்படும் என்றும் மற்றையோர் கண்களுக்கு அவன் உருவிலியாக இருப்பான் என்றும் மொழிந்தார். ஈசன் வாக்கின்படி அவரது திருமணத் தினத்தன்று மன்மதன் உயிர்பெற்றெழுந்தான். ஆனால் இரதி தேவிக்கு மாத்திரம் அவன் உருவமுடையவனாகத் தோன்றினான். மற்றோர்க்கு அவன் உருவிலியாகவே செயற்பட்டான்.

காமனுக்குச் சாமன் என்றொரு தம்பி இருந்தான். திருமாலு டைய கிருஷ்ணாவதாரத்திலே காமன் பிரத்தியும்மனாகப் பிறந்தான். காமன் பண்டிகை மன்மதனுக்கு எடுக்கப்படும் பண்டிகையாகும். காமன் எரிக்கப்பட்ட இடம் தமிழ்நாட்டிலே அஷ்ட வீரட்டானங்களுள் ஒன்றான திருக்குறுங்கையாகும். இங்கு வருடந்தோறும் இப்பண்டிகை மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டு வருதல் கண்கூடு. இந்த ஊரின் கண் ணுள்ள தடாகத்தில் எத்துணை ஆழத்துக்குத் தோண்டினாலும் விபூதி சாம்பலாகவே கிடைக்கின்றது. இஃது மன்மதனை எரித்த சாம்பல் எனச் சொல்லப்படுகிறது.

வடஇந்தியாவிலே காமன் பண்டிகை ஹோலிப் பண்டிகை என்னும் பெயரில் கொண்டாடப்பட்டு வருகின்றது. அன்றைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினத்தில் அங்கு மக்கள் ஒருவருக்கொருவர் வண்ணப்பொடி களைச் சாயநீரில் கரைத்து பெரியோர், சிறியோர், பெண்கள், குழந்தைகள் என்ற பேதம் பாராது அவர்கள் மீது தெளிப்பர். எல்லோரும் அச்செயலைக் களிப்புடன் ஏற்றுக்கொள்வர். ஹோலி என்றால் ஹோமம் என்றும் யக்ஞம் என்றும் பொருள் பெறும். அறியாமை என்னும் தேவையற்ற அம்சம் ஓமகுண்டத் தில் இட்டுப் பஸ்பமாக்கப்படும் என்பதை இச்செயல் குறிக்கின் றது.

அன்றைய பண்டிகைநாளில் அங்கு இடம்பெறும் கேளிக்கைகள் யாவும் ஒரு காலத்தில் கிருஷ்ண பரமாத்மா பிருந்தாவனத்தில் நடாத்தியவை போன்றவையாகும். ஆனால், பக்தியைச் செலுத்தத் தூண்டும் பண்டிகையாகவே இது அங்கு கொண்டாடப்பட்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சித்திரை வருடப்பிறப்பு

சூரிய பகவான் சித்திரை மாதத்தில் பன்னிரு இராசிகளுள் முதலாம் இராசியான மேடராசியில் உதயமாவதால் சித்திரை வருடப்பிறப்பு விஷு புண்ணிய காலம் எனப்படுகின்றது. விஷு என்றால் இரவும் பகலும் சமமாக அமைவதாம். எனவே மேட சங்கிராந்தி விஷு புண்ணிய காலமாகும்.

தமிழ் மக்களது புத்தாண்டுப் பிறப்பும் சித்திரை மாதப் பிறப்பும் ஒன்றாக அமையும். சித்திரை மாதம் பருவ காலங்களிலே இளவேனிற் காலத்தின் முதல் மாதமாகும். சித்திரை நட்சத்திரம் பூரணையோடு கூடிய காலமாதல் சித்திரை மாதம் எனப் பெயர் பெற்றது. சித்திரை நட்சத்திரம் 27 நட்சத்திரங்களில் 14 வது ஸ்தானத்தை வகிக்கின்றது.

வருடப்பிறப்பன்று வருடம் பிறக்கும் புண்ணிய காலத்திலே சகலரும் சங்கற்ப பூர்வமாக மருத்து நீர் தேய்த்துத் தலையிலே கடப்பமிலையும் காலிலே வேப்பமிலையும் வைத்து ஸ்நானம் செய்து புத்தாடை தரித்து மங்கலப் பொருட்களைத் தரிசித்து இல்லத்திலே விநாயகப்பெருமானை முதலில் வணங்கித் தமது இஷ்ட தெய்வங்களை வணங்கி முடித்தபின் ஆலய தரிசனம் செய்தல் மரபு. உதயத்தில் சூரியப் பொங்கல் செய்வதும் முறையாகும். காரணம் நவக்கிரகங்களின் நாயகனான சூரிய பகவான் கடைசி ராசியாகிய மீன ராசியிலிருந்து முதல் ராசியாகிய மேடராசிக்குள் பிரவேசிக்கும் தினமே எமது முன்னோரால் வருடப்பிறப்பாகக் கணிக்கப்பட்டுள்ளது.

எனவே, சூரிய பகவானுக்கு இல்லத்து முற்றத்திலே அழகான கோலமிட்டு தீபமேற்றி அடுப்பு மூட்டிப் பாற்பொங்கல் படைப்பது முறையாகும். தொடர்ந்து குடும்பத்தார் அறுசுவை உணவு உண்டு மகிழ்ந்து மாலையில் உறவினர்களைத் தரிசித்தலும் மரபு.

பொங்கல் வழிபாட்டின் பின்னர் பெற்றோர், மூத்தோர் ஆசி பெறுதல், ஏழைகளுக்கு உணவளித்தல், தத்தமக்கு இயன்றளவு தானம் செய்தல் நற்காரியங்களாம். இவற்றோடு

புதிய வருடத்தின் பயனை பெரியவர் ஒருவர் பஞ்சாங்கம் படித்துச் சொல்ல மற்றையோர் கேட்டு அறிதலும் வழமையாகும். எல்லாவற்றிற்கும் மேலாக வருடப்பிறப்பன்று மாத்திரமல்லாது வருடம் முழுவதும் "நல்லன செய்வோம் தீயவற்றைத் தவிர்ப்போம், பிறர் மனம் புண்படும்படி நடக்க மாட்டோம், சத்தியம் கடைப்பிடிப்போம்" என்ற சங்கற்பத்தை உறுதி எடுத்துக் கொள்வோமானால் இஃது எமக்கும் வீட்டுக்கும், நாட்டிற்கும், உலகிற்குமே நன்மை பயக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இந்திர விழா

தேவேந்திரனுக்கு எடுக்கப்படும் விழா இந்திர விழா எனப்படுகின்றது. இவ்விழாவை அகத்தியர் கட்டளைப்படி முசுகுந்தன் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து சோழமன்னர் கள் வெகுசிறப்பாகத் தமது தலைநகராகிய காவிரிப்பூம்பட் டினத்தில் கொண்டாடி வந்தார்கள். இவ்விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவில்லை எனில் தமது நகரம் கடலால் கொள்ளப் படும் என்ற ஒரு எண்ணம் அவர்கள் மனதில் பதிவாகியிருந் தது. இதற்கு உதாரணமாக நெடுமுடிக்கிள்ளி மன்னன் ஆட்சி செய்தபோது அவன் இந்திர விழாவை நடாத்தத் தவறி விட்டான். அதனால் அவனது நகரமாகிய காவிரிப் பூம்பட்டி னம் அம்முறை கடலால் கொள்ளப்பட்டது என்று மணி மேகலை குறிப்பிடுகின்றது.

இந்திரவிழாவின்போது நகரமே விழாக்கோலம் பூண்டிருக் கும். பரந்த வெளிகள், மணற்பரப்புகள், சோலைகள், ஆற்றுப் படுக்கைகள் இவ்விழாவுக்கு ஏற்ற இடமாக விளங்கின. இவ் விழாவைப் பழங்கால இலக்கியங்கள் நன்றாகப் பாராட்டி யுள்ளன. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திரவிழா பற்றி வர்ணித்துள்ளன.

இவ்விழாவின் சிறப்பு யாதெனில் காவிரிப்பும் பட்டினம் கடற்கரையில் அமைந்திருந்த காரணத்தினால் இவ்விழா அழகிய காவிரி நதி கடலோடு கலக்கும் அப்பரந்த வெளி யிடத்தே நடைபெற்றது. தற்காலத்தில் இவ்விழா அன்றைய சிறப்புகளோடு நடைபெறாவிட்டாலும் ஊர்கள் தோறும் கடலாடுதல், தெப்பஉற்சவம் என்னும் வகைகளில் இடம் பெற்று வரத்தான் செய்கின்றது. காவிரி நதியின் வற்றாத வெள்ளப்பெருக்கின் வளம் கண்டு மக்கள் சித்திரை நாளில் இந்திர விழாவைப் பெரிதாகக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்றால் அது மிகையாகாது. மேலும் நீர்வளம் வற்றாத இடப்பரப்பில் மக்கள் இவ்வண்ணம் விழாக்கண்டு மகிழ வெள்ளம் வற்றும் பரப்பிலே வாழ்ந்த மக்கள் நிறைமதி நாளிலே ஒன்று கூடி ஊறல் அமைத்து விழாக் கொண்டாடி மகிழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. குரு பூர்ணிமை

**மா**தா, பிதா, குரு, தெய்வம் என்பது எம்முன்னோர் தந்த ஒரு மகா வாக்கியம். அன்னை, தந்தை, ஆசான், ஈசன் என நாம் வகைப்படுத்தி நிரைப்படுத்தி வணங்க வைக்கின்றது இவ்வாக்கியம். இங்கு ஆசானான குரு மூன்றாம் இடம் வகிக்கின்றார்.

இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் குரு பூர்ணிமை குருவுக்காகக் கொண்டாடப்படும் பண்டிகை யாகும். இதற்குரிய மாதங்களாக ஆனி, ஆடி மாதங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. வேதாந்த சூத்திரங்களை இயற்றியருளிய வியாச பகவானைக் குறித்து குருபூர்ணிமையை வியாச பூர்ணிமை என்றும் அழைப்பதுண்டு. தமிழ் நாட்டிலே பெரும் பாலும் சந்நியாசிகள் இப்பூசையைச் செய்து வருகின்றனர். வட இந்தியாவில் ஒவ்வொருவரும் தமது குருவைத் தனிப்பட்ட முறையில் வணங்கிப் பாத காணிக்கை செலுத்துவது வழக்கத்திலுள்ளது. எமது நாட்டிலும் குருவணக்கம் உண்டு.

நல்லநாட்கள், பண்டிகைத் தினங்களிலே வெற்றிலை மேல் தட்சணை வைத்து குருவானவருக்குக் கொடுத்து அவரது பாதங்களைத் தொட்டு வணங்குதல் மரபு. இது வளரும் சந்ததியினருக்கு மிக அத்தியாவசியமான பழக்கமாக இருந்து வர வேண்டும். எவன் ஒருவன் தன் குருவை அதிவிசுவாசத் தோடு நேசித்துக் கல்வி கற்கிறானோ அவனுக்கு கைமேல் பலன் கிடைக்கும் என்பது நிஜம். அத்தோடு அவனுக்குப் புரியாத உயர் விஷயங்கள் எல்லாம் புரிய வரும். எனவே குரு வணக்கம் இன ஜாதி மத பேதங்கட்டு அப்பாற்பட்ட எல்லோர்க்கும் வேண்டிய ஒரு நற்பழக்கமாகும். மேல் நாட்டவரும் இப்பண்பான பழக்கத்தைக் கொண்டுள்ளனர். இக்காலத்தில் குருபூர்ணிமை சற்று மாற்றம் பெற்று மாணவர்களால் ஆசிரியர் தினம் என்ற பெயரில் ஒவ்வொரு பாடசாலையிலும் மாணவர்களால் மிக்க மகிழ்ச்சியாகக் கொண்டாடப் பெற்று வருதல் கண்கூடு. இதற்குப்பதிலாக ஆசிரியர்களும் மாணவர் தினம் என ஒரு நாளை அமைத்து மாணவர்களைக் கௌரவப்படுத்தி வருதலை நாம் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்கின்றோம். இந்த குரு-சிஷ்ய உறவு ஒருவனது வாழ்க்கையை மேன்மைப்படுத்த மிக மிக அவசியமான தொன்றாகும்.

சிவபெருமான் தான் உலகின் முதல் குரு - அவரே உலக குரு - அவரது குரு வடிவம் தான் தட்சணாமூர்த்தம். சகல சிவன் ஆலயங்களிலும் சின்முத்திரை காட்டித் தெற்குப் புறத்தே வீற்றிருக்கும் தட்சணாமூர்த்தத்தைக் காணலாம். வடிவத்தில் குரு இளையவராகவும் அவரது நான்கு சீடர் களான சனகர், சனாதரர், சனந்தரர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் வயதில் மூத்தவராகவும் காணப்படுவர். குரு வானவர் மிக அமைதியாகச் சின்முத்திரை காட்டியவண்ணம் சிஷ்யர்களின் சந்தேகங்களைப் போக்கியருளும் பாவனை யிலுள்ளார். பரம்பொருளும் நமது அறிவும் ஒரே வஸ்து என்பதை சின்முத்திரை விளக்கி நிற்கின்றது. திருப்பெருந் துறையில் மணிவாசகருக்குக் குருவாக எழுந்தருளியவர் சிவனார். அதேநேரம் சுவாமிமலையில் முருகப்பெருமானிடம் சிஷ்யனாக அமர்ந்து பிரணவப்பொருள் அறிந்தவரும் சிவனாரே தான்.

என்னவித்தைகள் எமக்குத் தெரிந்திருந்தாலும் அவற்றை ஒரு குரு மூலம் கேட்டறிதலே முக்கியம் வாய்ந்ததாகும். குருவோடு வாழ்ந்து அவருக்குப் பணிவிடை செய்து வேதகாலத்தில் இடம்பெற்ற கல்விமுறை குருகுல வாசம் எனப்பட்டது. ஆதி சங்கரர் சிறுவயதிலேயே சகலதும அறிந்திருந்தும் தனக்கென ஒரு குருவைத் தேடி மகாதீரம் சென்றவர். கிருஷ்ண பரமாத்மாவே கீதையின் ஆசிரியராக இருந்தும் சாந்தீப முனிவரிடம் சிஷ்யனாக அமர்ந்து வித்தை கற்றார். குருவணக்கத்தையும் 3 தலைமுறையிலிருந்து வணங்க வேண்டும் என்பது சம்பிரதாயம். அதாவது குரு, பரம குரு, பரமோஷ்டி குரு. குருபரம்பரையை அறிந்து கொண்டு குருவணக்கம் செய்தல் அனுக்கிரகத்தை அளிக்கும். தட்சணாமூர்த்தத்தில் சின்முத்திரை காட்டி நிற்பதன் தத்துவத்தை நோக்கின் பெருவிரல் இறைவன்; சுட்டு விரல் உயிர்; மற்றைய மூன்று விரல்களும் மும்மலங்களையும் குறிக்கின்றன. சுட்டு விரலை மடித்து வளைத்து வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவிரலின் அடியில் தொட்டுக் கொண்டிருப்பதே சின் முத்திரை ஆகும். அதன் விளக்கம் உயிர் மும்மலங்களையும் உதறி எறிந்து இறைவனது பாதாரவிந்தங்களைச் சரணடைய வேண்டும் என்பதாகும். இத்தத்துவத்தையே எம்பிரான் சின்முத்திரை மூலம் சனாதிமுனிவர்க்கு உபதேசித்தருளினார்.

குரு உபதேசம் வாழ்க்கையில் ஒருவனை வழிகாட்ட மிகவும் அவசியமானதொன்றாகும். கிருஷ்ண பரமாத்மா அர்ச்சுனனது மயக்க நிலையைப் போக்கப் போர்க்களத்தே உபதேசம் செய்தருளினார். இந்த உபதேசத்தின் வெளிப் பாட்டு வடிவமே பகவத் கீதை ஆகும். இ∴து கலியுகத்தில் வாழும் மக்களை முன்னிட்டு கிருஷ்ண பகவானால் உப தேசிக்கப்பட்டது என்று கூறலாம். காஞ்சிக் காம கோடி மடத்தில் குருபூர்ணிமை பூசைக்கு முக்கிய இடம் தரப்பட் டுள்ளமை கண்கூடு. இங்கு முதலிடப்பூசை வியாசரை நோக்கியே செய்யப்படுகின்றது.

சுருங்கச் சொல்லின், அன்றிலிருந்து மக்களின் அறியாமை நீங்கி ஞானம் பெற எவ்வடிவிலேனும் எத்தரத்திலேனும் குருவணக்கம் இன்றியமையாதது. இதனைப் பெற்றோர் ஆசிரியர் தமது குழந்தைகட்கும் மாணாக்கருக்கும் வலி யுறுத்தி வழிகாட்டல் அவசியமாகும்.

**குரு பிரம்மா குரு விஷ்ணு**
**குரு தேவோ மஹேஷ்வரா**
**குரு ஷாட்சாத் பர ப்ரம்மா**
**தஸ்மய் ஸ்ரீ குருவே நமஹ.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6. ஆடிப்பிறப்பு

ஆடிப்பிறப்பு என்றதும்,

**ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை**
**ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே**
**கூடிப் பனங்கட்டிக் கூழும் குடிக்கலாம்**
**கொழுக்கட்டை தின்னலாம் தோழர்களே**

என்ற சோமசுந்தரப் புலவரது பாடல்தான் எல்லோரது மனக்கண் முன்னும் தோன்றும். ஆடிமாதம் மங்கல காரியங் களுக்குப் பொருந்தாது என ஒதுக்கப்பட்ட மாதமாகும். பிதிர்க் காரியங்களுக்கு உரிய இம்மாதத்திலே ஆடிப்பிறப்பன்று பிதிர்கள் தாம் வாழ்ந்து போன இல்லங்களுக்கு வருவதாகக் கொண்டு அவற்றிற்குக் கொழுக்கட்டை, கூழ், பனங்கிழங்கு முதலியன படைத்து அவர்களை மகிழ்வித்து ஆசி பெறும் எம்முன்னோர்களது வழக்கம் இன்றும் எம்மவரிடையே இருந்து வருகின்றது.

பூவுலகில் மக்களுக்கு அமையும் ஒருவருடம் தேவர்களுக்கு ஒரு நாளாக அமைகின்றது. எனவே தைமுதல் ஆனி மாதம் வரையுள்ள 6 மாதங்களும் தேவர்களுக்குப் பகற்பொழுதாக அமைகின்றது. இக்காலப் பகுதி உத்தராயணம் என்றழைக்கப் படுகின்றது. அதே போன்று ஆடிமாதம் முதல் மார்கழி மாதம் வரையுள்ள 6 மாதங்கள் தேவர்களுக்கு இரவுக் காலமாக அமைகின்றது. இக்காலம் தட்சணாயணம் என அழைக்கப்படுகின்றது. ஆடிமாதம் தேவர்களுக்கு இராப் பொழுது ஆரம்பிக்கும் காலமாகும்.

பிதிர்க்காரியத்துக்குரிய ஆடி மாதத்திலே தான் கற்புக்கரசி யாம் கண்ணகிக்கு விழா எடுத்து நாடு நல்வளம் கண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. ஆடி என்னும் இயக்கன் ஒருவன் தன் காதலியிடம் தூது அனுப்பி அதன் பயனாய்த் துயர் நீங்கப் பெற்ற மாதம் ஆடிமாதம் என ஒரு மரபு வழக்கமும் உண்டு. நமது முன்னோர்கள் "ஆடி விதை தேடி விதை" என்று பாடி உழைத்து ஆடிமாதத்திலே நல்வளம் கண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிப் பெருக்கு

ஆடி மாதத்தில் ஆறுகளில் முதன் முதலாக நீர் பெருகி வரும். அப்போது அப்புதுப் புனலை இந்துக்கள் வரவேற்றுக் களிப்புடன் கொண்டாடி விழா எடுத்தமை மரபு. இவ்விழாவை ஆடிமாதம் 18 ஆம் நாள் மிகக் கோலாகலமாக "ஆடிப் பெருக்கு" என்று கொண்டாடி மகிழ்ந்தனர். அன்றைய தினம் ஆண், பெண் குழந்தைகள் யாவரும் இனிய உணவுப் பண் டங்களைத் தயாரித்து ஆற்றங்கரைக்கு எடுத்துச் சென்று அங்கு நீராடி அவற்றை உண்டு மகிழ்வர். இதனை புனலாடல், புது நீர் வரவேற்கை எனத் தமிழ் இலக்கியங்கள் வர்ணித்துள் ளன.

**தமிழ்நாட்டில், ஆடிப்பெருக்கன்று தாலிநூலை பிரித்து கட்டுவது சூத்திரரது வழக்கம். ஆற்று நீர்பெருகுவது போல் பெண்களின் தாலி பலமும் பல்கிப்பெருகும் என்பது நம்பிக்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. ஆவணி ஓணம்

**27** நட்சத்திரங்களுள் ஓண நட்சத்திரம் திருவோணம் எனப் பெயர்பெறும். இஃது திருமாலுக்குரிய விசேட நட்சத்திரமானாலும் சைவர்களும் இந்நட்சத்திரத்தைக் கொண்டாடுவது வழமை. ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு என்ற பொருளும் உண்டு. இதனை சேது புராணம் "கங்கை யாதி ஓண நீர்" என்கின்றது. ஓண நன்னாளிலே இந்துக்கள் புனித நீராடிச் சிவனையோ திருமாலையோ வழிபடலாயினர். ஆவணி மாதப் பூரணையுடன் கலந்த நாள் திருவோண விழா நாள் ஆகும். இவ்விழா தமிழ்நாட்டிலும் பெரும்பாலும் கேரளத்திலும் சாதி, மத, இன பேதமின்றி மிகச் சிறப்பாகப் பண்டு தொட்டுக் கொண்டாடப்பட்டு வருதல் கண்கூடு. இந் நாளைச் சிறுபோக அறுவடை நாளாகவும் கொண்டாடி வருகின்றனர். சைவப் பெருமக்கள் அறுவடையின் போது தமக்குக் கிடைத்த பொருட்களைக் கொண்டு அடியார்களுக்குத் திருவமுது செய்தலும் வழமையாக இருந்தது. திருவோணத்திலே கொடியேற்றமும் கிருத்திகையில் தீர்த்தோற்சவமும் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இப்புனித நன்னாளிலே வீட்டு முற்றத்தில் ஓரிடத்தை மெழுகி அதன்மேல் மலர்களைத் தூவிப் பூந்தரை அமைப்பர். பின்னர் சூரியோதயத்திற்கு ஏழரை நாழி முன் ஓண நட்சத்திரம் கூடி இருக்கையில் பெண்கள் நீராடி முதலில் மகேஸ்வர பூசை செய்வர். பின்னர் தும்பை மலரால் சிவனாருக்கு அர்ச்சித்துத் தேங்காய் அடைப்பலகாரம் முதலியவற்றை நிவேதித்து வழிபடுவர்.

இந்நாட்களில் ஆண்களும் பெண்களுமாகப் பலவித ஆடல் பாடல்களில் பங்குபற்றி மகிழ்வர். பெண்கள் கை கொட்டிக்களி என்னும் விளையாட்டையும் ஆண்கள் ஓணத் தல்லு என்னும் வீர விளையாட்டையும் ஆடி மகிழ்வர். இவற்றோடு வாரோட்டம், கிளித்தட்டு, தலைமைப்பந்து ஆகிய விளையாட்டுக்களிலும் பங்கு கொள்வர். மலையாள மக்கள் இந்நாளில் புத்தாடை அணிவதோடு அவர்களுக்கே உரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைக்காயில் பலவித உண்டிகளைச் செய்து படைத்து உண்டு மகிழ்வர். நேந்திரம் பாயாசம் என்பது அவர்களது முக்கிய தயாரிப்பாகும். ஏழைகளுக்கு இயன்றளவு அன்ன தானம் வழங்குதலும் வழமை. ஓணநாளைத் தமது புது வருடத்தின் முதல் நாளாகக் கொண்டாடுவர்.

இந்தவகையில் சைவ வைணவ மக்களுக்கு ஓணப் பண்டிகை சமய, பண்டிகை நாளாக மிகச்சிறப்பாகக் கொண் டாடப்படுவது கண்கூடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. தீபாவளி

தீபாவளி என்ற சொல்லுக்கு தீபங்களின் வரிசை என்பது பொருள். உலகிலே எல்லா இந்துக்களும் விரும்பிக் கொண் டாடும் பண்டிகை இதுவாகும். மிகப் பழைய காலம் தொட்டே இத்தீபாவளிப் பண்டிகை தமிழ்மக்கள் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்துள்ளது.

ஐப்பசி மாதம் கிருஷ்ண பட்ச சதுர்த்தசி கூடிய அன்று இரவு விடியுமுன் உதயகாலத்தில் தீபாவளி புண்ணிய காலம் இடம்பெறும். மற்றுமொரு விளக்கத்தின்படி ஐப்பசிமாத அமாவாசைக்கு முன் இடம்பெறும் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை அதனை அடுத்த கார்த்திகை, சுக்கில பிரதமை ஆகிய இந்த நான்கு நாட்களும் தீபாவளி சம்பந்தப்பட்ட புண்ணிய காலங்களாகும்.

மரபு வழி வந்த வழக்கத்தின் படி இக்குதூகலமான பண்டிகையன்று தீபங்கள் ஏற்றல், நல்லெண்ணெய் ஸ்நானஞ் செய்தல், கோடி உடுத்தல், ஆலய தரிசனம், அறுசுவை உண்டிகளைச் சுற்றம் சூழ உண்டு மகிழ்தல், தான தருமம் செய்தல் ஆகிய நற்காரியங்களை யாம் முறைப்படி செய்ய வேண்டும். இந்நாளிலே மது அருந்துதல், உயிர்களைக் கொல்லல், ஊன் உண்ணல் ஆகிய பாவச் செயல்கள் விலக்க வேண்டிய செயல்களாம். பண்டிகை கொண்டாடும் போது எம்மிலும் வலிமை குறைந்த சீவன்களை நாம் வருத்து தல் கூடாதல்லவா! வதைத்தல் ஆகாது.

இந்துக்களது வாழ்க்கைமுறையைப் பொறுத்தளவில் சமயம்வேறு, வாழ்க்கை வேறு என்று கூற முடியாது. சில சந்தர்ப்பங்களை நாம் கூர்ந்து பார்த்தால் சமயத்துக்காகவே நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று எண்ணத் தோன்றும். மறுபக்கத்தைப் பார்த்தால் எமது சமயம் விழாக் கள் பண்டிகைகள் யாவும் எமது வாழ்வை நெறிப்படுத்தும் முகமாகவே அமைந்துள்ளன என்பதையும் நாம் அறிந்து கொள்ள முடியும்.

தீபாவளிப் பண்டிகை எமக்கு நல்ல உண்மைகளைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் எடுத்து தீப ஒளியில் காட்டுகின்றது. இப்பண்டிகை எமது வாழ்வின் இருளை நீக்கி ஒளியைக்கொடுப்பது. அதாவது பாவத்தை ஒழித்து புண்ணியத்தை அளிப்பது என்னும் தத்துவத்தை உணர்த்துகின்றது. "நான்" என்னும் அகந்தையுடன் வாழ்ந்த நரகாசுரனைக் கிருஷ்ண பரமாத்மா அழித்து நல்லன வாழும் தீயன அழியவே செய்யும் என்னும் உண்மையைத் தேவர்கட்கும் முனிவர்கட்கும் மக்களுக்கும் அறிய வைத்தார்.

"நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் தருமத்தை நிலைநாட்டவும் காலங்கள் தோறும் நான் தோன்றுகின்றேன;" என பகவத்கீதையில் உரைத்தபடி இந்த நரகாசுரவதம் இடம்பெற்றுள்ளதை யாம் காணலாம். இத்தினத்தை மக்கள் தீபங்கள் ஏற்றி இல்லத்தை அழகு படுத்திக் கொண்டாடினர். மனம் குதூகலிக்க ஒளி பிறக்க ஒலி எழுகின்றது. இசை பிறக்கின்றது. தர்மம் தளைக்க மனம் நிறைவது உண்மை.

இப்பண்டிகையைக் கொண்டாடும் முறையை நோக்கின்:- இத்தினத்திலே அருணோதயத்தில் எழுந்து தீபம் ஏற்றி அதில் இலக்குமி தேவியைத் தியானிக்க வேண்டும். எண்ணெய், பழம் பாக்கு, வெற்றிலை தின்பண்டங்கள் ஆகியவற்றை மெய்யன்போடு இலக்குமி நாராயணனுக்கு நிவேதித்தல் வேண்டும். இலக்குமியின் அருளைப்பெறும் வண்ணம் மனைவி அல்லது தாயாரின் கையால் எண்ணெய் இட்டுக் கொள்ள வேண்டும்.

அந்த எண்ணெயில் இலக்குமி வாசம் செய்வதாகவும் அன்று நீராடும் வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் கூறியுள்ளன. இப்பண்டிகையன்று தீபங்கள் ஒளிரத் தென்றலில் புதுமை மணம் கமழ மஞ்சள் மாக்கோலம் கண்ணைக்கவர அகல்விளக்கின் தீப ஒளி காற்றில் கண்சிமிட்ட இயற்கையில் வளம் பிறக்க மானுடம் ஒளிர மனதில் கொண்ட சஞ்சலம் பறந்தோடி விடப் பட்டுப்புடவை சலசலக்க நாம் தீபமங்கையை ஒளிமாதாவை இரு கரம் நீட்டி வரவேற்று அவள் இன்னருளைப் பெறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொன்மைச் சிறப்பு நிறையப் பெற்ற எமது இந்து மதத்தின் விழாக்கள், பண்டிகைகள், விரதங்கள் ஆகியவற்றின் பின்னால் ஒவ்வொரு வரலாற்றுக் கதை அமைவது வழமை. இந்த வகையில் தீபாவளிப் பண்டிகையின் பின் உள்ள வரலாறு பின்வருமாறு அமைகின்றது.

நில மகளுக்கும் விஷ்ணுவுக்கும் பிறந்தவன் நரகாசுரன். இவன் கொடியவன்; துட்டன். ஆனால் கடுந்தவம் புரிந்து பல அரிய வரங்களைப் பெற்றிருந்தான். அவற்றில் ஒன்று தந்தையும் தாயுமே தன்னை அழிக்க வேண்டும் என்பதாம். இத்தகைய நரகாசுரன் தன்னுடைய அதிகார பலத்தால் தேவர், முனிவர், மனிதர் ஆகியோருக்குக் கொடுந் துன்பங் கள் விளைவித்து வந்தான்.

தனது தவபலத்தால் பாதாளம், பூவுலகம் அனைத்திலும் வாழும் மக்களைத் துன்புறுத்தினான். இத்தோடு தேவருலகையும் தன் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வந்து தேவர்களையும் துன்புறுத்தியதோடு தேவேந்திரன் தாயாரின் மகர குண்டலங்களையும் திருடித் தன் ஆதிக்கத்தைத் தேவர்கள் மீதும் செலுத்தத் தலைப்பட்டான். இதனால் பெருந்துன்பம் கொண்ட தேவர்களும் முனிவர்களும் கருணைக்கடலாம் கிருஷ்ண பகவானைச் சரணடைந்தனர். தம்மைக் காத்தருளுமாறு பகவானைத் துதித்து வேண்டினர்.

தம்மைப் பணிந்து துதித்த தேவர்களையும் முனிவர்களை யும் காக்கத் திருவுளம் கொண்டார் கிருஷ்ண பரமாத்மா. நரகாசுரனைக் கொன்று அவர்களைக் காப்பதாக அபயளித்த கிருஷ்ண பரமாத்மா நரகாசுரனுடன் சமர் புரியத் தனது தேவியாகிய சத்தியபாமையுடன் புறப்பட்டார். அவரது சேனை கள் பின் தொடர்ந்தன. இருபக்கச் சேனைகளும் முட்டி மோதின; அழிந்தொழிந்தன; இறுதியில் பகவானும் நரகாசுர னும் நேரடியாக மோதினார்கள். தான் பெற்ற வர பலத்தால் அசுரனும் பகவானோடு உக்கிரமாக மோதினான். அவனது அஸ்திரங்கள் பகவானையே சிறிது நேரம் திக்கு முக்காட வைத்தன. பகவான் சோர்வுற்றார். இந்த நேரத்தில் சத்தியபாமை கைகொடுத்தாள். தேவி தனது கணைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரன் மீது சரமாரியாகப் பொழிந்தாள். அசுரன் திக்கு முக்காடினான். அவன் தேகத்திலிருந்து குருதி பெருகியது. அசுரனை இந்நிலையில் கண்ட பகவான் சமயத்தைப் பயன் படுத்தித் தன் சக்கராயுதத்தை அவன் மீது வீசினார். அது அவன் உடலைப் பிளந்தது.

உயிர் பிரியும் தறுவாயில் நரகாசுரன் தனது தவறை உணர்ந்தான். அவனது ஆணவம் அகன்று அகந்தையும் அழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. திருவிளக்கீடு

இஃது கார்த்திகை மாதத்தில் இடம்பெறும் திருக்கார்த் திகைத் தினத்திலே இல்லங்களிலும் ஆலயங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இது ஒரு ஜோதி வழிபாடா கவும் அமைகின்றது. இவ்விடத்தில் இந்துக்களின் மத்தியில் பண்டு தொட்டு நிலவி வரும் விழாக்களை நோக்கின், சூரிய வழிபாடு, கோமாதா வழிபாடு, நாக வழிபாடு, விருட்சவழி பாடு, அக்கினிவழிபாடு, இயற்கை வழிபாடு எனக் குறிப்பிட லாம். இவ்வழிபாட்டு முறைகள் காலங் கடந்தவை. எப்போது எவரால் ஆரம்பித்து வைக்கப்பட்டவை என்று உறுதியாகக் கூறிவிட முடியாது.

இவ்விழாக்களுள் மேன்மை பெற்றது தீ வழிபாடு. அதாவது அக்கினி வழிபாடு. அக்கினி இறையம்சம் நிறைந்தது. அக் கினியால் ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும்; இத் தீ வழிபாட்டோடு சம்பந்தப்பட்டதே திருவிளக்கீடு ஆகும்.

ஐம்பூதங்களில் தீ ஒன்றாகும். இது முதன்மை வாய்ந்ததா கும். இதுவே மற்றைய நான்கினையும் யாம் அறிந்து கொள்ள வழிவகுக்கின்றது. இறைவன் எமக்களித்துள்ள கோடானுகோடி இன்பங்களுள் ஐம்பூதங்கள் முக்கியம் வாய்ந் தவை. அறிவுச்சுடர், அறியாமையை அதாவது அக இருள் அகற்றுகையில் தீபச் சுடர் புற இருளை அகற்றுதல் கண்கூடு. வள்ளலார் ஜோதி வழிபாடு பற்றிப் போற்றிப் பாடுகையில் "அருட் சோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்" என்று பாடியிருத்தல் இங்கு குறிப்பிடத்தக்கது.

திருவிளக்கீடு, திருக்கார்த்திகை விரதம், குமராலய தீபம், சர்வாலய தீபம் யாவும் அடுத்தடுத்து நிகழும். பஞ்ச பூதங் களில் ஒன்றான ஜோதிவழிபாடு முத்தியைத் தரவல்லது. பஞ்ச பூதங்களை ஆலயங்களோடு தொடர்புபடுத்திக் கூறப் படும் தலங்களுள் திருவண்ணாமலை தீயோடு தொடர்பு டயது. திருவண்ணாமலை அக்கினித்தலமாகும். இறைவனைச் சோதி வடிவில் வழிபடும் உற்சவம் திருக்கார்த்திகையாகும்.

கார்த்திகைக்கும் முருகப்பெருமானுக்கும் தொடர்புண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகைக்கும் முருகப்பெருமானுக்கும் தொடர்புண்டு. சிவமைந்தன் ஆறு குழந்தைகளாகச் சரவணப்பொய்கையில் தோன்றி கார்த்திகைப் பெண்களால் பாலூட்டிச் சீராட்டி வளர்க்கப்பட்டமையால் முருகப்பெருமான் கார்த்திகேயன் எனும் நாமத்தையும் பெற்றான். முருகப்பெருமானோடு மாத்திரமின்றிச் சிவன், விஷ்ணு, பிரம்மா, கார்த்திகைப் பெண்கள் ஆகிய யாவரோடும் தொடர்புடையது இத்தினம்.

தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி எனும் கொடிய அரக்கர்கள் பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் அமைக் கப்பெற்ற பறக்கும் கோட்டைகளுள் அமர்ந்து கொண்டு ஆணவ மயக்கத்தில் தேவர்களோடு பொருத போது சிவனார் தனது புன்னகையொன்றினால் அவர்களையும் அவர்களது முப்புரங்களையும் எரிசெய்த தினமும் இதுவாகும்.

திருவிளக்கீடன்று எண்ணெய் விளக்கு, நெய்விளக்கு, மாவிளக்கு, சொக்கப்பனை ஏற்றுவதும் மரபு. பெரும்பாலும் பெண்கள் தினை அரிசிமா எடுத்துத்தேன், சக்கரை கலந்து பிசைந்து அகல் விளக்குகள் செய்து விளக்கின் விளிம்புகளில் குங்குமம் பூசி அதனை அழகுபடுத்தி அதனுள் நெய்விட்டுத் திரியிட்டு விளக்கேற்றிச் சுவாமி முன் நிரையாக வாழை இலையில் அல்லது தட்டங்களில் அடுக்கி வைத்து வழிபடுவர்.

குமராலய தீபமன்று முருகனாலயத்தில் இம்மாவிளக்குப் பூசை இடம்பெறும். அப்போது ஆலயமே ஒளிமயமாகத் தோன்றும். இதுஒரு பக்தி நிரம்பிய கண்கொள்ளாக் காட்சி யாக அமையும்.

திருக்கார்த்திகை விளக்கீடன்று ஆலய முன்றிலிலே உயர மான பனை, தென்னை அல்லது கமுக மரக்குற்றிகளை நாட்டி அதன் நுனியில் காய்ந்த பனை அல்லது தென்னோலை யைப் பெரிய பந்தம் போல் கட்டி அதில் தீபமேற்றி விளாச விட்டு எரிப்பர். இவ்வொளி நீண்ட தூரத்திற்குத் தெரியும். நீண்ட நேரத்திற்கு நின்றெரியும்.

ஆலயத்தில் தீபமேற்றுதலின் உயர் பலனை விளக்கும் ஒரு பூர்வ கதையை இங்கு நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கார்த்திகை நாள். அவ்விளக்கிலுள்ள நெய்யை உண்ணும் பொருட்டு ஓர் எலி அங்கு சென்றது. அதனருகே எலி சென்றபோது தற்செயலாக அச்சுடர் எலியின் முகத்தில் சுட்டுவிட்டது. இதனால் எலி பதைபதைத்து ஓடியது. அது ஓடியபோது திரிமேல் அதன் உடம்பு பட்டு திரி தூண்டப் பெற்று தீபம் முன்னரிலும் பிரகாசமாக எரிய ஆரம்பித்தது. ஆலயத்துள் அதி பிரகாசம் நிறைந்தது. மங்கியிருந்த தீபத்தை அதிபிரகாசமாக ஒளிரச்செய்தது அந்த எலி. தெரிந்தோ தெரியாமலோ இச்சம்பவம் நடைபெற்ற போதும் இதன் பலனாக இதே எலி மறுஜென்மத்தில் அதி பராக்கிரமமுடைய மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்து அரச போகம் அனுபவித்தது. அறியாமலே தீபத்தின் திரியைத் தூண்டிய எலிக்கு இவ்வுயர் பலன் கிடைத்ததென்றால் மன விருப்போடு திருவிளக்கேற்றும் தொண்டினை ஆலயத்தில் செய்வோர்க்கு எத்துணை உயர்பேறு கிடைக்க உண்டு என்பதை யாம் சற்றுச் சிந்தித்துப் பார்த்துச் செயற்பட வேண்டும். ஆலயத்தில் மாத்திரமின்றி இல்லத்திலும் சுவாமி அறையில் உரிய நேரத்தில் ஆசாரமாகத் தீபமேற்றும் வழக்கத்தை ஒவ்வொருவரும் பின்பற்றுதல் மிக அவசியமானதொன்றாகும்.

விளக்கீடு அன்று விளக்குகளை ஏற்றுவதற்கென்று ஒரு முறை உண்டு. முதலில் விளக்குகள் ஏற்றப்படும் இடம் ஆசாரமாகத் தூய்மையானதாக இருக்கவேண்டும். திரிகள் அமைக்க மஞ்சள் அல்லது வெள்ளை நிற நூல்கள் உகந்தது. நெய், எள் எண்ணெய், தேங்காய் எண்ணெய் கொண்டு தீபமேற்றப்படல் வேண்டும். விளக்குகள் ஐந்து அல்லது மூன்று முகங்கள் கொண்டனவாக அமைந்துள்ளன. ஐந்து முகங்களுக்கும் திரியிட்டுத் தீபமேற்றுதல் மிகச் சிறந்ததாகும்.

**இரும்புசெய் விளக்கின் ஈர்ந்திரிக் கொளீஇ**
**நெல்லும் மலரும் தூஉய்க் கைதொழுது**

**- நெடுநல்வாடை**

இவற்றால் தீபவழிபாடு தொன்று தொட்டுக் கொண்டாடப் பெற்று வருவது புலனாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ∴து பற்றி இன்னோர் விளக்கமும் உண்டு. பிரம்ம விஷ்ணுக்கள் அடிமுடி தேடிய போது சிவபிரான் தமக்குக் காட்டிய அருட்பெருஞ் சோதி வடிவத்தை மீண்டும் காட்டி யருள வேண்டும் என அவர்கள் பிரார்த்தித்த போது சிவனார் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டுவோம் என்றருளினார். அச்சோதியைக் குறிப்பதற்காகவே கார்த்திகை மாதக் கார்த்திகையில் எங்கும் ஒளிமயமாய் விளக்கேற்றப் படுகின்றது என்று சொல்லப்படுகின்றது.

எமது தேசமானது ஒரு இல்லம்போன்றது. அதன் கண் ணுள்ள எமது உள்ளம் ஒரு பாத்திரம் எனக் கொள்ளலாம். அதில் உணர்வாகிய நெய்யை ஊற்றி உயிர் என்னும் திரியை இட்டு அறிவுச் சுடரை ஏற்றி அன்பு என்னும் குச்சி யால் தூண்டிக்கொண்டிருக்க வேண்டும். இவ்வாறு செய்யு மிடத்து ஆணவம் என்னும் மாய இருள் அகலும் சிவதரிசனம் கிடைக்கும்.

**உடம்பெனும் மனையகத்து உள்ளமே தகளியாக**
**மடம்படும் உணர்நெய்யூட்டி உயிரெனும் திரி மயக்கி**
**இடம்படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்**
**கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.**

இறைவன் சோதி வடிவினன்; "ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதி" என்றும் "சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே" என்றும் "பாசம் பரஞ்சோதி", "கேழில் பரஞ்சோதி", "மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே", "கற்பனை கடந்த சோதி" எனவெல்லாம் எம்பெருமா னின் ஒளி வடிவினைப் பாடாத அருளாளர்கள் இல்லை யென்றே கூறலாம்.

விளக்கில் இறைவனை இருத்தி வணங்கிக் கொண்டாடும் விழா கார்த்திகை விளக்கீடு. தமிழ் நாட்டிலே திருவண்ணா மலை உச்சி மீதும் அடிவாரத்திலும் விளக்குகள் ஏற்றி அக்காட்சி கண்ட பின்னரே விரதிகள் உணவு உண்ணும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்தைக் கடைப்பிடிக்கின்றனர். அருணகிரியாக நின்று கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரத்திலே அம்மலை மீது ஒளி வீசும் தீபத்தை வழிபடுவோருக்கு உயர் பலன் அருளப்படுவதாக நம்பிக்கை.

**அருட்சோதி தெய்வம் எனை ஆண்டுகொண்ட தெய்வம்**

## 10. ஸ்ரீ சங்கர ஜயந்தி

ஒருமுறை கைலைநாதர் ஆதிசங்கரராக அவதரித்ததாக வரலாறு ஒன்றுண்டு. இந்த அவதாரத்தின் போது தான் ஆதிசங்கரர் அவைதிக மதங்களை அகற்றி வைதிக சமயங்களான சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய 6 மதங்களையும் ஷண்மதங்கள் எனப் பிரதிஷ்டை செய்தார். அத்வைத மதத்தை நிலை நாட்டி ஸ்ரீ காஞ்சியில் வாழ்ந்து சித்தியும் அடைந்தார். தனக்குச் சிஷ்ய மடங்களாக 4 திக்குகளிலுய நான்மடங்களை ஏற்படுத்தியும் வைத்தார். இவரது ஜயந்தி தினமே சங்கர ஜயந்தி எனப் போற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பகுதி III

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துக்களுக்குத் தேவையான சில விளக்கங்கள்

இறைவனது சிருஷ்டிகளில் மனிதப்பிறவி மிகச் சிறந்தது. இப்பிறவியின் இலட்சியம் இறைவனை வழிபட்டு மோட்ச மடைதல். இது பற்றி போதிக்கும் சமயம் சைவசமயம். சைவம் சித்தாந்த முத்தி பற்றிக் கூறியுள்ளது.

சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவனாவார். சைவசமய மார்க்கங்களின்படி, சைவர்கள் சமய தீட்சைகளை முறைப்படி பெற்று உண்மைச் சரியை, கிரியை, யோகங்களைப் பின்பற்றி சலோபாதிபதங்களைப் பெற்று சிவஞானத்தால் சிவத்துடன் இரண்டறக் கலத்தலாகிய சித்தாந்த முத்தியைப் பெறுகின்றனர். இதன்வழி மிக நீண்டதாகும். வழியிலே தடைகள் பலப்பல.

சிறந்த சமய ஆசாரமுடைய சைவர்கள் புலால் உண்பதில்லை. புலால் உண்பது பஞ்சமாபாதகங்களில் ஒன்று என்பது இவர்கள் கருத்து. இவர்கள் சிவதீட்சைகளில் சமய தீட்சை பெற்று விதிப்படி சிவசின்னங்களில் ஒன்றான விபூதி, உருத்திராக்கம் அணிந்து உரிய காலத்தில் சந்தியா வந்தனம் முடித்துச் சிவாலய தரிசனம் செய்து சிவனடியார்களை வணங்கி சிவ காருண்ணியம் பேணுதல் வழமையாக இருந்து வந்தது. இதுவே முறையுமாகும். சமயங்களின் சடங்குகள் அவ்வச் சமயத்தாரால் உரிய முறையில் பின்பற்ற வேண்டியது மிகமுக்கியம் வாய்ந்ததாகும். அப்போது தான் அவர்கள் அவ்வச் சமயத்திற்கு உரியவர்களாவதுடன் அச் சடங்குகளுக்கும் உரித்தானவராவர். சைவ சமயத்தைப் பொறுத்த மட்டில் சமய தீட்சை பெற்ற பின்னரே ஒருவர் திருநீறு அணிய உரித்துடையவராவர். அறிவுடையோர் எனப் படும் மகான்களால் ஒப்புக்கொள்ளப்பட்ட கடவுள் வழிபாடு, தாய் தந்தையர் வழிபாடு, குரு வழிபாடு முதலியன சைவ சமயத்தால் வலியுறுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு முறைகளில் செபம் செய்தல் ஒன்று. அப்போது உருத்திராக்க மாலையிலுள்ள மணிகளை முன்னும் பின்னும் தள்ளிக் கணித்தபடி செபிக்க வேண்டும். சைவ அனுட்டானம் செய்வதற்குரிய நேரங்கள் காலையில் சூரியன் உதிப்பதற்கு முன்னரும், நண்பகலில் சூரியன் உச்சியிலிருக்கும் போதும் மாலையில் சூரியன் பாதி மறையும்போதுமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவக் கிரியைகள்

சைவக்கிரியைகள் பாவனை – கிரியை – மந்திரம் என மூன்று வகைப்படும். பாவனை என்பது எண்ணம்; கிரியை என்பது முத்திரையுடன் செய்யப்படும் செய்கை; மந்திரம் என்பது எண்ணத்துக்கேற்ற கிரியைகளின் பயன்களைத் தரவல்ல சொற்றொடர். கிரியைகள் செய்யும் போது அவைக்கேற்ற பாவனையுடனும் செய்யப்படல் வேண்டும். பாவனையற்ற கிரியைகள் பயனற்றவையாகும். பாவனை, மந்திரங்கள் அற்ற கிரியைகள் தேவர்களை மகிழ்விக்காது. அசுரர்களையே மகிழ்விக்கும். இதனால் புண்ணியத்துக்குப் பதிலாக பாவமே வளரும். எனவே கிரியைகளை ஆற்றும் போது அனுட்டான விதிகளைப் பின்பற்றியாக வேண்டும். ஒரு சைவனுக்கு வைதிக சந்தி, சைவ சந்தி என இருவகை உண்டு. இவற்றுள் வைதிக சந்தியைத் தான் ஒரு போது விட்டாலும் சைவசந்தியை சைவர்கள் செய்யாமல் விடலாகாது.

மேலும், திருமணம், சிராார்த்தம் போன்ற கிரியைகளைச் சைவக் குருக்களே செய்தாக வேண்டும் என்பது அனுட்டான விதி. பொருளைப் புரியாமல் மந்திரங்களை ஓதுதல் மிகப்பெரிய தவறாகும். சந்தியா தேவதை என்னும் போது அது சிவ சக்தியையே குறிக்கின்றது. அது அபரை, பராபரை, பரை என்னும் பேதங்களோடு விளங்குகின்றது. ஆத்மீக வளர்ச்சிக்கு வாழ்வில் தினமும் சந்தியாவந்தனம் போன்ற சைவ அனுட்டானங்கள் மிக அவசியமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**"சலம்பூவொடு தூமம் மறந்தறியேன்
தமிழோடிசை பாட மறந்தறியேன்"** ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய வழிபாடு

இயற்கை முழுவதும் அழகின் வடிவம். அத்தகைய இடங்களைக் காணும்போது எமக்கு உயர்ந்த எண்ணங்கள் மனதில் உருவாதல் இயற்கை. இத்தகைய இடங்கள் காலப்போக்கில் அருட்சக்தியை நல்குகின்றன. இயற்கையின் எழிலும் புனிதமும் உயர்ந்த எண்ணங்களும் ஒன்று சேர்ந்து குறிப்பிட்ட இடங்கள் புண்ணிய இடங்களாக/ஸ்தலங்களாக உருவாகின்றன. அத்தோடு ரிஷிகள், முனிவர்கள் காலங் காலமாக வாழ்ந்த இடங்களும் புண்ணிய ஸ்தலங்களாக மாறியுள்ளன. இவர்களது வாசஸ்தலங்கள் புண்ணியஷேத் திரங்களாக மாறியுள்ளன. இவையே ஆத்ம சாதகர்களுக்கு உரிய சூழலாக அமைகின்றன. நல்ல சூழல் ஒரு மனிதனை உயர்நிலைக்குச் செல்ல வாய்ப்பளிக்கும் தன்மை கொண்டது. இக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டே பாரதத்தில் தமிழ்நாட்டில் பல புண்ணிய தலங்கள் உருவாகின. எமது நாட்டிலும் அவ்வண்ணம் நிகழ்ந்தன. இவற்றுள் சமய அருளா ளர்களால் பாடப்பெற்ற தலங்களும் அமையலாயின.

வேதகாலத்தில் ஆலயங்கள் இருந்ததில்லை. இயற்கை சூழ்நிலைகள் வழிபாட்டு இடங்களாக அமைந்தன. வேள்வித்தீ யின் மூலம் வழிபாடுகள் இடம்பெற்றன. நதிக்கரைகளும், மரச்சோலைகளும் வழிபாட்டு இடங்களாக அமைந்தன. தொடர்ந்து பெருவிருட்சங்கள் நாளடைவில் ஸ்தல விருட்சங் களாயின.

**ஆகம காலம்** - ஆகமங்களை அனுசரித்தவர்கள் ஆலயங்களை ஆகம விதிப்படி அமைத்தனர். மலைகளைக் குடைந்து மன்னர்கள் குகைக்கோயில்கள் அமைத்தனர். இதனைவிட ஆன்றோர்கள் மானுட சரீரத்தை ஒரு ஆலய மாகக் கொண்ட ஒரு கோட்பாட்டையும் கொண்டிருந்தனர். அண்டமெங்கும் வீற்றிருக்கும் ஈசன் மானுட சரீரத்திலும் வீற்றிருக்கின்றார் என்பது அவர்களது கோட்பாடு. ஆலயங்கள் உலகிலும் உடலிலும் உள்ள தத்துவங்களை விளக்கி நிற்கின்றன. ஆலயம் என்பது ஆகம விதிப்படியே கட்டப்படல் வேண்டும் என்பது ஒரு கோட்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் என்றதும் அதன் ராஜகோபுரம் தான் எமது மனக்கண் முன் தோன்றும். இதன் மறுபெயர் ஸ்தூல லிங்கம். நெடுந்தூரத்துக்கு அப்பால் இருந்தும் காணக்கூடிய இக்கோபுரம் சூழலில் உள்ளோருக்கு இறைவன் நினைவை சதா ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும். தவறுகள் செய்யும் போது அவர்களைத் தயங்கவைக்கும். அது எட்ட இருந்து அருள்புரியும் ஒரு தெய்வ சொரூபம். ஆலயத்தில் அமைந்த மற்றைய கோபுரங்களை விட ராஜகோபுரம் மிக உயர்ந்த தாக அமைந்திருக்கும். அதன் அமைப்பில் தேவர்கள், முனிவர்கள், மனிதர், விலங்குகள், பறவைகள், விருட்சங்கள் ஆகியவற்றின் வடிவங்களைக் காணலாம். இவை பிரபஞ்சத்தின் பிரதிபலிப்பே என்று கூறலாம். கூர்ந்து நோக்கும் போது இச்சிற்பங்கள் இயற்கையிலுள்ள நாகரிகம், அநாகரிகம் ஆகிய இரண்டையுமே சுட்டி நிற்கின்றன. ராஜ கோபுரத்தின் அமைப்பில் உள்ள வாயில்கள் 3,5,7,9,11 ஆக அமைந்து ஒவ்வோர் தத்துவத்தை விளக்கி நிற்கும். 3 வாயில் கள் மூவகை அவஸ்தைகளையும் (ஜாக்ரத, சொப்பன, சுஷூரப்தி) 5 வாயில்கள் ஐம்பொறிகளையும், 7 வாயில்கள் இவற்றோடு மனம், புத்தி இரண்டையும் சேர்த்துக் குறிக்கின் றன. 9 வாயில்கள் இவற்றோடு சித்தம், அகங்கரம் ஆகிய வற்றையும் சேர்த்து அமைகின்றன. சுருங்கச் சொல்லின் கோபுரத்தின் வாயில்கள் தத்துவங்களின் சின்னங்களாக அமைகின்றன.

இத்தனை வாயில் அமைந்தும் தரைமட்டத்திலே உள்ள வாயில் தான் அடியார்கள் ஆலயத்துள் பிரவேசிக்க உதவுகின்றது. இதன் மூலம் நாம் விளங்கிக்கொள்ளக்கூடிய உண்மை ஒன்றுள்ளது. புறக்காரணங்கள், அகக்காரணங்கள் எம்மிடமிருந்தும் மனம் என்னும் கரணம் ஒன்றே தான் இறைவனை நாட எமக்குப் பயன்படுகின்றது.

இராஜகோபுரத்தைத் தாண்டி உள்ளே காட்சி தருவது பலிபீடம். பலிபீடம் தனது பெயருக்கேற்ப நாம் வணங்கும் போது அவ்விடத்திலேயே எமது கீழான எண்ணங்களை பலியிட்டு உயர்ந்த எண்ணங்களை மனதில் கொண்டு வழிபடவேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றது. அடுத்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் துவஜத்தம்பம் உள்முகமாகத் திரும்பியபடி அமைந்த வண்ணம் நாம் உட்பிரகாரத்தை வலம் வரும்போது உள் ளிருக்கும் மூலவர் எமது வலதுபக்கம் இருக்க வலம்வர வேண்டும் என்பதைக் காட்டி நிற்கின்றது. அடுத்திருக்கும் தெய்வத்துக்குரிய வாகனம் தெய்வத்தையே பார்த்தவண்ணம் அமைந்திருக்கும். அது ஜீவாத்மாவைக் குறித்து நின்று ஈசனை அடைவதே ஆன்மாவின் குறிக்கோள் என்பதை உணர்த்தி நிற்கின்றது. சிவனுக்கு இடபமும், அம்பிகைக்கு சிங்கமும், பரந்தாமனுக்கு கருடனும், விநாயகருக்கு மூஷிக மும் முருகனுக்கு மயிலும், வைரவருக்கு நாயும் வாகனங் களாக அமைந்துள்ளன.

அடுத்து கர்ப்பக்கிரகத்துள் ஒளிக்கோ காற்றுக்கோ வழி சமைக்க ஆகம விதிகள் இடந்தருவதில்லை. திரை விலகி மணியோசையின் பின்னணியில் கற்பூர ஆராதனையின் வெளிச்சத்தில் தெய்வவிக்கிரகத்தைக் காணும்போது தெய்வத் தையே தரிசிப்பதாக ஒரு உணர்வு ஏற்படுகின்றது. அபிடேகம், அலங்காரம், பூசை தீபாராதனை, நிவேதனம், ஸ்தோத்திரம் என்னும் போது நிவேதனத்துக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. குழந்தை, பெரியோர், குரு, நோயாளி என்போரைக் காணச் செல்லும்போது வெறுங்கையோடு செல்லக்கூடாது என்ற மரபுக்கிணங்க ஆலயத்துக்குச் செல்லும்போதும் பால், பழம், மலர்மாலை, தேங்காய், வெற்றிலை, பாக்கு, கற்பூரம் என ஏதாவது எடுத்துச் செல்வது வழக்கம்.

குழந்தைகளுடன் நாம் இலகுவாகப் பழக்கம் ஏற்படுத்த வேண்டுமாயின் அவர்களுக்கு நல்ல இனிப்புப் பொருளைக் கொடுத்து அவர்களை மகிழ்வித்து எங்கள் பால் அவர் களுக்கு ஈர்ப்பு ஏற்படச் செய்ய வேண்டும். அதேபோல் இறைவனுக்கு நல்ல இனிப்புப் பொருட்களை எடுத்துச் செல்வதில் அடியார்க்கு ஒரு நல்ல பயன் இருக்கத்தான் செய்கிறது. அதேபோன்று சாதாரண உணவுப் பதார்த்தத்துக் கும் தெய்வத்துக்குப் படைத்த உணவுக்கும் மிகப்பெரிய வேறுபாடு உண்டு. முன்னையது உணவு, பின்னையது தேவ பிரசாதம். அதனை உண்ணும்போதும் சிறப்பு, மற்றோருடன் பங்கிட்டு உண்ணும் போது மேலும் சிறப்பு உண்டாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே பணவசதி உடையோர் அன்னதானம் என்ற முறையில் இறைவனுக்கு நிவேதித்து பின் பெருந்தொகை யானோரின் பசியை ஆற்றும் செயல் மிகச் சிறப்பான தொன்றாகும்.

ஒரு கோயிலின் தத்துவத்தை விளங்கிக்கொள்ள வேண்டுமேயானால் ''கோயில்'' என்றழைக்கப்படும் சிதம்பர ஸ்தலத்தை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். இப்புனித தலத்திலே ஆடல் அழகனான நடராஜமூர்த்தி நான்கு ஸ்தம் பங்களையுடைய ஒரு கொலு மண்டபத்தில் எழுந்தருளியிருக் கிறார். அந்நான்கு ஸ்தம்பங்களும் நான்கு வேதங்களின் சின்னமாகும். அதற்கு முன் அமைந்துள்ள மண்டபத்தில் அமைந்துள்ள ஆறு தூண்கள் ஆறு சாஸ்திரங்களையும் சித்திரித்து நிற்கின்றன. அதற்கடுத்து வெளியே உள்ள மண்டபத்தின் பதினெட்டுத் தூண்களும் பதினெண்புராணங் களைக் குறிக்கின்றன. நடராஜமூர்த்தியின் அருகே ஏறிச் செல்வதற்கு அமைந்த ஐந்து படிகளும் ஐந்தெழுத்தை அதா வது பஞ்சாட்சர மந்திரத்தைச் சுட்டி நிற்கின்றன. பெருமானின் இடப்புறத்தே சிவகாமி அம்மையார் எழுந்தருளியுள்ளார். வலப்புறத்தே சிதம்பர ரகசியம் அமைந்துள்ளது.

பூசை வகைகளில் மானச பூசை, பாஹிய பூசை என்பன விளங்கப்படவேண்டியவை. பூசை என்பது பேராற்றல் படைத்துள்ள ஒன்றை நெருங்குவதற்கு ஒரு முயற்சி. கடவுளை வணங்கவும், போற்றவும், வழுத்தவும் முயலும் போது உள்ளத்தில் எழும் உவகை வணக்கமாக வடிவெடுக்கின்றது. இறைவனைச் சரண் அடைதலும் ஒரு பூசையேதான். இந்நல்ல முயற்சிகளால் இறையோடு இரண்டறக் கலக்கும் நிலையில் பூசை பரிபூரண நிலையே அடைகின்றது. உள்ளத்தைப் பண்படுத்த மானச பூசை என்னும் பூசை பயனளிக்கும். மனசை வழிப்படுத்தி எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று மனதார வேண்டுவதே கடவுள் வழிபாட்டின் முதற்படி என்று சொல்லப்பட்டுள்ளது.

இதயத் தாமரையில் இறையை இருத்தி முழுமனதோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையை வழுத்தி வழிபடும்போது இறைவன் அன்பால் அபிஷேகிக்கப்படுகின்றான். ஆத்மசாதகனின் அறிவு மானச பூசையில் தீபமாக ஒளிவிடுகின்றது. அன்பு, அமைதி, பணிவு போன்ற சீரிய எண்ணங்கள் மானச பூசையில் ஈசனுக்கு மலர்களாக அர்ச்சிக்கப்படுகின்றன. சாதகன் தனது பற்றற்ற தன்மையை இப்பூசையின்போது இறைக்கு நிவேதனமாக்கு கின்றான். இந்த வகையில் பாவனையால் எவ்வளவுக் கெவ்வளவு வலுவும் தெளிவும் பெறப்படுகின்றதோ அத்தோடு மானச பூசை நிறைவுபெறுகின்றது.

இந்த வகையில் உள்ளத்தில் உறைகின்ற இறைவனைப் போற்றி வழிபட உபாயமாய் உள்ளது மானசபூசை. வழிபாடு களுள் மானச பூசையே மேலானது. ஆனால் இப்பூசையை பூரணமாகச் செய்வது இலகுவானதல்ல. மானசபூசைக்கு உதாரணமாக பூசலார் நாயனாருடைய வரலாற்றில் நடந்த சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

இறைவழிபாடு என்பது ஒருவனால் தானாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஒருவருக்காக மற்றவர் இதனைச் செய்தல் ஆகாது; பயன்தராது; பொருத்தமுமல்ல. மானச பூசை செய்தாலும் அது மனதில் நன்றாய்ப் படிதற்பொருட் டுத் திரும்பவும் ஒருமுறை பாகியத்தில் பக்தன் அதைச் செய்கிறான். சித்தமிசை குடிகொண்டுள்ள தெய்வம் தன்னெ திரே இருக்கும் விக்கிரகத்தில் அல்லது படத்தில் ஆவிர் பவிக்கும்படி வேண்டுகிறான். இந்நிலையில் அவன் கண் விழித்துப் பார்க்கும்போது முன்னிலையில் உள்ள திருவுருவம் தெய்வத்தன்மையுடன் திகழ்கின்றது. தான் சேகரித்து வைத்துள்ள மஞ்சன நீர், சந்தனம், புஷ்பம் முதலியவைகள் பயன்படுகின்றன. பக்தியுடன் பாத்யம் வார்க்கப்படுகின்றது. சந்தனம், புஷ்பம், வில்வம், துளசி, அறுகு, அட்சதை முதலியவைகளில் ஏதேனும் ஐந்து திரவியங்கள் அடங்கப்பெற்ற அர்க்கியம் படைக்கப்படுகின்றது. பின்பு மனதுக்கு உகந்தபடி அபிடேகம், அலங்காரம், தூபதீபம், நைவேத்தியம், ஆசமனம், அர்ச்சனை, ஸ்தோத்திரம் முதலிய வைகளால் பாகிய பூசை முற்றுப்பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகிய பூசையில் கையாளப்படும் சடங்குகளெல்லாம் ஆத்மசாதனத்தின் பல்வேறு இயல்புகளை விளக்கு பவைகளாய் அமைந்துள்ளன. கடவுளுக்கு இவைகளெல்லாம் தேவையா என கேள்வி எழ இடமில்லை. ஏனெனின் இவையாவும் சாதகனுக்குப் பயன்படுகின்றன. அவன் ஈசனை நோக்கி செல்வதற்குப் பயன்படுபவைகளாய் அமைந்த வைகள். இவைகள் உயிர்களை இறைவன் மாட்டிட்டுக் கொண்டு போதலை இயற்கையின் தொழில். ஆதலால் இயற்கையைக் கடவுள் வழிபாட்டுக்கு உபயோகிப்பதே மனிதன் அதைக்கொண்டு செய்யும் அருங்காரியமாகும். இயற்கையைக் கையாளும் விதத்துக்கு ஏற்ப மனிதன் பெருமை அல்லது சிறுமை அடைகின்றான். அற்ப ஆசை களைப் பூர்த்தி செய்தற்பொருட்டு அதை உபயோகிக்கும் ஒருவன் அற்பத்தன்மை அடைகின்றான். ஈசுவர ஆராதனை போன்ற மேலான காரியத்துக்கு உலகப்பொருட்களை உபயோகிப்பவன் ஈசுவர அனுக்கிரகத்தைப் பெறுகின்றான்.

மூர்த்தியின்மூலம் பாகிய பூசையை முடித்தபிறகு சாதகன் இறைவனிடமிருந்து மன்னிப்புக் கேட்கின்றான். ஈசுவர தத்துவம் தனக்குப் பரிபூரணமாக விளங்கவில்லை என்றும் தன் அறிவுக்கு எட்டியவாறே தான் ஆராதனை செய்தான் என்றும் அத்தகைய ஆராதனையில் உள்ள குற்றங்குறைகளை மன்னிக்கவேண்டும் என்றும் சாதகன் வேண்டுகின்றான். மூர்த்தி அல்லது விக்கிரகத்தில் ஆவிர்பவித்துள்ள இறைவன் மீண்டும் தன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமென்று இறுதியாக அவன் பிரார்த்திக்கின்றான். அத்துடன் பாகிய பூசை முற்றுப்பெறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயத்தில் செய்யத் தகாதவைகள்

“ஆலயம் தொழுவது சாலவும் நன்று” என்பது ஆன்றோர் வாக்கு. ஆலய தரிசனத்திற்குரிய மிகப்புண்ணிய தினங்களாக பின்வருவனவற்றைக் கொள்ளலாம். சோமவாரம், மங்கள வாரம், வெள்ளிக்கிழமை, பௌர்ணமி, அமாவாசை, பிர தோஷம், மாதப்பிறப்பு, சூரிய சந்திர கிரகண நாட்கள், சிவராத்திரி, நவராத்திரி, திருவாதிரை, திருவிளக்கீடு, திருவெம்பாவை நாட்கள், ஆடிச்செவ்வாய், ஆவணிச் சதுர்த்தி என்பனவாம்.

ஆலயங்களைத் தரிசித்தால் மாத்திரம் போதாது. அங்கு நாம் வழிபடும் முறை, செய்ய வேண்டியவை, செய்யத் தகாதவை என்ற விதிமுறைகளையும் அடியார்கள் பின்பற்றி யாக வேண்டும். ஆசாரமில்லாது ஆலயம் செல்லல், ஆலய வாசலில் கால் கழுவாமல் உட்செல்லுதல், வீதியில் எச்சில் உமிழ்தல், சிரசிலே தோளிலே வஸ்திரம் தரித்தல், ஆண்கள் மேலாடை அணிந்து செல்லுதல், பாதரட்சையுடன் உட் செல்லுதல், விக்கிரகங்களைத் தொடுதல், ஆலய கோபுரம், ஸ்தூபி ஆகியவற்றின் நிழலை மிதித்தல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குமிடையே குறுக்கே செல்லுதல், அபிடேகம் இடம்பெறும் போதும் திரையிட்டிருக்கும் போதும் வணங் குதல், கோயிற் பிரசாதத்தைக் கீழே சிந்துதல், உட்பிரகாரத் திலே கால் நீட்டிக்கொண்டிருத்தல் ஆகியனவாம். இவை சைவத்தையும் தமிழையும் வளர்த்த நாவலர் பெருமான் எமக்கு தந்த அறிவுரைகள்.

ஆலயம் சென்றதும் முதலில் ராஜகோபுரத்தை வணங்கிய பின் உள்ளே சென்று சிவமந்திரத்தை உச்சரித்த வண்ணம் பலிபீடத்துக்கு அருகே நின்று பலிபீடம், கொடித்தம்பம், மூலவர் ஆகியவற்றை வணங்கி பின் பரிவாரத் தெய்வங்களை வணங்க வேண்டும். பரிவாரத் தெய்வங்களுள் முதலில் வணங்கப்பட வேண்டியவர் விநாயகப் பெருமான் ஆவர். ஆலயத்தை வலம்வரும் போது 3 அல்லது 5 அல்லது 7 அல்லது 9 தரம் வலம் வருதல் முறையாகும். தரிசன முடிவில் சண்டேஸ்வரர் முன்னிலையில் நின்று தரிசன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலனைத் தந்தருளுமாறு வேண்டி வழிபடுதல் முறையாகும். இச்சந்தர்ப்பத்தில் சண்டேஸ்வரர் முன்னிலையில் பெரிய ஓசையில் கைகொட்டி வணங்குவதும் எமது ஆடையிலிருந்து நூலைத் தன்னும் பிரித்து அவர் சந்நிதியில் இடுதலும் எமது வழக்கத்தில் இருந்து வருகின்றது. இவை அவசிய மற்றவை என்கின்றன சாஸ்திரங்கள். இதன் பின்னணியை நோக்குவோம். சண்டேஸ்வர மூர்த்தியின் தியான நிலைக்கு பங்கம் வராமல் கைதட்டிப் பெரிய ஓசை எழுப்பாது நாம் எது இருவிரல்களை உள்ளங்கைகளிலே மெல்ல 2 தடவை தட்டி வணங்குதலே முறையாகும். இதனை தாளந்திரயம் என்பர். இதேபோன்று சண்டேஸ்வர மூர்த்தியை வலம்வந்து வணங்குதலும் முறையன்று. காரணம் நாம் வலம் வரும்போது எமது நிழல் மூர்த்தியின் மேல் விழாமல் இருப் பதற்கேயாகும். இதற்காகவே சில ஆலயங்களில் சண்டேஸ்வர மூர்த்தியை அடியார்கள் வலம்வராத வண்ணம் அவரது சந்நிதி அமைக்கப்பட்டுள்ளதை யாம் அவதானிக்க முடி கின்றது.

மேலும் சிவனாரால் சண்டேஸ்வர பதம் இவருக்கு அளிக் கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. அதன் வண்ணம் சிவ பெருமான் தனக்கு நிவேதித்த உணவு, உடை, மாலை ஆகியவற்றை இவருக்கு வழங்கி சண்டேஸ்வர பதமும் அளித்தார் என்பது பெரியபுராண வரலாறு. எனவே பூசை முடிந்ததும் சிவனாருக்கு நிவேதித்த அத்தனையும் சண்டேஸ்வரருக்கு வழங்கிய பின்னரே அடியார்களுக்கு பிரசாதம் வழங்குதல் முறையாகும்.

“...... உண்ட கலமும் சூடுவனவும் சண்டேஸ்வரப் பதமும் தந்தோம்...” என இறைவன் திருவாய் மலர்ந்தருளியதாக பெரிய புராணம் கூறுகின்றது. சிவனார் தனக்குச் சூடிய கொன்றை மாலையை சண்டேஸ்வர மூர்த்திக்கு சாற்றுவதாக சண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தத்தை குறிக்கும் சிலை தமிழ்நாட்டிலே கங்கை கொண்ட சோழபுரத்திலே உள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவமூர்த்தங்கள்

சிவமூர்த்தங்கள் மூலம் சிவனது தத்துவங்களை நன்கு புரிந்து கொள்ளலாம். அவற்றிலிருந்து பல கோட்டுபாடுகளும் தெளிவாகின்றன.

முக்கண்ணன் என்றழைக்கப்படும் எம்பெருமானின் நெற்றிக் கண் ஊனக்கண் அல்ல; அது ஞானக்கண்ணே ஆகும். முழுமுதலான சிவன் முற்றிலும் ஞான சொரூபி. அவர் தனது நெற்றிக்கண்ணைத் திறந்து காமனை எரித்த சம்பவம் ஒரு உண்மையைப் புலப்படுத்தி நிற்கின்றது. ஞானக்கண்ணை சிவபிரான் திறந்து பார்த்தால் உலகமே அவிந்து போகும். ஞானக் கண் திறக்கப் பெறுபவர்களுக்குக் காமம் கிடையாது. எல்லாமே தெய்வ சொரூபமாகத் தோன்றிக் காமம் அகன்று சிவஞானத்தோடு கூடிய பக்தியே மிஞ்சி நிற்கும். இறைவன் தானே முக்கண்ணனாயிருந்து மக்களும் முக்கண்ணர் ஆகவேண்டும் என்ற உண்மையைப் புகட்டுகின்றார். சிவபிரானது திரிபுரதகனம் உணர்த்தும் பாடம் பின்வருமாறு:- இச்சம்பவத்தால் ஆன்மாக்கள் செய்ய வேண்டியதைத் தானே செய்து காட்டி உள்ளார். ஈசன் இதற்கு மூன்று அரக்கர்களது கோட்டைகளை அழிப்பது அவசியமாகியது. போருக்குச் சென்ற எம்பெருமான் அம்பை எடுத்து எய்யும் அவசியம் இல்லாமல் தனது புன்சிரிப்பால் முப்புரங்களையும் எரித்தருளினார். சாத்துவம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களுமே மூன்று அரக்கர்களாகச் சித்திரிக்கப்பட்டன. இம்மூன்று குணங்களையும் ஒடுக்கிவிட்டால் ஜீவன் முத்தி அடையும் பாக்கியம் கிடைக்கின்றது. இதற்கு ஆத்மா இறையைச் சார்ந்திருத்தல் வேண்டும்.

சிவனாரது உருத்திரன் என்னும் நாமம் உயிர்களை அழச்செய்பவன் என்று பொருள் - இத்துன்பம் மூலம் உயிர்கள் பண்படுகின்றன. சங்காரம் என்னும் செயலால் பழுதுபட்ட உடல்களை அழிக்கின்றான். அதற்குப் புறச்சின்னம் மயானமாகும். இதன் மறுபெயர் உருத்திரபூமி எனப்படும். உருத்திரனுக்கு உகந்த இடம் சுடுகாடு. அங்குசெல்ல அஞ்சுபவர் உருத்திரனை வழுத்தத் தகுதியற்றவராவர். சாந்த சொரூபத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் பெரும்பாலும் காணப்படும் சிவன் இடையிடையே உக்கிர சொரூபமும் எடுக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார். அப்போது அவரது நாமங்கள் உருத்திரன், வீரபத்திரன் என்பதாம். இவை அவரது பயங்கர வடிவங்களாகும். மயானத்தில் சுடலைப் பொடி பூசி எலும்பு மாலை அணிந்து கபாலம் கரத்தில் ஏந்தி மரணத்துடன் விளையாடுகின்றான் இறைவன். "இறப்பு அதனுக்கு என் கடவேன்" என்பது சிவ பக்தனது வாக்கு. காசி என்னும் தலத்துக்கு மகா ஸ்மசானம் என்றும் ஒரு பெயருண்டு.

கங்காதர மூர்த்தமும் சிவனாரது மூர்த்தங்களுள் ஒன்றாகும். வானிலிருந்து பூவுலகத்துக்குப் பாய்ந்து வந்த கங்கைப் புனலை பரமேஸ்வரன் தனது ஜடாமுடியில் தாங்கி அதன் வேகத்தைத் தணித்தருளினார். கங்கையின் வேகம் தணிந்ததும் அப்புனல் பூமியில் பாய்ந்து பூமியை வளமாக்க அனுப்பப்பட்டது. ஈசன் அருள் உலகுக்கு பயன்பட்ட, பயன்படும் உண்மை இதனால் புலனாகின்றது. அதே நேரம் எம் பெருமானின் சிரசிலிருந்து வடியும் கங்கை யோகியர்களது உச்சந்தலையிலிருந்து வடியும் அமிர்ததாரையையும் குறிப்பிட்டு நிற்கின்றது. இதனால் அவர்களுக்குப் பரமானந்தம் கிட்டுகின்றது. அமிர்த தாரையின் சின்னமாகின்றது இறைவனது சடையிலிருந்து வடியும் கங்கை - இது பூமியை வளமாக்குகின்றது. ஈசனும் கங்காதரன் ஆனார்.

சிவனார் குடும்பஸ்தனாகவும் வாழ்ந்து காட்டியுள்ளார். அவரைத் திரிலோக குடும்பி என்பர். ஈசனது இந்நிலை ஒரு உண்மையை உணர்த்தி நிற்கின்றது. குடும்பஸ்தர்களுள் பெரிய குடும்பஸ்தன் எம்பிரான். இது "குடித்தனமோ துரைத்தனமோ" அறியோம். உலகெலாம் அவரது குடும்பம். அதன் முறைபிறழாத நடைமுறையே அவரது ஆட்சி – சிதறக்கூடிய உலகம் அவரது ஆட்சியில் ஒன்று சேர்ந்திருக்கின்றது.

கைலையங்கிரியிலே இறைவன் பார்வதி சமேதராய் பரிவாரங்கள் சூழ வீற்றிருக்கின்றார். அங்கு மனை வாழ்க்கையின் சிறப்பு, பொறுப்பு, பேறு, பண்பு அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிணமிக்கின்றன. பேறுகளில் மக்கட்பேறு தலைசிறந்தது. ஞானக் களஞ்சியமான கணபதியையும் அறிவோடு ஆற்றலும் ஒருங்கமைந்த புத்திரனான முருகனும் சிவமைந்தர்களாக அமர்ந்துள்ளனர். இ∴து குடும்பச் சிறப்பை உணர்த்தி நிற்க எதிரே இக்குடும்பத்தவரது வாகனங்களாக அமைந்தவைகளின் நிலையைக் காண்போம்.

சிவபிரானின் வாகனமாகிய இடபமும் சக்தியின் சிம்மமும் ஒருபுறம்; மூத்த மைந்தனின் மூஷிகம் ஒருபுறம் விளையாடுகின்றது. முருகன் மருங்கில் மயில் குலாவுகின்றது. சிவனின் மார்பில் பாம்பு ஊர்கிறது. ஐதிகத்துக்கு உட்பட்டவர்கள் இக்காட்சியைக் கண்டதும் "அரஹரா" என ஆரவாரித்து ஐயனை வணங்கித் திருப்தியடைகின்றனர். ஆனால் மற்றுமொரு கோணத்தில் பார்ப்பவர்க்கு இக் காட்சியை ஒட்டிப் பல வினாக்கள் எழலாம். காளையும் காளையைக் கொன்று தின்னும் சிம்மமும் பக்கம் பக்கம் அமர்கின்றன. அருகே துள்ளித் திரியும் எலி மீது பாம்பு திடீரெனப் பாயலாம். மூத்தவன் கணபதியும் இளையவன் பாலமுருகனும் சண்டை செய்யலாம். இதுதான் சாதாரண வாழ்க்கையின் விவகாரம். கைலையங்கிரியின் இக்காட்சியில் மட்டுமல்லாது இயற்கையிலும் முரண்பாடுகளுக்கு இடமுண்டு. இதனையே சிவபிரானது குடும்பக்காட்சி சித்திரிக்கின்றது. உதாரணமாக நட்பை நாடுபவனைத் தேடி பகை பலாத்காரமாக வருகின்றது. அமைதியைத் தேடுபவனைத் தேடி வருகின்றது நிலைகுலைவு. இவற்றையெல்லாம் சமாளிக்க ஒருவனுக்கு வேண்டியது உறுதிப்பாடு. உறுதிப்பாடு கொண்டவன் தக்கான் என்றும் உறுதிப்பாடு அற்றவன் தகவிலான் எனவும் கணிக்கப்படுவான்.

இவற்றின் மத்தியில் மனிதனுக்கு இல்லறம் நல்லறமாக அமையவேண்டும். பார்வதி சமேதராகிய பரமசிவனது விநோதமான குடும்பம் எமக்குப்புகட்டுவது இந்தப் பாடத்தையே என நாம் கொள்ள முடிகின்றது. வாகனங்கள் உணர்த்தும் தத்துவம் யாதென நோக்கின் சகல உயிர்களுக்கும் வாகனமாக அமைபவன் ஈசன். எனவே உயிர்கள் யாவையும் இணைத்துக் காணும் கோட்பாட்டை இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள் விளக்கின்றன. அதற்கு முதல் உதாரணத்தை தன் சிரசிலேயே தாங்கியுள்ளார் எம்பெருமான். சந்திரனுக்கும் பாம்புக்கும் என்றுமே பகை. சந்திரனை ராகு, கேது என்னும் பாம்புகள் விழுங்கக் காத்துக் கொண்டிருக்கின்றன என்பது ஐதிகம். ஆனால் சிவனாரின் சடாமுடியில் சர்ப்பமும் சந்திரனும் பகைமையை இழந்து பண்புற்றிருக்கின்றன. அவற்றைச் சிவமயமாய்க் காணும்போது வேறுபாடுகள் எல்லாம் நீங்கியாகின்றன.

இந்த வகையில் சிவஞானம் பெற்றவர்க்கு பாம்பும், புலியும், பசுவும், சிங்கமும் கருடனும் ஒன்றே. ஐம்பூதங்களில் புனலையும் அனலையும் ஐயன் தன்னிடம் பொலிய வைத்துள்ளார். சிவன் என்ற சொல்லுக்கு பொருள் மங்களம். உலகத்தைச் சிவத்தோடு இணைத்துச் சிவமாகக் காணும் போது அது மங்கலமாகவும் இண்டையும் அந்நியமாகக் காணும்போது அது அமங்கலமாகவும் காணப்படும்; இவ்வுண்மையை அறிந்து உணர்ந்து வாழ்பவர்க்கு எல்லாமே நலன் தருவனவாக அமையும்.

சிவசக்திக் கோட்பாடு ஒரு தனித்துவம் வாய்ந்தது. சிவம் பாதி சக்தி பாதி. ஐயனது மற்றொரு சொரூபமே அர்த்த நாரீஸ்வர வடிவம். மாது ஒரு பாகன் ஆனவன். மாதொரு பாகன் எனப் போற்றப்படுபவன். ஒரே வடிவத்தில் ஆண்பாதி, பெண்பாதி. இது இயற்கைகக்குப் பொருந்துமா? என்று நாம் வினா எழுப்பலாம். சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இதுவே இயற்கை என்பது எமக்குப் புலனாகும். இதுதான் இயற்கையின் இயல்பு என்பது புரியும். எப்படி? தாவர உலகை எடுத்துக்கொள்வோம். அங்கு ஒரே வடிவத்தில் ஆண்இயல்பு, பெண்இயல்பு இரண்டும் சேர்ந்தே அமைந்துள்ளன. ஒரு மலரை எடுத்துக் கொள்வோம். அதில் ஆண்பாகம், பெண் பாகம் ஆகிய இரண்டும் சேர்ந்தே ஒரு புஷ்பத்தில் காணப்படு கின்றதை நாம் அவதானிக்கலாம். சங்கமங்களுள் ஒவ்வொரு உயிரும் தனது தாய் தந்தையரின் பாதிப்பாதி அம்சம் பெற்றே உருவாகின்றது. இந்த உண்மையின் பெயரில் வினா எழுப்ப முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையிடம் இரண்டு தத்துவங்கள் காணப்படுகின்றன. ஒன்று சைத்தன்யம் மற்றது ஜடம். அறிவும் ஆனந்தமும் சைத்தன்யத்தை சார்ந்தவை. எது அறிகின்றதோ, உணர்கின்றதோ, மகிழ்கின்றதோ அது சைத்தன்யம். எந்த உடலின் மூலமாக அல்லது கருவியின் மூலமாக அறிவு மிளிர்கின்றதோ அது ஜடம். உயிரும் மெய்யும் இணங்கி இருப்பதுவே வாழ்க்கை. உயிர்த்தத்துவம் சிவம்; உடல் தத்துவம் சக்தி; உடல் இல்லாது உயிர் தன்னை விதம் விதமாக விளக்க முடியாது. அதே நேரம் உயிர் இல்லாது உடல் ஒன்றுக்குமே உதவாது. உயிரும் மெய்யும் கொள் ளும் கூட்டுறவால் தான் இயற்கைத்திட்டம் நிறைவு பெற முடிகின்றது. சிவதத்துவத்துக்கும் சக்தி தத்துவத்துக்கும புறம் பாக இயற்கையில் ஒன்றுமேயில்லை. இதுவேதான் மாதொரு பாகனாய் அர்த்தநாரீஸ்வரனாய் இறைவன் எங்கும் நீக்கமறக் காட்சி தருவதன் தத்துவம். ஆலயங்களிலே யாம் வழிபடும் சிவலிங்கத்தை எடுத்துக்கொண்டால் அதனுள் பல தத்துவங் கள் அடங்கியிருப்பதை யாம் காணலாம். சிவலிங்கத்தின் ஆவுடையார் என்னும் கீழ்ப்பகுதி சக்தியின் சின்னமாகும். அதில் நாட்டப்பட்டிருக்கும் லிங்கம் சிவசின்னமாகும்.

திரிலோக குடும்பஸ்தனாக கைலையில் வீற்றிருக்கும் சிவபிரான் தியாகராஜனாகவும் உள்ளார். இங்கு அவர் ஒரு தியாகி. அண்டங்களில் எதையுமே தமக்கென உரிய வைகளாக எடுத்துக்கொள்வதில்லை. இந்நிலை விசுவத்துக்கே அவர் நாதன் அதாவது அகிலாண்டத்துக்கும் அவர் தலை வனாக இருந்தும் அவர் அநாதனாக வாழ்கின்றார். குடி யிருக்க நிலையான இடம் கோலாமல், இரந்துண்பதை அன்றாடத் தொழிலாகக் கொண்டுள்ளார். இத்தனைக்கும் அனைத்துக்கும் இவரே முழுமுதல். பிறவாத ஒருவர் இவர் – எனவே இவர் யாருக்குப் பிள்ளை? ஒருவருக்குமேயில்லை. இந்நிலையில் அவருக்குத் தம்மைத் தவிர உடமை ஒன்றில்லை. அவர் பாம்பை ஆபரணமாக அணிந்து பன்னக பூஷணன் என்று நாமம் பூண்டுள்ளார். இவருடைய இந்த ஆபரணத்தை அபகரிக்கவோ இரவல் வாங்கவோ எவர் முன்வருவார்? அடுத்து அவர் மேனியில் துலங்குவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டெரித்த சுடலைப்பொடி. கரங்களில் கபாலம். இவற்றையும் எவரும் விரும்பப்பேவதில்லை. மயானமே இவரது மாளிகை. நிச்சயமாக எவருமே இவ்விடத்தை உரிமை கோர விரும்பார். "கோயில் சுடுகாடு கொல் புலித்தோல் நல்லாடை தாயுமிலி தந்தையிலி" தான் அவரது கோட்பாடு. இதுதான் தியாகராஜ தத்துவம். இவரைத் துறவி வேந்தன் என்று சொன்னால் மிகையாகாது. துறவிகளுக்கெல்லாம் தலைவன் இந்த தியாகராஜன். ஒன்றிலும் பற்று வைக்காத இடத்து ஒருவன் மனஉறுதி பெறுகின்றான். தனக்கென ஞானத்தையும் வைராக்கியத்தையும் சிவனார் பராசக்தியிடமிருந்து பெறுகின் றார்.

அன்னை பராசக்தி உண்மையான இல்லாள். சிவனோ ஒன்றும் இல்லான். உடலுக்குத் தேவை என அன்னத்தை மட்டும் அம்பிகையிடமிருந்து சிவன் பெற்றுக் கொள்கின்றார். உடலைப்பேணுவது அன்னம் உயிரை ஓம்புவது ஞான வைராக்கியம். உயிரையும் உடலையும் ஒருங்கே ஓம்புதலே வாழ்க்கையின் குறிக்கோள். தியாகிகள் உலகில் இங்ஙனம் வாழவேண்டும் என்பது தியாகராஜம் காட்டும் நல்ல பாடம். ஊர் ஊராய் திரிந்து அலைந்தால் மட்டும் ஒருவர் துறவியாக முடியாது. பற்றுக்களைப் போக்குதலே துறவு. பிறப்பு, இறப்பு இரண்டையும் சமமாக நோக்குதல் தியாகம். அதற்காக வாழ்க்கையை "அம்போ" என்று விட்டுவிடுதல் என்பதல்ல இதன்பொருள்.

வாழ்க்கை ஒரு பாற்கடலாக உருவகிக்கப்படுகின்றது. அதிலிருந்து நல்லவர் கெட்டவர் என்ற பேதமின்றிச் செல்வம், பொன், வாகனம், கல்வி, கீர்த்தி, அதிகாரம், பதவி போன்றவை கிடைக்கின்றன. வாழ்க்கை என்னும் பாற்கடலைக் கடைந்தவர்கள் இப்பொருளைத் தம்முள் அதிவேகமாகப் பங்குபோட்டுக் கொள்கின்றனர். இதனைத்தானே நிஜமான பாற்கடலைக் கடைந்து தேவர்களும் அசுரர்களும் அன்று செய்தார்கள் - இது புராணந் தந்த கதை. இது கடையலின் பயனாக நல்லவை பலதை இவ்விரு சாராரும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் பகைவர்களாயிருந்தும் பாற்கடலைக் கடைந்து பலன்பெறும் நோக்கில் ஒன்றிணைந்து விட்டமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் வேடிக்கை. ஆனால் முடிவில் பாற் கடலிலிருந்து அவர்களுக்குக் கிடைத்தது ஆலகால விடம். அது அவர்களை ஓட ஓட விரட்ட ஆரம்பித்தது. இருசாராரும் அவ்விடத்தி லிருந்து தப்பி ஓட முயன்றனர். அது முடியாமற் போகவே தேவர்கள் தம்மைக் காப்பாற்றுமாறு ஈசனிடம் சரண் புகுந்தனர்.

ஈசனும் அவர்களைக் காப்பாற்றும் முகமாக ஆலகால விடத்தைத் தானுண்டு தன் கண்டத்தில் அதை நிறுத்தி நீலகண்டனானார். வந்த ஆலகால விடம் வேறொன்றுமல்ல. - மரணத்தின் வடிவமே. உலகப் பொருட்களைப் பங்கு போட்டுக் கொள்பவர்கள் மரணத்தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் அவர்கள் மாறாக மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ள உபாயம் தேடுவது வழமை. அப்படியாயின் மரணத்திலிருந்து தப்பவும் ஒரு வழி உண்டு. அதுவே சங்கரனைச் சரண் அடைதலாம். இந்நிலையில் சங்கரன் என்ன செய்கின்றார். இங்குதான் உச்ச நிலையில் அவரது தியாகத்தை யாம் காண்கின்றோம். தேவர் களுக்காகத் தானே விடத்தை உண்டது போல் தம்மைச் சரணடைந்தோருக்கு நன்மையை வழங்கி, கேடுகளைத் தான் ஏற்றுக் கொள்கின்றார் ஈசன். இங்கு, நாம் உமாபதி சிவாசாரியார் திருவருட்பயனில் இறைவனை "எடுத்துச் சுமப்பான;" என வர்ணித்துள்ளதைத் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். தன்னை சரணாகதி என்று நம்பி வந்தோரது பாவங்களை, குற்றங்களை, தானே எடுத்துச் சுமக்கும் கருணை இயல்பு கொண்டவன் ஈசன் என்று பொருள் கொள்ள லாம். உலகப்பற்றுடையோர் தீயவற்றைப் பிறருக்கென ஒதுக்கிவிட்டு நல்லவற்றைத் தமதாக்க முயல்வர்; ஆனால் உண்மையான துறவிகளோ பிறரின் நன்மை கருதி உலகினுக்கு யாண்டும் நல்லதையே தர முயல்வர். இதுவே தியாகராஜன் நீலகண்டனான உச்ச நிலையின் தத்துவ முடிவாகும்.

அம்பலக்கூத்தனின் ஆடும் தாண்டவத்துள் மறைந்திருக்கும் தத்துவத்தை ஆராய்ந்து பார்ப்போம். உயிர்களின் வாழ்க்கை ஆரம்ப நிலையில் சக்தியின் பரிபாலிப்பே மேலோங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்கின்றது. அப்போது சிவபோதம் பின்னணியில் இருக்கும். பிறவிக்குப்பிறவி ஜீவன்கள் பிறந்து பண்பாடு அடைய அவர்களுக்கு ஞானமேற்பட சக்தியின் செயற்பாடு குறைவடைந்து சிவத்தின் செயற்பாடு முன்னணிக்கு வர ஆரம்பிக்கின்றது. ஈற்றில் சிவசொரூபத்தில் சக்தியின் ஆதிக்கம் மறைந்து விடுகின்றது. சிவபோதம் தலையெடுக்கின்றது. இந்த வகையில் தேவியின் திருநடனமாக ஆரம்பித்த வாழ்க்கை தில்லையம்பலக் கூத்தனின் திருநடனமாக நிறைவு பெறுகின்றது. வாழ்க்கையின் ஆரம்பத்தில் அம்பிகை ஆடும் தெய்வமாகவும், வாழ்க்கையின் பிற்பகுதியில் ஈசன் ஆடும் தெய்வமாகவும் மாறி, இயற்கை சக்திக்கு ஆடுமிடமாகவும், சித் ஆகாசம் ஈசனுக்கு ஆடுமிடமாகவும் அமைகின்றன. சித்அம்பரம் என்பது அறிவாகிய வெளி - இதுவே சித்சபை என்றும் சிதம்பரம் என்றும் அழைக்கப்படுகின்றது. வாழ்க்கையிலும் இதே நிலையை யாம் காணமுடிகின்றது. தாயின் உதரத்தில் கருவாகி உருவாகி தாயின் உதிரத்தைப் பாலாகச் சுவைத்து வளரும் சிசு வளர்ந்து யௌவன பருவத்தில் பிதாவினால் பயிலுவிக்கப்படுகின்றது. ஞானிகள் சபாபதித் தெய்வத்தை வழிபட்டாக வேண்டும். இது நன்மை தரும்.

அகிலாண்டமுமே ஒரு சபை ஆகின்றது. அதற்குத் தலைவன் சபாபதி. அண்டத்தின் இயக்கங்கள், பருவ காலங்கள், சந்திர சூரியர் இயக்கம், கோள்களின் இயக்கம், உயிர்களின் வாழ்க்கை யாவும் முறையாக நிகழ்வ தற்குச் சபாபதித் தெய்வத்தின் ஞானமே முதற்காரணமாக அமை கின்றது. சபேசனாக எழுந்தருளியிருக்கும் ஈசன் தன் செயல் மூலம் ஜீவாத்மாக்களுக்கு நல்ல பாடத்தைப் புகட்டி வைக்கின்றார். தானே கற்பதைப்போல் பாவனை செய்து ஜீவன்களுக்குக் கற்பித்து வருகின்றார்.

சிவனாரது நடராஜவடிவத்தில் அவரது பாதத்தின் கீழ் மிதிபடும் நிலையில் காணப்படும் முயலகன் என்ற அரக்கனின் நிலை எமக்குப்புகட்டும் பாடம் என்ன? இவன் பிரகிருதியின் பிரதிநிதி. முக்குணங்களின் உருவாக அமைந்துள்ள இந்த அரக்கனை ஒருகாலால் மிதிக்கும் பாங்கில் ஐயன் திருநடனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ளது. இதன் விளக்கம் யாது? முக்குணமாய்த் தோன்றும் மாயைக்கு எவருமே அடிமைப்படக்கூடாது. அவற்றை உதைத்துத் தள்ள வேண்டும். பிரகிருதியைப் புறக்கணித்தேயாக வேண்டும். அப்போது தான் ஞானம் பெறும் மார்க்கம் ஒரு சாதகனுக்குக் கிடைக்கும் என்னும் கோட்பாட்டை இஃது விளக்கி நிற்கின்றது.

இதே வகையில் ஆடும் தெய்வமான நடராஜப் பெருமானது தூக்கிய பாதம் உணர்த்தும் தத்துவத்தை நோக்குவோம். ஜீவன்கள் நாள்தோறும் அனுபவித்து வரும் அவஸ்தைகள், ஜாக்கிரதம், சொப்பனம், சுழுத்தி என்பனவாம். இவற்றை விழிப்பு, கனவு, உறக்கம் என்று பொருள் கொள்ளலாம். இம்மூன்று நிலைகளையும் கடந்து அப்பால் உள்ள நிலையை உணர்பவனே ஞானியாகத் தகுதி பெறுகின்றான். அப்போதுதான் அது உண்மையான ஆனந்தம். அதுவே ஆனந்தத் தாண்டவமாக அவனுக்கு அமைகின்றது. நடராஜப் பெருமானது குஞ்சிதபாதம் உணர்த்தி நிற்கும் உண்மையும் இதுவேயாகும்.

வெட்ட வெட்டத் தளைக்கும் சில விருட்சங்களின் தன்மைபோன்று ஆணவமும் அழியாது, துரத்த முடியாமல் துன்பத்தையே தந்து ஆத்மசொரூபத்தை மழுங்கடித்து விடும். ஆணவத்தின் கொடுமை புலியினுடைய கொடூரத்தினை ஒத்தது. இதனை வெல்ல ஈசன் ஒருவனாலேயே முடியும். சிவகுரு நாதனான ஈசன் கொடிய புலியைக்கொன்று புலித் தோலைத் தன் அரையில் அணிந்துள்ளார். அகங்கார வடிவிலான ஆணவத்தை எப்படிக்களைய வேண்டும் என்பதை இச்செயல்மூலம் சிவனார் எமக்கு அறியத் தந்துள்ளார்.

அடுத்து, சிவபெருமான் திருக்கரத்தில் தரித்திருக்கும் டமருகம் எனப்படும் உடுக்கு ஓசையை எழுப்புவது. இறைவன் நாதப்பிரம்மமானவன். ஓசை ஒலியெலாமானவன். நாதம் ஒரு விந்துவும் ஆகும். விந்து அல்லது வித்து இருந்தால் தான் தாவரம் முளைக்கும். இங்கு நாதம் என்னும் வித்திலிருந்து உலகனைத்தும் தோன்றுகின்றது. நாத ஓசை ஒலிமூலம் உலகங்களை சிருஷ்டிக்கவும் முடியும். நாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலி நிறுத்தப்பட்டால் பிரபஞ்சம் ஒடுங்கி விடும். இறைவனுடைய நாமத்தில் அதை ஒலிக்கும் போது நாதம் கிளம்புகின்றது. அதனைச் சரியாக உச்சரித்தால் நாத ஓசை ஆத்ம சாதகனுக்குத் தெய்வ சொரூபத்தைக் காட்டி நிற்கும்.

"நாத விந்து கலாதீ நமோநம" என்று நாதத்தில் இறையை உணர்ந்து பாடியவர் அருணகிரிநாதர். ஓசையின் மூலம் ஜீவாத்மா தன்னிலையை உயர்த்த முடியும் - தாழ்த்த முற்படக்கூடாது என்ற உண்மையை சிவனார் தனது உடுக்கு மூலம் புகட்டி உள்ளார்.

சிவபிரானின் மற்றொரு திருக்கரம் மானைத் தாங்கியுள்ளது. இந்த மான் மனதைக் குறித்து நிற்கின்றது. துள்ளிக் குதித்தோடும் மான் போன்றது! மனம். மானும் ஒரு இடத்தில் நிலைத்து நிற்காது. அதே போன்று மனமும் ஒரே இடத்தில் நிலையாக நில்லாது நொடிப்பொழுதில் எண்ணங்களை மாற்றிக் கொண்டேயிருக்கும். இதனைத் தான் மனோவேகம் என்பர். உண்மையில் மனதை அடக்க முடிந்தவனே மகாயோகி ஆவான். மற்றைய மான்களைப் போலல்லாது இறைவன் கரங்களில் அமர்ந்திருக்கும் மான் அங்கும் இங்கும் தலையைத் திரும்பிப் பாராது சதா காலமும் சிவபிரானது முகவிலாசத்தையே பார்த்த வண்ணமாயுள்ளது. இதே போன்றுதான் ஆத்மசாதகனும் தங்கள் மனதை எப்போதும் எந்நிலையிலும் ஈசன்பால் செலுத்திய வண்ணமிருக்க வேண்டும். இப்பெரிய உண்மையை நடராஜப் பெருமான் தனது தாண்டவத்துள் அடக்கி வைத்துள்ளமை கண்கூடு. இறைவன் திருக்கரத்திலுள்ள மானைப்போல எமது மனமும் சதாசிவ சொரூபத்தை சிந்திப்பதல்லாது வேறு எச்செயலையும் செய்யலாகாது என்பதை இம்மான் உணர்த்தி நிற்கின்றது.

பரமன் கரத்தில் கனல் ஏந்தி நிற்பதன் தத்துவம் என்ன - கனல் அழிக்கும் தன்மை கொண்டது. நல்லது, கெட்டது இரண்டையுமே அழிக்க வல்லது கனல். எல்லாம் எரிந்து சாம்பரானதும் எஞ்சுவது சாம்பல். அக்கினியால் அச் சாம்பலை மாத்திரம் அழித்தொழிக்க முடியாது. இங்கு சிவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் என்னும் அக்கினி கருமத்தையும் அதன் விளைவு களையும் எரித்து விட வல்லது . இந்நிலையில் எஞ்சியிருப்பது சிவம் ஒன்றே தான். சிவஞானம் அமிர்தம் போன்றது. இதிலிருந்து தான் பேரானந்தமும் பெருவாழ்வும் கிடைக்கும்.

அடுத்து, ஐயனின் ஊர்த்துவ தாண்டவத்தின் அடிப்படைத் தத்துவம் என்ன சொல்கின்றதென்று பார்ப்போம். சிவமும் சக்தியும் இணைந்து பிரபஞ்சத்தை அமைப்பதில் பேரானந்தம் கொண்டு அவ்வானந்தத்தின் அறிகுறியாக ஆடும் நடனம் இந்த ஊர்த்துவ தாண்டவம். இதில் இருவரும் சரிநிகராக ஆடி ஈற்றில் அம்பிகை ஐயனுக்கு நிகராக ஆட முடிய வில்லை. இத்தாண்டவத்தில் ஐயன் தன் காலைத் தலைக்கு மேலே உயரத் தூக்கி ஆடுகின்றார். இதனை ஒரு பெண் அம்சமான தேவியால் ஆடமுடியாது என்பது சாதாரணமாகக் கூறப்படும் விளக்கம். நிஜம் இதுதான். ஆன்மாவானது ஞானபூமியைக் கடந்து உச்சந்தலையிலிருக்கும் சஹஸ்ர நாமம் என்னும் ஏழாவது நிலைக்குப் போகும்போது அதனிடம் ஜீவபோதம் எஞ்சியிருப்பதில்லை. ஆன்மா தனது வியக்தியை இழக்க சுத்தசிவம் ஒன்றே எஞ்சி நிற்கின்றது. சக்தியும் தன்இயல்பை இழந்து விடுகின்றாள். இது ஊர்த்துவ தாண்டவம் கொண்டுள்ள தத்துவமாகும்.

தட்சணாமூர்த்தம் சிவனாரது மூர்த்தங்களில் கிடைக்கப் பெறும் குருமூர்த்தமாகும். இதில் ஈசன் சிவகுருவாகத் தோன்றிக் கல்லால விருட்சத்தினடியில் தென்முகமாக வீற்றி ருக்கின்றார். இந்நிலை சிவசொரூபத்தின் உச்சநிலையாகும். தட்சணம் என்றால் தெற்கு என்று பொருள். ஆலமரம் பிரபஞ்ச வாழ்க்கையின் புறச்சின்னமாக அமைகின்றது. மக்க ளாகப் பிறந்தவர்கள் மெய்ப்பொருளை அடைய உலகவாழ்வு அவசியம். தொன்மை வாய்ந்த சிவனார் தென்முகக் கடவுளாக எழுந்தருளியிருக்கும் இளமையும் புதுமையும் நிரம்பப் பொலிந்து காணப்படுவார்.

பரஞானம், பரம்பொருள் ஆகியவற்றை ஒரு ஆத்மசாதகன் அறிய குருவின் வழிகாட்டல் அவசியம். மணிவாசகருக்கு திருப்பெருந்துறையிலே குருந்த மர நிழலிலே குருவடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்து சிவஞான போதம் என்றால் என்ன என்பதை உபதேசித்து அருளியவர் சிவபிரானாவர். சிவகுருவின் சின்முத்திரையில் சாந்தமும் தூய்மையும் திகழும். பரஞானமே வடிவெடுத்த பரம்பொருள் வடிவம் தட்சணா மூர்த்தம். ஓங்காரத்தின் உட்பொருளாக, அகண்ட சச்சி தானந்தமாக, மனமொழிக்கு அப்பாற்பட்ட நிலையில் ஆனந்த மௌன வடிவம் இவர் மூர்த்தம். ஜீவன்கள் அடையவேண்டிய முடிவான நிலையும் இதுவே. இத்தரிசனம் பக்குவமடைந்த ஜீவன்களுக்கே கிடைக்கும். அவர்கள் கருவி, கரணம் ஓய்ந்த தொண்டர்களாக, மகாமுனிவர்களாக, ரிஷிகளாக இருப்பர், எளிதில் புரியும் ஐயங்கள் அறவே அகலும் இந்நிலையில் ஆத்மாவின் நிஜசொரூபத்தை அவர்களால் அறிந்து கொள்ள முடியும். பேரானந்தப் பெருநிலையில் இவர்கள் நுழைந்தா யிற்று. ஜடநிலையில் இவர்கள் ஆரம்பித்த வாழ்க்கை மாற்றங்கள் பல பெற்று ஈற்றிலே பக்குவ நிலையில் இறைவன் இவர்களைத் தன்வயமாக்கிக் கொள்கின்றார். எல்லாமே சிவசொரூபமாகிவிட்ட நிலைக்கு இவர்களைக் கொண்டுவந்து சேர்ப்பவரே குருமூர்த்தியாகிய தட்சணாமூர்த்தி.

இறுதியாக இறைவன் ஆதி அந்தமில்லாத அகண்ட வஸ்து என்ற கோட்பாட்டினை விளக்கி நிற்கும் சம்பவத்தை நோக்குவோம்.

முன்னொரு கால் மும்மூர்த்திகளுள் படைத்தல் தொழிலை புரியும் பிரம்மாவும் காத்தல் தொழிலைப் புரியும் திருமாலும் தத்தம் பெருமையைப் பற்றி அதிகம் சிந்தித்து தம்மையே பெரியவர் என இருவரும் வாதாட ஆரம்பித்தனர். இவர்களது தர்க்கத்தை நிறுத்தி இவர்களது அகந்தையையும் குழப்பத் தையும் நீக்க முற்பட்ட சிவன் இவர்கள் முன்னிலை யில் சோதிப்பிழம்பாகத் தோன்றினார். அந்நேரம் ஒரு அசரீரி வாக்கு ஒலித்தது. "உங்கள் இருவருள் யார் பெரியவர் என நீங்கள் அறிந்து கொள்ள வேண்டுமானால் இச்சோதி பிழம் பின் அடி முடியை தேடிக் காண்பவரே பெரியவர்." உடனடி யாக பிரம்மதேவர் அன்னப்பட்சி வடிவமெடுத்துத் தோன்றிய சோதிப் பிழம்பின் முடியைத் தேடிப் பறந்து செல்லலானார். விஷ்ணுவோ வராக வடிவமெடுத்துச் சோதிப் பிழம்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியைத் தேடிப் பூமியை குடைந்து கொண்டு செல்லலானார். இருவரும் முயற்சி செய்தனர். ஆனால் ஒருவராவது அடியையோ முடியையோ கண்டதாக இல்லை. விஷ்ணு பகவான் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு அகந்தை நீங்கி புறப்பட்ட இடத்துக்கு மீண்டு விட்டார்.

ஆனால், பிரம்மனுக்கு ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. அவருக்குத் தனது தோல்வியை ஏற்றுக்கொள்ள மனம் இடம் தரவில்லை. சோதிப் பிழம்பின் முடியைத்தான் கண்டதாகப் பொய்யுரைக்க விழைந்தார். பொய்யும் உரைத்தார். போதாக் குறைக்குச் சிவபிரானது சடாமுடியிலிருந்து பூமியை நோக்கி விழுந்து கொண்டிருந்த தாழம்பூவைத் தான் இறைவனது முடியைக்கண்டதாகச் சாட்சி சொல்லும்படி அம்மலரைப் பொய்ச்சாட்சி சொல்லவும் வைத்தார். சிவனாருக்குப் பிரமனது இந்த விளையாட்டுத் தெரியாமலா போகும். அவர் பிரம்ம னைப் பொய் சொன்னதற்காகத் தண்டிக்க விழைந்தார். அதன்படி நீ பொய் உரைத்தபடியால் பூவுலகிலே உனக்கு ஆலயம் அமைத்து வழிபடும் வழக்கம் அற்றுப் போகட்டும் என்பதே சிவனார் இட்ட சாபம். போதாக்குறைக்கு பொய் சொன்ன தாழம்பூவுக்கும் தண்டனை அளித்தார். "பொய் கூறிய காரணத்துக்காக நீ என் பூசைக்கு உதவமாட்டாய்." இதனால் தான் அத்தனை இனிய வாசமிருந்தும் தாழம்பூவை நாம் சிவனாரது பூசைக்கு உபயோகிப்பதில்லை. இஃது புராண வரலாறு.

இதன் பின்னணியிலுள்ள உண்மையை நோக்கின் பரம்பொருள் உருவம் உடையதாகவும் உருவத்தைக் கடந்த நிலையிலும் உள்ளது. வேதாந்திகளின் கருத்துப்படி அதே பொருள் சகுணப் பிரம்மமாகவும் நிர்க்குணப் பிரம்மமாகவும் உள்ளது. சகுணப் பிரம்மத்தில் தேவதைக்கு வடிவங்கள் அமைகின்றன. வடிவத்துக்கு அப்பாற்பட்ட பகுதியைத் தேவதைகள் முற்றும் முழுதாக அறிந்து கொள்ளவோ புரிந்து கொள்ளவோ முடியாது. எனவே மெய்ப்பொருள் ஒன்றுதான். அதுவே தன்னைப் பல தெய்வங்களாகத் தோற்றுவிக்கின்றது. இத்தோற்றங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட நிலையில் அகண்ட வஸ்து ஒன்றுண்டு. அதனை எந்நாமம் இட்டும் அழைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவே அடிமுடி தேடிய வரலாற்றின் தத்துவ மாகும்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.

- அப்பர் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சக்தி தத்துவம்

அன்னை சக்தியை முழுமுதலாக வழிபடும் சமயம் சாக்தம். சாக்தத்தின் முதல் தெய்வம் பராசக்தி. சக்தி ஆனந்த சொரூபிணியாக இருப்பால் "பரப்பிரம்ம மகிஷி" என்றும் தேவி வர்ணிக்கப்பட்டுள்ளாள். சக்தி பிரம்மத்தை சேருமிடத்தில் பராசக்தி என்றும் சிவனைச்சேரும்போது மகாமாயை என்றும் அழைக்கப்படுகின்றாள். விஷ்ணுவைச் சேரும்போது யோக மாயை என்றும் அழைக்கப்படுகின்றாள். தேவி பராசக்தியின் மறுவடிவமே பூமி - அது அவளது ஆசனம். அதில் நீக்கமற நின்ற சக்தியே கல்லாயும் நீராயும் மரமாயும் மிருகமாயும் மனிதராயும் தேவராயும் மாறுபட்ட தன்மையுடன் உள்ளாள். பெண்மையில் தெய்வீகத்தைக் காண்பது சாக்தம். சாக்தத்தில் "குண்டலினி யோகம்" தனித்துவம் பெறுகின்றது. இந்நெறி திருமந்திரத்திலும் தந்திரங்களிலும் காணப்படுகின்றது. சங்க காலத்தில் கொற்றவை என்றும் - அபிராமிப்பட்டரின் அபிராமி அந்தாதியில் அபிராமி என்றும் குறிப்பிடப்படுகின்றாள்.

தேவி சக்தி முதல் இருந்தாள். பின்னரே பிரம்மங்களைப் படைத்து அதன்காரணமாக பிரம்மா விஷ்ணு சிவன் என மும்மூர்த்திகள் தோன்றினர் என்பது கொள்கை. ஞான வடிவானவள் சக்தி என்கின்றது உபநிடதம். அன்னையை மறவாது நினைப்பாயாக என்கின்றது வேதம். அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று பாடியவர் ஔவையார். தெய்வமும் அவளே அன்னையும் அவளே. அவளுக்கு நாம் குழந்தைகள். சக்தியே ஜகத்காரணமான சச்சிதானந்த பிரும்ம சொரூபம் என்கின்றார் ஆதி சங்கரர். சாக்தர்களுக்குத் தேவியின் அருட்கணவரே சிவன். சக்தியின் சில வடிவங்களை நோக்கின்,

அன்னை அன்னபூரணியாக அனைத்துயிர்களுக்கும் அன்னமளிக்கின்றாள்.

புவனேஸ்வரியாக உலகத்தலைவியாகத் திருமுடியில் பிறையும், செவிகளில் தோடும், கரங்களில் பாசாங்குசம், அபயம், வரதம் ஆகியவறறோடு அன்னை விளங்குகின்றாள். துர்க்கையாக தம்மை அடைக்கலம் புகுந்தோர்க்கு அச்சம் தீர்த்து ஐயம் அளிப்பவளாகவும் வீரர், அசுரர் ஆகியோர்க்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய வழிபாட்டுத் தெய்வமாகச் சிங்க வாகனத்தில் காட்சி தருகின்றாள்.

சண்டியாக அன்னை பயங்கர வடிவொடு காட்சி தருகின் றாள். சண்டன் எனும் அசுரனைக் கொன்றதால் சண்டி என நாமம் பெற்றாள். எட்டுக் கரங்களிலும் பயங்கர ஆயுதம் தரித்துத் தனது மெய்யடியார்களை அக்கிரமம், அநியாயம் ஆகியவற்றிலிருந்து காப்பவள் சண்டி. இராஜராஜேஸ்வரியாக அன்னை தோன்றிக் கல்வி கலைகள் போன்றவற்றின் தெய்வாம்சமாக விளங்குகின்றாள்.

லலிதாம்பிகையாக அன்னை செந்நிறமேனியளாய் இளமை யழகு பொலியக் காட்சி தருகின்றாள். பராசக்தி, சக்தி வடிவில் தன் ஆணைப்படி முத்தொழிலையும் நடத்திக் கொண் டிருப்பவள் என்கின்றது ஆனந்தலஹரி.

மதுரை மீனாட்சி தனது திருக்கரத்தில் கிளியை வைத்தி ருப்பதைக் காண்கின்றோம். இதன் தத்துவம் எதனை உணர்த்தி நிற்கின்றதென்று பார்ப்போம். அன்னை சக்தியே எமக்கு பேசும் சக்தியை அளிப்பவள் - எமது உடம்பிலே மூலாதாரத் திலிருந்து தொண்டை வரை ஓசையை எழுப்பிய பின்னர் நாவிற்குக் கொண்டு வருபவள் அவளே. கிளி பறவைகளில் பேசும் ஆற்றல் உடையது. "சொன்னதைச் சொல்லும் கிளி" என்பர். இப்பேசும் சக்தியை அன்னையே எமக்கு தந்தருளுகின் றாள் என்பதை அவள் தனது கரத்தில் வைத்திருக்கும் கிளி உணர்த்தி நிற்கின்றது. "சுகம்" என்றால் கிளி என்றும் பொருள் உண்டு.

"சுக சொரூபிணி", "மதுரவாணி" என்னும் பாடல் வரி அன்னை பற்றிய வர்ணனையை இங்கு தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

**ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம்**
**பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை புவி அடங்க**
**காத்தாளை அங்குசம் பாசாங்குசமும் கரும்பும் அங்கை**
**சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு**
**ஒருதீங்கில்லையே.**

- அபிராமி அந்தாதி

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநாயக தத்துவம்

இந்துமதம் தன்னகத்தே பல தத்துவங்களை அதாவது உண்மைகளை அடக்கியுள்ளது. அவற்றுள் விநாயகப் பெருமானை வழிபடும் முறைகளிலும் அவரது உருவ அமைப்பிலும் பொதிந்திருக்கும் உண்மைகளையும் பார்ப்போம். கணபதியை வணங்கும்போது நாம் நெற்றியில் குட்டிக் கொள்வதால் எமது குண்டலினி சக்தி உசாராக்கப்பட்டு வழிபாட்டிற்கு மனதை தயார்ப்படுத்துகின்றது. அத்தோடு நெற்றிப் பொட்டிலே தான் சகல நரம்புகளும் ஒன்று சேர்கின்றன. நெற்றிப்பொட்டில் குட்டும்போது ஞாபக சக்தியும் தூண்டப் படுகின்றது. தோப்புக்கரணம் போடும்போது எமது அகந்தையும் ஆணவமும் அழிகின்றது.

அடுத்துக் கணபதி வணக்கத்தின் போது சிதறு தேங்காய் அடிக்கின்றோம். சிதறுதேங்காய் அடிக்கும்போது அதன் ஓடு உடைந்து சிதறுகின்றது. இதே போன்று எம்முள் இருக்கும் ஆணவம் அற்றுப்போகின்றது. தேங்காயுள்ளிருந்து இனிய நீரும் தேங்காயும் கிடைப்பது போன்று எமக்கு ஞான உணர்வும் கிடைக்கின்றது. அடுத்து, சிதறு தேங்காய் சிதறுவது போல் இவ்வழிபாட்டால் எமது மனச் சஞ்சலங்களும் நீங்கிப் போகும் என்னும் உண்மையும் புலப்படுகின்றது.

அடுத்து, விநாயகரது இருபெரிய செவிகளும் ஆத்மாக்களின் முறையீடுகளைச் செவிமடுத்து அவற்றை நீக்குவதற்காக அமைந்துள்ள உண்மையைப் புலப்படுத்துகின்றன. விநாயகப்பெருமானது ஐந்து திருக்கரங்களும் திருவைந்தெழுத்தைக் குறிக்கின்றன. அவருடைய பெருவயிறு பிரபஞ்சம் முழுவதும் இறையுள் அடக்கம் என்பதைக் குறித்து அமைகின்றது. அவர் திருக்கரங்களில் வைத்திருக்கும் பாசம் படைத்தலையும், அங்குசம் அழித்தலையும், ஒடிந்த தந்தம் காத்தலையும், துதிக்கை மறைத்தலையும், மோதகம் அழித்தலையும் குறிக்கின்றன.

பெருமானார் அறுகம்புல்லை விரும்புவதன் நோக்கம் என்ன? அறுகம்புல்லின் காம்பில் மூன்று முனைகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை மனம், வாக்கு, காயம் என்பனவற்றை நல்ல முறையில் பயன்படுத்தி இறையருளைப் பெறவேண்டும் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

அறுகம்புல்லை நாம் எடுக்கும்போது அது சுத்தமான இடத்திலே உள்ளதா என்பதை அவசியம் கவனிக்கவேண்டும். அர்ச்சினைக்கு உபயோகிக்க முன் அதனை நன்கு கழுவ வேண்டும். ஏராளமான, நிறைய அறுகம் புற்களால் தன்னை அர்ச்சிப்பதையே விநாயகப் பெருமான் விரும்புவதாக விநாயக புராணம் கூறுகிறது. பெரியளவில் அறுகம்புல் கிடைக்காத விடத்து 21 அறுகம்புற்களால் விநாயகப் பெருமானை அர்ச்சித்தல் போதுமானது.

இந்த அறுகம்புல்லோடு தொடர்புடைய கதை ஒன்றை இங்கு நோக்குவோம். பல கல்பங்கட்கு முன்னர் யம லோகத்திலே அனலாசுரன் என்னும் ஓர் அசுரன் தோன்றினான். அவன் முதலில் பூவுலகு சென்று எதிரில் கண்ட பொருள்களை எல்லாம் அழித்தான். பின்னர் அவன் கவனம் தேவருலகத்தை நோக்கித் திரும்பியது. கனல் வீசித் தீப்பிழம்பாய் நிற்கும் அனலாசுரன் வானுலகிலும் தேவர்களை அழித்துப் புசிக்க ஆர்வம் கொண்டான். தேவர்கள் கலக்கம் அடைந்தனர். இவனை வெல்லுதல் முடியாது எனக் கண்டுகொண்ட ஸ்ரீ நாராயணமூர்த்தி, ஆதி பரம்பொருளும் அடியார்க்கெளிய வருமான விநாயகப் பெருமானை தஞ்சமடைந்தார். அனலா சுரனோ யாவரும் நடுங்க வெப்பக் கதிர்வீசி அட்டகாசம் செய்தான். களிற்று முகக் கணபதியோ தனது நீண்ட துதிக் கையை நீட்டி அனலாசுரனை வளைத்துப் பிடித்து அவனை விழுங்கினார்.

யாரும் அணுகமுடியாத அனலாசுரனை ஐயன் தன் வயிற்றில் அடக்கிக்கொண்டார். அசுரனின் அட்டகாசம் அடங்கினாலும் அவனை விழுங்கிய விநாயகப்பெருமானின் வயிறு முழுவதும் கொதித்தது. அனைத்தும் அவனாய் நின்றதால் தேவர்கள் முனிவர்கள் யாவர் வயிற்றிலும் வெப்பம் எழுந்து வாட்டியது. உலகத்திலும் உயிரினங்கள் அனைத்தும் வெப்பமிகுதியால் வருந்தின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விநாயகப்பெருமானின் வெப்பத்தை நீக்க சந்திரன் அமிர்தத்தை பெருமான்மீது வர்ஷித்தான். வெப்பம் குறைய வில்லை. திருமால் குளிர்ச்சி பொருந்திய தாமரை மலர் களால் விநாயகரின் திருமேனியைத் தடவிக் கொடுத்தார். வெப்பம் குறையவில்லை. குளிர்ச்சி மிகுந்த அரவப் பணி களை அரனார் ஐயனார் மீது அணிவித்தார். வெப்பம் தணிய வில்லை. முனிவர்கள் ஒன்றுகூடி விநாயகப் பெருமானின் வெப்பத்தை நீக்க வழிவகைகளை ஆராய்ந்தனர்.

ஈற்றில் எல்லோரும் சேர்ந்து விநாயகப்பெருமானின் திரு மேனியை அறுகம்புல்லால் அணிசெய்து மறைத்தனர். பெரு மானின் வயிறு குளிர்ந்தது. மேனி சுகம் பெற்றது. களிற்று முகக் கணபதி களிப்படைந்தார். அவர் முகமலர்ந்து யாவ ரையும் நோக்கி,

“அன்பர்கள் சொரிந்த அறுகம்புல்லே அதீதமான வெப் பத்தை அடக்கியது. அது போலவே கொடிய பாவங்களும் அறுகம்புல் அர்ச்சனையால் அழிந்தே தீரும். எத்தகைய மலர்களிட்டு எம்மை அர்ச்சித்தாலும் அறுகம்புல் இன்றி எனக்குச் செய்யும் அர்ச்சனை வீணேயாகும். ஏராளமாக அறுகம்புல் கிடைக்காவிடின் 21 அறுகம்புல்லாவது கொண்டு எம்மை அர்ச்சித்தால் நிறைபலன் கிடைக்கும். அறுகுக்கு நிகரான மலரோ தளிரோ இல்லை.” என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார் விநாயகப்பெருமான்.

பெருமானது இடுப்பில் அணிந்திருக்கும் பாம்பு மாயை யைக் குறிக்கின்றது. பெருமான்தான் விரும்பியபடி மாயையை கட்டுப்படுத்த வல்லவர் என்பதை இஃது உணர்த்துகின்றது. இனி அவரது பெருச்சாளி வாகனம் உணர்த்தும் தத்துவம் பல இருப்பினும் ஒன்றை இங்கு நோக்குவோம். பெருச்சாளி இருளை விரும்பும், நிலத்தைத் துளைத்து கீழே சென்று தீமை விளைவிக்கும். அதே போன்றது தான் ஆணவ மலத் தின் தன்மையும். பெருமான் பெருச்சாளி மீது அமர்தல் ஆணவச் செருக்கை அடக்கி ஆட்கொள்பவர் என்னும் அற்புத மான நிஜத்தைச் சுட்டி நிற்கின்றது.

எம்பெருமான் உடல் உறுப்புகள் பஞ்ச பூதங்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்தும் வகையினை நோக்கின், அவரது கீழே தொங்கவிடப்பட்டிருக்கும் பாதம் நிலத்தையும், வயிறு, நீரையும், மார்பு அக்கினியையும், புருவங்கள் காற்றையும், புருவ மத்தி ஆகாயத்தையும் குறிக்கின்றன. இறுதியாகக் கணபதி என்னும் அவரது நாமத்தில் இடம்பெறும் "க" ஞானத்தையும், "ண" மோட்சத்தையும் "பதி" பரம்பொருளையும் குறித்துத் தனது மெய்யடியார்களுக்கு முதலில் ஞானத்தையும் பின்னர் மோட்சத்தையும் அருள்பவர் கணபதிக் கடவுள் என்னும் தத்துவத்தை அவரது நாமம் உணர்த்தி நிற்கின்றது.

**திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்**
**கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்**
**பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்**
**பெருகு மாடத்துப் பிள்ளையைப் பேணுவாம்.**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறுதல் அளிக்கும் ஆறுமுகனின் தத்துவம்

முருகப்பெருமானின் தோற்றம், வரலாறு, சூரன்போர், அதன்நோக்கம், சூரன் அவனது தம்பியர் இயல்பு, வர வலிமை பற்றிப் புராணங்களுள் சிறந்த கந்த புராணம் கூறியுள்ளது.

உயிர்களிடத்துள்ள மும்மலங்கள் அடங்கினால், ஒடுங்கினால் தான் ஆன்மா இறையை அறியமுடியும், புரிய முடியும், உணர முடியும். ஈற்றில் அவனை அடைய முடியும் என்பதைக் கந்தபுராணம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளது. சூரன்போர் நிகழ்வில் சூரன், சிங்கன், தாரகன் ஆகிய மூவரும் மும்மலங்களைக் குறிக்கின்றனர். அவற்றை ஆன்மாவிலிருந்து பிரித்து இறைவன் தன்னோடு சேர்த்துக்கொள்வதே கந்தபுராணமும் அதில் இடம்பெறும் சூரன்போரும் சுட்டி நிற்கின்றன.

முருகப்பெருமான் தனக்குப் பிடித்த வள்ளிநாயகியை தினைப்புனத்திலே சந்திக்கின்றார். அப்போது வள்ளியின் தந்தை நம்பிராஜன் அவ்விடம் வரவே முருகப்பெருமான் தம்மை மறைத்து வேங்கை மரமாகின்றார். இந்த வேங்கை மரம் மூலம் ஒரு தத்துவம் எமக்குச் சொல்லப்பட்டுள்ளது.

பாலின் நிறம் வெள்ளை. எல்லாமரங்களினதும் பாலின் நிறமும் வெள்ளை. ஆனால் வேங்கை மரத்தின் பாலின் நிறம் சிவப்பு. மிருக இனத்தில் வேங்கை பிற உயிர்களின் இரத்தத்தை குடித்து வாழ்கிறது. "புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது" என்பர். ஆனால் தாவர இனத்தில் வேங்கையோ இரத்த நிறம் கொண்ட தனது பாலைக் கொடுத்து மனிதனை மிருகங்கள் போல் கொலைவெறி கொண்டு அலையாது தடுத்து நிற்கிறது. தாவர வேங்கைபோல் பிற உயிர்களுக்கு நன்மை செய் என்பதை முருகப் பெருமான் வேங்கை மரமாகி நின்ற தத்துவம் விளக்கி நிற்கிறது.

முருகப்பெருமானின் ஆறு திருமுகங்களும் அன்பையும், அருளையும், ஞான ஒளியையும், அழகையும், வீரத்தையும், வளமான வாழ்வினையும் தன்னடியார்களுக்கு உணர்த்தி நிற்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருவமு முருவுமாகி யனாதியாய்ப்பல வாயொன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறுங்கரங்கள் பன்னிரண்டும்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு தத்துவம்

விஷ்ணு பகவான் திருமால் என்றும் அழைக்கப்பெறுவர். அவருடைய திருக்கோலத்தின் நீல வண்ணம், திருமால் எங்கும் விரிந்து பரந்து நிறைந்துள்ளார் என்னும் உண்மையைச் சுட்டி நிற்கின்றது. அவர் திருக்கரங்களில் தரித்திருக்கும் சங்கு அவர் பிரணவமானவர் என்பதையும், சக்கரம் பகவான் அறத்தைப் பாதுகாப்பவர் என்பதையும், கதை அவரது வலிமையையும், கமலமலர் அவரது இயல்புகளையும் பகவான் உயிர்களைப் பரமபதத்துக்குப் பக்குவப்படுத்தும் இயல்பினையும் உணர்த்தி நிற்கின்றன.

திருமாலின் தசாவதாரத்துள் ஒன்றான கண்ணன் வெண்ணெய் திருடி உண்பதிலும் ஒரு உண்மை மறைந்துள்ளது. அதிக அளவு தயிரைக் கடைந்தாலும் வெண்ணெய் தயிர் அளவு கிடைக்காமல் சிறிதளவே கிடைக்கின்றது. இதே போன்று தான் இப் பெரிய உலகிலே உள்ள கோடிக்கணக்கான மக்களுள் ஒரு சிலரே பகவானை அடையப்பிரயத்தனப் படுகின்றார்கள். அத்தயை மெய்யன்பர்களை யான் விரும்பி ஏற்பேன் என்பதையே கண்ணன் வெண்ணெய் திருடி உண்ணும் செய்கை காட்டுகின்றது. மேலும், வெண்ணெயின் வெண்ணிறமும் தூய்மையும் போல் மாசற்ற பக்தியும் தூய சிந்தனையும் கொண்ட பக்தர்களையே யான் விரும்பி ஆட்கொள்வேன் என்ற உண்மையும் இதில் அடங்கி உள்ளது.

இவற்றைவிட வெண்ணெய் எவ்வாறு மோரினுள் மூழ்காது மிதந்து மேலே நிற்கின்றதோ அதே போன்றே தன் அடியார்களும சம்சார சாகரத்துள் மூழ்கி ஆழ்ந்து விடாமல் பக்தி வசப்பட்டு மேல் எழுந்து நிற்க வேண்டும். அப்போது தான் பகவான் அவர்களை விரும்பி ஏற்றுக்கொள்வார் என்னும் உண்மையை உணர்த்தி நிற்கின்றது. கண்ணன் திருக்கரங்களில் வைத்திருக்கும் வெண்ணெய் எவ்வண்ணம் உருகுகின்றதோ அதே போல் கண்ணனும் பக்தர்களுக்காக உருகுவார் என்பது உண்மை. அத்தோடு கண்ணன் உரலோடு கட்டப்பெற்ற நிகழ்வு அவர் அடியவர்களின் அன்புக்கு மட்டும் கட்டுப்படுவான் என்னும் உண்மையையும் விளக்கி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், கண்ணன் கோபியர்களின் உடைகளைக் கவர்ந்து மறைத்து வைத்தமை ஒரு விளையாட்டுப் போல் தோன்றினாலும் அது சுட்டும் உண்மை யாதெனில் சரீரம் என்ற ஒன்று உண்டு என்பதை உயிர்கள் மறந்து சரீரப் பற்றை விலக்கினால் தான் ஜீவன்முத்தி அடையமுடியும் என்பதாகும். கிருஷ்ணன் யமுனாநதியில் அடக்கி ஆடிய காளிங்க நர்த்தனம் உணர்த்துவது. பக்தி பெருகும் இடத்தில் விஷம் போன்ற சிற்றின்பம் கலந்து விடக்கூடாது என்பதையேயாம்.

மேலும், கண்ணனிடம் எம்மை ஒப்படைத்து விட்டால் எமது நிலை கண்ணனது புல்லாங்குழலின் இசை போல் இனிதாக அமையும் என்பதை கண்ணனின் கரங்களில் தவழும் புல்லாங்குழல் உணர்த்தி நிற்கின்றது.

சைவர்கள் விபூதி அணிவது போல் வைணவர்கள் திருமண்ணை அணிவார்கள். அதனை நாமம் என்றழைப்பர். திருமண் காப்பு என்பது பகவானது திருவடிகளைக் குறிப்பதாகும். அதன்நடுவே ஸ்ரீசூர்ணம் அணிவார்கள். அது திருமகளைக் குறிக்கும். திருமண்காப்பு நம்மை நல்ல வழியில் நடக்கவும், தீய சக்திகளிலிருந்து காக்கவும் துணைபுரிகின்றது என்பது வைணவர்களது அசையாத நம்பிக்கை.

**மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளாம்**
**நீராடப் போதுவீர், போதுமினோ நேரிழையீர்**
**சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்**
**கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்**
**ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்**
**கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்**
**நாராயணனே, நமக்கே பறைதருவான்**
**பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அக்கினி நாள்

சித்திரைப் பூரணையின் மறுநாள் ஆரம்பித்து அமாவாசையின் மேல் 21 தினங்கள் அக்கினி நாட்கள் எனப்படும். அக்கினி பகவான் காண்டாவனத்தை எரித்துச் சாம்பராக்கிய 21 நாட்கள் அக்கினி நாட்களாகும். காண்டாவனன் என்பது இந்திரனைக் குறிக்கும். காண்டவதகனன் என்பது அர்ச்சுனனைக் குறிக்கும். காண்டாவனத்தைக் காண்டவம் என்றும் அழைப்பதுண்டு. காண்டாவனம் யமுனை நதிக்கருகேயுள்ள ஒரு மிகப்பெரிய வனமாகும். இவ்வனம் இந்திரனின் காவலிலேயே இருந்தது. இதன்கண் கொடிய வன்விலங்குகள் நிரம்ப வாழ்ந்து வந்தன. காலத்துக்குக் காலம் அக்கினி பகவான் இவ்வனத்தை எரிக்க ஆரம்பிக்க இந்திரன் மழைசொரிந்து அதனை அவித்து விடுவான். இவ்வாறாக அக்கினி பகவானால் இவ்வனத்தை முற்று முழுதுமாக அழிக்க முடியவில்லை.

இந்நிலையில் ஒருகால் கிருஷ்ணனும் அர்ச்சுனனும் யமுனைஆற்றங்கரைக்குச் சென்றிருந்தனர். அத்தருணம் அக்கினி பகவான் பிராமண வேடம் பூண்டு கிருஷ்ணனிடமும் அர்ச்சுனரிடமும் சென்று காண்டாவனத்தைத் தனக்கு உணவாகத் தந்தருளுமாறு வேண்டினார். அவர்களும் அக்கினி பகவானுக்கு உதவச் சம்மதித்தனர். அதன் பொருட்டுத் தனக்குத் தேர், காண்டீபம், அம்பறாத் துணி ஆகியவற்றைத் தரவேண்டுமென அர்ச்சுனன் அக்கினி பகவானிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க அக்கினி பகவானும் அவற்றையெல்லாம் வருணபகவானிடம் பெற்று அர்ச்சுனனுக்குக் கொடுத்து விட்டு காண்டாவனத்தை எரிக்கத் தொடங்கினார். இதைக் கண்ணுற்ற இந்திரன் மழையைப் பொழிவித்து அக்கினியை அவிக்க முயன்றார்.

அந்நேரம் கிருஷ்ணாச்சுனர்கள் அம்மழையைச் சரங்களால் கூடுகட்டித் தடுத்து நிறுத்தினர். இருந்தும் 21 நாட்களில் அவ்வனத்தை அக்கினி பகவான் சாம்பராக எரித்து முடிந்தார். தனக்கு உதவி புரிந்த அர்ச்சுனனுக்கு அக்கினி பகவான் நல்லாசிகள் வழங்கிக் காண்டீபம் என்னும் வில்லாலும் அட்சயம் என்னும் அம்பறாத் துணியினாலும் தான் அளித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரதத்தினாலும் பகைவர்களை வென்று வெற்றியில் நிகரற்ற வனாக அர்ச்சுனன் விளங்க வாழ்த்தியும் சென்றார்.

இந்த அக்கினி நாட்களிலே வீசும் காற்று மிகவும் வெப்ப மானதாக இருக்கும். மக்களுக்கு இது ஆரோக்கியமானதாக அமைய மாட்டாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாளயம்

மகாளய காலத்தின்போது பிதிர்களைப் பிரீதிப்படுத்தும் முகமாக சிரார்த்தம், தர்ப்பணம் செய்து வருதல் மரபு. தெய்வ காரியங்கள் ஆற்றப் பக்தி தேவைப்படுவது போல பிதிர்க்கருமங்கள் ஆற்றச் சிரத்தை வேண்டும். இதனாலேயே சிரத்தையோடு செய்ய வேண்டியது சிரார்த்தம் எனப்பட்டது. பாவத்தை அகற்றும் சிரத்தை அற்றவனே பாவி ஆவான். மனிதனே சிரத்தையின் வடிவம் தான். எவனுக்கு எவ்விதமான சிரத்தை உண்டோ அவன் அவ்வண்ணம் உருவாகின்றான். பூமியில் நாம் நலமாக வாழப் பிதிர்களுக்கு கடமைகள் ஆற்றியாக வேண்டும். இதற்குரிய காலமே மகாளய பட்ச காலமாகும். இதனால் பெறப்படும் நற்பயன்கள் பற்றி தர்ம சாஸ்திரம் கூறியுள்ளது. மகான்களான எமது பிதிர்கள் பூமி யில் வந்து தங்கும் 14 நாட்களும் மகாளய காலமாகும். அவர் களை உரியமுறையில் ஆராதிக்க இக்காலம் உகந்ததாகும்.

சூரிய பகவான் கன்னி ராசியில் புகும் போது எமதர்ம ராஜன் தம்வசமுள்ள பிதிர்களைப் பூமிக்குச் செல்ல உத்தர விடுகின்றான். அப்பிதிர்களும் அவ்வண்ணம் அக்காலத்தே பூமிக்கு வருதலால் அந்நாட்கள் மகாளய விதிப்படி அன்ன சிரார்த்தம் செய்ய உகந்த காலமாக அமைகின்றது. எமது ஒரு வருடம் பிதிர்களுக்கு ஒருநாள். எனவே வருடம் தோறும் யாம் பிதிர்களுக்குச் செய்யும் சிரார்த்தம் அவர்களுக்குத் தினமும் உணவளிப்பதையொக்கும். அத்தோடு அமாவாசைத் திதியிலே எள்ளும் தண்ணீரும் இறைத்துத் தர்ப்பணம் செய்வது பிதிர்களுக்குத் தாகத்துக்கு நீர் தருவதை ஒக்கும்.

மகாளய பட்சத்தில் சகல பித்ரு தேவதைகளையுமே திருப்தி செய்ய மகாளய சிரார்த்தம் செய்தல் சிறந்த காரிய மாகும். மேலும் விளக்கின் மகாளய நாட்களில் எல்லாப் பிதிர்களும் ஒன்று கூடுவர் என்பது புலனாகின்றது. இவ் வண்ணம் சிரத்தையுடன் செய்யும் கருமங்கள் நற்பயனை நமக்களிப்பதோடு இவை வேள்வி போன்று தருமமாகின்றன என பீஷ்மர் தருமருக்கு உபதேசம் செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இல்லறவாசிகள் உண்மையை உணர்ந்து மகாளய காலத்திலே உரிய பிதிர்கடன்களைத் தவறாது ஆற்றுதல் இருமைக்கும் நன்மையளிக்கும் என்பது உறுதி.

மகாளய பட்ச காலம் பற்றி, அதன் பின்னணியில் உள்ள ஒரு சிறு சம்பவத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். பாரதத்தில் கர்ணன் இறந்தவுடன் அவனது ஆவி யமலோகம் செல்கின்றது. கர்ணன் பூமியிலே செய்த பல் வகைத் தானங்களின் பலனாக அவனுக்கு நல்ல வரவேற்பும், பொன் னும் புகழும் வழங்கப்பட்டது. ஆனால் உணவு வகைகள் ஒன்றுமே அவனுக்கு வழங்கப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று அங்கிருந்தோரைக் கர்ணன் வினவிய போது, கர்ணன் பூமியில் உணவைத் தர்மமாக வழங்கவில்லை என்று பதில் அளிக்கப்பட்டது. இதனைச் செவிமடுத்த கர்ணன் யமதர்மராஜனிடம் தான் பூமிக்கு மறுபடியும் சென்று வர 14 நாட்கள் அனுமதி பெற்று, பூமி சென்று அங்கு அந்தணர், ஏழை, எளியவர் யாவர்க்கும் 14 நாட்கள் அன்னதானம் வழங்கி மறுபடியும் யமலோகம் சென்றடைந்தான். அதன் பின்னர் அவனுக்கு அங்கு பல மடங்கு உணவுப் பதார்த் தங்கள் வழங்கப்பட்டன என ஒரு வரலாறு உண்டு. இந்த 14 நாட்களுமே பித்ரு பட்சமாகக் கருதப்பட்டுப் பூமியில் இறந்த முன்னோர்களின் நினைவாக பிதுர்க்கருமம், அன்ன தானம் இன்றுவரை நடைபெற்று வருகின்றமை கண்கூடு. இம் மகாளய பட்ச காலத்தில் படைக்கும் உணவு வகைகள் அந்தந்த ஆத்மாவைச் சென்றடைவதாக ஐதீகம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயத்தின் மிகவிசேடம் வாய்ந்ததாகக் கருதப்படும் பஞ்சபூதத் தலங்கள்

தல யாத்திரை செய்தல், தலங்களைத் தரிசித்தல் புண்ணியம் வாய்ந்த செயல்களாகும். தலங்களுள் அதி விசேஷம் வாய்ந்த பஞ்சதலங்கங்களைப் பற்றி நோக்கின்,

1. நில அம்சமாகச் சிவபிரான் காட்சி தரும் தலம்
   - காஞ்சிபுரம்
2. நீர் அம்சமாகச் சிவபிரான் காட்சி தரும் தலம்
   - திருவானைக்கா
3. தீயின் அம்சமாகச் சிவபிரான் காட்சி தரும் தலம்
   - திருவண்ணாமலை
4. ஆகாய அம்சமாகச் சிவபிரான் காட்சி தரும் தலம்
   - சிதம்பரம்
5. காற்றின் அம்சமாகச் சிவபிரான் காட்சி தரும் தலம்
   - காளகத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்சவங்கள்

**வ**ருடாவருடம் சகல ஆலயங்களிலும் வருடாந்த உற்சவம் இடம்பெறுவது வழமை. இத்தகைய நாட்களிலே சில விழாக்களுக்கு சிறப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லுமளவுக்குச் சில தலங்கள் அமைந்துள்ளன. அவற்றை நோக்குவோம்.

தேர்த்திருவிழாவைத் திருவாரூரில் கண்டுகளிக்கவேண்டும்.

கந்தசஷ்டி விழாவைத் திருச்செந்தூரில் கண்டின்புற வேண்டும்.

கார்த்திகைத் தீப விழாவைத் திருவண்ணாமலையில் கண்டு பயன்பெற வேண்டும்.

காலசம்ஹார விழாவைத் திருக்கடவூரில் கண்டு களிக்க வேண்டும்.

இத்தலத்திலே மார்க்கண்டேயர் சிவனை நோக்கித் தவமியற்றித் தன் ஆயுளை நீடித்தவர். மார்க்கண்டேயருக்கு விதிப்படி வயது 16 தான் என்பதை அறிந்த அவரது பெற்றோர்கள் மிக வருந்தினர். அவர்கள்பட்ட துன்பத்தைக் கண்டு சகிக்க முடியாத மார்க்கண்டேயர் எப்படியாவது சிவ பிரானை வணங்கி அவன் அருள்மூலம் தன் ஆயுளை நீடித்துத் தன் பெற்றோர் துயர் துடைக்க விரும்பினார். அதன்படி சிவனாரை நோக்கித் தவம் செய்தார். 16 வயது பூர்த்தியாகும் நாளன்று சிவலிங்கப் பூசையில் ஈடுபட்டிருந்த மார்க்கண்டேயர் மேல் மறலி தன் பாசக்கயிற்றை வீசினார். அப்போது சிவன் தன் பக்தனுடைய வேண்டுகோளை நிறைவேற்றக் காலசம்ஹாரம் செய்து மார்க்கண்டேயரை மரணத்தின் பிடியிலிருந்து மீட்டருளினார். பின் யமனை எழுப்பி அவனது கடமைகளை ஆற்ற அருளினார். இவ்விழாக் காலசம்ஹார விழா எனப்படுகின்றது. இது சிறப்பாக இடம்பெறுவது திருக்கடவூர் தலமாகும்.

பழனி வடலூரிலே தைப்பூச விழாவைக் கண்டுகளிக்க வேண்டும்.

மகாசிவராத்திரி விழாவை இராமேஸ்வரத்தில் கண்டின்புற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடேசப்பெருமானுக்கு மிகப் பிடித்த அபிடேகம் இடம்பெறும் ஆருத்திரா தரிசனத்தை கோயில் என்றழைக்கப்படும் சிதம்பரத்தில் கண்டு பயன்பெற வேண்டும்.

நாம் விசேஷ தினங்களில் புத்தாடை அணிகின்றோம். அத்தினங்களில் பட்டாடை, பட்டுவேட்டி வாங்கிச் சம்பிரதாய மாக அணிந்து மனநிறைவு அடைகின்றோம். உதாரணமாக, தீபாவளிப் பண்டிகை, வருடப்பிறப்பு, பிறந்த நாள் போன்ற சுபதினங்களைக் குறிப்பிடலாம். நாம் புத்தாடை அணிவது போல் சுவாமிகளுக்கும் பட்டு வாங்கிக் கோயிலில் கொடுத்துச் சாற்ற வைப்பதில் திருப்தி காண்பது நமது வழக்கம். சுவாமிகளுக்கு வழங்குவதுடன் நவக்கிரகங்கட்கும் அவ்வக்கிரகங்களுக்குரிய நிறங்களிலே பட்டுகளை நாம் கொடுத்து சாற்றுவித்தல் நற்பயனளிக்கும்.

சாஸ்திரங்களின் படி,

சூரிய பகவானுக்கு சிவப்பு நிறப்பட்டும்

சந்திர பகவானுக்கு மஞ்சள் நிறப்பட்டும்

அங்காரகனுக்கு (செவ்வாய்)சிவப்பு நிறப்பட்டும்

புதன் பகவானுக்குப் பச்சை நிறப்பட்டும்

வியாழ பகவானுக்கு மஞ்சள் நிறப்பட்டும்

சுக்கிரனுக்கு வெண்ணிறப்பட்டும்

இராகு பகவானுக்கு நீலநிறப்பட்டும்

கேதுவுக்கு ஊதாநிறப் பட்டும்

சனிக்குக் கறுப்பு நிறப்பட்டும் உகந்தவைகளாம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுபடை வீடுகள்

ஞான பண்டிதனான முருகப்பெருமானுக்கு சிறப்பு அவருக்குரிய அறுபடை வீடுகள். அவையாவன:-

திருப்பரங்குன்றம்

திருச்செந்தூர்

பழனி

சுவாமிமலை

திருத்தணிகை

பழமுதிர்ச்சோலை

திருப்பரங்குன்றத்திலே முருகப்பெருமான் தெய்வேந்திரன் மகள் தெய்வயானையை மணம் புரிந்து கொண்டார். முருகப் பெருமானது கிரியாசக்தியாக விளங்குபவள் தெய்வயானை.

திருச்செந்தூர் தலத்திலே தான் சூரபதுமனுக்கும் முருகப் பெருமானுக்குமிடையே சமர் இடம்பெற்று சூரசம்ஹாரம் நிகழ்ந்தது.

பழனியிலே முருகப்பெருமான் ஆண்டிவேடங் கொண்டு பழனியாண்டியாகக் காட்சி தந்தார். தந்தையிடமிருந்து மாங்கனி தனக்குக் கிடைக்காத கோபம் பாலமுருகனுக்கு. அதன் காரணமாக எமக்குத் தரிசிக்க ஒரு பழனியாண்டி கிடைத்தார்.

சுவாமிமலையிலே பிரணவத்தின் பொருள் அறியாது படைத்தல் தொழில் புரிந்து வந்த பிரம்மனைச் சிறையில் அடைத்தார் முருகப்பெருமான். இச்சந்தர்ப்பத்தில் சிவனாருக்கே பிரணவத்தின் பொருளை உபதேசித்தவர் முருகப் பெருமான்.

திருத்தணிகையிலே தனது இச்சா சக்தியாகிய ஸ்ரீவள்ளியை கந்தக் கடவுள் திருமணம் புரிந்தார்.

பழமுதிர்ச்சோலையில் "தேவியர் இருவர் ஒருவனுக்கு, திருமால் மருகன் முருகனுக்கு" என்றவண்ணம் தனது இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளாகிய வள்ளி, தெய்வயானையோடு சேர்ந்து முருகப் பெருமான் காட்சி தரும் தலம் இதுவாகும். கந்தப்பெருமானது ஞான சக்தி அவர் கையில் ஒளிரும் வேற்படையாகும்.

## பேறுகள்

எமது சம்பிரதாயப்படி இல்லத்தின் வாயிலில் நுழையும் புதுமணத்தம்பதிகளை "பதினாறும் பெற்று வாழ்க" என மனதார உளமார வாழ்த்துவது வழமை.

பதினாறு பேறுகளாவன:-

வீறு, விஜயம், சந்தானம், துணிவு, தனம், புத்தி, தான்யம், சௌபாக்கியம், யோகம், அறிவு, சௌந்தர்யம், பெருமை, அறம், குலம், ஆரோக்கியம், நீண்ட ஆயுள்.

## நமஸ்காரங்கள்

இறைவனை வணங்குவதற்கென்று முறை உண்டு. சந்நிதானத்தில் யாம் இறைவனை வணங்கும்போது இரண்டு கைகளையும் தலைக்கு மேல் தூக்கி உயர்த்தி வணங்க வேண்டும். குருவை வணங்கும்போது முகத்திற்கு நேரே இரு கரங்களையும் குவித்து வணங்க வேண்டும். பெற்றோரையும் மற்றோரையும் வணங்கும் போது மார்புக்கு நேரே இரு கரங்களையும் குவித்து வணங்கவேண்டும். ஆண்கள் ஆலயத்தில் செய்ய வேண்டியது அஷ்டாங்க நமஸ்காரம். பெண்கள் செய்ய வேண்டியது பஞ்சாங்க நமஸ்காரம் எனச் சாஸ்திரங்கள் கூறியுள்ளன.

## தீபங்கள்

தீபங்களைத் திருவிளக்குகள் எனவும் கூறுவோம். திருவிளக்கு மகாலட்சுமியின் அம்சமாகும். காலை மாலை விளக்கேற்றி வழிபாடு செய்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. தீபஒளி உள்ள இடங்களில் பிணிக்கும் வறுமைக்கும் தீயவற்றிற்கும் இடமில்லை. பதிலாக அருளும் வளமும் நல்லாரோக்கியமும் கிடைக்கும். விசேட நாட்களில் விளக்கின் ஐந்து சுடர்களையும் எரிய விடலாம். தினமும் வழிபாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முகத்தை ஏற்றி வைத்தால் போதுமானது. விளக்கிற்குத் தாமரைத்தண்டின் நூல் திரி அதிசிறப்பு வாய்ந்தது. அடுத்து பஞ்சுத்திரி, தூய்மையான வெள்ளை அல்லது மஞ்சள் துணியைத் திரியாக உபயோகிக்கலாம். பொதுவாகக் கிழக்குத் திசையை நோக்கியே தீபம் ஏற்றப்படுகின்றது. தெற்குத் திசை தவிர்ந்த மற்றைய திசைகளை நோக்கியும் விளக்கேற்றலாம். தெற்குத்திசை யமதர்மராஜனுக்குரியதா கும். எண்ணெய் வகைகளுள் நெய், நல்லெண்ணெய், இலுப் பெண்ணெய், ஆமணக்கெண்ணெய், தேங்காயெண்ணெய், நெய் ஆகியவற்றை விளக்கேற்றப் பயன்படுத்துகின்றோம். நெய் விளக்கு முருகன் சந்நிதானத்தில் ஏற்ற உகந்தது. நெய்த் தீபம் சகல நலன்களையும் பெருக்கும். தேங்காயெண் ணெய் விளக்கு விநாயகப் பெருமானுக்கு உகந்தது. நெய்த் தீபமும் இலுப்பெண்ணெய்த்தீபமும் சமபலன் தருவனவாம். குத்துவிளக்கில் நெய் விட்டெரிப்பின் வளம் பெருகும். நல்லெண்ணெய் விட்டெரிப்பின் யம பயம், பீடை முதலியவை நீங்கும். இலுப்பெண்ணெய் விட்டெரிப்பின் நல்லாரோக்கியம் பெறலாம். ஆமணக்கெண்ணெய் விட்டெரிப்பின் சகல ஐஸ் வரியங்களும் கிடைக்கும் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. விளக்கினை என்றும் விளக்கிச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். தீபமேற்றும்போது நாமும் ஆசாரத்தோடிருக்க வேண்டும். தீபத்தை வாயால் ஊதி அணைக்காது பூவால் அமத்தி அணைத்தல் முறையாகும். இறைவன் சோதி வடிவினன் எனவே அவனை வழிபட மங்கள விளக்கேற்றல் பொருத்தமானதாகும்.

குத்துவிளக்கின் அமைப்பை எடுத்துக்கொண்டால் அதன்

அடிப்பாகம் பிரம்மாவையும்

தண்டுப்பகுதி விஷ்ணுவையும்

சுடர் உருத்திரனையும்

மேற்தண்டு மகேஸ்வரனையும்

நுனிப்பாகம் சதாசிவனையும் குறிக்கின்றன.

விளக்கு வகைகளில் பஞ்சலோக விளக்கும் வெள்ளி விளக்கும் பூசைக்கு உகந்தவை. இரும்பு விளக்கு சனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகவானுக்கு உகந்தது. வெண்கல விளக்குப் பாவம் போக்கும். மண் விளக்கு மன உறுதியைத் தரும்.கற்பூரத் தீபம் இத்தீபங்களிலிருந்து சற்று வேறுபட்டது. இதன் தத்துவம் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலத்தலாம்.

தெற்குத் திசையிலிருந்து சுடர்விடும் தீபத்தைத் தரிசித்தல் நன்மை பயக்கும் எனச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதன் காரணம் தெற்கிலிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் காந்த சக்தியின் வழியாக இச்சுடர் கடந்து வருவதால் அது நன்மை பயக்கும் என்பது நம்பிக்கை.

பௌர்ணமி நாட்களில் திருவிளக்குப் பூசையைச் சுமங்கலிகளும் கன்னிப்பெண்களும் செய்து வருதல் இன்று எம்மிடையே அதிகரித்துக் கொண்டு வரும் ஒரு நல்ல அம்சமாகும். விளக்கு இருளை அகற்றி ஒளியைத் தருகின்றது. இதேபோன்று ஆலயங்களில் இடம்பெறும் திரு விளக்குப் பூசை அஞ்ஞான இருளை அகற்றி ஞான தீபத்தை ஏற்று தலைக் குறித்து நிற்கின்றது. திருவிளக்குப் பூசையால் கன்னிப்பெண்களுக்கு நல்ல திருமணவாழ்வு அமையும். சுமங்கலிகளுக்கு மாங்கல்ய பலன் நீடிக்கும் என்பது நம்பிக்கை.

கற்பூர ஆராதனையின்போது கற்பூரம் எரிந்து முடிகையில் ஒன்றுமே மிஞ்சுவதில்லை. அதேபோன்று பக்தியால் எமது வினைகள் ஒன்றுமே மிஞ்சாமல் ஆன்மா இறைவனுடன் ஐக்கியமாகி வருதலே கற்பூர தீபம் உணர்த்தி நிற்கும் உண்மையாகும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

மலர்கள் யாவுமே பவித்திரமாக இருப்பினும் சில மலர்களுக்கு தனிச்சிறப்பு உண்டு. அவற்றில் தெய்வங்கள் விரும்பி உறைவதாகச் சாஸ்திரங்கள் கூறுகின்றன. தாமரையில் சிவனும், நீலோற்பலத்தில் உமையும், அறுகில் விநாயகரும், சண்பகப்பூவில் முருகப்பெருமானும், கொக்கிறகு மந்தாரையில் விஷ்ணுவும், கோங்குமலரில் கலைமகளும், செங்கழு நீர்ப்பூவில் சூரியனும், குமுதமலரில் சந்திரனும், நாயுருவி மலரில் யமனும் உறைவதாக பவித்திர புஷ்பசாந்தி நூல்கள் கூறுகின்றன. அத்தோடு உதய பூசையில் நந்தி யாவட்டை, வெள்ளெருக்கு, வெண்தாமரை, புன்னை, நண் பகல் பூசைக்குச் செந்தாமரை, மந்தாரை, செங்கழுநீர், செவ்வலரி, முதலிய செந்நிறப்பூக்களையும், மாலைக்காலப் பூசையில் வெள்ளெருக்கு, வெள்ளலரி, பிச்சி, மந்தாரை, புன்னை, மல்லிகை, முல்லை ஆகிய சாத்வீக மலர்களையும் உபயோகிக்கலாம். கொன்றை, சண்பகம், பொன்னொச்சி முதலிய மலர்களையும் புன்னை, நந்தியாவட்டம், மந்தாரை, கொக்கிற்கு மந்தாரை, வெள்ளெருக்கு முதலிய மலர்களை யும் அர்ச்சித்து வழிபடல் உயர் பயனை அளிக்கும். வில்வம், துளசி, மருக்கொழுந்து, அறுகு, திருநீற்றுப் பச்சை ஆகியன எக்காலப் பூசைக்கும் உகந்தவையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முத்தித் தலங்கள்

சர்வ வியாபகரான இறைவன் எங்கும் வீற்றிருந்து அருள் புரிகின்றான். இயற்கையிலும் இறைவன் உறைகின்றான். மனிதனால் ஆக்கப்பெற்ற ஆலயங்களிலும் இறைவன் உறைகின்றான். மனிதனால் ஆக்கப்பெற்ற ஆலயங் களிலும் இறைவன் எழுந்தருளி இன்னருள் புரிகின்றான். இந்துக் களுக்கு எமது நாட்டிலும் பாரதத்திலும் ஏராளமான புனிதத் தலங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விடயத்திலும் விசேடம் வாய்ந்தவை. அவற்றுள் நான்கு சிறப்புத் தலங்கள் நான்கு விதத்தில் எமக்கு முத்திப்பேற்றைத் தரவல்லன.

அவை முறையே:-

திருவாரூர்

சிதம்பரம்

திருவண்ணாமலை

காசி

திருவாரூரில் பிறந்தால் முக்தி; சிதம்பரத்தைத் தரிசித்தால் முக்தி; திருவண்ணாமலையை தியானித்தாலே முக்தி; காசித் தலத்தில் இறந்தால் முக்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாண்டவங்கள்

**சி**வபெருமானைத் தாண்டகவேந்தர் என அப்பர் சுவாமிகள் பாடியுள்ளார். பஞ்சகிருத்தியங்கள் எனப்படும் ஐந்தொழில் களும் ஐயனின் தாண்டவத்துள்ளே தான் அடங்கியுள்ளன.

சிவபெருமானது தாண்டவத்தால் பிரபஞ்சமே இயங்கு கின்றது. அவனன்றி அணுவும் அசையாது என்பதும் இதையே குறிக்கின்றது. "நடனமாடும் பாதன்" என்றும் "ஆடிக் கொண்டார் அந்த வேடிக்கை காண" என்றும் "நடனமாடினார் வெகு நாகரிகமாகவே" என்றும் "தூக்கிய திருவடி தனை நம்பினேன்" என்றும் கவிஞர்களைப் பாடவைத்தது ஐயனின் தாண்டவமே.

சிவனார் ஆடிய தாண்டவம் 108 ஆகும். அவற்றுள் பன்னிரண்டு தாண்டவங்களை முக்கியமாகக் கொண்டு அவை பற்றி இங்கு நோக்குவோம்.

### ஆனந்தத் தாண்டவம்

இஃது எம்பெருமான் மூவுலகங்களையும் சிருஷ்டித்தபோது ஆடிய தாண்டவமாகும்.

### சிருங்கார தாண்டவம்

ஐயன் தன் சக்தியாகிய பார்வதி தேவியோடு ஆடிய தாண்டவம்

### முனி தாண்டவம்

கோயில் என்றழைக்கப்படும் சிதம்பரத்தில் பதஞ்சலி முனிவர் முன் ஆடிய தாண்டவம்.

### சந்தியா தாண்டவம்

இஃது சந்தியா காலம் என்னும் மாலைப்பொழுதில் ஆடிய நடனமாகும். இந்தத் தாண்டவம் லயம், இசைக்கருவிகள் ஆகியவற்றை உருவாக்க ஆடிய தாண்டவம் ஆகும்.

### ஊர்த்துவ தாண்டவம்

சக்தியின் ஒரு அம்சமான காளியின் செருக்கை அடக்க சிவனார் ஆடிய தாண்டவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திரிபுரதாண்டவம்**

ஐயன் வானையும் பூமியையும் அடக்கி இயக்குவதை இத்தாண்டவம் குறித்து நிற்கின்றது.

**புஜங்க தாண்டவம்**

திருப்பாற்கடலைக் கடைந்தபோது இறைவன் ஆடிய தாண்டவமாகும்.

**கௌரி தாண்டவம்**

சக்தியோடு சேர்ந்து சிவனார் ஆடிய தாண்டவம்

**பூத தாண்டவம்**

ஆயுதங்களை ஏந்திய வண்ணம் சிவனார் ஆடிய தாண்டவமாகும்.

**சம்ஹார தாண்டவம்**

தனது பெற்றோருக்காகத் தன் ஆயுளை நீடித்துத் தர வேண்டும் எனச் சிவனை ஆராதித்த மார்க்கண்டேயருக்காக மறலியை எதிர்த்து சிவன் ஆடிய தாண்டவமாகும்.

**பிரளய தாண்டவம்**

உலக முடிவில் ஐயன் ஆடிய கோரத் தாண்டவமாகும்.

**மாறி ஆடிய தாண்டவம்**

இஃது மதுரையிலே குலசேகர பாண்டியனது வேண்டுகோளுக்கிணங்க வலது காளைத்தூக்கி இடது காது முயலகன் மீது ஊன்றியவண்ணம் எம் பெருமான் ஆடிய தாண்டவமாகும். இதையே சந்தியா தாண்டவம் என சிவபுராணம் கூறுகின்றது.

**காளிகா தாண்டவம்**

இது படைத்தல் தொழிலைக் குறிப்பது எனத் திருப்புத்தூர் புராணம் கூறுகின்றது. அப்பர் சுவாமிகள் திருவடித்ட்சை பெற்ற தலமாகிய திருநல்லூரில் இத்தாண்ட கோலத்தைக் காணலாம். எண் சுரஸ்களில் வலது புற 4 கரங்களிலும் துடி, பாசம், சூலம், அபயகாரம் ஆகியவையும் இடது புற 4 கரங்களிலும் அனல், மணி, காபலம் வீசிய கரஹங்தம் ஆகிய தோற்றத்துடன் சிவனார் எண்கரங்களோடு காட்சி தருகின்ற தாண்டவக் கோலம் இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவக்கிரகங்கள்

வானத்திலிருக்கும் நவக்கிரகங்கள் பூமியில் வாழும் மனிதனை ஆட்டிப்படைப்பதாக அன்றுதொட்டு இன்றுவரை அசையாத நம்பிக்கை எமக்கு உண்டு. சந்திரமண்டலத்திலும் செவ்வாய்க் கிரகத்திலும் மனிதன் ஆராய்ச்சி செய்யும் இவ்விஞ்ஞான யுகத்தில் கூட, இந்த நம்பிக்கை மக்கள் மத்தியில் சற்றும் குறைந்ததாக இல்லை. எனவே இந் நவக்கிரகங்கள் பற்றிச் சற்றுப் பார்ப்போமே!

## சூரியன்

சூரியன் உலகின் கண் ஆனவன். நவக்கிரகங்களுள் நடுநாயகமானவன். சூரியனை முழுமுதலாகக் கொண்ட சமயம் சௌரம். "ஆதித்த ஹிருதயம்" சூரியனுக்கான துதி களில் ஒன்றாகும். சூரியனை வலக்கண்ணாக உடையவர் சிவன் என சிவாகமங்கள் கூறுகின்றன. சூரியனைப் பாலை நிலத் தெய்வமாகப் பாடியுள்ளார் நச்சினார்க்கினியர்.

ரிக் வேதம் சூரியனுக்கு 7 காரணப் பெயர்களைத் தந்துள் ளது. இருளை அழித்து ஒளியைப் பகலில் தருவதால் சவிதா என்றும், தன் ஒளியால் உலகையெல்லாம் ஒளிரச் செய்வதால் பகன் என்றும், இருளைப் போக்கித் தன் ஒளியால் பூமியை உரமுடையதாக்குவதால் பூஷா என்றும், தன் கதிர்களால் மூவுலகங்களையும் அளப்பதால் விஷ்ணு என்றும், இரவில் தன் கதிர்களை, உரோமத்தை மடக்குவது போல் மடக்கிச் செல்வதால் கேசி என்றும் உலக மக்கள் யாவரதும் புகழை யும் ஒருங்கே பெறுவதால் வைசுவாநரன் என்றும், செந்நிற ஒளிவீசும் காளையாக வானில் உலா வருவதால் விருஷா கபி என்றும் சூரியனின் பெயர்களை காரணத்தோடு விளக்கி நிற்கின்றது ரிக் வேதம். இராமர் உதித்த ரகுவம்சம் சூரிய னையே முதல்வனாக உடையது.

மகாமேருவைச், சூரியன் 7 பரிகள் பூட்டிய ஒற்றைச் சக் கரத் தேரில் வலம் வருவதாக பாகவதம் கூறுகின்றது. துர் வாச முனிவர் கூறிய மந்திரத்தைப் பரீட்சிக்க கன்னிப் பெண் ணான குந்திதேவி சூரியனைத் தியானித்து அம்மந்திரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செபித்தபோது பானுமூர்த்தி அவள் முன் தோன்றி அவள் கன்னிமையை மாற்றி அளவளாவ கர்ணன் பிறந்ததாக வரலாறு உண்டு. கதிரவன் புதல்வனாதலால் கர்ணன் கதிரவனுக்குரிய கலச குண்டலத்தோடு பிறந்தான் என்றோர் வரலாறும் உண்டு.

"மழையையும் காற்றையும் தருகின்ற ஞாயிறு பாலைக்குத் தெய்வமாயினை" என்கின்றது கலித்தொகை. நேராகவும், உருவம் அமைத்தும், யந்திரத்தில் ஆவாகனம் செய்தும் ஆதவனை வணங்குதல் மரபு. பாரதத்தில் சூரியனுக்குத் தனிக்கோயில்கள் உள்ளன. ஒரிஸ்ஸாவில் சூரிய பகவானுக்கு கோனாக் என்னுமிடத்தில் தனிக்கோயில் அமைந்துள்ளது. சூரியனைத் திருமாலின் அம்சம் என்றும் கொண்டு சூரிய நாராயணன் எனப் சூரியபகவான் பாராட்டப்படுகின்றான். சூரியனுக்கு அதிதேவதை அக்னி; உகந்த நிறம் சிவப்பு; கொடி சிங்கக்கொடி; ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் வலம் வரும் சூரிய பகவான் பொன்னிற வண்ணத்தவன். பார் போற்றும் பரிதிப் புத்தேளின் பாதார விந்தங்களை வணங்கி அவன் இன்னருள் பெறுவோமாக.

**சீரருள் மிகச்சிறந்து செகத்துயிர் அனைத்துங் காக்கப்**
**பேரருள் பிதாவு மாகிப் பெருந்துன்ப**
**இருளையோட்டிக்**
**காரருள் சுகத்தை நல்கக் கதிர்களா யிரம்ப ரப்பும்**
**பாரருள் பரிதிப் புத்தேள் பதமலர் சென்னி**
**வைப்போம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்திரன்

செங்கதிரோன் என்று சூரிய பகவானும் தண்கதிரோன் என்று சந்திரபகவானும் உலகத்தோரால் போற்றப்படுகின்றனர். நவக்கிரக மண்டலத்தில் சூரியனையும் சந்திரனையும் இணைத்துப் பேசுதல் மரபு. சூரிய சந்திரர் என்போம். சந்தி ரனை விரும்பாதவர் எவருமேயில்லை. இன்பம் தரும் பொருட் கள் எல்லாம் சந்திரனோடு தொடர்புடையவை. சந்திரனை உலகப்பிரியன் என்றுமழைப்பர். பாலர் முதல் விருத்தர் வரை சந்திரனால் ஈர்க்கப்படுகினறனர். சந்திரன் பொழியும் அமுதத் தைத் தேவர்களும் பிதிர்களும் நுகர்வர். வேதங்கள் சந்திர னைச் "சோமன்" என்றழைக்கின்றன. அமுதமயமான சந்திரன் பயிர்களுக்கு வளர்ச்சி தருவதோடு சோமபானத்தையும் அருள்பவன் என்கின்றன வேதங்கள்.

சிவபிரானது எட்டுமூர்த்தங்களில் சந்திரசேகர மூர்த்தமும் ஒன்றாகும். இதனை,

"அருள்நிலைய திங்களாய் ஞாயிறாகி" என்று பாடியுள் ளார் அப்பர் சுவாமிகள். சந்திரனுக்கு அதிதேவதை நீர். அதனாலே தான் நிலவு தண்ணிலவாகின்றது. சந்திரனைப் பற்றிக் கற்பனைக் கதை ஒன்று பார்ப்போம். வயோதிப அன்னைக்கு நான்கு புத்திரர்கள். அவர்களே சூரியன், சந்தி ரன், வருணன், வாயு. ஒருநாள் இவர்கள் நால்வரும் ஒரு விருந்துக்குப் புறப்பட்டார்கள். விருந்தின்போது பரிமாறப் படும் பட்சணங்களில் தனக்கும் சிறிதளவு கொண்டு வரும்படி சொல்லி அவர்களை அனுப்பி வைத்தாள் அன்னை. அவர் களது விருந்தின்போது நிரம்பப் பட்சணங்கள் பரிமாறப்பட்டன. மற்றைய மூவரும் அன்னையின் வார்த்தையை மனதில் வைக்காது வயிறு முட்டச் சாப்பிட, சந்திரன் மாத்திரம் சிறி தளவு பட்சணங்களைக் கையுள் வைத்து இல்லத்திற்கு எடுத் துச் சென்று அன்னையிடம் தந்தான். மற்றையவர் தாம் பட்சணம் கொண்டுவராததற்கு ஒவ்வொரு நொண்டிச் சாட்டுக் கூறினர். சந்திரனின் செயலால் மகிழ்ந்த அத்தாய் சந்திரனை வாழ்த்தினாள். உன்னைத் தவிர மற்றைய மூவ்ரையும் உலகத்தவர் வையட்டும்; உன்னை அவர்கள் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்தி வணங்கட்டும் என ஆசீர்வதித்தாள். அவ்வண்ணமே சந்திரன் மக்களால் என்றும் விரும்பப்படுகின்றான் எனக் கவிதைகளில் வர்ணிக்கப்படுகின்றான். சூரியன், வருணன், வாயு ஒரு சமயத்தில் தன்னும் மக்களால் குறைகூறப்படு கின்றனர். கோடையில் சூரியனும் ஏச்சு வாங்குகின்றான். "பாழும் சூரியன் இன்று கொளுத்துகின்றானே" என்பர் மக்கள். மாரியில் வருணனும் ஏச்சு வாங்குகின்றான். "பேய் மழை பெய்கின்றது. வெளியேயும் புறப்பட முடியவில்லை" என மக்கள் சலித்துக் கொள்வர். பலத்த காற்று வீசும்போது வாயு பகவானுக்கு ஏச்சுத் தாராளமாகக் கிடைக்கின்றது. "பேய்க் காற்று" என்று. எனவே நிலாப் பார்த்து அன்னமுண்ணும் குழந்தைகளுக்கு இக்கதை ஒரு பாடம் புகட்டுகின்றது. வளர்ந்த வர்களுக்கும் இங்கு பாடம் ஒன்று உண்டு. தமது பெற்றோரின் முதுமைப்பருவத்தில் அவர்களை நன்கு பேண வேண்டும்.

சோமன் என்னும் சந்திரன் குமுதப்பிரியன் மென்மையும் அமைதியும் கொண்ட இயல்பினன். இரு சக்கரங்களும் பத்துப் பரிகள் இழுக்கும் தேரையுமுடையவன். தனது மனைவியருள் ரோகிணியை அதிகம் விரும்புவன். அவனுக்கு அணிவிப்பது வெண்பட்டு, உலோகம், ஈயம், மணி, முத்து, தானியம், நெல், பட்சணம், முறுக்கு, சுவை இனிப்பு சிவனாரை நோக்கித் தவம் செய்து நவக்கிரக அந்தஸ்தைப் பெற்ற சோமன் என் னும் சந்திரன் ஆலயங்களில் பரிவார தெய்வங்களிலும் ஒன்றாக அமைத்துப் பூசிக்கப்படுகின்றான்.

**திங்களைப் போற்றுதும் திங்களைப்போற்றுதும்**
**கொங்கலர் தார் சென்னி குளிர் வெண்குடை போன்றிவ்**
**வங்கண் உலகளித்தலான்** என்கின்றது சிலப்பதிகாரம்.

அமுத நிலவைப் பொழிந்திடும் வெண்ணிலாவை வாழ்த்தி வணங்கி வளம் பெறுவோம்.

**செழித்திடச் செல்வம் நல்கிச் செகத்துள்ள**
**உயிர்கட்கெல்லாம் வழுத்திடும் பிதாவுமாகி**
**வல்லிருள் தன்னை யோட்டித்**
**தழைத்திட அமுத மாகத் தக்கதோர் கதிர்ப ரப்பிப்**
**பொழிந்திடுஞ் சோம நாதன் பொற்பாதம்**
**தலைக்கொள்வோமே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செவ்வாய்

செவ்வாய்க் கிரகத்திற்கு அங்காரகன் என்றும் ஒரு பெயர் உண்டு. மங்களன், குகன், சுதன் என்பனவும் இவனது நாமங்கள். இதனால் செவ்வாய்க்கிழமை மங்களவாரம் என்றழைக்கப்படுகின்றது. செவ்வாய் தோன்றிய வரலாற்றை இச் சந்தர்ப்பத்தில் நோக்குவோம். சிவபிரான் யோகத்தில் இருந்த போது அவரது நெற்றிக்கண்ணில் உண்டான வியர்வைத்துளி பூமியில் விழ அது ஒரு குழந்தையாக உருவாகியது. அதுவே மங்களன் எனப் பெயரும் பெற்றது. அச்சேயை நிலமகள் எடுத்து வளர்த்தாள். நிலமகள் வளர்த்த காரணத்தால் செவ் வாய்க்குக் குஜன் என்னுமொரு நாமமுமுண்டு. மங்களன் வளர்ந்து சிவனை நோக்கித் தவம் செய்து நவக்கிரக அந்தஸ் தும் பெற்றான். இவனைப் பற்றி மேலும் ஒரு வரலாறுண்டு.

பரவத்துவாச முனிவர் பால் தோன்றிய மங்களன் என்னும் குழந்தையைப் பூமாதேவி எடுத்து வளர்த்ததாகவும் ஒரு வரலாறு உண்டு. அதே நேரத்தில் வீரவாகு தேவரே அழகுத் திருவுருவங் கொண்டு மங்களனாக விளங்குகின்றார் என்றோர் புராணவரலாறும் உண்டு. இஃது மச்சபுராணம் கூறும் வரலாறு. வீரபத்திரரின் அம்சமாதலால் அவருக்குச் செவ் வாய்க்கிழமை உகந்த விரதமாகும். அங்காரகன் எட்டுக் குதிரைகள் பூட்டிய தேரில் எழுந்தருளுவன் செந்நிறமேனி செந்நிறஉடையவன் அவரது குடையும் செந்நிறமுடையது மேஷக் கொடியுடையவன் அதிதேவதை பிருதுவி செவ்வாய் ஆண் கிரகம் எனப்படுவன் உலோகம் செம்பு தானியம் துவரை மணி இரத்தினம், பவளம் மலர் செண்பகம் சுவை துவர்ப்பு வாகனம் ஆடு மேட ராசிக்கும் விருச்சிக ராசிக்கு முரிய இவன் மகர ராசியில் உச்சத்தை அடைபவன். சூரியன், சந்திரன், குரு இவருக்கு நண்பர்கள். சிவனின் நுதற்கண் வியர்வையிலே தோன்றிய காரணத்தால் முருக அம்சமும் இவரிடமுண்டு எனக் கொண்டு செவ்வாயன்று முருகப் பெருமானையும் வழிபடும் வழக்கம் எம்மவரிடம் இருந்து வருகின்றது. செவ்வாய் தோஷமுடையோர் செவ்வாய்க் கிழமை விரதமிருந்து செவ்வாய்க்குரிய மந்திரத்தை ஓதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவரை, பவளம், செப்புப் பாத்திரம் ஆகியவற்றைத் தானமாக வழங்கி செவ்வாயின் அனுக்கிரகத்தைப் பெறலாம். மங்களச் செவ்வாயின் மலரடி போற்றி நாமும் மங்களமாக வாழ்வோம்.

**சிறப்புறு மணியே செவ்வாய் தேவே**
**குறைவிலா தருள்வாய் குணமுடன் வாழ**
**மங்கள செவ்வாய் மலரடி போற்றி**
**அங்கா ரகனே அவதிகள் நீக்கு!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்

**பு**தன் அறிவிற் சிறந்தவன், ஞானி. இதனால் இவனுக்கு ஞானி, நாயகன் என்று ஒரு நாமங்களுண்டு. அறிவைத்தரும் புதன் அழகானவன் கூட. விஷ்ணுவைப்போல உருவுடைய வனாதலால் விஷ்ணுரூபி எனப் புதனை அழைப்பர். மற்றைய கிரகங்களால் வரும் துன்பங்களைப் போக்கும் ஆற்றல் புதனுக்குண்டு. அதனால் புதனை "க்ரகபீடாஹரன்" என்றும் அழைப்பதுண்டு. பொன்னிற மேனியனான புதன் மஞ்சள் ஆடை அணிந்து சிங்க வாகனத்தில் அமர்ந்து சிங்கக்கொடி உயர்த்தி மேருவை வலம் வருபவன். இவனுக்குப் பச்சை நிறமும் உகந்தது.

புதன் பகவான் உவக்கும் தானியம் பச்சைப்பயறு; மலர் வெண்காந்தள், கோங்குமலர்; சமித்து நாயுருவி; சுவை உவர்ப்பு; வாகனம் சிங்கம், குதிரை; உலோகம் பித்தளை; சந்திரனுக்கும் தாரைக்கும் பிறந்த புதனை கிரகபதி என்றும் அழைப்பர். சிவனை நோக்கித் தவம் செய்து கிரக அந்தஸ்துப் பெற்ற புதன் பிரதிஷ்டை செய்த இலிங்கம் ஒன்று காசித்தலத்திலே உண்டு. தமிழ் நாட்டிலே புள்ளிருக்குவேளூர் என்னும் தலத்திலே புதன்பகவானுக்கோர் சந்நிதி உண்டு.

**இதமுற வாழ இன்னல்கள் நீக்கு**
**புத பகவானே பொன்னடி போற்றி**
**பதந் தருள்வாய் பண்ணொலி யானே**
**உதவியே அருளும் உத்தமா போற்றி!**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன் - பிரகஸ்பதி

வியாழ பகவானுக்கு பிருகஸ்பதி என்றொரு நாமமுண்டு. இவர் தேவகுரு. வாக்கிற்கு அதிபதி. இவரது பார்வை உள்ளவர்கள் வாக்கு வல்லமையுடையோராயிருப்பர். இவரது உபதேசத்தால் தேவேந்திரனும், தேவர்களும் அடைந்த பேறுகள் பல. வாகீசர் எனவும் அழைக்கப் பெறும் வியாழன் ஆங்கீரச முனிவருக்கும் சிரத்தா தேவிக்கும் புத்திரனாகப் பிறந்தவராதலால் ஆங்கீரசர் என்னும் நாமமும் இவருக் குண்டு. இவரது அருட்பார்வையால் நல்லாரோக்கியம் பெற முடியும். பொன்வண்ண மேனியுடைய இவரது அதி தேவதை பிரமன். கிழக்குத் திசை நோக்கியிருக்கும் இவர் பொன்னிறப் பட்டு, பொன்னிறமலர், பொற்குடை, பொன்னிறச் சந்தனம் ஆகியவற்றை விரும்புபவர். தனது நான்கு திருக்கரங்களிலும் முறையே கமண்டலம், அட்சமாலை, போகதண்டம், அபய கரம் ஆகியவற்றைத் தரித்துள்ளார். தனுராசிக்கும் மீன ராசிக்கும் தலைவர். இவருக்கு உகந்த தானியம் கடலை; மணி புஷ்பராகம்; மலர் முல்லை; சமித்து அரசு; வாகனம் அன்னம், யானை; பொன்னிறச் சந்தனக் காப்பு இவருக்குப் பிடித்தமானது. இவர் மனம் மகிழ்ந்து அருள்பவை, வாக்கு, நல்வாழ்வு, நல்லாரோக்கியம், மக்கட்பேறு ஆகியனவை யாகும். காசித்தலத்திலே ஒரு இலிங்கத்தை நிறுவி பதினா யிரம் ஆண்டுகள் சிவனை நோக்கித் தவமிருந்த வியாழ பகவானுக்குத் தேவேந்திரனின் குருவாக அமையும் பாக்கி யத்தை நல்கினார் எம்பெருமான்.

**குணமிகு வியாழக் குரு பகவானே**
**மணமுள வாழ்வு மகிழ்வுடன ருள்வாய்**
**பிரகஸ்பதி வியாழப் பரகுரு நேசா**
**கிரக தோஷமின்றி கடாட்சித் தருள்வாய்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளி - சுக்கிரன்

நவக்கிரகங்களுள் ஒன்றான சுக்கிரனை யாம் வெள்ளி என்போம். எமக்கு நடப்பது சுக்கிரதிசை என்றால் எமக்கு நற்பலன்கள் நிரம்பக் கிடைக்கும் என்பது எல்லோரதும் அசையாத நம்பிக்கை. விருச்சிகம், துலாம் இராசிகளுக்குரிய வனான சுக்கிரன் அசுரகுரு ஆவான். அவனுடைய திசைக்காலம் இருபது ஆண்டுகளாகும். தத்துவங்கள் யாவும் அறிந்த சுக்கிரனுக்கு சூரியனும், பிருகஸ்பதியும் பகையாவார். சுக்கிரன் நீருக்கு அதிபதி என்றும் அதனால் மழையைப் பெய்விக்க உதவுபவன் என்றும் சொல்லப்பட்டுள்ளது. வெண் சுடர் வீசும் திருமேனியை உடைய சுக்கிரன் வெள்ளாடையை உகப்பதால் "சுக்கிலாம்பரதன்" என்றும் அழைக்கப் பெறுகின் றான்.

எட்டுத்தேர்கள் பூட்டிய வெள்ளித்தேர் இவனுக்குரியது. மேருவை வலம்வரும் இவனது தேர், கொடி, குடை, உடை, மாலை யாவும் வெண்ணிறத்தவையே. நீதிவானான் ஆன சுக்கிரன் உருவாக்கிய நீதி வடமொழியில் சுக்கிர நீதி என்றழைக்கப்படுகின்றது. சுக்கிரனுக்கு அதிதேவதை இந்திரன். கிழக்கு நோக்கி அமர்ந்திருக்கும் சுக்கிரனது விசேஷம் யாதெனில் அவன் இறந்தவரை எழுப்பித்தரும் மந்திரமாகிய மிருத சஞ்சீவினி மந்திரத்தைச் சிவபெருமானிடமிருந்து உப தேசிக்கப் பெற்றவன். இதனால் சுக்கிரனைத் தமது குருவாகக் கொண்ட அசுரர்கள், தேவ அசுர யுத்தத்தில் அடைந்த வெற்றிகள் பல; தேவர்கள் இழந்த வெற்றிகளும் பல. தேவகுருவாகிய பிரகஸ்பதிக்கு இந்த "மிருத சஞ்சீவினி" மந்திரம் தெரிந்திருக்கவில்லை. தொடர் தோல்விகளால் சலிப்புற்ற தேவர்கள் பிருகஸ்பதி குருவின் புதல்வனான கசனை, சுக்கிரனின் திருமகளாகிய தேவயானிக்குச் சேவை செய்து அவளது நன்மதிப்பைப் பெற்று அவள் மூலம் மிருத சஞ்சீவினி மந்திரத்தை அறிந்து வரும்படி அனுப்பினர். அவனும் தேவயானிக்குச் சேவை செய்து அவளது உள்ளம் கவர்ந்தான். ஆனால் அசுரர்களோ கசன், தேவர்கள் கட்சியைச் சேர்ந்தவன் என்பதை அறிந்து அவனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றனர். ஆனால் சுக்கிராச்சாரியார் தனது சஞ்சீவினி மந்திரத்தால் அவனை எழுப்பித் தந்தார். மீண்டும் அசுரர்கள் கசனைக் கொன்று கொளுத்திப் பொடியாக்கி அதனை மதுவுடன் கலந்து தமது குருவுக்குக் கொடுத்தனர். அவரும் அதனைப் பருகி விட்டார். தேவயானி நடந்ததை அறிந்து தந்தையிடம் கூறவே சுக்கிராச்சாரியார் மந்திரத்தைச் சொல்ல அவன் அவரது வயிற்றுள் உயிர் பெற்றான். ஆனால் அவன் வயிற்றைப் பிளந்து வெளியேவரின் தான் இறக்க வேண்டி வரும் என்பதை உணர்ந்து சுக்கிராச்சாரியார் வயிற்றிலிருக்கும் கசனுக்கு சஞ்சீவினி மந்திரத்தை உபதேசித்தார். இவ்வழியில் சஞ்சீவினி மந்திரத்தை அறிந்துகொண்ட கசன், சுக்கிரனது வயிற்றைப் பிளந்து வெளியே வரச் சுக்கிரன் இறந்தார். கசன் தான் அவரிடமிருந்து கற்ற மந்திர பலத்தால் சுக்கிராச்சாரியாரை எழுப்பித் தந்தான். இ∴து தந்தைக்கும் மகளுக்கும் கசனுக்குமிடையே நடந்ததோர் சம்பவம். இதனை எமக்கு அறியத் தருவது மகாபாரதம் ஆதி பருவம் ஆகும்.

இன்னமும் சுக்கிரனோடு தொடர்புடைய ஒரு சுவாரஸ்யமான சம்பவத்தைப் பார்ப்போம். சுக்கிரனது உபதேசத்தால் வலிமை பெற்றவர்களுள் மகாபலிச் சக்கரவர்த்தியும் ஒருவன். அவன் அசுவமேதயாகம் செய்து மேலும் வலிமைபெறவே தேவர்கள் அவனது ஆற்றலை அழிக்கும்படி திருமாலை வேண்டினர். அவர்களது வேண்டுகோளுக்கிணங்கிய திருமால் வாமன அவதாரமெடுத்து மகாபலி மன்னனிடம் தானம் வேண்டி நின்றார். தானம் செய்யத் தயங்காத மகாபலி "உமக்கு என்ன வேண்டும்" என வினவ, "எனக்கு என் காலால் மூவடி நிலம் வேண்டும்" என்று பதில் வந்தது வாமனரிடமிருந்து. "அப்படியே தருகிறேன்" என்று மகிழ்ச்சியோடு பதிலளித்தான் மன்னன். மன்னனின் அருகில் அமர்ந்திருந்த குரு சுக்கிராச்சாரியர் வந்த அந்தணனை நம்ப வேண்டாமென்றும் அவர் வானுலகைப் பெற்றுத் தேவேந்திரனிடம் வழங்க வந்த திருமாலே தான் என்றும் அறிவுறுத்தினார். ஆனால் மகாபலி மன்னன் "யான் சொன்ன சொல்லை மாற்ற மாட்டேன், கொடுப்பதைத் தடுப்பது இழிந்த செயல்-குருவே என்னை இச்சந்தர்ப்பத்தில் மன்னிக்க வேண்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தனது குருவை வேண்டிக்கொண்டான். மன்னன் தானம் வழங்குகையில் கமண்டல நீரை வாமனரின் கரங்களில் வார்க்கையில் மன்னனைக் காப்பாற்றும் நோக்கத்தோடு சுக்கிராச்சாரியார் வண்டுருவெடுத்துக் கமண்டலத்திலிருந்து நீரை வெளியே வரவிடாது கமண்டலத்தின் துவாரத்தை அடைக்க, இதனை உணர்ந்த வாமனர் ஒரு தர்ப்பைப்புல்லால் கமண்டலத்தின் துவாரத்துள் விட்டுக் குத்தவே அது சுக்கிரனான வண்டின் கண்ணைக் குத்தவே சுக்கிரன் ஒரு கண்பார்வையை இழந்தான். அன்று தொட்டுச் சுக்கிரன் ஒற்றைக் கண்ணனானான். அள்ளிக் கொடுக்கும் சுக்கிர பகவானை நாம் என்றும் வணங்கி அவனருள் பெறுவோம்.

**சுக்கிர மூர்த்தி சுபம்மிக ஈவாய்**
**வக்கிர மின்றி வரமிகுத் தருள்வாய்**
**வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே**
**அள்ளிக் கொடுப்பாய் அடியார்க் கருளே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனி பகவான்

நவக்கிரகங்களுள் ஒருவரான சனிபகவானுக்கு மக்கள் எல்லோரும் ஏகப்பட்ட மரியாதையும் அச்சமும் கொண் டுள்ளார்கள் என்பது அனுபவ உண்மை. சனிக்கிழமைகளில் அதுவும் புரட்டாதி மாதச் சனி என்றால் கேட்கவே வேண்டாம். ஆலயத்திலே மூலவரின் சந்நிதானத்திலும் பார்க்க மக்கள் கூட்டம் சனிபகவான் சந்நிதானத்தில் அலைமோதிக் கொண்டிருக்கும். கொடுப்பவனும் அவனே கெடுப்பவனும் அவனே என மக்கள் சனிபகவானைப் பற்றி அடிக்கடி சொல்லித் தங்களைத் தேற்றிக் கொள்வார்கள்.

சனிபகவானைச் சனீஸ்வரன் என்றும் அழைப்போம். கிரகங் களுள் சனிபகவானுக்குத் தான் ஈஸ்வரன் என்ற நாமம் சேர்ந்திருக்கும் பெருமை உண்டு. சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் பிறந்த புத்திரன் சனிபகவான். காசியில் சிவலிங்கம் அமைத்துச் சிவனாரை வேண்டிக் கிரகப் பதவியும் பெற்றான். சனிபகவானுக்கு ஒரு கால் முடம், எனவே நொண்டி நடக்கும் சாத்தியக்கூறும் அவனுக்கு உண்டு. யமன் தண்டத்தால் அடித்ததால் இந்த ஊனம் ஏற்பட்டதென நவக்கிரக கீர்த்தனை என்னும் நூல் குறிப்பிடுகின்றது.

சனிபகவானின் தோற்றம் பற்றிக் கூறின் கரிய நிறமும், குறுகிய வடிவமும், ஒரு கால் ஊனமும் கொண்ட இவர் கரிய நிற ஆடை அணிந்து எட்டுக் குதிரைகள் பூட்டிய இரும்பு ரதத்தில் மேருவைப் பவனி வருவார். இவரது வாக னம் காகம். இவரது வாகனம் கழுகு என்றும் சில வடமொழி நூல்கள் குறிப்பிடுகின்றன. காகம் வாகனமாதலால் சனிபக வானை "காகம் ஏறும் தம்பிரான்" என்றும் அழைப்பர். இவரது கொடியும் குடையும் கருநிறமுடையவை. இவர் விரும்பும் மலர் நீலமலர், கருங்குவளை, வன்னி; தானியம் எள்; மணி நீலம்; சுவை கசப்பு; இவருக்கு எள்ளெண்ணெயில் அதி விருப்பமாதலால் தான் அவரைப் பிரீதிப்படுத்த சனிக்கிழமைகளில் எள்ளெண்ணெய் தீபம் எரிப்பது வழமை. மகர கும்ப ராசிகளுக்கு இவர் அதிபதியாவர். தாமத குணமுடைய இவருக்கு அதிதேவதை யமன் ஆவார். இவரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்புற்றவர்கள் கதைகள் பல. அவர்களுள் ஒன்று நளமகா ராஜனது வரலாறு. இருப்பினும் சனிப்பீடனம் நீங்கி நளன் மீண்டும் வளம்பெற்றமை வரலாறு. கருணையுள்ளம் கொண்டவர் சனிபகவான் என்றும் குறிப்புகள் உண்டு. சனியை ஆயுட்காரகன் என்று சோதிடம் கூறுகின்றது. இவரது அருள் பெற்றவர்க்கு ஆயுட்பலமுண்டு என்கின்றது சோதிடம்.

**சங்கடந் தீர்க்கும் சனி பகவானே**
**மங்கலம் பொங்க மனம் வைத்தருள்வாய்**
**சச்சரவின்றி சாகா நெறியில்**
**இச்செகம் வாழ இன்னருள் தாதா!**

●

## இராகு

நவக்கிரகங்களுள் ராகுவும் கேதுவும் இடம்பெற்றிருப்பினும் இவை இரண்டையும் சாயாக் கிரகங்கள் என்று கூறுவார்கள். விப்ரசித்தி என்ற அசுரனுக்கும் சிம்ஹிகை என்ற பெண்ணுக்கும் பிறந்தவன் ராகு. தேவர்கள் பாற் கடலைக் கடைந்த போது கிடைத்த அமுதத்தைத் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் பங்கிடுவதாக வந்த மோகினி தேவர்களுக்கே அமுதத்தைத் தந்திரமாக வழங்கினாள். இதனை அறிந்த ராகு தனது அசுர உருவத்தைத் தேவ உருவமாக மாற்றி சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையே அமர்ந்து தானும் அமுதத்தை உண்ண ஆரம்பித்தான். இதனைச் சூரியனும் சந்திரனும் அவதானித்துவிட்டனர். உடனே இராகுவின் தந்திரத்தை மோகினிக்குக் குறிப்பாக உணர்த்தவே மோகினி தன் கரத்தில் இருந்த சட்டுவத்தால் அவன் தலையில் அடித்தாள். ராகுவின் தலையையும் அறுத்து விட்டாள். திருமாலே மோகினியாக வந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. உடல் இருகூறாகியும் இராகு இறக்கவில்லை. காரணம் ராகுதான் அமுதத்தை உண்டுவிட்டானே! தன்னை மோகினிக்குக் காட்டிக்கொடுத்த சூரியனிலும் சந்திரனிலும் ராகுவுக்கு பகை வளர்ந்தது. ராகு சூரிய சந்திரர்களைப் பிடிக்க முனைந்தான். இதுவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகணம் என்றாயிற்று. இது புராணங்கள் தரும் தகவல். இதற்குரிய விஞ்ஞான விளக்கம் வேறு.

இராகுவின் உருவம் பற்றிச் சிற்பரத்தினம் என்னும் நூல் கூறியுள்ளதை இங்கு நோக்குவோம். இராகு கரியநிறத்தினன்; கரிய ஆடையை அணிபவன்; கருநிறக் கொடியையுடையவன்; சிங்க வாகனன்; அதிதேவதை பசு; உவக்கும் தானியம் உளுந்து; மலர் மந்தாரை; அர்ச்சனைக்குரியது அறுகு; சுவை புளிப்பு. இயல்பான தலையும் பாம்பு உடலும் கொண்டவன். இராகுவின் முகம் தேவனைப் போல் இருப்பினும் உடல் முழுவதும் செதில் அமைந்து பாம்பு உடல் என்பதை உணர்த்தி நிற்கின்றது.

**அரவெனும் இராகு ஐயனே போற்றி**
**கரவா தருள்வாய் கஷ்டங்கள் நீக்கு**
**ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி**
**ராகுக் கனியே ரம்மியா போற்றி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேது

**சா**யாக்கிர்கங்களுள் ஒன்று இராகு, மற்றையது கேது. இராகு போலவே கேதுவும் தேவர்கள் திருப்பாற்கடலைக் கடைந்தபோது திருட்டுத்தனமாக அமுதம் உண்ணமுற்பட்ட போது, மோகினி வடிவமெடுத்து அமுதத்தைப் பகிர்ந்து கொடுத்துக்கொண்டிருந்த திருமாலால் தண்டிக்கப்பட்டு உடல் இரு கூறானான். ஆனால் அமுதத்தை உண்ட காரணத்தால் உடல் இரு கூறாகியும் உயிர் பிழைத்த ராகு விஷ்ணுவை நோக்கித் தவம் செய்து பாம்புத் தலையைப் பெற்றார். ஆரம்பத்தில் அசுரர்களுக்குள் மிகப்பெரியவனாகவும் நெடிய திருமேனியுமாக இருந்த கேது பின்னர் செம்பாம்பு வடிவம் பெற்றுச் சாயாக் கிரகங்களுக்குள் சிறந்து துலங்கும் கேது ஆனார். இவர் அணிவது மஞ்சள் ஆடை. கிரக அந்தஸ்தைப் பெற்ற கேதுவின் அதிதேவதை பிரம்மா. சினம் கொள்வது இவரது இயல்பு. கண்கள் சிவந்திருக்கும். உவக்கும் தானியம் கொள்ளு உரிய மணி வைடூரியம்; மலர் செவ்வல்லி; சுவை புளிப்பு; வாகனம் கழுகு. மோகினியால் முன்னம் தலை இழந்த மூர்த்தியான கேதுவுக்கு தூம கேது, லோக கேது, மஹா கேது, ஸர்வ கேது என்னும் பெயர்களும் உள.

**கேதுத் தேவே கீர்த்தித் திருவே**
**பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்**
**வாதம் வம்பு வழக்குக ளின்றி**
**கேதுத் தேவே கேண்மையாய் ரக்ஷி!**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராகங்கள்

இசைக்கும் இறைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இறைவனே இசை வடிவானவன். இதற்கு எடுத்துக்காட்டாக நாம் வணங்கும் தெய்வங்களின் திருக்கரங்களில் இசைக் கருவிகள் மிளிர்வதைக் காணலாம். உதாரணமாக, சிவபிரானின் திருக்கரத்தில் உடுக்கும், சரஸ்வதியின் திருக்கரங்களில் வீணையும், கிருஷ்ணனின் திருக்கரங்களில் வேணுவும். இருப்பதைக் காணலாம். அது மாத்திரமன்றி இசையில் நாட்டமிருந்த காரணத்தால் தான் இறைவன் தனது மெய்யடியார்களிடம் தம்மைப் பாடும்படி பல சந்தர்ப்பங்களில் கேட்டுள்ளார். உதாரணமாக, தம்பிரான் தோழரான சுந்தரரிடம் "பித்தா என்று ஏசிய உன் வாயால் அவ்வண்ணமே என்னைப் பாடு" என்கின்றார்.

"பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா" என்னும் தேவாரப்பதிகமும் பிறந்தது. அதேபோன்று மணிவாசகர் வாழ்வில் சிதம்பரத்திலே அவர் தங்கியிருந்தபோது சிவனார் ஓர் அந்தணவடிவம் கொண்டு வந்து வாசகர் பாடிய திருவாசகத்தை எழுதி முடித்ததும் பாவை பாடிய வாயால் கோவையும் பாடு என மணிவாசகரைக் கேட்கின்றார். அவர் வேண்டுகோளுக்கிணங்க திருக்கோவையாரும் தோற்றம் பெறுகின்றது. இதுமாத்திரமின்றி அரனிருந்த மலையைப் பெயர்த்துத் தண்டனையும் பெற்ற இலங்கேஸ்வரனை அவன் பாடிய சாமகானத்தால் மகிழ்ந்து அவனை மன்னித்தருளி வாழும் வரமும் அருளினார் ஈசன் என்றால், இறைவனை இசை எத்துணை இசைய வைக்கின்றது என்பதை யாம் புரிந்து கொண்டு எம்பெருமானைத் தரிசிக்கும்போது உரிய பண்களில் (இராகங்களில்) ஈசனைப் பாடி வழிபடுதல் மிகப் பொருத்தமாகும்.

அதன்படி ஈசனுக்கு,

அதிகாலையில் பூபாளம், சாவேரி, மலையமாருதம் ஆகிய இராகங்களிலும்,

காலையில் பிலஹரி, கேதாரம், தன்யாசி ஆகிய இராகங்களிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதியத்தில் சங்கராபரணம், கல்யாணி, நாட்டைக்குறிஞ்சி, மோகனம் ஆகிய இராகங்களிலும்,

இரவில் காம்போதி, தோடி, பைரவி, ஆனந்தபைரவி ஆகிய இராகங்களிலும் பள்ளியறைப் பூசையின்போது நீலாம்பரி இராகத்திலும் பாடித்துதித்து எம்பெருமான் இன்னருள் பெறவேண்டும்.

ஆலய வழிபாட்டில் தோத்திரம் பாடுகையில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கினைப் போல், உற்சவ காலங்களில் குறிப்பிட்ட இராகங்களைக் குறிப்பிட்ட உற்சவ நிகழ்வின் போது இசைத்தல் முறையாகும். உதாரணமாக, யாகசாலை யிலிருந்து சுவாமி கோபுர வாசல் வரை எழுந்தருளும் போது நாதஸ்வரத்தில் மல்லாரி இராகம் வாசிக்கப்படல் வேண்டும். சுவாமி உட்பிரகாரத்திலிருந்து வெளியே வந்ததும் நாட்டை, தோடி போன்ற இராகங்களில் கீர்த்தனைகளை வாசித்தல் முறையாகும். திருஉலா முடிந்து பூசைகள் நிறை வேறிச் சுவாமி பள்ளியலறக்குச் செல்லும் போது ஆனந்த பைரவி, கேதாரகௌளை ஆகிய இராகங்கள் வாசிக்கப்பட்டு பள்ளியறையில் சுவாமியை இருத்தி நீலாம்பரி இராகம் வாசித்து விழாவை நிறைவு செய்தல் வேண்டும். இவற்றைவிட ஆலய உற்சவங்களில் இடம்பெறவேண்டிய நவசந்தி வாத்திய இசையும் உண்டு.

**இசையினால் உனைப் பாட இனிக்குதைய்யா!**

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள்

ஆலயங்களில் உற்சவமூர்த்தி திருவுலா வரும்போது அவற்றிற்குரிய வாகனம் அழகுற அமைந்து அக்காட்சியை மெருகூட்டுவதை யாம் ஆலய உற்சவ காலங்களில் கண்டு களிக்கலாம். ஒரு ஆலயத்தின் வாகனசாலையே வண்ணக் கலவையாக அழகுற அமைந்திருக்கும். சுவாமியின் வாகனங்கள் எப்போதும் 'பளிச்' எனப் பார்ப்பவர் கண்ணுக்கு விருந்தாக வைத்துப் பேணப்பட வேண்டும். அந்தந்தக் காலத்தில் அவற்றிற்குரிய நிறங்களை மங்கவிடாது வர்ணம் பூசி உயிரோவியங்களாக வைத்திருத்தல் அவசியம். எமது தெய்வங்களுக்கு அமைந்திருக்கும் வாகனங்கள் ஒவ்வொன்றுமே கம்பீரமும் அழகும் கொண்டவை. உதாரணமாக, சிங்க வாகனம், குதிரை வாகனம், இடப வாகனம், யானை வாகனம், சேவல், மயில், மூஷிகம், தேர் ஆகியவற்றை குறிப்பிடலாம். இவை ஒவ்வொன்றின் பின்னும் ஒவ்வொரு தத்துவம் அடங்கியுள்ளது.

உதாரணமாக, சிவனாருக்குரிய **இடபவாகனம்** தரும தேவதையைக் குறிக்கின்றது. பொறுமைக்கும் இது சின்னமாகின்றது. தர்மதேவதை வேண்டிக் கொண்டதன் பெயரில் சிவனார் அதனைத் தன் வாகனமாக்கிக் கொண்டார். இதனால் இடபாருடர் என்ற திருநாமமும் பெற்றார். ஞானசம்பந்தப் பெருமான் ஞானப்பாலை உண்டபோது தான்கண்ட காட்சியைப் பாடியருளும்போது இடபமான விடையைத் தனது முதலாவது தேவாரத்தில் குறிப்பிடத் தவறவில்லை. "தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதிசூடி" என்கின்றது தேவாரம்.

ஞானசம்பந்தப் பெருமான் தனது கோளறு பதிகப் பாடல்களில்,

"என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே" - என்றும்,
"நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறும் எங்கள் பரமன்"- என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேள்பட விழிசெய்தன்று விடைமேலிருந்து
மடவாள் தனோடும் உடனாய்" - என்றும்,

"பலபல வேடமாகும் பரநாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்" - என்றும்

பாடப்பெற்ற அருட் பாடல்களில் இறையின் புகழோடு இடபத்தின் பெருமையும் ஒருங்கு துலங்குவது கண்கூடு.

அடுத்து, **குதிரை வாகனத்தை** எடுத்துக் கொள்வோம். குதிரை வாகனம் வேதத்தைக் குறிக்கின்றது. வேதத்தில் எம்பெருமான் ஆரோகணித்து ஒவ்வாததை அகற்றி வெற்றி அடைந்து அருள்பாலிக்கின்றார் என்பது அர்த்தம். குதிரையின் நான்கு கால்களும் முறையே அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைக் குறிக்கின்றன. குதிரையின் முகம் விதியையும், கண்கள் ஞானத்தையும், காதுகள் வேதத்தின் இரு காண்டங்களையும் குறிப்பதாகச் சொல்லப்பட்டுள்ளது.

**சிங்க வாகனத்தை** நோக்கின் சக்திக்கே இது வாகனமாக அமைகின்றது. துர்க்காதேவி, காளி, அம்பாள் ஆகிய தெய்வங்கள் சிங்கத்தை வாகனமாகக் கொண்டுள்ளனர். மிருகங்களை அடக்கி ஆளும் வல்லமை சிங்கத்துக்கு உண்டு. அதே போன்று சக்தியும் தீயவற்றை அடக்கி ஒடுக்கி இன்னருள் புரிகின்றாள் என்பது இதன் தத்துவம்.

முருகப்பெருமானின் கொடியை அலங்கரிக்கின்றது சேவல். கொக்கரக்கோ என அது கூவும். கொக்க-அர-கோ என்று பிரித்துப் பார்த்தால் மாமரமாய் நின்ற சூரனை அழித்து அருளிய கோ ஆன முருகா என்பது அதன் பொருளாக அமையும். இது நாத தத்துவத்தையும் குறித்து நிற்கின்றது.

**மயில்வாகனம்** முருகப்பெருமானுக்குரியது. மயிலைத் தன் வாகனமாகக் கொண்டு முருகப்பெருமான் மயில் வாகனனானார். சூரபதுமனைச் சங்கரித்து அவனுடலைப் பிளந்து அவற்றைச் சேவலும் மயிலுமாக்கியவர் கந்தக் கடவுள். முருகனும் அழகன். மயிலும் அழகானது. மயிலின் காலின்கீழ் இருக்கும் பாம்பு குண்டலினி சக்தியைக் குறிக்கின்றது. இச் சக்தியை அடக்கியாளும் சக்தி, சக்தியளித்த வடிவேலுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டு என்பதுவும் ஒரு உண்மை. மயில் தோகை விரித்தாடுதல் சக்தியின் விரிவையும் விளக்கி நிற்கின்றது.

**ஐந்து தலை நாகமும்** ஒரு வாகனமாக அமைகின்றது. அரவம் புற்றில் மறைந்து வாழும். தன்னிடமுள்ள மாணிக்கம், நஞ்சு, படம் மூன்றையும் மறைத்து வாழும் சக்தி அதனிடமுள்ளது. நாகம் தான் விரும்பும் போது இவற்றை வெளிப் படுத்தும் தன்மையும் கொண்டது. இது போலவே திரோதான சக்தியும் ஆன்மா பக்குவமடையும் வரை மறைந்திருந்து ஆன்மா பக்குவநிலையை அடைந்ததும் அருள்புரியும் இயல் பினை உடையது. மேலும் குண்டலினி சக்தியும் பாம்பின் வடிவம் உடையது. அதன் விரிவும் ஒடுக்கமும் பிரபஞ்சத்தின் தோற்ற ஒடுக்கத்தை உணர்த்தி நிற்கின்றது.

**யானைவாகனம்** பார்ப்பதற்கு கம்பீரமாயும் பொலிவாயும் காட்சி தரும். ஒருகால் விஷ்ணுவும், பிரம்மாவும், பரஞானமும், முருகப்பெருமானை வேண்டி, தாம் யானை வடிவம் கொண்டு அவரைச் சுமந்து செல்ல விரும்பி அவ்வண்ணமே சுமந்து சென்றதாக ஒரு வரலாறு உண்டு. எனவே இம்மூன்றிலும் முருகப்பெருமானே மேலானவர் என்ற உண்மையும் இதன் மூலம் புலனாகின்றது.

**மூஷிகம்**, மூஞ்சூறு, எலி எல்லாம் ஒன்றையே குறிக்கும். விநாயகப்பெருமானின் சிறப்பு வாகனமான மூஷிகம் ஒரு நோக்கில் கஜமுக அசுரனைக் குறிக்கின்றது. ஒருகால் கஜமுக அசுரன் மூஷிக உருக்கொண்டு வர அவனை அடிமை கொண்டு அவனுக்கு அருள் செய்தார் கணபதி. மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு கணபதி மூஷிக வாகன னானார். கணபதி ஓங்கார வடிவினராய்ப் பேரண்டங்களையும் தம்முள்ளே அடக்கும் விநாயகர் சிறிய மூஷிகம் சுமக்க வல்ல சிறிய வடிவினராதலும் உண்டு என்றதோர் விளக்கமும் உண்டு. ஆன்மா பெருமையும் அதே நேரத்தில் நுண்மையும் உடையது. உடல் சிறிதாயிருப்பினும் உள்ளிருக்கும் ஆன்மா சக்தியில் பெரியது என்பதை இவ்வாகனம் உணர்த்தி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்

தேர்த்திருவிழா இல்லாத ஆலய உற்சவமே இல்லை எனலாம். தேர்த்திருவிழாவை இரதோற்சவம் என்றும் சொல்வோம். பஞ்சகிருத்தியங்களுள் தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. தீயவற்றை அழித்து நல்லவற்றைக் காத்தல் என்பது அதன் தத்துவம்.

தாரகாட்சன், கமலாட்சன், வித்தியுன்மாலி என்றழைக்கப் பெற்ற மூன்று அசுரர்களும் முறையே பொன், வெள்ளி, இரும்பு ஆகியவற்றால் மூன்று கோட்டைகளை அமைத்துத் தேவர்களோடு சமர் செய்தபோது அவர்களை அழித்தொழிக் கச் சிவபிரான் தேரை வாகனமாகக் கொண்டு போருக்குப் புறப்பட்டார். சூரிய சந்திரரை சக்கரங்களாகவும், மந்திரக் கலையை அச்சாகவும், பதினான்கு உலகங்களைத் தட்டுக் களாகவும், வானத்தைப் பீடமாகவும், நட்சத்திரங்களை விதான மாகவும், யாகங்களைச் சட்டங்களாகவும், வேதாகமங்களை மணிகளாகவும், சரஸ்வதி தேவியை வில்லின் மணியாகவும், விஷ்ணுவை அம்பாகவும், அக்கினியை அம்பின் நுனியாகவும் கொண்டு தேர் அமைத்து போர் புரியப் புறப்பட்டார். ஈசன் பின்னர் முப்புரங்களை எரித்தழித்ததென்னவோ தனது புன் சிரிப்பால் தான் என்பது புராணம் தரும் செய்தி.

அசுரர்களான தாரகாட்சன் ஆணவ மலத்தையும், கமலாட் சன் ஆணவம், கன்மம் ஆகிய இரு மலங்களையும், வித்தியுன் மாலி மும்மலங்களையும் குறித்து நிற்கின்றனர். ஒவ்வொரு தெய்வத்திற்கும் ஒவ்வொரு வாகனம் அமைந்திருப்பினும் உற்சவ காலத்தில் தேர் ஏறாத சுவாமியே இல்லை எனலாம். ஊரெல்லாம் கூடி ஒரு தேர் இழுத்தால் உள்ளம் குளிர வாழ வரம் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் சுழி

எதையும் எழுத ஆரம்பிக்குமுன் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது வழக்கம் எமது முன்னோரிடமிருந்து வந்துள்ளது. இப்போது இவ்வழக்கம் அருகிக் கொண்டு வருதல் கவலைக்குரிய விடயமாகும். பிள்ளையார் சுழி பிரணவ சொரூபமாக ஓங்கார வடிவினனாக விளங்கும் விநாயகரைக் குறிக்கின்றது. விநாயகர் விக்கினங்களைத் தீர்ப்பவராதலால் அவரை முதலில் வணங்கும் முகமாக பிள்ளையார் சுழி போட்டு யாம் எழுத ஆரம்பிக்க வேண்டும். இந்த நற்பழக் கத்தை எமது இளஞ்சிறார் மத்தியில் கொண்டு வருதல் பெற்றோரதும் ஆசிரியரதும் தலையாய கடமையாகும்.

## கோலங்கள்

கோலத்துக்குரிய சிறப்பான மாதம் மார்கழி. மார்கழி மாதம் 31 நாட்களும் அதிகாலையில் துயில் எழுந்து இல்லத் தரசிகள் வீட்டு முன்றிலைக் கூட்டி மெழுகி அழகிய மாக் கோலமிட்டு, அதில் சாணம் அல்லது மஞ்சள் ஆகியவற்றால் பிடித்த பிள்ளையாரை வைத்து அறுகு, பூசணிப்பூ முதலியன சாற்றி வணங்கும் வழிபாட்டு முறை இருந்து வந்தது. இதன் முதல் விளக்கம் மார்கழிப் பிள்ளையார் வழிபாடு. அடுத்து கோலமிட்ட இல்ல முன்றில்கள் காண்போரை வெகுவாக ஈர்க்கும் கலையம்சம் வாய்ந்தனவாய் அமைவதைக் காண லாம். மேலும் மாக்கோலம் இடுவதால் எறும்பு போன்ற ஊர்வன அக்கோலமாவையுண்டு பசியாறும். இது கோலம் ஆற்றும் ஒரு புண்ணிய காரியமுமாக அமைகின்றது. எமது நாட்டில் பெரும்பாலும் மார்கழிக் கோலம் இடுவதைத் தான் நாம் வழக்கமாகக் கொண்டுள்ளோம். ஆனால் தமிழ்நாட்டில் தினமும் வாசல் பெருக்கிக் கோலமிடுதல் வழக்கமாக உள்ளமை கண்கூடு. இஃது யாமும் பின்பற்றக்கூடிய, பின்பற்ற வேண்டிய நல்லதோர் வழக்கமாகும். தேவர்களை ஓம்புதல், பிதிர்களை ஓம்புதல், ரிஷிகள், முனிவர்கள், தபோதனர்கள் ஆகியோரை ஓம்புதல் எம்மை அண்டி வாழும் சிற்றுயிர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்புதல் இல்லறத்தானது தலையாய கடமைகளாம்.

இவை முறையே :-

தேவ யக்ஞம்

பித்ரு யக்ஞம்

பிரம்ம யக்ஞம்

பூத யக்ஞம் என்பனவாம்.

இவற்றுள் மாக்கோலம் தினமுமிடல் பூத யக்ஞத்தைச் சேரும். ஆனால் ஒன்று, கோலமிடல் மாவால் அமைய வேண்டும். கற்பொடியாலோ வெண்கட்டியாலோ அல்ல, என்பது மிகமுக்கியம்.

யந்திர வடிவத்திலும், புள்ளிகள் இட்டும் கோலம் போடப் படுவது வழமை. யந்திர வடிவத்தில் மந்திர எழுத்துக்கள் இடம்பெறும். இதனால் யந்திர வடிவத்தில் வாசலில் கோல மிட்டிருப்பின் தீயசக்திகள் வீட்டினுள் வரமாட்டா என்பது நம்பிக்கை. இதன் காரணமாகத் தான் வாசலில் கோலம் இடப்படுகின்றது. பொலிவும் அழகும் நிரம்பக் கோலமிடப் பெற்ற இல்லத்தைத் தேவர்கள் என்றும் ஆசீர்வதிப்பர்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிடேகங்கள்

பூசைக்கிரியைகளில் அபிடேகமும் ஒன்றாகும். சிவனார் அபிடேகப்பிரியர் என்று சொல்லப்படுகின்றது. இருப்பினும் எல்லாத் தெய்வங்கட்குமே அபிடேகம் இடம்பெற்ற பின்னரே பூசை ஆரம்பமாகும். நீர், பால், தயிர், நெய், பஞ்சாமிர்தம், பன்னீர், எண்ணெய், இளநீர், கருப்பஞ்சாறு, பஞ்சகவ்வியம், மஞ்சள், அன்னம், விபூதி, தேன், சந்தனம், குங்குமம். ஆகியன அபிடேகத்திற்குரிய புனிதமான பொருட்களாகும். ஒவ்வொரு பொருளால் அபிடேகம் செய்யும்போதும் ஒவ்வொரு பயன் கிடைக்கின்றது, அவை எவை என்பதை இங்கு நோக்குவோம்.

நீர் - மனத்தூய்மை
பால் - ஆயுள் விருத்தி
தயிர் - உடலாரோக்கியம், மக்கட்பேறு
நெய் - சுகவாழ்வு, வெற்றி, மோட்சம்

| | | |
|---|---|---|
| பஞ்சாமிர்தம் | - | நீண்ட ஆயுள், தேகத்திடம் |
| பன்னீர் | - | புகழ் |
| எண்ணெய் | - | பக்தி, சுகம் |
| இளநீர் | - | புத்திரபாக்கியம் |
| கருப்பஞ்சாறு | - | நோய் நீக்கம் |
| பஞ்சகவ்வியம் | - | பாவநிவர்த்தி |
| மஞ்சள்பொடி | - | வசீகரம், மங்களம் |
| அன்னம் | - | அரச பதவி, புகழ் |
| விபூதி | - | ஞானம் |
| தேன் | - | குரலினிமை, சுகம் |
| குங்குமம் | - | மங்களம் |
| சங்கு நீர் | - | வெற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிடேகத்தின் நோக்கம்

எம்மைப் போலவே இறைவனையும் பாவனை செய்து அவனுக்கு ஆசனம், ஸ்நானம், ஆபரணம், அலங்காரம் என்பவை எமது பூசை முறையில் அடங்கியுள்ளன.

அதேபோன்று மூர்த்திக்குச் செய்யும் ஸ்நானசடங்கே அபிடேகமாகின்றது.அபிடேகத்தில் உபயோகிக்கப்படும் பால், தேன், பஞ்சாமிர்தம் போன்றவை அடியார்களுக்கு அருட் பிரசாதமாகக் கிடைக்கின்றது. ஏழை, பணக்காரன் என்ற பேதமில்லாமல் சிவனுக்கு உபயோகிக்கப்படும் வில்வம் விஷ்ணு பகவானுக்கு உரிய துளசி ஆகியவற்றில் ஊறிவரும் நீர் எத்தனையோ வகைப் பிணியைப் போக்கும் சக்தி வாய்ந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

சில தலங்களின் மூர்த்தியே மருத்துவம் வாய்ந்த மூலிகைச் சாந்தினால் ஆக்கப்பெற்றுள்ளமையைக் காண்கின்றோம். இத் தகைய விக்கிரகங்களை அபிடேகித்த தீர்த்தம் அதனைப் பருகும் அடியார்கள் உடல் நலத்தைக் காக்கும் என்பது நிஜம்.

எனவே, அபிடேக தீர்த்தம் எமக்கு ஆத்மீக திருப்தி யையும், ஆரோக்கியத்தையும் அருளும் அருட்பிரசாத மாக அமைவதில் வியப்பில்லை. இதுவே ஆலயங்களில் மூர்த்தி களுக்கு இடம்பெறும் அபிடேகத்தின் சிறப்பு எனலாம்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நைவேத்தியங்கள்

உணவுப் பதார்த்தங்களை இறைவனுக்கு நிவேதித்தல் என்ற பெயரில் நைவேத்தியம் படைக்கின்றோம். ஆலயத்தில் பூசையின்போதும் இல்லங்களில் விசேட நாட்களிலும் தெய்வங்கட்கு நைவேத்தியம் படைக்கின்றோம். நாம் வாழும் பிரபஞ்சமே ஈசனுடையது. அவ்வண்ணமிருக்க அதிலிருந்து பொருட்களைப் பெற்று இறைவனுக்கு நிவேதித்தாக வேண்டுமா என்ற கேள்வி எழலாம். நிஜம் தான் - பிரபஞ்சம், அதில் நிறைந்துள்ள பொருட்கள், ஏன் நாம் கூட இறைவனது சொத்துக்கள் தான். இவற்றையெல்லாம் படைத்து இவ்வுலகில் நாம் சுகமாக வாழ உதவிய இறைவனுக்கு நன்றியாக முதலில் அவனுக்கே படைக்கின்றோம். ஈசனது சிருஷ்டிகள் தான். இருப்பினும் தெய்வங்கட்கு நிவேதித்தல் மரபுவழியாக வந்து கொண்டிருக்கின்றது. இருப்பினும் எம்மளவில் அவை இருக்கும் போது நெய்வேத்திய உணவுகள் சாதாரண உண வாகத்தான் அமையும். ஆனால் எப்போது அவை இறை முன்னிலயில் படைக்கப்பெற்று, மந்திர செபம் பண்ணப்பட்டு, தீபம் காட்டப்படுகிறதோ அதன்பின் அந்த நைவேத்தியம் பிரசாதமாகின்றது.

பூசையில் அந்த உணவுப் பதார்த்தங்கள் சாதாரண உணவாக அமையாது தெய்வப் பிரசாதமாக அருள் நிறைந்து பெறப்படுகின்றது. இது நைவேத்தியத்தின் மகிமை. அத்தோடு ஈசனுக்குப் பிடித்த நிவேதனத்ததை நிவேதித்து விட்டோம் என்ற மனத் திருப்தியும் எமக்குக் கிடைக்கின்றது. இதுவே நைவேத்தியங்கள் படைப்பதன் மகிமையும் அர்த்தமு மாகும். இனி எந்தெந்த தெய்வத்திற்கு எந்தெந்த உணவுப் பதார்த்தத்தை நிவேதிக்க வேண்டும், அவற்றால் பெறப்படும் பயன் என்ன என்பதையும் நோக்குவோம்.

| | | |
|---|---|---|
| சிவபெருமானுக்கு | - | புளியோதரை, பஞ்சாமிர்தம் |
| சக்திக்கு | - | பாயாசம், பொங்கல் |
| விநாயகருக்கு | - | மோதகம், கொழுக்கட்டை, அவல், தேன் |
| முருகனுக்கு | - | பஞ்சாமிர்தம், தேன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| விஷ்ணுவுக்கு | - | தயிர்ச்சாதம் |
| இலட்சுமிக்கு | - | தேன் |
| சரஸ்வதிக்கு | - | அவல், கடலை, பொங்கல் |
| வைரவருக்கு | - | வடைமாலை |
| ஆஞ்சனேயருக்கு | - | வெற்றிலை, கடலை, வெண்ணெய் |
| வீரபத்திரருக்கு | - | பானகம் ஆகியவற்றை பக்தி சிரத்தையோடு நிவேதித்தல் உகந்தது. |

பொங்கலில் பலவகை உண்டு.

சர்க்கரைப் பொங்கலை நிவேதிப்பதால் செல்வவளமும்
புளியோதரையை நிவேதிப்பதால் பிணிநீக்கமும்
கற்கண்டு அன்னம் நிவேதிப்பதால் மங்களமும்
தயிர் அன்னம் நிவேதிப்பதால் காரிய சித்தியும்
பால் அன்னம் நிவேதிப்பதால் அரச யோகமும்
தேங்காய் அன்னம் நிவேதிப்பதால் இலட்சுமிகரமும்
மிளகு அன்னம் நிவேதிப்பதால் பிணி நீக்கமும்
பருப்புப் பொங்கல் நிவேதிப்பதால் காரிய சித்தியும்
பாயாசம் நிவேதிப்பதால் தானிய விருத்தியும்
வடைமாலை நிவேதிப்பதால் ஆரோக்கிய பலமும்
பால் அன்னம் நிவேதிப்பதால் அரச புகழும் பெறப்படு
கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவதானியங்கள்

நெல்
உழுந்து
பயறு
கொள்ளு
துவரை
கடலை
மொச்சை
கோதுமை
எள்

நவராத்திரியின் ஆரம்பதினத்தில் நவதானியம் விதைத்து விழாவை ஆரமபிப்பது வழக்கம். நவதானியம் விதைத்தலை "பாலிகை இடுதல்" என்போம். திருமணத்தின்போதும் பாலிகை இடும் வழக்கமுண்டு. தூய்மையான இடத்தில் மண் எடுத்து அதனை மந்திரித்து அதில் நவதானியத்தை முளைக்கவிட வேண்டும். நவதானியத்தை முளைக்கவிடமுன் அவற்றை நீரில் ஊறவிட வேண்டும். நவதானியம் செழித்து வளர்ந்தால் நாட்டில் வளம் பெருகும் என்று கொள்ளலாம்.

கிரகதோஷம் நீங்குவதற்கு நவதானியத்தை அந்தந்தக் கிரகங்கட்கு நிவேதித்து வழிபடும் முறையும் உண்டு. நவதானியம் நவரத்தினக் கற்களுக்குச் சமமானவை என்றே கூறலாம். நவக்கிரகங்களுள் ஒவ்வொரு கிரகமும் உவக்கும் தானியம் எவையென்று நோக்குவோம். சூரியனுக்கு கோதுமையும், சந்திரனுக்கு பச்சைஅரிசியும், செவ்வாய்க்குத் துவரையும், புதனுக்குப் பாசிப்பயறும், வியாழனுக்கு கடலையும், வெள்ளிக்கு மொச்சையும், சனிக்கு எள்ளும், இராகுவுக்கு உழுந்தும், கேதுவுக்கு கொள்ளும் உகந்த தானியங்களாம். நவராத்திரி ஆரம்பதினத்தன்று முளைக்கவிடும் நவதானியம் விஜயதசமியன்று பிரசாதமாக வழங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாள்களும் கோள்களும்

எந்த ஒரு சிறிய காரியத்தை ஆரம்பிப்பதற்கும் நல்லநாள் சுபநேரம் என ஆராய்ந்து பார்த்து ஆரம்பிப்பது இந்துக்களது மரபு. அதேபோன்று வானத்துக் கோள்கள் எமது வாழ்க்கையில் அதிக தாக்கங்கள் விளைவிப்பதையும் யாம் அறிவோம். எனவே, நாளும் கோளும் பற்றி இங்கு பார்ப்போம்.

சூரியனை வைத்து நாட்களும் சந்திரனை வைத்து மாதங்களும் கணிக்கப்பட்டுள்ளன. வாரத்தின் ஏழு நாட்களும் எமக்குப் புனித நாட்கள் எனக் கொள்ள வேண்டும். காரணம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தேவதைக்கு உரியதாகச் சொல்லப்பட்டுள்ளது. இதன் வண்ணம் ஞாயிறு சூரியனுக் குரிய நாள். இத்தினத்தில் வியாபாரம் தொடங்குவதும், கட்டடங்கள் கட்ட ஆரம்பிப்பதுவும் பொருத்தமானதாகும். திங்கள் சந்திரனுக்குரிய நாள். திங்கள் என்றால் சந்திரன் என்றும் ஒரு பொருள் உண்டு. சந்திரன் ஆண் தேவதை. சந்திரன் அழகானவன். திங்கள் விரதமிருப்பது நற்பயனை அளிக்கும். செவ்வாய்க்கிழமை செவ்வாய்க்கிரகத்துக்குரிய நாள். செவ்வாய்க்கிரகம் போர்க்குணம் கொண்டது. போர் ஆரம்பிக்க மாத்திரம் உகந்த நாள். புதன்கிழமை புதன் கிரகத்துக்குரியது. விருந்தோம்பலுக்குரிய நாளாகும். வியாழக்கிழமை குருவாரம் எனப்படும். பிருகஸ்பதிக்குரிய நாள். வெள்ளிக்கிழமை சுக்கிரனுக்குரிய நாள். இதனால் வெள்ளிக்கிழமை சுக்கிரவாரம் எனப்படும். அசுரர்களின் குருவாக அமைந்தவர் சுக்கிராச்சாரியார். வெள்ளிக்கிழமை முருகப்பெருமானுக்கும் அம்பாளுக்கும் விரதம் நோற்கப் பொருத்தமான நாள் ஆகும். சனிக்கிழமை சனிபகவானுக் குரிய நாளாகும். பொதுவாகச் சனிக்கிரகத்தின் பார்வை எம்மில் படுகின்றதெனச் சோதிடம் கூறினால் ஒரே கலக்கம் தான். இருப்பினும் சங்கடம் தீர்க்கும் சனிபகவானை, சச்சரவின்றி இச்சகத்தில் வாழ நல்லெண்ணெய்த் தீபமேற்றி வணங்கினால் சனிக்கிழமையும் நல்ல நாளாக அமையும்.

தொன்மை வாய்ந்த இந்துப் பெருமக்கள் மேற்கூறிய வண்ணம் நாட்களைக் கணக்கிட்டதோடு நின்றுவிடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகங்களால் மனிதனது வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படு கின்றது என்ற நம்பிக்கையும் அவர்களுக்கிருந்தது. வான ஆராய்ச்சி அறிவும் அவர்களுக்கு இருந்தது. எவ்வாறு சூரியனை வைத்து நாட்களைக் கணக்கிட்டார்களோ, அவ் வாறே சந்திரனை வைத்து மாதங்களையும் அவர்கள் கணக் கிட்டார்கள். சந்திர மாதம் கிருஷ்ண பட்சம், சுக்கில பட்சம் எனப் பிரிக்கப்பட்டது. சுக்கிலபட்சம் வளர்பிறைக் காலம்; கிருஷ்ண பட்சம் தேய்பிறைக்காலம்;

1. பிரதமை
2. துதியை
3. திருதியை
4. சதுர்த்தி
5. பஞ்சமி
6. சஷ்டி
7. சப்தமி
8. அட்டமி
9. நவமி
10. தசமி
11. ஏகாதசி
12. துவாதசி
13. திரயோதசி
14. சதுர்த்தசி என வகுக்கப்பெற்றன.

16 கலைகளைக் கொண்ட முழுநிலவு பௌர்ணமி எனப்பட்டது. ஒவ்வொரு கலையாகச் சந்திரன் தேய்ந்து முழுமையாக மறையும் நாள் அமாவாசை என்றழைக்கப் பட்டது.மேஷம் ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் எனப் பன்னிரு ராசிகளும் வகுக்கப்பட்டன. இவை எல்லாவற்றின் தொகுப்பே பஞ்சாங்கம் - (பஞ்ச + அங்கம்) ஐந்து அங்கங்கள். அவை யாவன :- வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்பனவாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துமதமும் பெண்களும்

இந்துக்களுக்கு வாழ்க்கையே சமயம்; சமயமே வாழ்க்கை; இல்லத்தில் இடம்பெற வேண்டிய சமயாசார ஒழுங்குகளுக்கு பெரும்பாலும் இல்லத்தரசிகளே பொறுப் பாவார். எதிர்காலச் சமுதாயம் ஒழுங்கானதாய், ஆசாரம் மிக்கதாய், சமய உணர்ச்சியும், தர்ம சிந்தனையும் உடைய தாய், தமது பாரம் பரியத்தை, கலாசாரத்தை தொடர்ந்து பேணுவதாய், அறிவாற்றல் மிக்கதாய், வளமானதாய், ஆரோக்கியமுடைய தாய் அமைய வேண்டுமேயானால் இப் பெரும் பொறுப்பு, அன்பும் பண்புமே உருவான இல்லத் தரசிகளின் கரங்களிலேயே தங்கியுள்ளது என்பதில் சிறிதும் ஐயமில்லை. காரணம் வீட்டுத்தலைவி இல்லாள். வீடு துலங் கினால் நாடு துலங்கும், நாடு துலங்கினால் உலகமே துலங்கும்.

இந்துமதம் பெண்களுக்குக் கூறும் அறிவுரைகளைப் பாருங்கள். அவை அத்தனையும் அர்த்தம் நிறைந்த வேதவாக்குகள், இல்லத்தரசிகள் பின்பற்ற வேண்டியவை. காலை, மாலை வீட்டுச் சுத்தம் ஒழுங்கு பேணுதல் அவசியம். சுமங்கலிகள் எந்நேரமும் நெற்றியில் குங்குமத் திலகத்தோடு துலங்க வேண்டும். எக்காரணம் கொண்டும் தலைவிரி கோலமாக வீட்டிலோ, வெளியிலோ தோற்றக்கூடாது. மாலை விளக்கு ஏற்றியபின் குப்பை கூளங்களை வெளியே வீசக் கூடாது. தினமும் நேரம் ஒதுக்கி வாசலில் கோலமிட்டு இல்லத்தை இலட்சுமிகரமாக வைத்திருத்தல் வேண்டும். மேல் நாட்டுக் கலாசாரத்தை நடை, உடை, பாவனைகளை கண் மூடித்தனமாய்ப் பின்பற்றக்கூடாது. விசேட தினங்களில் நேரம் ஒதுக்கி குடும்பத்தோடு ஆலய தரிசனம் என்பவையை முன்னின்று செய்து மங்களகரமாக வாழ வேண்டும்.

அன்னையானவள் இல்லத்தில் வாழும் குழந்தைகட்கு நல்லமுறையில் முன்மாதிரியாக நட்ந்து காட்டவேண்டும். பொறுமையும், நிதானமும், அன்பும், அனுசரிப்பும் விவேகமும் நடைமுறையில் பின்பற்றப்பட வேண்டும். மாலையில் நேரத்துக்கு சுவாமி அறையில் விளக்கேற்ற வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயோடு அறு சுவை போம் என்ற வாசகத்தை மெய்ப்பிக்கப் பெண்கள் சுவையாகச் சமைத்துத் தம் குடும்பத்தை மகிழ் விக்க வேண்டும். தொழிலுக்குப் போகும் பெண்களும் தமது சாதுரியத்தினாலும் பொறுப்புணர்ச்சியினாலும் இவற்றைப் பின்பற்றியே ஆக வேண்டும். அவர்கள் இந்நடைமுறைகட்கு விதிவிலக்கானவர்கள் அல்ல என்பது முக்கியம்.

வாழையிலையில் உணவு பரிமாறும் சமயத்தில் வாழை யிலையின் தலைப்பக்கம் இடது கைப்பக்கம் அமைய இலை வைக்க வேண்டும்.

தாய்மார் தமது சினத்தைக் குழந்தைகளில் காட்டக்கூடாது. சினமெனும் சேர்ந்தாரைக் கொல்லி இல்லத்தரசிகளை அணுகவே கூடாது. குழந்தைகள் கல்வி அன்றாடம் கவனிக் கப்படல் வேண்டும். ஆண்டுதோறும் இடம்பெறும் சமய விரதங்களை தவறாது முறையாக வீட்டில் கொண்டாடி அவற் றின் முக்கியத்துவத்தை குழந்தைகள் புரிய வைக்க வேண் டும். குழந்தைகளை வழி நடாத்தும் போது சாம பேததான முறைகளைக் கையாள வேண்டும்.

வீட்டுக்கு வந்த விருந்தினரை இன்முகத்தோடு ஓம்ப வேண் டும். இத்தனையும் பெண்பாலார் நடைமுறையில் கைக் கொண்டு விட்டால் இல்லறம் நல்லறமாகி இல்லமே சொர்க்க மாகி விடாதா? இல்லத்தரசிகள் இவ்வண்ணம் நடப்பின் குடும் பத்தலைவனுக்கு அறிவுரைகளே தேவை யில்லை. குடும்பமே சுமுகமாக இயங்கும்.

பெண்கள் ஒரு சமுதாயத்தின் கண்கள் ஆவர். அவரவரது கலை கலாசாரத்தைப் பேணுவதில் பெண்களுக்கு அதி முக்கிய பங்கு உண்டு. என்னதான் அன்னிய நாகரிகம் இன்றைய எமது சமுதாயத்தை ஆள முற்பட்டாலும் நடை, உடை, பாவனையில் பெண்கள் மிக அவதானமாயிருத்தல் அவசியம். முக்கியமாக ஆலயத்துக்குச் செல்லும்போது இந் துப் பெண்களில் சிறுமியர் பாவாடை தாவணியும், வயது வந்தோர் புடவையும் அணிந்தே செல்ல வேண்டும். தலை முடியைப் பின்னிவிட்டோ அல்லது கொண்டை போட்டோ அழகுபடுத்தல் முக்கியம். இந்த உடை அணிவதற்கு வசதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக உள்ளது, பயணத்தின் போது வசதியாக உள்ளது என்று இந்துப் பெண்கள் புடவை கட்டுதலை தவிர்த்தல் மிகமிக வேண்டாத ஒரு விஷயமாகும். இஃது எமது கலாசாரத்துக்கு நாம் செய்யும் துரோகமுமாகும். எனவே இந்துப் பெண்கள் ஆலயத்திற்குச் செல்லும்போது காஞ்சிப் பட்டுடுத்து கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதைபோல் சென்றால் மனதுக்கு எத்தனை ரம்மியமாக இருக்கும்! இல்லையா?

**இல்லறமல்லது நல்லறமன்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு ராசிகளும் அவற்றிற்குரிய நட்சத்திரங்களும்

| | |
|---|---|
| 1. மேடம் | 7. துலாம் |
| 2. இடபம் | 8. விருச்சிகம் |
| 3. மிதுனம் | 9. தனுசு |
| 4. கர்க்கடகம் | 10.மகரம் |
| 5. சிங்கம் | 11.கும்பம் |
| 6. கன்னி | 12.மீனம் |

**மேடம்**

அச்சுவினி, பரணி, கார்த்திகை முதலாங்கால்

**இடபம்**

கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடம் முன் அரை

**மிதுனம்**

மிருகசீரிடம் பின் அரை, திருவாதிரை, புனர்பூசம் முன் முக்கால்

**கர்க்கடகம்**

புனர்பூசம் நாலாங்கால், பூசம், ஆயிலியம்

**சிங்கம்**

மகம், பூரம், உத்தரம் முதலாங்கால்

**கன்னி**

உத்தரம் பின் முக்கால், அத்தம், சித்தம் முன் அரை

**துலாம்**

சித்தம் பின்அரை, சுவாதி, விசாகம் முன் முக்கால்

**விருச்சிகம்**

விசாகம் நாலாங்கால், அனுஷம், கேட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தனுசு**

மூலம், பூராடம், உத்தராடம் முதலாங் கால்

**மகரம்**

உத்தராடம் பின் முக்கால், திருவோணம், அவிட்டம் முன்முக்கால்

**கும்பம்**

அவிட்டம் (பின் அரை), சதயம், பூரட்டாதி முன் முக்கால்

**மீனம்**

பூரட்டாதி நாலாம் கால், உத்தரட்டாதி, ரேவதி

## நட்சத்திரகள்

| | | |
|---|---|---|
| 1. அச்சுவினி | 10. மகம் | 19. மூலம் |
| 2. பரணி | 11. பூரம் | 20. பூராடம் |
| 3. கார்த்திகை | 12. உத்தரம் | 21. உத்தராடம் |
| 4. ரோகிணி | 13. அத்தம் | 22. திருவோணம் |
| 5. மிருகசீரிடம் | 14. சித்திரை | 23. அவிட்டம் |
| 6. திருவாதிரை | 15. சுவாதி | 24. சதயம் |
| 7. புனர்பூசம் | 16. விசாகம் | 25. பூரட்டாதி |
| 8. பூசம் | 17. அனுஷம் | 26. உத்தரட்டாதி |
| 9. ஆயிலியம் | 18. கேட்டை | 27. ரேவதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டின் பிரசித்தி பெற்ற ஆலயங்கள்

## சிவாலயங்கள்

1. திருக்கோணேஸ்வரம்
2. திருக்கேதீஸ்வரம்
3. நகுலேஸ்வரம்
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரம்
5. முன்னேஸ்வரம்
6. வண்ணை ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்தீஸ்வரர் ஆலயம்
7. கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸவரர் ஆலயம்
8. ஒட்டுசுட்டான் தான்தோன்றியீசுவரர் ஆலயம்
9. திருநேல்வேலி நீலாயதாட்சி சமேத காயரோகணா சிவாலயம்
10. நுவரெலியா லங்காதீஸ்வரர் ஆலயம்
11. சாவகச்சேரி சிவன் கோவில்

## அம்மன் ஆலயங்கள்

1. நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம்
2. மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
3. வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலயம் (நாச்சிமார் கோவில்)
4. வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம்
5. சூறாவத்தை முத்துமாரியம்மன் ஆலயம்
6. திருநெல்வேலி முத்துமாரியம்மன் ஆலயம்
7. ஊரெழு மனோன்மணியம்பாள் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அரியாலை பிரப்பங்குளம் மகாமாரியம்மன் ஆலயம்
9. வண்ணை காட்டுத்துறை முத்துமாரி அம்மன் ஆலயம்
10. கட்டைப்பிராய் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
11. எழுதுமட்டுவாள் வீழுபழை கண்ணகை அம்மன் ஆலயம்
12. சீரணி நாகம்மாள் ஆலயம்
13. காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம்
14. துன்னாலை ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்
15. உடுப்பிட்டி கொம்மந்தறை மனோன்மணி அம்மன் ஆலயம்
16. சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்
17. தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம்
18. கொழும்பு மயூரபதி அம்மன் ஆலயம்
19. திருமலை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம்
20. குஞ்சுப்பரந்தன் பொறிக்கடவை கண்ணகி அம்மன் ஆலயம்
21. வண்ணார்பண்ணை காட்டுத்துறை அம்மன் ஆலயம்
22. வண்ணார்பண்ணை காட்டுத்துறை பகவதி மாரியம்மன் ஆலயம்
23. மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில்
24. சாவகச்சேரி மண்டுவில் மனோன்மணி அம்மன் கோயில்

## விநாயகர் ஆலயங்கள்

1. மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம்
2. இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில்
3. சங்குவேலி ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில்
4. உடுவில் ஸ்ரீ சிவஞானப் பிள்ளையார் கோவில்
5. கோண்டாவில் ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் ஆலயம்
6. இருபாலை - கோப்பாய் கற்பகப் பிள்ளையார் ஆலயம்
7. வவுனியா சித்திவிநாயகர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. அரியாலை சித்திவிநாயகர் ஆலயம்

9. சரசாலை சிதம்பர விநாயகர் ஆலயம்

10. உடுப்பிட்டி கிழக்கு கற்பகப்பிள்ளையார் கோவில்

11. யாழ் அத்தியடி வீரகத்தி விநாயகர் ஆலயம்

12. கொக்குவில் பொற்பதி விநாயகர் ஆலயம்

13. அல்லாரை அறுகம்புலம் மகாகணபதி ஆலயம்

14. காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்னேஸ்வரர் ஆலயம்

15. கோப்பாய் வெள்ளெருவை பிள்ளையார் கோவில்

16. வண்ணை கொண்டலடி விநாயகர் ஆலயம்

17. தெல்லிப்பழை காசி விநாயகர் ஆலயம்

18. புலோலி பற்றளை சித்தி விநாயகர் ஆலயம்

19. மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயம்

20. கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயம்

21. கொழும்பு மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்

22. கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்

23. மீசாலை வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோவில்

24. கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில்

25. மீசாலை இலுவம்பிள்ளையார் கோவில்

26. மட்டுவில் மருதடிப்பிள்ளையார் கோவில்

27. முறிகண்டி அருள்மிகு பிள்ளையார் கோவில்

## முருகன் ஆலயங்கள்

1. நல்லூர் கந்தசுவாமி கோவில்

2. கதிர்காமம் கந்தன் ஆலயம்

3. தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயம்

4. காரைநகர் கிழவன் காடு கந்தசுவாமி ஆலயம்

5. உசன் கந்தசுவாமி கோவில்

6. ஆரையம்பதி ஸ்ரீ கந்தசுவாமி கோவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. சித்தாண்டி ஸ்ரீ சித்திவேலாயுதர் கோவில்
8. உரும்பிராய் சிதம்பரசுப்பிரமணியர் ஆலயம்
9. கோண்டாவில் ஞானப்பழனி முருகன் ஆலயம்
10. கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்
11. நீர்வேலி கந்தசுவாமி கோவில்
12. வரணி வேலாயுதர் ஆலயம்
13. நெல்லியடி முருகமூர்த்தி ஆலயம்
14. கிளிநொச்சி கந்தசுவாமி கோவில்
15. கந்தவனம் கந்தசுவாமி கோவில்
16. சாவகச்சேரி இலஞ்சிரணிய குமரக்கோட்ட ஆலயம்
17. மயிலணி கந்தசுவாமி ஆலயம்
18. கொழும்பு சம்மாங்கோடு கதிர்வேலாயுதசாமி கோவில்
19. கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
20. யூனியன் பிளேஸ் சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

## விஷ்ணு ஆலயங்கள்

யாழ் வல்லிபுர ஆழ்வார் திருக்கோவில்
தெகிவளை நெதிமால விஷ்ணு ஆலயம்
யாழ் வண்ணை ஸ்ரீ வெங்கடேசப்பெருமாள் ஆலயம்
பொன்னாலை வரதராஜப்பெருமாள் ஆலயம்

## வைரவர் ஆலயங்கள்

புன்னாலைக்கட்டுவன் ஞானவைரவர் கோவில்
கொக்குவில் கிழக்கு கோணாவளை வைரவர் கோவில்
மருதனார்மடம் வல்லப வைரவர் கோவில்
வண்ணார்பண்ணை வைரவர் ஆலயம்
வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஞானவைரவர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேய ஆலயங்கள்

தெகிவளை அருள்மிகு ஆஞ்சநேயர் கோவில்

றம்பொடை அருள்மிகு ஆஞ்சநேயர் கோவில்

நவிண்டில் சுந்தர ஐயப்ப ஆஞ்சநேயர் கோவில்

சுன்னாகம் ஆஞ்சனேயர் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நாட்டில் சமயப் பணி ஆற்றும் நிறுவனங்கள்

1. அகில இலங்கை இந்துமா மன்றம்
2. வட கொழும்பு இந்து பரிபாலன சபை
3. இராமகிருஷ்ண மிஷன்
4. விவேகானந்த சபை
5. யாழ் சைவ பரிபாலன சபை
6. இந்து சமய கலை கலாச்சார வளர்ச்சிப் பணிமன்றம்
7. கொழும்பு சிவத் திருமன்றம்
8. சைவ வித்தியா விருத்திச் சங்கம்
9. கொழும்பு சத்திய சாயிபாபா மத்திய நிலையம்
10. ஈழத் திருநெறி தமிழ் மன்றம்
11. இரத்மலானை - மொரட்டுவை இந்து மன்றம்
12. மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம்
13. மட்டக்களப்பு சைவத்திருநெறி மன்றம்
14. மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம்
15. மஸ்கெலியா இந்து மகளிர் மன்றம்
16. ஆலையடி வேம்பு பிரதேச இந்து மாமன்றம்
17. யாழ்/சாவ.நீலகண்ட இளைஞர் சைவ அபிவிருத்திச் சங்கம்
18. வண்ணார்பண்ணை சிவதொண்டன் நிலையம்
19. கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம்

**இம்மன்றங்களின் பணிகளைப் பொதுவாக பின்வருமாறு வகுக்கலாம்.**

1. சமயப் பணிகள் 2. சமூகப் பணிகள் 3. கல்விப்பணிகள்

**விரிவாக நோக்கின்,**

1. சமயப்பற்றோடு கூடிய ஒரு பரம்பரையை உருவாக்கல்
2. மக்கள் சமயவிடயங்கள் பற்றி அறியச் சொற்பொழிவுகள் ஒழுங்கு செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கலை வளர்ச்சி
4. கல்வி வளர்ச்சி
5. ஆலயத் திருப்பணிகள்
6. வருடந்தோறும் ஆலய உற்சவங்களை ஆதரித்து உதவுதல்
7. சமய நூல்கள், சஞ்சிகைகள் வெளியீடு
8. சமய சம்பந்தமான இலவச நூல் நிலையங்கள் அமைத்தல்
9. சமய வழிபாட்டு மார்க்கங்களை மக்கள் பின்பற்ற வழிகாட்டல்
10. அன்னதானம் அளித்தல்
11. திருமுறை ஓதல், ஓதுவித்தல்
12. புராண படனம்
13. சமயதீட்சை பெற உதவுதல்
14. ஆச்சிரமங்கள் அமைத்தல்
15. சமூகத் தொண்டுகள் ஆற்றல்
16. சமய மகாநாடுகள் ஒழுங்கு செய்தல்
17. விடுதிகள் அமைத்தல்
18. ஞாயிறு தோறும் அறநெறிப் பாடசாலைகளை ஒழுங்கு செய்தல்
19. இயற்கை அனர்த்தங்கள் ஏற்படும் வேளையில் நிவாரணப் பணிகள் ஆற்றல்
20. ஏழைகளுக்கு வீடுகள் அமைத்துக் கொடுத்தல்

ஆகியனவாம்

**வான்முகில் வழாது பெய்க**
**மலிவளம் சுரக்க மன்னன்**
**கோன்முறை அரசு செய்க**
**குறைவிலாதுயிர்கள் வாழ்க**
**நான்மறை அறங்கள் ஓங்க**
**நற்றவம் வேள்வி மல்க**
**மேன்மைகொள் சைவநீதி**
**விளங்குக உலகமெல்லாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய இலக்கியங்கள்

இந்துசமய இலக்கியங்கள் என்னும் போது :-

வேதங்கள்

ஆகமங்கள்

தர்மசாஸ்திரங்கள்

புராணங்கள்

இதிகாசங்கள்

உபநிடதங்கள் என்பன இவற்றுள் அடங்கும்.

அத்தோடு சைவசித்தாந்த சாஸ்திரங்களாக,

சைவ ஆகமங்கள்

பன்னிரு திருமுறைகள்

அருணகிரி நாதர் அருளிச் செய்தவையான திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், திருவகுப்பு, வேல்விருத்தம், மயல்விருத்தம் மெய்கண்ட சாஸ்திரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. வேதங்கள்

**வே**தங்கள் இறைவனால் அருளிச்செய்யப்பட்டவை. நான்கு வகைப்படும். வேதங்கள் அநாதியானவை. எக்காலத்தில் இவை தோன்றின என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாதவை.

இருக்கு
யசுர்
சாமம்
அதர்வணம் என்பவை வேதத்தின் நான்கு பிரிவுகளாம்.

உயிர்கள் மேல் கொண்ட பெருங்கருணையால், அவை உய்வடையும் பொருட்டு இறைவன் வேதங்களை அருளிச் செய்தார். கேள்வி, சுருதி, மறை, எழுதாமறை என்பன வேதத்தின் மறுபெயர்களள. சதாசிவமூர்த்தியின் நான்கு திரு முகங்களிலிருந்து நான்கு வேதங்களும் தோன்றின. வேதத்தை அடிப்படையாகக் கொண்ட சமயங்கள் வைதிக சமயங்கள் எனப்பட்டன. உலோகாயுதம் - பௌத்தம், சமணம் அவைதிக சமயங்கள் என அழைக்கப்பட்டன. வேதத்தின் இரு பெரும் பிரிவுகள் கரும காண்டம்,ஞான காண்டம் ஆகியனவாகும். இருக்கு வேதம் செய்யுள் வடிவிலும் யசுர் வேதம் உரை நடையிலும், சாம வேதம் இசை வகுக்கப்பட்ட பாட்டுக்களாக வும், அதர்வ வேதம் அதர்வா, அங்கிரஸ் என்னும் முனிவர்கள் கண்ட மந்திரங்களாகவும் அமைந்துள்ளன. சிட்சை, வியாகரணம், நிருத்தம், சோதிடம், சிற்கம், சந்தோவிசிதி என்பவை வேதத்தின் அங்கங்களாகும்.

ஒவ்வொரு வேதப்பிரிவின் மந்திரங்களும் ஒழுங்காகத் தொகுக்கப்பட்ட சங்கிதைகள் எனப்பெற்றன. வேத மந்திர சம்பந்தமுடைய உரை நடைப்பகுதி பிராமணம் எனப்பெற்று, பிரம்மா என்னும் புரோகிதர் யாகக்கிரியைகள் செய்வதற்கு இப்பிராமணங்கள் பெரிதும் பயன்பெற்றன. இவை ஒவ்வொரு வேதத்துக்கும் தனித்தனி அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபநிடதம்

வேதத்தின் ஞான காண்டப்பகுதி உபநிடதமாயிற்று. வேதத்தின் இறுதிப்பகுதியும் இதுவேயாதலால் இது வேதாந்தம் எனவும் பெயர் பெற்றது. அதே நேரம் வேதத்தின் முடிந்த முடிவான பொருளை விளக்கும் காரணத்தால் "வேத சிரசு" எனவும் உபநிடதம் பெயர் பெற்றது. நான்கு வகை வேதங்கட்கும் தனித்தனி உபநிடதங்கள் உள்ளன.

## 2. ஆகமங்கள்

ஆகமம் என்னும் சொல்லுக்கு கடவுளிடமிருந்து வருவது என்றும், ஆன்மா முக்தியடைய மலநாசம் செய்விப்பது என்றும் பொருள் கொள்ளலாம். ஒவ்வொரு சமயத்திற்கும் தனித்தனி ஆகமங்கள் உள்ளன. அவை முறையே:-

சைவாகமங்கள்

சாக்த ஆகமங்கள்

வைணவ ஆகமங்கள் எனப்பட்டன.

பொதுவாக ஆகமங்கள் கிரியை மார்க்கத்தை சிறப்பாக விளக்கிக் கூறுகின்றன.

சைவாகமங்கள் 28

சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனப்படுகின்றன. சக்தி வழிபாட்டில் வாம சாரம் என்னும் வழிபாட்டு மார்க்கத்தில் சக்திக்குரிய யந்திர பூசை, ஓமம், செபம், தர்ப்பணம் ஆகியன பற்றிக் கூறுகின்றன.வைணவ ஆகமங்கள் விஷ்ணு விக்கிரகத்தின் தத்துவங்களைப் பற்றியும் வழிபாட்டு முறை பற்றியும் கூறியுள்ளன. வைணவ ஆகமங்கள் பஞ்சராத்திரம், வைகாசனம் என இரு வகைப்படும்.

ஆலய வழிபாட்டுமுறை ஒவ்வொரு வைணவனுக்குமுரிய கடமைகள், பஞ்சகலைகள், அர்ச்ச ரூபங்கள் ஆகியன பற்றி கூறியுள்ளன. வைணவாகமத்தின் உப ஆகமம் மிருகேந்திரம் எனப்படும். இறைவன் நரசிங்க மூர்த்தியாக இந்திரனுக்கு உபதேசம் செய்த ஆகமம் ஆதலால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தர்மசாஸ்திரம்

தமது தவவலிமையால் மகாரிஷிகள் தக்கன எவை, தகாதன எவை எனத் தமது உள்ளத்தில் தோன்றியவற்றை விதிகளாக்கித் தந்தவையே தர்மசாஸ்திரங்கள் எனப்படும். இவற்றை தந்தோர் வரிசையில்,

மனு
ஞாக்ஞ வல்லியர்
நாரதர்
பராசர்
கௌதமர்
யமன்

ஆகியோரைக் குறிப்பிடலாம்.

தர்மம் என்னும் சொல் கடமை, விதி, நீதி என்ற மூன்று பொருளிலும் விளங்கும். இதன் மறுபெயர் ஸ்மிருதி. இவை எல்லோருக்கும் வாழ்க்கையில் மிக வேண்டப்படும் அறங்களை கூறுவனவாம். தர்ம சாஸதிரங்களில் மிகச்சிறந்தவை எனக் கருதப்படுவன

1. மனு தர்ம சாஸ்திரம்
2. ஞாக்ஞ வல்க்ய தர்ம சாஸ்திரம் என்பனவாகும்.

மனுதர்ம சாஸ்திரம் பின்வருவனவற்றைச் சிறப்பாக விளக்கி உள்ளது.

1. பிரம்மா முதல் தேவர் ஈறாக உள்ளோர் பிறப்பு வரலாறு.
2. நான்கு வர்ணங்கள்
3. நான்கு ஆச்சிரமங்கள்
4. வாழ்க்கைக்கு வேண்டிய நீதிகள்
5. ஐம்பூதங்களின் தோற்றங்கள்
6. பாவம் செய்வோர் அடையும் துன்பங்கள்
7. பாவநீக்கத்திற்குரிய பிராயச்சித்தம் முதலியனவாம்.

ஞாக்ஞவல்க்ய தர்மசாஸ்திரம் கூறுவன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. இந்துக்களின் நல்வாழ்க்கைக்குரிய சட்டப்பிரமாணங்கள்

2. பாவம் நீக்க பிராயச்சித்த வழிமுறைகள் முதலியன.

தர்மசாஸ்திரங்களின் சிறப்பு யாதெனின் பண்டு தொட்டு மன்னர்கள் நீதி வழுவாது ஆட்சி செய்யவும், மக்கள் அறவாழ்வு வாழவும் காரணமாக இருந்து வழிவகுத்தவை தர்மசாஸ்திரங்களேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. புராணங்கள்

புராணம் என்பதன் பொருள் பழமையானது என்பதாம். வேதம் கூறிய உண்மைகளைப் பாமரரும் புரிந்து கொள்ள விளக்கி எழுந்த கதைகளே புராணங்கள் என்றால் மிகை யாகாது.

புராணங்கள் 18 வகைப்படும். அவற்றுள்

1. சிவபுராணம் (10)
   சிவபுராணம்
   பவிடிய புராணம்
   மார்க்கண்டேய புராணம்
   இலிங்க புராணம்
   வராக புராணம்
   வாமன புராணம்
   கூர்ம புராணம்
   மச்ச புராணம்
   பிரமாண்ட புராணம்
2. விஷ்ணு புராணம் (4)
   கருட புராணம்
   நாரதீய புராணம்
   வைணவ புராணம்
   பாகவத புராணம்
3. பிரம்ம புராணம் (2)
   பிரம புராணம்
   பத்ம புராணம்
4. அக்னி புராணம் (1)
   ஆக்னேயம்
5. சூரிய புராணம் (1)

10 சிவபுராணங்களுள் மிகச் சிறந்ததாகப் போற்றப்படுவது கச்சியப்ப சிவாச்சாரியாரால் பாடப்பெற்ற கந்தபுராணமாகும். பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் என்பன தல புரா ணங்களாகும். இவை பதினெண் புராணங்களிலிருந்து வேறுபடுப வையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5. இதிகாசங்கள்

1. மகாபாரதம்
2. இராமாயணம்
3. சிவரகசியம் ஆகிய மூன்றும் இதிகாசங்களாகும்.

இதிகாசம் என்பது புராதன வரலாற்றைக் கூறும் நூல் எனப்பொருள்படும். மகாபாரதம் வியாச முனிவரால் எழுதப் பட்டது. சிவரகசியம் ஒப்பிலா மணிப் புலவரால் எழுதப்பட்டது. இராமாயணம் வான்மீகி முனிவரால் எழுதப்பட்டது. இராமா யணத்தை தமிழில் தந்தவர் கம்பர்.

பாரதம் குருவம்சத்தின் கதையாகும். இராமாயணம் சூரிய வம்சத்தில் தோன்றிய ஸ்ரீராமனின் கதையைக் கூறுகின்றது, இராமாயணமும் மகாபாரதமும் விஷ்ணுவின் சிறப்பைக் கூறு கின்றன. மகாபாரத்தில் விஷ்ணு கிருஷ்ணனாகவும் இராமா யணத்தில் விஷ்ணு ஸ்ரீராமனாகவும் ஆற்றிய அருட்செயல களைக் காணலாம்.

●

### மகாபாரதம்

கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே போர் ஏற்படுகின்றது. ஸ்ரீகிருஷ்ணர் தர்மவழி நின்று பாண்டவர்களுக்கு உதவி புரிந்து தர்மத்தைக் காக்கின்றார். போர்க்களத்தில் அர்ச்சுனனுக்கு ஞானநூலான பகவத்கீதை ஸ்ரீகிருஷ்ணரால் உபதேசிக்கப்படுகின்றது.

அறம் வெல்லும் மறம் தோற்கும்;
அல்லன செய்வோர்க்கு அறம் கூற்றாகும்;

என்ற உண்மைகளை மகாபாரதம் உணர்த்தி நிற்கின்றது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இராமாயணம்

தேவர்களுக்குத் துன்பம் செய்த இராவணனைக் காத்தற் கடவுளாகிய விஷ்ணு இராமனாக அவதாரம் எடுத்து அழித்த கதையைக் கூறுவது இராமாயணம்.

பிறர் மனையாளை விரும்புவன் அழிவான்;
தீயன செய்தோர் அழிந்தொழிவர்;
அறம் வெல்லும்;

என்ற உண்மைகளை உணர்த்தி நிற்கின்றது இராமா யணம்.

### அட்சதையிடுதல்

அட்சதை என்பது முனைஉடையாத பச்சை அரிசியுடன் மஞ்சள் நீரைக் கலந்து பெறப்படுவதாகும் - சுபகாரியங்களின் போது ஒரு இந்து சமுதாயத்தில மனநிறைவோடு குரு வானவர்கள், பெரியோர் ஆகியோரது வாழ்த்து இடம் பெறுவது வழமை - இவ்வண்ணம் இவர்கள் ஆசிகள் வழங்கும் போது அட்சதையிடுதல் மரபு. திருமண வைபவத் தின் போது மணமக்களை அட்சதையிட்டு வாழ்த்துகின்றோம். இவ்வாழ்த்தின் போது, மங்கலப் பொருளான அறுகு, அட்சதை அரிசி, மலர் ஆகிய மூன்றையும் சேர்த்தே அட்சதையிட்டு வாழ்த்துதல் முற்காலத்தில் இடம்பெற்றது. இது அறுகரிசி இடுதல் என்று கூறப்பட்டது. காலப்போக்கில் இம்மூன்றிற்கும் பதிலாக நெல் இட்டு வாழ்த்துதல் இடம்பெற்றது. பின்னர் நெல் அரிசியாக மாறி அட்சதையிடுதல் இடம்பெற்றது. அட்சதையிடும்போது வாழ்த்தப்படுபவரின் தலைப் பகுதி யிலிருந்தே அறுகரிசி இடவேண்டும் என்பது கருத்திற்கொள்ள வேண்டியதொன்றாகும்.

வாழ்த்துக்களில் எமது முன்னோர் அறுகம்புல்லையும் சேர்த்தமைக்குரிய காரணத்தை நோக்குவோம். எழுத்துக் களுக்கெல்லாம் எவ்வண்ணம் அகரம் முதலாவதாகத் திகழ் கின்றதோ, அதேபோன்று தான் உலகில் முதலில் தோன்றியது அறுகம்புல் என்று சொல்லப்படுகின்றது. இதைக் கொண்டு இறைவனின் முதல் படைப்பான தொன்மை வாய்ந்த விநாயகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானுக்கு அறுகம்புல் அர்ச்சிக்க உகந்ததுவுமாயிற்று. அறுகம்புல்லை நோக்கின் இப்புல் ஒரே காம்பில் மூன்று முனைகள் அமைந்துள்ளதாக அமைந்திருப்பதைக் காண லாம். அவற்றின் நுனி கூர்மையாகவும் தோன்றும். வாழ்வில் வெற்றி அடையின் மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றி னையும் ஒருங்கிணைத்துத் தூய்மையான எண்ணத்தோடு நாம் வாழ்ந்தாக வேண்டும் என்னும் உண்மையை அறுகம்புல் விளக்கி நிற்கின்றது.

சுபகாரியங்கள், கிரியைகள் ஆகியவற்றின் முடிவில் "ஓம் சாந்தி" என மூன்று முறை கூறுதல் கண்கூடு. வாழ்க்கையில் உயிர்களுக்கு ஏற்படும் மூவகைத் துன்பங்களிலிருந்து எல் லோரையும் இறைவன் காப்பாற்றியருள வேண்டும் என்பதற்காகவே "சாந்தி" மூன்று முறை கூறப்படுகின்றது. மூவகைத் துன்பங்களாவன, எமது உடம்புக்கும் மனதிற்கும் ஏற்படும் துயரங்கள், மற்றையோரால் எமக்கு ஏற்படும் துயரங்கள், பஞ்சபூதங்களால் எமக்கு ஏற்படும் துயரங்கள் என்று கூறலாம். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூரணகும்பம், மாவிலை தோரணம்

தீபம், பூரணகும்பம், வாழையிலை, பச்சையரிசி, வெற்றிலை, பழம், பாக்கு, குங்குமம், சந்தனம், மாவிலை, மஞ்சள், கண்ணாடி, பன்னீர் ஆகியன இந்துக்களின் சுபகாரி யங்களில் உபயோகிக்கப்படும் மங்கலப் பொருட்களாம். இந்துக்களின் இல்லங்களிலே சுபகாரியங்களின் போது பூரண கும்பம் வைத்தல் மரபு. இஃது ஒரு மங்கல வரவேற்பு உபசாரமாகக் கருதப்படுகின்றது. தலைவாழையிலையில் பச்சை யரிசியைப் பரப்பி அதன்மேல் நிறைகுடத்தை வைக்க வேண்டும். கும்பத்தின் தேங்காய் முடியில் மலர் சாற்ற வேண்டும்.

நிறைகுடம் வைக்கும்போது நீர் நிரம்பிய குடத்தில் தேங் காயைச் சுற்றி 5 அல்லது 7 அல்லது 9 என ஒற்றை எண்ணிக்கையில் மாவிலைகளை காம்பு குடத்து நீருள் மூழ்கும் வண்ணம் வைக்க வேண்டும். கும்பத்துக்கு திருநீறு, சந்தனம், குங்குமம், மலர் ஆகியன சாற்றவேண்டும். கும்பத்தின் இருபக்கங்களிலும் குத்து விளக்கு ஏற்றி வைக்க வேண்டும். பச்சையரிசி பரவப்பெற்ற தலைவாழை இலையின் வெட்டிய பக்கம் எமது வலது கைப்பக்கம் அமைய இலை வைக்கப்படல் வேண்டும். இதேபோன்று தலை வாழையில் அன்னம் பரிமாறும் போதும் இலையின் வெட்டிய பக்கம் எமது வலது கைப்பக்கத்தில் அமைய இலை இடப்பட வேண்டும். வாழை மரம், வாழைக்குலை, வாழை இலை இந்துக்களின் சமய, சமூக சடங்குகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்து திருமணத்தின் இல்ல வாசலில் பழுத்த வாழைக் குலையைக் கட்டுவார்கள். இதனுள் ஒரு தத்துவம் அடங்கியுள்ளது. அதாவது வாழைமரமும் ஒருமுறை தான் குலை போடும். அதே போன்று தான் ஒரு இந்துவின் வாழ்வி லும் ஒருமுறை தான் திருமணம். பின்னர் சந்ததி வளரும். எது போன்று? வாழைக்கிழங்கிலிருந்து வாழைக்குட்டிகள் தோன்றுவது போல் என்பது பொருளாகும்.

நவராத்திரி விழாவின்போது வாழை வெட்டு விழா இடம் பெறுகின்றது. விஜயதசமி தினத்தன்று அம்பாள் மகிடாசுரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்காரம் செய்வதாக விழா இடம்பெறும். இங்கு வாழை மரம்தான் மகிடாசுரனாகக் கொள்ளப்படுகின்றது. வாழைத் தண்டு, வாழைத்தடல், வாழைப்பூ என வாழைமரம் நற்பயன்கள் நிரம்பத் தரும் ஒரு பயனுள்ள எமக்குத் தோழ மையான மரமாகப் பயன்படுகின்றது

அடுத்து மாவிலையை எடுத்துக்கொண்டல் கும்பம் வைக்க, சுபகாரியங்களின்போது இல்ல வாயிலில் கட்ட, மஞ்சள் நீர், பஞ்ச கவ்வியம் ஆகியவற்றை இல்லங்களிலோ, பூசை இடம்பெறும் போதோ தெளிக்க மாவிலை பெரிதும் பயன்ப டுகின்றது. சுபகாரியங்களின்போது வாயிலில் மாவிலை கட்டித் தொங்கவிடப்படும். இச்சந்தர்ப்பத்தின் போது மாவிலையின் உட்பக்கம் வெளியே தெரியும் வண்ணம் மாவிலை கட்டப் படல் வேண்டும். அபரக்கிரியைகள் இடம்பெறும்போது மாவியையின் வெளிப்புறம் வெளியே தெரியும் வண்ணம் மாவிலை கட்டப்படுதல் மரபு. தூய்மையான காற்றைச் சுவாசிக்க மாவிலை உதவுகின்றது என்பது விஞ்ஞானம் தரும் கருத்து.

மாவிலையோடு தோரணம் விழாக்காலங்களிலும், சுபகா ரியங்கள் இடம்பெறும் போதும் ஆலயங்களிலும் முறையே இல்லங்களிலும் கட்டப்பெறுகின்றன. மங்கல காரியங்களின் போது தோரணத்தில் இழைக்கப்பட்டிருக்கும் குருவி பூமியை நோக்கும் வண்ணமும் அமங்கலக் கிரியைகளின் போது தோரணக்குருவி மேலே பார்த்த வண்ணமும் தோரணங்கள் தொங்கவிடப்படல் வேண்டும். இதன் காரணத்தை நோக்கின், மங்கல காரியங்கள் பூமியில் உள்ளவர்க்காக இடம் பெறுகின்றன. அபரக்கிரியைகளோ பூமியை விட்டகன்ற ஆன்மாக்களுக்காக நிகழ்கின்றன என்பதையே இது குறிக்கும்.

நாம் ஆலயத்துக்கு செல்லும் போது இறைவணக்கத்திற்கு எடுத்துச் செல்பவை, வெற்றிலை, பாக்கு, பழம், கற்பூரம், மலர்கள் என்பனவாம். வெற்றிலை என்றால் வெற்றி என்று பொருள்பெறும். இறைவனுக்குரிய நிவேதனத்தில் முதலிடம் பெறுவது வெற்றிலை. செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்க இறைஅருள் புரிய வேண்டும் என்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிலை இறைவனுக்கு என்றும் முதலில் நிவேதிக்கப்படுகின்றது. பூசைக்குரிய பத்திரங்களாக, வில்வம், துளசி, அறுகு போன்றவை பூசையின்போது பயன்படுத்தப்படினும் வெற்றிலையே. இப்பத்திரங்கள் மலர்களுக்குச் சமமானதாக அமைகின்றது. இறைவனுக்கு நிவேதனமாகும் பேற்றைப் பெறுகின்றது. வெற்றிலையின் பச்சை நிறம் சக்தியைக் குறிப்பதாகக் கூறப்படுகின்றது. தாம்பூலம் தரிக்கும் போது வெற்றிலையின் காம்பையும், நுனியையும் அகற்றிய பின்னரே அதனை உபயோகிக்க வேண்டும்.

ஆஞ்சனேயருக்கு வெற்றிலை மாலை சாற்றுகின்றோம். அதன் காரணத்தை நோக்கின் சீதாபிராட்டி அசோக வனத்திலிருந்த போது ஆஞ்சநேயர் இராம தூதுவனாகச் சென்று ஸ்ரீராமனது அடையாளமாக கணையாழியை பிராட்டியாரிடம் கொடுக்கின்றார். இதனால் மனம் மகிழ்ந்து நெகிழ்ந்த பிராட்டியார் தன் மாங்கல்ய பலனை மீண்டும் உறுதிப்படுத்தியதற்காக ஆஞ்சனேயருக்கு நன்றி தெரிவிக்குமுகமாக அசோக வனத்தில் வளர்ந்திருந்த வெற்றிலைக் கொடிகளிலிருந்து வெற்றிலைகளைக் கொய்து ஆஞ்சனேயருக்கு அளித்தார்.

இதனை மனதில் கொண்டு சுமங்கலிப் பெண்கள் தமது மாங்கல்ய பலத்தைப் பலமாக்க ஆஞ்சனேயருக்கு வெற்றிலை மாலை அணிவித்து பூசை செய்வது வழக்கமாயிற்று. வெற்றிலையைத் தாம்பாளத்தில் அடுக்கும்போது காம்புப்பகுதியை உட்பக்கமாகவும் நுனிப்பகுதியை வெளியே தெரியும்படியும் அடுக்கவேண்டும். வெற்றிலை இல்லாத சுபகாரியங்கள் இல்லை என்றே கூறலாம். மந்திரத்தை உள்வாங்கும் சக்தி வெற்றிலைக்கு உண்டு என்றும் மொத்தத்தில் வெற்றிலை புனிதமான, மங்கலமான ஆத்மீக முக்கியத்துவம் நிறைந்த பொருள் எனக் கொள்ளப்படுகின்றது.

வெற்றிலை என்றதும் அடுத்து நாம் காண்பது பாக்கு. அறுசுவைகளில் பாக்கு உவர்ப்புச் சுவையைக் கொணடுள்ளது. வாழ்க்கையில் அறுசுவைகளையும் சுவைத்தாக வேண்டும் என்பதற்காக தாம்பூலத்தில் பாக்கு சேர்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குங்குமம் சுமங்கலிப் பெண்களின் பெருமைக்குரிய சொத்து. அன்னை சக்தியின் அருட்பிரசாதமாக விளங்கு கின்றது. மங்கல மங்கையர் குங்குமம் என்பதிலிருந்தே மங்கையரின் மாங்கல்ய பேற்றைக் காட்டி நிற்பது குங்குமம் என்பதை யாம் அறிய முடிகின்றது. சுமங்கலிப் பெண்கள் நெற்றியில குங்குமப் பொட்டு அணிவதோடு நெற்றி வகிட்டில் குங்குமம் அணிவது சுமங்கலியானவள் பெரியோர்கள் ஆசீர்வாதத்தைப் பெற்றவள் என்பதைக் குறித்து நிற்கின்றது.

மஞ்சளை எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்து அதனைக் காயவைத்து பொடிசெய்து சிறிது சுண்ணாம்புடன் சேர்த்தால் குங்குமக் கலவை கிடைக்கும். சுமங்கலிப் பெண்கள் "ஸ்ரிக்கர் பொட்டு" அதாவது ஒட்டுப் பொட்டு வைப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது. முகத்தில் ஊனக்கண்கள் அமைந்துள்ள இடைப்பகுதி - அதாவது புருவ மத்தியிலே உள்ளது ஞானக் கண். அந்த புருவமத்தியிலேயே பொட்டிடல் வேண்டும்.

சந்தனத்திலே மங்கலமும் குளிர்மையும் கலந்துள்ளது. சக்திக்கு எவ்வண்ணம் குங்குமம் முக்கியமோ அவ்வண்ணம் சிவனுக்கு முக்கியம் வாய்ந்தது சந்தனம். சந்தனத்தின் மஞ்சள் நிறமே கண்களுக்குப் பொலிவான நிறைவைத் தருகின்றது. மங்கல காரியம் இடம்பெறும் போதும் ஆலய பூசையின் பின்னரும் ஆண்களின் நெற்றியில் சந்தனப் பொட்டு துலங்குவதைக் காணலாம். சந்தனம் உடலுக்குக் குளிர்மை யைத் தருகின்றது. அத்தோடு தெய்வத்துக்கு அபிடே கத்திற்கும் சந்தனக்காப்புச் சாற்றவும் பயன் பெறுகின்றது. சந்தன அபிடேகத்தை இறைவனுக்கு செய்வித்தால் சாயுச்சிய முக்திப்பேறு கிடைக்கும் என்கின்றன சாஸ்திரங்கள். சந்த னத்தின் சுகந்தம் தென்றல் போல் இனிமையானது. மிரு துவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுகங்கள்

படைத்தற் தொழிலைப் புரியும் பிரமனுக்கு கல்பம் என்பது ஒரு நாள். எம்முடைய வருடக்கணக்கின்படி ஒரு கல்பம் 432 கோடி வருடங்களைக் கொண்டது. இக்காலப் பகுதி 1000 மகாயுகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. யுகங்கள் 4 . அவையே கிருதாயுகம், திரேதாயுகம், துவாபர யுகம், கலியுகம் என்பனவாம்.

கிருதாயுகமே இந்துக்களின் பொற்காலம் எனக் கருதப் படுகின்றது. மனிதர் சமமாக வாழும் தீமையே அற்ற காலப் பகுதி. இது 17,2800 ஆண்டுகளைக் கொண்டது. திரேதா யுகத்திலே தான் தீமைகள் தோன்ற ஆரம்பித்தன. இது 12.96000 ஆண்டுகளைக் கொண்டது. துவாபர யுகத்தில் தீமை வலிமைபெற ஆரம்பித்தது. 8,64000 வருடங்களைக் கொண்டது. இந்த யுகத்தை தொடர்ந்து கலியுகம் பிறந்தது. தீமைகள் 3/4 பங்கும் தர்மம் 1/4 பங்கும் கொண்ட கலியுகம் தீமைகள் மலிந்த காலப்பகுதியாகும். இது 4,32000 ஆண்டு களைக் கொண்டது. இந்த யுகத்தில் ஏறக்குறைய 3/4 தொகை ஆண்டுகள் முடிந்துவிட்டன என கணக்கிடப் பட்டுள்ளது.

இந்த யுகங்களின் முடிவு சர்வ சங்கார காலமாகும். அந்நிலையில் மகாருத்ர மூர்த்தி உலகத்தைச் சங்கரிப்பார். சங்காரம் செய்த நிலையில் சிவபெருமான் உமாதேவியார் தரிசிக்குமாறு சூக்கும பஞ்ச கிருத்தியம் செய்வார். இக்கா லத்திலேதான் தர்மதேவதை தவம்புரிந்து சிவனாருக்கு இடப வாகனமாக அமைந்தது. மீண்டும் சிருஷ்டி; மீண்டும் வாழ்வு ஆரம்பம்; மீண்டும் தர்மம் தளைக்கும்; உலகம் நல்லறத்தில் துலங்கும்; உயிர்கள் நலமே வாழும்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ② குருபூசை தினங்கள்

### தைமாதம்

கண்ணப்ப நாயனார்
அரிவாட்ட நாயனார்
சண்டேஸ்வர நாயனர்
திருநீலகண்ட நாயனார்
அப்பூதி அடிகள்
கலிக்கம்பர்
தாயுமானவ சுவாமிகள்

### மாசி மாதம்

கச்சியப்ப சிவாச்சாரியார்
திருவள்ளுவர்
எறிபத்தர்
காலியர்
கோச்செங்கட் சோழர்

### பங்குனி மாதம்

கணநாதர்
மனையடுவார்
காரைக்காலம்மையார்
தண்டியடிகள்
நேசர்
யோகர் சுவாமிகள்
பரமகுரு சுவாமிகள்
குழந்தைவேற் சுவாமிகள்
செல்லப்பா சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சித்திரை மாதம்

திருநாவுக்கரசர் **(சதய நட்சத்திரம்)**
சிறுத்தொண்டர்
மங்கையற்கரசியார்
விறன்மிண்ட நாயனார்
உமாபதி சிவாச்சாரியார்
இசைஞானியார்
திருக்குறிப்பத் தொண்டர்

## வைகாசி மாதம்

திருஞான சம்பந்தர் **(மூல நட்சத்திரம்)**
கழற்சிங்க நாயனார்
நமிநந்தி அடிகள்
சேக்கிழார் சுவாமிகள்
சோமாசிமாறர்
முருக நாயனார்
திருநீல நக்க நாயனார்
திருநீலகண்ட யாழ்ப்பாணர்

## ஆனி மாதம்

மாணிக்கவாசகர் **(மக நட்சத்திரம்)**
அமர் நீதி நாயனார்
கலிக்காமர்

## ஆடி மாதம்

சுந்தரமூர்த்தி நாயனார் **(சுவாதி நட்சத்திரம்)**
புகழ்ச்சோழர்
கூற்றுவ நாயனார்
பெருமழலைக் குறும்ப நாயனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி நாயனார்
சேரமான் பெருமாள் நாயனார்
கலிய நாயனார்
கோட்புலி நாயனார்

## ஆவணி மாதம்

குலச்சிறையார்
குங்கிலியக் கலயர்
செருத்துணையார்
நீலகண்ட சிவாச்சரியார்
புகழ்த்துணையார்
அதிபத்தர்
இளையான் குடிமாற நாயனார்
மறைஞான சம்பந்தர்

## புரட்டாதி மாதம்

ஏனாதி நாதர்
நரசிங்க முனையரையர்
உருத்திர பசுபதியர்
திருநாளைப் போவார்
அருணந்தி சிவாச்சாரியார்
கடையிற் சுவாமிகள்

## ஐப்பசி மாதம்

திருமூலர்
திருநெடுமாறர்
இடங்கழியார்
மெய்கண்ட தேவர்
பூசலார்
ஐயடிகள் காடவர் கோனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்த்திகை மாதம்

கனம்புல்லர்
மெய்ப்பொருளார்
ஆனாயர்
மூர்க்கர்
ஆறுமுகநாவலர்

## மார்கழி மாதம்

வாயிலார்
சடையனார்
இயற்பகையார்
மானக் கஞ்சாறர்
சாக்கியர்

## இந்து சமயம் கண்ட பெண்ணடியார்கள்

1. காரைக்கால் அம்மையார்
2. பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார்
3. இசைஞானியார்

**சித்திரைச் சதயம் அப்பர் சிறந்த வைகாசிமூலம்**
**அத்தரைப் பணிசம்பந்தர் ஆனிமா மகத்திலந்த**
**முத்தமிழ் வாதவூரர் முதியநல் ஆடி தன்னில்**
**சுத்தமாம் சோதி தன்னில் சுந்தரர் கயிலை சேர்ந்தார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ③ பஞ்ச புராணம்

## தேவாரம்

### திருஞானசம்பந்த நாயனார்

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## திருவாசகம்

### மணிவாசகப் பெருமான்

வேண்டத் தக்க தறிவோய்நீ
வேண்ட முழுதுந் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற் கரியோய்நீ
வேண்டி யென்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

### சேந்தனார்

ஏகநா யகனை இமையவர்க்கரசை
என்னுயிர்க் கமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழி செழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

## திருப்பல்லாண்டு

### சேந்தனார்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரிய புராணம்

### சேக்கிழார் பெருமான்

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய
மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 கிழமைகளுக்குரிய தேவாரங்கள்

## ஞாயிற்றுக்கிழமை

**பண் - சீகாமரம்**

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினைவு
ஆயினவே வரம்பெறுவர் ஐயுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம்
தீவினையே.

## திங்கட்கிழமை

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

**பண் - கொல்லி**

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்ல.ஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

## செவ்வாய்க்கிழமை

### திருநாவுக்கரசு நாயனார்

**பண் - திருவிருத்தம்**

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் தோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்தான் மனத்துள்ளிருக்க
என்றா னிமையவர்க் கன்பன் திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதன்கிழமை

### திருநாவுக்கரசு நாயனார்

திருநாமம் அஞ் செழுத்துஞ் செப்பா ராகில்
தீவண்ணர் திறமொருகால் பேசா ராகில்
ஒருகாலும் திருக்கோயில் சூழா ராகில்
உண்பதன்முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியா ராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வென்னில்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே.

## வியாழக்கிழமை

### சுந்தரமூர்த்தி நாயனார்

பண் - கொல்லி

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினும் சார்வினும்
தொண்டர் தருகிலாப்
பொய்மையாளரைப் பாடாதே எந்தைபுகலூர்
பாடுமின் புலவீர்காள்
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள் வதற்கு
யாதுமையுற வில்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளிக்கிழமை

### சுந்தரமூர்த்தி நாயனார்

பண் - தக்கேசி

பொன்னும் மெய்ப்பொருளுந் தருவானைப்
போகமும் திருவும் புணர்ப்பானைப்
பின்னையென் பிழையைப் பொறுப்பானை
பிழையெலாந் தவிரப் பணிப்பானை
இன்ன தன்மையனென் றறியொண்ணா
எம்மானை யெளிவந்த பிரானை
அன்னம்வைகும் வயற் பழனத்
தணியாரூ ரானை மறக்கலுமாமே.

## சனிக்கிழமை

### திருநாவுக்கரசு நாயனார்

கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு
உருகிற்றென்னுள்ளமும் நானும் கிடந்தலந்து எய்த்தோ
திருவொற் றியூரா திருவாலவாயா திருவாரூரா
இழிந்தேன்
ஒருபற் றிலாமையும் கண்டிரங்காய் கச்சியேகம்பனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 சிவபுராணம்

**சிவபுராணத்தில் மணிவாசகப் பெருமான் சிவபெருமானது அனாதி முறைமையான பழமை பற்றிப் பாடியுள்ளார்.**

நமச்சிவாய வாழ்க நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுது மென்னெஞ்சில் நீங்காதான்றாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் றாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் றாள்வாழ்க
ஏக னநேக னிறைவ னடிவாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈச னடிபோற்றி யெந்தை யடிபோற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி
ஆராத வின்பம் அருளுமலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற வதனால்
அவனருளாலே அவன்றாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பனியான்
கண்ணுதலான் றன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா வெழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்

**பொருள் :-**

நமச்சிவாய என்னும் மந்த்ர சொரூபமாய் இருப்பவரைப் போற்றுகிறேன். ஜகத்தில் அனைத்துமாய் அதில் ஊடுரு வியிருந்து அதை ஆளுகிற விசுவநாதனைப் போற்றுகிறேன். ஒரு கணமும் என் மனதினின்று பிரியாதவனது திருவடி வாழ்க. திருப்பெருந்துறையில் எழுந்தருளி அடியேனை ஆட் கொண்ட தேசிகத் திலகத்தின் திருவடி வாழ்க. ஆகமப் பொருளாகி நின்று தித்திப்பவனது திருவடி வாழ்க. ஒன்றா யிருப்பவனும் பலப்பலவாயிருப்பவனுமாகிய இறைவனது திருவடி வாழ்க. மனோ வேகத்தை அகற்றி என்னை ஆட் கொண்ட இறைவனது திருவடிக்கு வெற்றியுண்டாகுக. பிறப்பு இறப்பு ஆகிய சம்சார சாகரத்தை அழிக்கின்றவனும் வீரக்க ழல்களை அணிந்தி ருப்பவனுமாகிய சிவனாரது திருவடிகள் வெற்றி பெறுக. வணங்காது வேற்றாராய் இருப்பவர்களுக்கு வெகுதூரத்தில் இருப்பவனது பொலிவுடைய திருவடிகளுக்கு வெற்றி வாய்ப்பதாக. கைகூப்பி வணங்குபவர்க்கு இன்ப மளிக்கும் இறைவன் திருவடிகள் வெற்றி பெறுக. தலை வணங்குபவர்களை ஆன்மீகத்தில் உயரச் செய்பவனது நலம் தரும் தாள்களின் திட்டம் நிறைவேறுக. இந்த ஆத்மன், வேதம் கற்று அடையப்படுவதன்று. புத்திக் கூர்மையாலோ, ஏராளமாகப் போதிக்கக் கேட்பதாலோ இது அடையப் படுவதன்று. யாரை இது ஆட்கொள்ளுகிறதோ அவனால் இது அடையப்பெறுகிறது. அவனிடத்தே இந்த ஆத்மன் தனது சொரூபத்தில் மிளிர்கிறது. ஈசுவரனது திருவடிக்கு வணக்கம்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தந்தையின் திருவடிக்கு வணக்கம். ஞானப் பிரகாசமுடையவனது பாதங்களுக்கு நமஸ்காரம்: செந் தாமரை போன்று சிவந்த பாதங்களையுடைய சிவனுக்கு நமஸ்காரம். அன்பில் ஊறியுள்ள தூயவனது திருவடிக்கு வணக்கம். மாயையின் விளைவு ஆகிய பிறப்பு இறப்பு என்னும் மாறுபாட்டை அகற்றுகிற இறைவனது திருவடிக்கு வணக்கம். மேன்மை பொருந்திய திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் நம் கடவுளின் திருவடிக்கு வணக்கம். தெவிட்டாத ஆனந்தத்தை ஊட்டி யருள்கின்றவனும் மலைக்கு ஒப்பானவனும் ஆகிய சிவனுக்கு வணக்கம். சிவபெருமான் யாண்டும் என் மனதில் வீற்றிருப்பதால் அவனது திரு வருளைத் துணையாகக் கொண்டு அவனது திருவடியைத் தொழுது, நான் ஆனந்தம் அடைதல் பொருட்டும் எனது பழவினைகள் கெடுதல் பொருட்டும் யாண்டும் நிலைத்துள்ள சிவதத்துவங்களை உணர்ந்து ஓதுவேன். நெற்றிக் கண்ண னாகிய சிவனாரது திருவருளாகிய கண்ணானது வழிகாட்ட நான் அவரை வந்தடைந்து, கணக்கிட முடியாத மகிமை களையுடைய அவனது திருவடியை வணங்கி, வான் உலகு, நிலவுலகு ஆகியவைகளை நிரப்பி, அவைகளுக்கு அப்பாலும் இருக்கின்றாய், கட்புலனாகின்ற ஜோதியாய் இருக்கிறாய், அளவுகடந்து எங்கும் நிறைந்திருக்கிறாய், உன்னுடைய பேரமைப்பைப் பாராட்டுகிற வழியை வினையில் கட்டுண்டு கிடக்கிற நான் சிறிதேனும் அறிந்திலன், கல், புல் முதலிய பிறவிகளில் வாழ்வைத் தொடக்கி அறிவோடு கூடிய மானுடன் ஆகும் பரியந்தம் பல்கோடி பிறவிகளை எடுத்து இறைவா நான் சலிப்படைந்துவிட்டேன்.

●

மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யவென் னுள்ளத்துன் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியா யியமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை யகல்விக்கு நல்லறிவே
ஆக்க மளவிறுதி யில்லா யனைத்துலகும்
ஆக்குவாய் காப்பா யழிப்பா யருள் தருவாய்
போக்குவா யென்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தி னேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுட் டேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கு மெங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தா யெம்பெருமான் வல்வினையேன்றன்னை
மறைந்திட மூடிய மாய விருளை
அறம்பாவ மென்னு மருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா வுனக்குக்
கலந்தவன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த வடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :-

**உ**னது ஒப்பற்ற திருவடிகளைச் சேவிக்கவே அது எனக்கு வீடுபேறு ஆயிற்று என்பதில் சந்தேகமில்லை. என் உள்ள த்தினுள் ஓங்காரமாக நீ ஒலித்துக் கொண்டிருப்பதை நான் உணரும்பொழுது உய்வு அடைகிறேன். மெய்ப்பொருளே, தூயவனே, ரிஷப வாகனனே, வேதங்களால் ஐயாவென்று அழைக்கப்படுபவனே நீ உயர்ந்தும், தாழ்ந்தும், விரிந்தும் உள்ள சூக்குமப் பொருள் ஆகின்றாய். உஷ்ணமாயும், தணுப்பாயும், உயிர்த்தத்துவமாயும் உள்ள பரிசுத்தனே, என்னிடத்து அநித்தியமானவைகளை யெல்லாம் அகற்றுதற்கு அருள் புரிந்து, சுத்த சைதன்யமாய் ஒளிர்கின்ற பரஞ் சோதியே, எந்த விதமான அறிவுமில்லாத எனக்கு ஆனந் தத்தை நல்கும் பெரியோய், ஜீவனாகிய எனது மயக கத்தை நீக்குகிற சிவஞானமே. தோற்றமும், வண்ணமும், முடிவும் இல்லாத நீ அண்டங்களை உண்டு பண்ணுவாய், நிலைத் திருக்கச் செய்வாய், துடைத்திடுவாய், அதற்கிடையில் ஜீவர் களை உன்மயமாக்குவாய். பிறவித் தளையைப் போக்கு விப்பதும் என்னை நினது திருத்தொண்டில் புகும்படிச் செய்வ தும் நின்கருணையாகும்.பூவில் மணம் போன்றவனே, நீ வணங்காதார்க்குத் தொலைவிலும் வணங்குபவர்க்குப் பக்கத் திலும் இருக்கிறாய். மாறுபடுகிற மனது அற்றவிடத்து மிளிர் பவன் நீயன்றோ! அப்பொழுது கறந்த ஆவின் பாலோடு கருப்பஞ்சாற்றையும் நெய்யையும் கலந்து உண்ணும் பொழுது உண்டாகும் இன்பம் போன்றது இறைவனிடத் திருந்து வரும் பேரின்பம். அப்பேரின்பமோ நல்ல அடியவர் களது உள்ளத்தினுள் தேன் போன்று ஊறித் தெவிட்டாது தித்திக்கின்றது. தொடர்ந்து வருகின்ற பிறவிகளை ஒழிக்கின்ற எங்கள் தலைவா, பூதங்களும் இந்திரியங்களும் உன்னைப் போற்றுதற்கு ஐந்து தன் மாத்திரைகளை உடைத் திருக்கிறாய். தேவர்களுக்கும் ஐம்பொறிகளுக்கும் விளங் காது நீ மறைந்திருக்கிறாய். திறமை ஐம்பொறிகளுக்கும் வாய்ந்துள்ள வினைக்கு அடிமைப்பட்டுள்ள என்னை நான் அறிந்து கொள்ளாதபடி அஞ்ஞான இருள் என்னை மூடிக் கொண்டிருக்கிறது. நல்வினை, தீவினை என்று சொல்லப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டு அறுக்க முடியாத பாசக்கயிறு என்னைக் கட்டிப் பிணித்து வைத்திருக்கிறது. என் உடலின் உள்ளே புழுவுக் ஒப்பான தாதுக்களின் தத்துவம் நிறைந்திருக்கிறது. அது ஓயாது அழுக்காக மாறிக் கொண்டிருக்கின்றது. அத்தகைய புல்லிய அமைப்பானது புறத்தில் தோலைப் போர்வையாகப் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கிறது. ஓயாது மலம் வெளியே கிளம்பிக்கொண்டிருக்கிற ஒன்பது துவாரங்களையுடைய உடல் என்னும் சிறு வீட்டில் நான் அடைக்கப்பட்டிருக்கிறேன். அதில் அமைந்துள்ள ஐந்து இந்திரியங்களும் என்னை ஏமாற்றித் துன்புறும்படிச் செய்கின்றன. மிருகத்துக்கு ஒப்பானது என் மனது. உன்னிடத்து உருகி அன்பு பூண்டு அது நல்ல மனமாகும்படி நீ அருள்புரிந்துள்ளாய். மண்ணு லகில் உன் காட்சியைக் காணும்படி நீ அனுக்கிர கித்துள்ளாய். யாண்டும் நிறைவாயிருந்து பிரகாசிக்கின்ற பழுதற்ற ஜோதியே, தேஜோமயமானவனே, தேனே, அரிய அமிர்தமே, சிவபுரனே. ●

பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெட
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக் கன்பனே யாவையுமா யல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப்பெருமையனே
ஆதியனே யந்தம் நடுவாகி யல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட வெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே யத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான வுண்ணா ரமுதே யுடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து.

**பொருள் :-**

பாசமாகிய கட்டையறுத்து என்னை உய்விக்கும் ஆசாரியன் நீ, ஒன்று படுத்துகிற அருளைச் சொரிந்து என் நெஞ்சில் உள்ள குறைபாட்டை நீ அகற்றுகிறாய். குற்றம் நிறைந்த என் நெஞ்சினின்றும் பிரிந்து போகாது நிலைத்திருக்கிற கருணை வள்ளல் நீ. கங்கா நதியின் மூலம் உன் கருணை யை நீ விளக்குகின்றாய். தெவிட்டாத அமிர்தம் நீ. அனந்த கல்யாண குணங்களையுடைய பரம புருஷன் நீ. ஆராயா தவர்களது மனதில் மறைந்திருக்கும் ஒளியே, என் மனதை நீராய் உருகப் பண்ணி எனது அரிய உயிராய் நிலைத திருப்பவன் நீ. நீ பரம்பொருள் ஆதலால் உனக்கு இன்பமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமும் இல்லை. ஆனால் உயிர்கள் அனைத்துமாய் நீ இலங்குவதால் அவ்வுயிர்கள் அனைத்தின் இன்ப துன்பங்கள் உன்னுடையவைகளாம். உன்னை வழுத்துபவர்க்கு நீ முற்றி லும் சொந்தமாகின்றாய். நீ உலகனைத்து மாயிக்கின்றாய். ஆயினும் அதனால் உன் நிஜசொரூபம் சிறிதேனும் மாற வில்லை. முரண்பாடுகளெல்லாம் உன்னிடம் கூடுகின்றன. நீ ஆத்மஜோதி: கட்புலனாகாத இருள். தோன்றியுள்ள பெருமை, தோன்றாப் பெருமையாகிய அனைத்தும் உனக்கே சொந்தம். சகுண பிரம்மம் என்னும் நிலையில் நீ பிரபஞ் சத்தின் தோற்றத்திற்கு ஆதிமூலம். இறுதியில் அது உன்னிடத்து ஒடுங்குகிறது. இடைநிலையிலும் அது உன்னிடத்திலேயே இருக்கிறது. நிர்க்குண பிரம்மம் என்னும் நிலையில் இந்த விகாரங்கள் உன்னை வந்து தொடுவதில்லை. ஈசா, நீ வலிய வந்து என்னை இழுத்து ஆட்கொண்டுள்ளாய். நீ எனக்குத் தந்தையாகவும் இறைவனாகவும் இருக்கின்றாய். மிகக்கூர்மையான மெய்ஞானம் படைத்திருப்பவர்களே உன்னை உள்ளவாறு உணர்ந்து கொள்வார்கள். ஊனக் கண்கொண்டு காண முடியாது. ஆனால் தெளிந்த மனக் கண்ணோடு உன்னைக் காணலாம். அந்தக் கரணம் அல்லது மனக்கண் பண்படுதற்கு ஏற்ப நீ நன்கு உணரப்படுகின்றாய். பூரணனாகிய நீ எங்குமிருப்பதால் உனக்குப் போதல் வருதல் பிறபொருளைச் சேர்தல் என்பன இல்லை.கலப்பதற்கு வேறு பொருள் ஒன்றும் இல்லாததால் நீ யாண்டும் புனித மாகவே இருக்கிறாய். ஆதலால் நீ புண்ணியன். நீ சுத்தசிவம். நீ யாண்டும் சாட்சியாயிருந்து என்னைக் காப்பாற்றி வரும் வேந்தன். ஊனக்கண்கொண்டு காணமுடியாத மனச்சாட்சி என்னும் மாறாத ஞானச்சுடர் நீ. நன்னெறியினின்று உதிக்கிற பேரின்பப் பெருக்கே, நீ எனக்குத் தந்தையாயும் அதற்கு மேம்பட்டும் இருக்கிறாய். சாசுவதமாய் உள்ள சுயஞ்ஜோதிப் பிழம்பே, நீ சொல்லில் அடங்காத பேருணர்வுப் பரம்பொருள். இடையறாது மாறுபாடு அடைந்து வருகிற நிலவுலகிலோ வெவ்வேறு வடிவங்களினூடு நீ அறிவாக இலங்குகின்றாய். பிரக்ஞானமே, திரண்ட பிரக்ஞானமே, நீ என் உள்ளத்தினுள் ஊற்றெடுத்துப் பெருகி, உண்பதற்கான அரிய அமிர்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னாய். என்னை உடைத்திருப்பவன் நீயே. பாலன், யுவன், கிழவன் என்று வெவ்வேறு விகாரங்களையுடைய தசை யுடலினுள்ளே குடியிருக்கச் சகியேன். உனது அடியார்கள் உன்னை ஐயனே என்றும், ஹரனே என்றும் வழுத்தி, உன்னைப் பாராட்டி, உன்மயமாயிருந்து, பொய் உடலைத் தவிர்த்து சிவசொரூபமானார்கள். நானும் அப்படியாக வேண் டும். மெய்ஞானத்தைத் திரிவுபடுத்தும் தன்மை பொறிகளுக்கு உண்டு. அப்பொறிகளுக்கு உறைவிடம் இவ்வுடல். என் உள்ளத்தினுள் சிவபோதத்தை வளர்ப்பதற்கு ஏற்ப நீ இந்த உடல் அமைப்பைக் கலைத்து விடுகிறாய். அதனால் நான் வினைக்கு வசப்பட வேண்டியதில்லை. உயிர்கள் எல்லாம் அயர்ந்து உறங்குகின்ற வேளையிலும் நீ நித்திய ஜாக்கிரதாவஸ்தனாய் விழித் திருக்கும் தலைவன் ஆகின்றாய். அகிலாண்டங்களையும் ஒழுங்காக இயக்கு வித்தல் என்னும் கூத்தை நடாத்துபவனே, நீ சிறப்பாகச் சிதம்பரம் என்னும் சேத்திரத்திலும் தமிழ்நாட்டிலும் திகழ்கின்றாய். ஓவென்று ஓலமிட்டு அரற்றிப் பூரணனை நாடுபவனது பிறியையும் அதனின்று விளைகிற துன்பத்தையும் அகற்று பவன் அவனேயாம். சொல்லில் அடங்காத சிவனைச் சொற் கொண்டு போற்ற வேண்டும். பெரியோர்கள் அவனைக் குறித் துச் சொன்ன சொற்களின் உட்கருத்தை அறிந்து உணர்ந்து அவ்வுணர்ச்சியின் மூலம் அவனைப் போற்ற வேண்டும். உணர்ச்சியின் உயர்வே நல்ல ஆராதனையாகின்றது. ஆப்த வாக்கியங்களின் உட்கருத்துக்களை உள்ளவாறு உணர் வதற்கு இறைவனுடைய அருளை நாடி நிற்கவேண்டும். இறைவனுடைய சொரூபத்தை உள்ளபடி உணர்ந்து போற்றுபவரே அவனுடைய சன்னிதி சார்கின்றனர். அப்படி சன்னிதி சார்பவர்களை ஏற்கனவே சார்ந்த சிவபக்தர்கள் பணிவோடு வணங்கி வரவேற்கின்றனர்.

**சுபம்.** ●

**நூலின் கண் தவறுகள் இருப்பின் பெருந்தன்மையுடன் நோக்கவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

முதற்கண் அற்புதமான இப்பூமியிலே எனைப் படைத்த ஈசனுக்கு அளப்பரிய நன்றிகள். தொடர்ந்து என்னைப் பெற்று வளர்த்து கல்விச் செல்வம் பெற வழிகாட்டிய என் இரு கண்களான பெற்றோருக்கு எனது எண்ணில் அடங்கா நன்றிகள். அடுத்து அகரம் முதல் சகல கல்வி அறிவு நுட்பங்களையும் கசடறக் கற்றுத்தந்த என் நெஞ்சில் நிறைந்த அனைத்து ஆசான்களுக்கும் என் பணிவான நன்றிகள். தொடர்ந்து இந்நூலை ஆக்க ஆரம்பத்திலிருந்து ஆக்கமும் ஊக்கமும் தந்த என் குடும்பத்தினருக்கு நன்றிகள். இந்நூலை யான் எழுதும்போது தோன்றிய ஐயங்களை அவ்வப்போது தீர்த்து வைத்த அறிவுப் பெருந்தகைகளுக்கும், அச்சுப் பிரதிகளை சரிபார்த்து உதவிய நன்மனமுடையோர்க்கும் நலமான நன்றிகள். எனது கையெழுத்துப் பிரதிகளை பொறுமையுடன் கணினி வடிவமைத்துத் தந்த என் அன்பு மாணவிக்கு மனம் நிறைந்த நன்றிகள். தொடர்ந்து எனது நூலுக்கு பொறுமையுடனும் பெருமையுடனும் மனமுவந்தும் ஆசியுரை, அருளுரை, மதிப்புரை, வாழ்த்துரை, சிறப்புரை, அணிந்துரை, பாராட்டுரை ஆகியவற்றை வழங்கி என் முயற்சியை கௌரவப்படுத்திய அன்பும் பண்பும் நிறைந்த நல்லுள்ளங்கட்கு என் இதயங் கனிந்த நன்றிகள். இத்தனை நல்ல உள்ளங்களின் உறு துணை இல்லையேல் இந்நூல் இல்லை. எனவே இவர்கட்கு மீண்டும் நன்றிகள். அடுத்து இந்நூலை அழகாக, அடக்கமாக வடிவமைத்து அச்சிட்டுத் தந்த தெஹிவளை காயத்திரி பப்ளிகேஷன் பணிப்பாளருக்கும் உதவியாளர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

மேலும் இந்நூல் வெளியீட்டு விழாவிற்கான நிகழ்வில் என் அன்பான அழைப்பிதழைப் பெருமையுடன் ஏற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தாங்கியும், மங்கள விளக்கேற்றியும், சிறப்புரைகள் ஆற்றியும், சிறப்பு விருந்தினராகவும், ஏனைய விருந்தினரா கவும் வந்து தங்கள் பணிகளைச் செவ்வனே ஆற்றி விழாவை வெற்றிபெற வைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் என் பெருமிதமிக்க நன்றிகள். அறிவிப்பாளராக அமைந்து தனக் குரிய வசீகர பாணியில் அறிவுப்புக்களை நிறைவேற்றிய சகோதரர்க்கும் எனது இதயசுத்தமான நன்றிகள். இவ் விழாவை செவ்வனே ஒழுங்கமைத்து நிர்வகித்து ஒலி, ஒளி தந்து மங்களகரமாகவும் வெற்றிகரமாகவும் நிறைவேற்றித் தந்த அன்புள்ளங்கட்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள்...

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

**நன்றி.**

– நூலாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உசாத்துணை நூல்கள்

01. சைவ புண்ணிய காலம் - பண்டிதர் த. சுப்பிரமணியம்

02. பண்டிகைகள் ஏன்? ஏதற்கு? - கானமஞ்சரி சம்பத்குமார்

03. இந்துமதப் பழக்கங்கள் - P. C. கணேசன்

04. இந்துமதப் மறைப்பொருள் தத்துவ விளக்கம்
- கவிஞர் அகில்

05. நவக்கிரகங்கள் - கி. வ. ஜகந்நாதன்

06. பன்னிருமாத மலர்கள் - நா. முத்தையா

07. பூஜா விதானம் பொன்மலர் விழா
- இராமகிருஷ்ண மிஷன் வெளியீடு

08. உபநிடதம் - ஸ்ரீ சிவகுருநாதபீட வெளியீடு

09. சிவபுராணம் - ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவன வெளியீடு
திருப்பராய்த் துறை

10. விரதங்கள் - கோப்பாய் சிவானந்த சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

624
12/05/2019
959
20/09/19
978
15/2/2022
894

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு - ஆசிரியர்

யாழ்ப்பாணத்தில் புகழ்பூத்த பண்டிதர் ம.வே.திருஞானசம்பந்தருக்கும் திருமதி தெய்வயானைப்பிள்ளை திருஞானசம்பந்தருக்கும் கனிஷ்ட புதல்வியாகப் பிறந்தவர் இவர். பண்டிதரவர்கள் யாழ் "இந்து சாதனம்" பத்திரிகையின் ஆசிரியராகவும், யாழ்/இந்துக் கல்லூரியில் தமிழ்ப்பண்டிதராகவும் கடமையாற்றினார். தந்தையைப் போல் தமிழிலும் சைவசமயத்திலும் பாண்டித்யம் பெற்ற இவர், இன்று நாடறிந்த ஒரு ஆன்மீகப் பேச்சாளராகவும் வீணை இசைக்கலைஞராகவும் உள்ளார். இவர், புகழும் சிறப்பும் பெற்ற உரையாசிரியர் மட்டுவில் ம.கதிரவேற்பிள்ளையின் வழிவந்தவராவார். இவர் ஆரம்பக்கல்வியையும் உயர்கல்வியையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியிற் கற்று சென்னையில் முதற்பட்டமும் இலங்கைப் பல்கலைக்கழக முதுமானிப்பட்டமும் பெற்றவர். 1950 களில் கல்வித் துறையில் அரச பாடசாலைகளிற் கல்வி கற்பித்து, தமது ஆளுமைத் திறத்தால் அதிபர் சேவையை எய்தினார்.

அவரது கல்விச்சேவையின் ஒரு கட்டமாக யாழ் உயர் தொழினுட்பக் கல்லூரியில் இணைந்து ஆங்கில விரிவுரையாளராய்க் கடமையாற்றினார்.

அவரது அபாரமான அற்புதமான மொழியாற்றலாலும் பரந்த அறிவாற்றலாலும் இன்று பிரபலமான சமய, ஆன்மீக, இலக்கியப் பேச்சாளராகத் திகழ்கிறார். இவரது பன்முக ஆற்றலை அறியாதார் இல்லை. இவர் ஒரு வீணையாசிரியருமாவர். கொழும்பில் நடைபெறும் வீணைக்கச்சேரிகளில் இவரதும் இவரது மகள் ராதை குமாரதாஸ் அவர்களினதும் மாணவர்கள் பங்குபற்றி வருகின்றார்கள்.

இன்றும் வானொலியில் இவரது "நற்சிந்தனைகள்" மற்றும் பயன்படக்கூடிய ஆன்மீகச் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டுப் பாராட்டாதோர் இல்லை. திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் "சைவசித்தாந்தமணி" விருது பெற்றவர். இவரின் கல்வி, இசை, சமயப்பணிகள் மேன்மேலும் வளர வேண்டும் என்பதே இவரில் பற்றுடையோரின் அவா!

– திலகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org